
தமிழ் உறவு

ஆண்டு மலர்



1966

தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் X-417



இம் மலரில்

தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் X-417

நெறியாளர் குழு

30 – 6 – 1966

தலைவர் :

திரு. கி. வா. ஜகந்நாதன்

செயலாளர் :

திரு. க. சோமசுந்தரம்

பொருளாளர் :

திரு. எச். வைத்யநாதன்

உறுப்பினர் :

திரு. பி. வி. அகிலாண்டம் (''அகிலன்'')
திரு. எஸ். கே. ராமன் (''மாயாவி'')
திரு. எஸ். பாஷ்யம் (''சாண்டில்யன்'')
திரு. நாரண துரைக்கண்ணன் (''ஜீவா'')
திரு. ஆர். வேங்கடராமன் (''ஆர்வி'')
திரு. ''கல்வி'' கோபால கிருஷ்ணன்
திரு. மு. நமசிவாயம்
திரு. பூவாளூர் சுந்தரராமன்
டாக்டர். பி. நடேசன் (நியமன உறுப்பினர்)

''தமிழ் உறவு'' மலர் ஆசிரியர் குழாம்

திரு. கி. வா. ஜகந்நாதன்
திரு. க. சோமசுந்தரம்
திரு. நாரண துரைக்கண்ணன்
திரு டி. என். சுகி சுப்பிரமணியன்
திரு. கல்வி கோபால கிருஷ்ணன்

தமிழ் உறவு

ஆண்டு மலர் 1966

முன்னுரை

தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்கி ஏழு ஆண்டுகள் ஆனாலும், புத்தகம் வெளியிடத் தொடங்கி இரண்டு ஆண்டுகளே ஆயின. இந்தச் சிறிய காலத்தில் இத்த முயற்சிக்குப் பல துறைகளிலிருந்தும் ஆதரவு கிடைத்திருக்கிறது. இதுவரையில் 36 நூல்கள் வெளியாகியிருக்கின்றன. தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்களை உருவாக்கி விற்பனை செய்வதற்கு. இடையே வியாபாரி ஒருவர் இருக்கவேண்டும் என்ற நிலையை மாற்றி எழுத்தாளர்களே கூட்டுறவு முயற்சியினால் தங்கள் புத்தகங்களைத் தாங்களே வெளியிட்டு, விற்று, ஊதியம் பெற இந்தச் சங்கம் உதவி வருகிறது. இது புதுவித முயற்சியாதலின், இது எவ்வாறு பயனளிக்குமோ என்ற ஐயம் முதலில் இருந்தது. நாளடைவில் அந்த ஐயம் ஒழிந்து, நிச்சயமாக வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அரசியலாரும், கூட்டுறவுத் துறையினரும், பொதுமக்களும் நல்கி வரும் ஆதரவே காரணம்.

இந்த ஆண்டு இந்தத் 'தமிழுறவு' மலரை வெளியிடுகிறோம். இதற்கும் பல இடங்களிலுள்ள நூல் நிலைய ஆணைக்குழுத் தலைவர்களும், கூட்டுறவுத் துறையில் நற்பணி புரிபவர்களும், எழுத்தாளர்களும் கட்டுரைகளை எழுதியுதவியிருக்கிறார்கள். இதற்கு விளம்பரங்கள் உதவி மலரை வெளியிடுவதற்குரிய பொருள் கிடைக்கும்படி செய்த உபகாரிகள் பலர். அரசியல் கூட்டுறவுத் துறையினரும், தமிழ்நாடு கூட்டுறவு யூனியன் பொதுச் செயலாளர் டாக்டர் நடேசன் அவர்களும் பல விளம்பரங்கள் கிடைக்கும்படி செய்தார்கள். கட்டுரை வழங்கியும் விளம்பரம் கிடைக்கச் செய்தும் உதவி புரிந்த பெருமக்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியறிவைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்தச் சங்கத்தின் வரலாற்றைக் கூறும் கட்டுரை ஒன்று இம்மலரில் வருகிறது. அதிலிருந்து இதன் வளர்ச்சியின் சிறப்பை யாவரும் உணரலாம். அரசியலாரும் சென்னை மாவட்டக் கூட்டுறவு மத்திய பாங்கினரும் அவ்வப்போது செய்துவரும் உதவிகள் நூல்களை வெளியிட உறுதுணையாக இருக்கின்றன. அங்கங்கே உள்ள நூல் நிலையத் தலைவர்கள் நூல்களை வாங்கி உதவி புரிகிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள நூல் நிலையங்கள் யாவும் ஒருமுகமாக ஆதரவு நல்க முன் வந்தால் 'தமிழ் உறவு' இறுகி வலிமை பெற்றுத் தமிழ் எழுத்தாளர்களுக்கு இதுகாறும் கிடைக்காத நலன்கள் கிடைக்க வழி ஏற்படும். நூல் நிலைய அதிகாரிகள், தமிழுறவு நூல்களின் தரத்தையும், இவற்றால் இடை மனிதரின்றி எழுத்தாளர்கள் நன்மை பெறும் வாய்ப்பையும் எண்ணி நூல்களை வாங்கி உதவினால் மிக எளிதில் 'தமிழுறவு' நூல்களால் படிப்போருக்கும் படைப்போருக்கும் உண்டாகும் பயன் பன்மடங்கு உயரும். இதனை நூல் நிலையத் தலைவர்கள் சிந்தித்து ஆவன செய்வார்கள் என்று நம்புகிறோம்.

தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கத்தார்.

M. BHAKTAVATSALAM
CHIEF MINISTER

FORT ST. GEORGE
MADRAS-9
16-3-1966

தமிழ் எழுத்தாளர்கள், தங்கள் உழைப்புக்குரிய முழுப் பயனையும் அடைவதில் உதவுவதற்காக கூட்டுறவுச் சங்கம் அமைத்துக் கொண்டிருப்பது மிக நல்ல முயற்சி. சங்கம் இதுவரை 24 நூல்கள் வெளியிட்டிருப்பதையும், சங்கத்தின் இதர பணிகளையும் அறிய பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ் மக்களுக்கு, எழுத்தாளர்களிடம் பரிவும் மதிப்பும் நல்லெண்ணமும் நிறைந்து இருக்கிறது. கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகளையும் மக்கள் நன்றாக அறிந்து கொண்டிருக்கிறார்கள். எனவே எழுத்தாளர்களின் கூட்டுறவுச் சங்க முயற்சிகளுக்கு நாடெங்கிலும் நல்ல ஆதரவு கிடைக்கும் என்பது உறுதி. விடாப்பிடியான முயற்சியுடன் சங்கம் தன் பணிகளைப் பெருக்கி, அறிவு வளர்ச்சிக்கும் எழுத்தாளர்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் மேலும் உதவும் என்று நம்புகிறேன்.

சங்கப் பணிகளை மக்களிடையே விளக்க "தமிழ் உறவு" மலர் வெளியிடுவதை அறிந்தேன். சங்கத்தின் நன் முயற்சிகள் அனைத்துக்கும் என் வாழ்த்துக்கள்.


பக்தவத்ஸலம்



தமிழக முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள்

இவ்வாண்டு வான்புகழ் திருவள்ளுவர் திருநாளையொட்டி (வைகாசி அனுடம்) இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் திருவள்ளுவர் உருவச்சிலையை திருமயிலை சம்ஸ்கிருதக் கல்லூரிக்கு எதிரில் திறந்துவைத்தார்.



கவிச்சக்கரவர்த்தி கம்பர் திருநாளையொட்டி இவ்வாண்டு பங்குனி அத்தத்தன்று கம்பர் அஞ்சல் தலை வெளியீட்டு விழா சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடந்தது. தமிழக முதலமைச்சர் திரு. எம்.பக்தவச்சலம் அவர்கள், நம் சங்கத் செயலாளர் திரு. க. சோமசுந்தரத்திடம் முதல் அஞ்சல் தலையை வழங்கி, வெளியீட்டு விழாவை நடத்திவைத்தார்.

R. VENKATATARAMAN
Minister for Industries
FORT ST. GEORGE,
MADRAS-9.



எழுதுவது ஒரு சிறந்தகலை. புகழுக்குப் புகழும், பணத்துக்குப் பணமும் தரக்கூடிய கலை. துரதிருஷ்ட வசமாக நம் நாட்டின் சிறந்த எழுத்தாளர்களில் பலருக்கு அவர்களுக்கு உரிய புகழும், பணமும் கிடைப்பதில்லை. பத்திரிகை உலகின் கட்டுக் கோப்பு அப்படி உள்ளது. சில சமயங்களில் பிரசுரமாவதில்லை. அவ்வாறு பிரசுரமாகும் நூல் களுக்குரிய சன்மானமும் எழுத்தாளர்களுக்குக் கிடைப்பதில்லை. இந்தக் குறைகளையெல்லாம் நீக்கி, எழுத்தாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி, அவர்களது வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்காகவும், சிறந்த நூல்களைக் குறைந்த விலையில் வெளியிடுவதற்காகவும் கூட்டுறவு அடிப்படை யில் அமைக்கப்பட்டுள்ள தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் சிறந்த பணியாற்றிவருவதைக் கண்டு பாராட்டுகிறேன்.

அச்சங்கத்திற்கு எனது நல்வாழ்த்துக்கள் என்றும் இருந்துவரும்.

ஆர். வெங்கட்டராமன்



நெஞ்சில் நிழலாடும் நினைவுகள்


திரு. என். எஸ். எஸ். மன்ருடியார்
தமிழ்நாடு கூட்டுறவு அமைச்சர்

'கூட்டுறவு' என்ருலே எனது நெஞ்சில் ஏதேதோ சமூக நினைவுகள் நிழலாடுகின்றன! பரஸ்பர உதவியைப் பயன்படுத்திக்கொண்டு மக்கள் முன்னேற மேற்கொள்ளும் முயற்சியையே 'கூட்டுறவு' என்போம். இது போன்று கூடிச் செயல் புரியும் பண்பாடானது பண்டைநாள் தொட்டு நமது நாட்டில் பரவலாக இருந்து வந்துள்ளது

அரசாங்கத்தின் ஆதரவில் கூட்டுறவு இயக்கமானது செயல்பட்டு வந்த போதிலும், இதில் ஈடுபட்டுள்ள பல பொதுநலத் தலைவர்களின் தன்னலமற்ற சிறந்த சேவையின் காரணமாய் இன்று அது நம் நாட்டில் ஆல் போல் தழைத்து அறுகு போல் வேருன்றி நன்கு பரந்து விரிந்துள்ளது. விவசாய மக்களுக்குக் கடன் வழங்கும் கிராம நாணய சங்கங்கள் ஆரம்பத்தில் (1904ம் ஆண்டில்) தோன்றின. நாளடைவில் பல துறைகளில் இயக்கம் பரவிற்று. கிராம நாணய சங்கங்கள் அல்லாமல் விளைபொருள்களை விற்பனை செய்துதரும் விற்பனைச் சங்கங்கள் என்ன, பண்டங்களைப் பக்குவப்படுத்தும் பக்குவசாலை சங்கங்கள் என்ன, அவைகளை வினியோகிக்கும் பண்டகசாலைகள் என்ன, மக்களுக்குப் பால் வழங்கும் பால் சங்கங்கள் என்ன, இன்னும் கால்நடை அபிவிருத்தி சங்கங்கள், வீடமைப்புச் சங்கங்கள், நகர பாங்குகள், மீனவர் சங்கங்கள், நெசவாளர் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள் என்பன போன்ற பலதுறைகளில் கூட்டுறவுமுறை பரவியுள்ளது. போக்குவரத்து, நூற்பாலைகள், சர்க்கரை ஆலைகள் ஆகிய பெரிய தொழில் துறைகளிலும் தமிழகத்தில் கூட்டுறவு முயற்சி தலைசிறந்து செயல்பட்டு வருகிறது. தமிழ் நாட்டுக் கிராமங்களை எடுத்துக் கொண்டால், கூட்டுறவு இயக்கத்தின் பலனை அடையாத கிராமமே இன்று இல்லை சுமார் 85 சதவிகிதத்துக்கு மேற்பட்ட கிராம மக்கள் இந்த இயக்கத்தின் நலனை அடைந்துள்ளார்கள். தமிழகத்தில் மட்டும் 20,000 க்கும் அதிகமான பல்வேறு கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

சுழன்று மேர்ப்பின்னதுலக மதனு
லுழந்து முழவே தலை.

என்பது பொய்யாமொழிப்புலவரின் திருவாக்கு. சுற்றிச்சுற்றிப் பார்த்தாலும் உலகத்தார் ஓர் தொழிலைப் பின்பற்றியே உயிர்வாழ வேண்டியவர்களாயிருக்கிருர்கள். அதனுல், பாடுள்ளதானுலும் பயன்தரும் இத் தொழிலைச் சிறப்புறச் செய்வதில் முழு முயற்சியுடன் ஈடுபட்டுப் பாடுபட வேணுமாய்க் கூட்டுறவாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இன்றைய நிலையில் என் நெஞ்சில் நிழலாடும் நினைவுகளில் மிக முக்கியமானது இது ஒன்றுதான்.



எல்லோருக்கும் வாழ்வு

திரு. கோ. பூவராகன்
(அமைச்சர், தகவல் அறிவிப்பு, செய்தித் துறை)

தேசத்தின் விடுதலைக்காக நாட்டு மக்கள் அனைவரும் ஓரணியில் நின்று, ஒன்றுபட்டுப் போராடினர். அன்று ஒற்றுமை உணர்ச்சி ஓங்கி இருந்தது. அனைவரது உள்ளங்களிலும் சுதந்திரக் கனல் மூண்டிருந்தது. உடல், பொருள், ஆவி அனைத்தையும் தேசத்திற்காகத் தியாகம் செய்யும் திருப்பணியில் தேசத் தலைவர்கள் ஈடுபட்டனர். இத்தகைய முயற்சிகளின் விளைவால்தான் நாட்டில் அடிமை இருள் நீங்கி, சுதந்திர ஒளி பரவியது.

அன்று சுதந்திரத்திற்காக எந்த அளவு முயன்று பாடுபட்டோமோ, அதைவிடப் பன்மடங்கு முயற்சியுடன் நாட்டின் சுபிட்சத்திற்காகப் பாடுபட வேண்டிய நிலையை உணர்ந்து, பணியாற்றி வருகிறோம். மதத்தாலும் மொழியாலும் மக்கள் வேறுபட்டிருந்த போதிலும், தேசத்தால் ஓரினத்தவர் என்ற ஒருமைப் பாட்டுணர்வு சுதந்திரத்திற்குப் பிறகு மேலும் பொலிவுடன் விளங்க, நம் தலைவர்கள் நல்வழி காட்டினர். அவர்கள் போற்றி வளர்த்த ஒற்றுமை உணர்வு நாளுக்கு நாள் ஏற்றம் பெற்று வருவதை எவரும் குறிப்பிடாமல் இருக்க முடியாது. தேச மக்கள் அனைவரும் நல்வாழ்வு வாழ வழி செய்ய வேண்டும் என்று அவர்கள் கனவு கண்டனர். பொருளாதார ஏற்றத் தாழ்வின்றி, சாதிமத பேதமின்றி, வாழ்க்கை வசதிகளை அனைவரும் பெற்றுப் பயனடைய வேண்டும் என்பதற்காகவே, கடந்த பத்தொன்பதாண்டுகளாகத் திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றப் பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.

பல்லாண்டுகளாக அடிமைத்தளையில் கட்டுண்டு அல்லலுற்ற சமுதாயத்தைச் சுபிட்சம் நிறைந்ததாக ஆக்கப் பெரு முயற்சி தேவை. உழவர்கள், வணிகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள், எழுத்தாளர்கள் என்று பல்வேறு துறையினராக உள்ள மக்கள் தத்தம் கடமைகளை உணர்ந்து, தேச முன்னேற்றம் ஒன்றையே தலையாய குறிக்கோளாகக் கொண்டு, செயலாற்றினால்தான் முழுமையான சுபிட்சம் நிலவ வழி செய்ய முடியும்.

அந்நியராட்சியில் நம் நாடு இருந்த நிலையினையும், இன்று நம் நாடு அடைந்திருக்கும் முன்னேற்றத்தினையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பெருமிதம் அடைகிறோம். நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, 1950—ம் ஆண்டில்

தான் நாம் திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்திப் பணிகளைச் செயல் படுத்தத் தொடங்கினோம். அன்று முதல் ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக இன்றுவரை நாம் நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக உழைத்து வருகிறோம். எல்லாத் துறைகளிலுமே நாம் கணிசமான அளவுக்கு முன்னேறி இருக்கிறோம். ஆனால் திட்டங்களின் பயன் எல்லா மக்களுக்கும் கிடைக்கச் செய்யும் வகையில் நாம் மேலும் மேலும் பாடுபட்டாக வேண்டிய நிலையில் இருக்கிறோம். அதற்கு வழி செய்யும் வகையில் நம் தலைவர் நேருஜி வற்புறுத்திச் சென்ற ஜனநாயக சோஷலிச பாதையில் முழுமையான சுபிட்சம் காணப் பணியாற்றி வருகிறோம்.

ஜனநாயகம் மலரவும், சமதர்ம சமுதாயம் தழைத்தோங்கவும் கடந்த பத்தொன்பதாண்டுகளாக அமைதியான பொருளாதாரப் புரட்சியை உண்டாக்கி வருகிற அதே நேரத்தில், நம்முடைய பொருளாதார முன்னேற்றத்தினைத் தடைப் படுத்தும் நோக்கத்துடன், தொல்லைகள் தருவதில் கண்ணும் கருத்துமாக இருந்து வரும் அண்டை நாடுகளான பாகிஸ் தானுக்கும் சீனாவுக்கும், பாடம் கற்பிக்கும் நிலையிலும் இருக்கிறோம். சென்ற தடவை சீனா அநியாய ஆக்கிரமிப்பு செய்த போதும் சரி, பாகிஸ்தான் நம்மை வலுச் சண்டைக்கு இழுத்த போதும் சரி, பாரதம் நீதியை நிலைநாட்டு வதற்காக அந்தத் தீய சக்திகளுடன் போராடியதையும், நம் இராணுவ வீரர் களுக்குப் பக்கபலமாக மக்கள் அனைவரும் ஒரு பெருஞ் சக்தியாகத் திரண்டு நின்றதையும் இங்குக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. தாய் நாட்டின் மானம் காப்பதற்காக எந்த விலையையும் கொடுக்க மக்கள் என்றும் தயாராக இருக்கிறார்கள். நாட்டின் பாதுகாப்பு நம் இராணுவ வீரர்களுக்கு மட்டுமே உரிய கடமை அல்ல; அவர்களுக்குப் பக்கபலமாக ஒவ்வொருவரும் கடமை யைச் செய்ய வேண்டும் என்ற உணர்ச்சி நாடெங்கும் பரவியுள்ளது.

பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் சரி, தேசப் பாது காப்பைப் பலப்படுத்துவதிலும் சரி, நாட்டு மக்கள் அனைவரும் ஒருமித்து நின்று பாடுபடுகின்ற காரணத்தால்தான் வெற்றி பெற முடிகிறது. இந்த ஒற்றுமை உணர்ச்சி என்றும் குன்றாமல் இருக்கத் தக்க சிந்தனை வளத்தைப் பேணுவதில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, எழுத்தா ளர்கள் இந்தச் சீரிய பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டுத் தேச நலனுக்காக உதவக்கூடிய நூல்களைத் தொடர்ந்து நாட்டுக்கு அளித்து வரவேண்டும். வளமான எதிர்காலத்தை உருவாக்கிட ஒவ்வொரு துறையினரும் தேச நலனை மறவாமல் இயன்ற அளவு கடமை ஆற்றினால், நம் இலட்சியங்கள் விரைவில் நிறைவேறும் என்பது திண்ணம்.

பஞ்சும் வடமும்

திரு. கி. வா. ஜகந்நாதன்



'குருவாய் வருவாய் அருள்வாய் குகனே' என்று செந்தமிழ்க் குமரனை அருணகிரிநாதர் ஞானுசிரியனுக வரித்துக்கொண்டார். காந்த மலை மேவும் கோலமயில் வீரனின் பக்தரான திரு கி வா.ஜ. அவர்கள் அவனுடைய தாதையையே தம் பரமாசிரியராக வரித்து, சிறு வயதி லேயே தமிழ் உணர்ந்தவர். பத்தாம் வயதிலேயே கவி பாடத் தொடங்கினுர். அறுபதாண்டுகள் நிறைந்து மணி விழாக்கொண்டாடும், இவர் திருச்சிராபள்ளி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணராயபுரம் கிராமத்தில் 1906 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் நாளில் அனுஷ நட்சத்திரத்தில் பிறந்தார். 'கொங்குக் குமரி' எனப் புகழ்பெற்ற மோக னூரில் இளமையில் வசித்தார்.

நாவலரும் பாவலரும் ஆராய்ச்சி வல்லுனரும் ஆன திரு. கி. வா. ஜ. அவர்கள் 'தமிழ்த்தாத்தா', மகாமகோ பாத்யாய, தாட்சிணுத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களிடம் 1942 ஆம் ஆண்டுவரை குரு குலவாசமிருந்து தமிழின் நுட்பங்களைக்கற்ருர். ஐயரவர்கள் தமிழ் நூல்களைப் பதிப்பிப்பதில் உடனிருந்து அவர் உகக்கும் வகையில் துணைபுரிந்தார். சென்னை மாநிலத்திலேயே 1933 ஆம் ஆண்டில் தமிழ் வித்துவான் தேர்வில் முதல் மாணவராகத் தேறிய திரு. கி. வா. ஜ. தொடர்ந்து சென்னை பல்கலைக்கழகத்தின் எம். ஏ. பரீட்சையிலும் வெற்றிபெற்ருர். பழமைக்கும் புதுமைக்கும் பாலமாய், தமிழ்ப் பத்திரிகை உலகில் தமக்கெனத் தனியிடம் வகுத்துக்கொண்டுள்ள 'கலைமகள்' பத்திரிகைக்கு 1932 ஆம் ஆண்டு முதல் திரு. கி. வா. ஜ. ஆசிரியராக இருந்து வருகிருர். தமிழில் உள்ள ஒரே ஒரு 'திரட்டு' பத்திரிகையான 'மஞ்சரி' யின் மொழி ஆசிரியர்களுள் இவரும் ஒருவர். இவர் எழுதிய நூற்றிருபத்தைந்து நூல்கள் இது வரை வெளியாகியுள்ளன. இவற்றுள் சிறுகதைத் தொகுதிகள்–11 இலக்கியம், இலக்கணம், சமயம் ஆகிய துறைகளில் எழுதப்பட்ட கட்டுரைகள் தொகுப்பு நூல்கள்—63, கவிதைத் தொகுதிகள்—10, வரலாற்று நூல்கள்—20, நாடகம்—1, பதிப்பித்தவை—15 ஆகியன அடங்கும். இவற்றுள் 'தமிழ்க் காவியங்கள்,' திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு ஆகியன இவரது ஆராய்ச்சித் திறனைப் பறைசாற்றுவனவாகும்.

தமிழ் எழுத்துலகில் சிறப்புடன் பவனி வருபவரில் பெரும்பாலோர் திரு. கி. வா. ஜ. வின் ஆதரவினுலும் அன்பினுலும் உருவானவர்களே. பல தமிழ் நிறுவனங்களும் அவரது தொடர்பால் பயன் பெற்றுள்ளன. 1944 இல் சென்னையில் 'கம்பர் திருவிழா'' சீரும் சிறப்புமாக நடைபெறவும் 'கம்பர் கழகம்' வளரவும் மூலகாரணமாக விளங்கிய இவர், பத்தாவது கம்பர் மகா நாட்டுக்குத் தலைமை வகித்தார். 'கம்பர் அஞ்சல் தலை' வெளியிட வேண்டும் என்று இந்திய அரசுக்கு இம்மகாநாட்டில்தான் வேண்டுகோள் விடப்பெற்றது. இவ்வாண்டில் அஞ்சல் துறையினர் கம்பர் தலை வெளியிட்டது சுட்டத்தக்கது. தமிழ் சம்பந்தப்பட்ட பல்வேறு குழுக்களிலும் யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன், சாகித்ய அகாடமி ஆகியவற்றிலும் உறுப்பினர். தமிழும் இறையுணர்வும் தமிழர் வாழ்வின் இரு பக்கங்கள் என்பதைத் தம் சொற்பொழிவுகள் மூலமும் நூல்கள் வாயிலாகவும் உணர்த்தி வரும் திரு. கி வா. ஜ. அவர்களுக்கு, காஞ்சி காம கோடி பீடாதிபதிகள் 'திருமுருகாற்றுப்படை அரசு' என்றும் சிருங்கேரி சாரதா பீடாதிபதிகள் 'வாகீச கலாநிதி', 'தமிழ்க் கவி பூஷணம்' என்றும், தருமபுரம் மகாசந்நிதானம் 'செந்தமிழ்ச் செல்வர்' என்றும், மதுரை ஞான சம்பந்தர் ஆதீனத் தலைவர். 'திருநெறித் தவமணி' என்றும் பட்டங்களையும் விருதுகளையும் வழங்கியுள்ளார்கள். பிறந்த நாள் மணிவிழாவும் இலக்கியத்தொண்டின் பொன்விழாவும் ஒருங்கே கொண்டாடும் சிறப்பினைப் பெற்ற திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் 1962லிருந்து நம் சங்கத்தின் தலைமைப்பொறுப்பேற்று அதை வெற்றிப்பாதையில் நடத்திச் செல்கிருர்.

''கொள்ளைக்குப் போனுலும் கூட்டு ஆகாது'' என்று ஒரு பழமொழி வழங்கு கிறது. பலரோடு கூட்டுச் சேர்ந்து நடத் தும் முயற்சியில் எல்லோருக்கும் ஒரே மாதிரி லாபம் கிடைப்பதில்லை, சிலர் ஏமாற்றி விடு வார்கள் என்ற எண்ணத்தில் எழுந்த பழ மொழி அது. அதை எல்லா வகையான கூட்டு முயற்சிகளுக்கும் சார்த்திப் பொருள்

பண்ணக் கூடாது. 'பலதுளி பெருவெள்ளம்' என்ற பழமொழி கூட்டு முயற்சியின் பெருமையைச் சொல்கிறது, ஆகவே தன்னலமின்றிப் பலர் ஒன்று சேர்ந்து உழைத்தால் கூட்டு முயற்சியினுல் நன்மையே விளையும் என்பதில் ஐயமில்லை.

பல எறும்புகள் ஒன்று சேர்ந்து ஓர் உணவுக் கட்டியை இழுத்துச் செல்வதைப் பார்த்திருக்கிறோம், பலநூல்கள் இழைந்து பெருவடமாகிப் பெரிய வண்டியை இழுக்கும் உரம் பெறுகின்றன. ஆளுக்கு ஒருகை பிடித்தால் பெரிய தேர் நிலைபெயர்ந்து ஓடுகிறது. இந்த முயற்சிகளில் மிகவும் முக்கியமானது எல்லோரும் ஒருமுகப்பட்டு முயற்சி பண்ணுவது.

மனிதனுக்குப் பிறரோடு சேர்ந்து ஒன்றுபட்டு வாழும் இயல்பு தெரியும்; பிறரோடு சண்டை போட்டுக் கொண்டு பிரிந்து நிற்கும் இயல்பும் தெரியும். முன்னது காக்கையின் இயல்பு; பின்னது நாயின் இயல்பு, காகம் உறவு கலந்து உண்ணும், நாயோ ஓர் இலை விழுந்தால் மற்ற நாய்களோடு போராடும். இந்த உறவு மனப்பான்மை காகத்தினிடம் இருப்பதை எண்ணி அதை நாம் கற்றுக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தால், நாம் உண்ணுவதற்கு முன் காக்கைக்கு இட்டுவிட்டு உண்ணும் பழக்கம் இந்த நாட்டில் இருக்கிறது.

அவரவர்கள் தங்களால் இயன்ற அளவு பொருளோ, உடலுழைப்போ, பண்டமோ உதவி, ஒருமுகமாக ஒரு முயற்சியைச் செய்தால் தெய்வமே முன்னின்று அவர்களுக்குக் கைகொடுத்து உதவும். அரக்கர்களால் துன்புற்ற தேவர்கள் அதனினின்றும் நீங்கவழி தெரியாமல் திகைத்தார்கள், பிறகு முப்பத்து முக்கோடி தேவரும் சேர்ந்து ஒருமித்துச் சென்று பாற்கடலில் பள்ளிகொண்ட பரந்தாமனிடம் முறையிட்டார்கள். அதுகாறும் அறிதுயில் கொண்டிருந்த நாராயணன் எழுந்தான். ''நான் தசரதன் மகனுக அவதாரம் செய்கிறேன்'' என்று அருள் புரிந்தான். முப்பத்து முக்கோடி தேவர்களின் ஒருமித்த முயற்சியே இறைவனை எழுப்பியது, இறைவனைத் தொழிற்படச் செய்தது.

தனிமனிதனுடைய திறத்திலும், அவனுடைய கருவி கரணங்கள் ஒருமுகப்பட்டு இயங்குவதால் பெரிய நன்மை உண்டாகிறது. சமுதாயத்தின் திறத்திலும் பலரும் ஒருமனப்பட்டுச் செய்யும் செயல்கள் வெற்றி பெறுகின்றன.

பஞ்சு என்பது மிக நொய்ம்மையானது; ஊதினுல் பறப்பது; சிறு காற்றுனுலும் சிதறிப் பறப்பது. ''பஞ்சு படும் பாடு'' என்று சொல்வது வழக்கம். அந்தப் பஞ்சை ஒருமுகமாக முறுக்கி நூலாக்கி, நூல்களை முறுக்கிச் சரடாக்கி, சரடுகளை முறுக்கி வடமாக்கி விட்டால் தேரை இழுக்க உதவுகிறது. பல திசையிலும் பறந்த பஞ்சு வடமாகித் தேரை இழுக்கும் அற்புதம் நிகழ்ந்ததற்குக் காரணம் என்ன? பஞ்சுடன் இரும்பு முதலிய வன்மையான பொருள்களை இணைக்கவில்லை. பஞ்சல்லாத வேறு எந்தப் பொருளும் வடத்தில் இல்லை. ஆயினும் பஞ்சுக்கு இல்லாத பலமும் பயனும், வடத்துக்கு உண்டாகி விட்டன.

பஞ்சோடு வேறு எந்தப் பொருளும் சேரவில்லை என்பதுஉண்மைதான். ஆனுல், பஞ்சுக்கு முறுக்கு ஏறியிருக்கிறது. ஒருமுகமாக முறுக்கு ஏறிய நூல்கள் சேர்ந்து வடமாகியிருக்கின்றன. ஒரு முகப்பட்ட முயற்சிதான் பஞ்சுக்கு உரமேற்றியிருக்கிறது. உரமற்ற நொய்தான பஞ்சு. ஒருமுகப்பட்ட முயற்சிக்கு உள்ளாகி உரம் பெற்றது. அந்த முயற்சியை மனிதன் செய்கிருன். மனிதனுடைய மனம் பஞ்சுபோல் இருக்கிறது. ஆயிரமாயிரம் திசைகளில் பாய்ந்து அலையோடுகிறது,

> ''ஒருபொழுதும் வாழ்வ தறியார்; கருதுப
> கோடியும் அல்ல, பல.''

அதை ஒருமுகப்படுத்தி விட்டால் அப்புறம்

அதனிடம் உண்டாகும் வலிமை பல அற்பு தங்களை உண்டாக்கும். அப்போது நினைத்ததை யெல்லாம் சாதிக்கும் திறமை உண்டாகிவிடும். பலருக்கு நினைக்கத் தெரிகிறது; ஆசைப்படத் தெரிகிறது. அறுசுவை யுண்டி உண்டு, ஆடை அணி புனைந்து, மாளிகையில் வாழவேண்டும் என்று எல்லோருமே விரும்புகிறார்கள். ஆனால் எல்லோரும் அந்த வாழ்வைப் பெறுவதில்லை. அவர்களுக்கு ஆசைப்படத் தெரிகிறதே ஒழிய, அதை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் செயல்பட முடிவதில்லை. அதற்குரிய நெஞ்சத் திண்மை இருப்பதில்லை; எண்ணியஎண்ணத்தைச் செயலாக மாற்றும் வரையில் அந்த எண்ணத்தை நிலைநிறுத்தித் திண்மையாக இருப்பதில்லை. பலபல எண்ணங்களை எண்ணி எண்ணி, ஒன்றும் நிறைவேறாமல் ஏங்குகிறார்கள்.

எண்ணிய எண்ணத்தை உறுதியாகக் கடைப்பிடிக்கும் திண்மை வேண்டும். அந்தத் திண்மை இருந்தால் எண்ணியதை எண்ணியபடியே எய்தலாம்.

> எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்''

என்ற குறள் இதைத்தானே சொல்கிறது?

இப்படியே பலர் இணைந்து ஒன்றுபட்டுச் செய்யும் முயற்சியும் பயன் தருகிறது. தனி ஒருவனால் ஆற்றமுடியாததைப் பலர் சேர்ந்து செய்து முடிக்கலாம். பலமற்றவர்களானாலும் இந்தக் கூட்டுறவினால் அவர்கள் திண்மை பெறுகிறார்கள்.

> ''பீலிபெய் சாகாடும் அச்சிறும், அப்பண்டம்
> சால மிகுத்துப் பெயின்''


என்ற குறள் இதைச் சொல்கிறது. மயிற்பீலி மிகவும் இலேசானது. அதை அளவுக்கு மிஞ்சி வண்டியில் ஏற்றினால் அந்த வண்டியின் அச்சு முறிந்துவிடும். பகைவர்கள் பலமில்லாதவர்கள் என்று எண்ணிப் புறக்கணிக்கக் கூடாது. அவர்கள் பலர் ஒன்று சேர்ந்தால், மிகவலிமையுடையோம் என்று எண்ணியிருப்பவர்களுடைய பலத்தையும் அழித்து விடுவார்கள் என்ற குறிப்பை இக்குறள் புதைத்து வைத்திருக்கிறது. பலவீனமாக இருந்தாலும் பலர் ஒன்றுபட்டு முயன்றால் பெரிய காரியங்களைச் சாதித்து விடலாம் என்ற குறிப்பைக் கூட அதிலிருந்து பெறலாம்.

மனிதன் தன்னுடைய ஆற்றலை ஒருமுகப் படுத்தினால் அவனுடைய மனம் திண்மை பெறும். ஆன்ம சக்தி பெருகும். பல மக்கள் ஒன்றுபட்டால் சமுதாய சக்தி மிகுதியாகும். எந்தப் பெரிய காரியத்தையும் சாதித்துவிடும் ஆற்றல் அந்தச் சமுதாயத்துக்கு உண்டாகும். ஒரு குழுவினர் ஒன்றுபட்டு ஒருமுகமான முயற்சியில் ஈடுபட்டால் பல நன்மைகளைப் பெறலாம்.

கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படை உண்மையே இதுதான். பல கறையான்கள் சேர்ந்து பெரும் புற்றை எழுப்பி விடுகின்றன. பல ஈக்கள் சேர்ந்து தேனடையை அமைக்கின்றன. மனிதனோ அறிவில் மிஞ்சியவன். அவன் கூடி, உறவு கொண்டு முயன்றால், தெய்வத்தின் சக்தியையே பெற்றுவிடலாம். முப்பத்து முக்கோடி தேவர்களின் முயற்சியே கடவுள் உலகத்துக்கு இறங்கி வந்து செயல் செய்யும்படிச் செய்தது என்ற புராணக் கதை அந்த உண்மையையே நிலைநிறுத்துகிறது. *

சங்கம் வளர்ந்த கதை

திரு. தா. ராஜாராம்



1923ம் ஆண்டில் பிறந்தவர். பன்னிரண்டு ஆண்டுகள் ''ரிபோர்ட்டர்'', ''இந்தியன் ரிபப்ளிக்'' ஆங்கில தினசரிகளிலும், ''பாரத தேவி'',''தினசரி'',''நவ இந்தியா'' தமிழ் தினசரிகளிலும், ''நேபன்'' செய்தி நிறுவனத்திலும் நிருபராகப் பணியாற்றியவர். ''பில்டிங் கெஜட்'' என்ற ஆங்கில மாத இதழை இரண்டு ஆண்டுகள் வரை நடத்தியவர். பத்திரிகைத் துறையில் பல்வேறு துறைகளிலும் அனுபவம் பெற்றவர். உழைக்கும் பத்திரிகையாளர் நிலை உயரவேண்டுமென்னும் நோக்கத்துடன் தென்னிந்திய பத்திரிகையாளர் சம்மேளனத்தில் சேர்ந்து பாடு பட்டவர். சென்னை பத்திரிகையாளர் யூனியனைத் தோற்றுவித்த, முற்போக்கு பத்திரிகையாளர்களில் ஒருவர்.

சென்னை அரசாங்க செய்தித் துறையில் 1957ம் ஆண்டு முதல் பணியாற்றி வருகிறார். 'பாலர் அரங்கின்' நிர்வாகியாக கடந்த ஏழரை ஆண்டுகளாகப் பணியாற்றிய பின் சமீபத்தில் தர்மபுரி மாவட்ட செய்தி, விளம்பர அதிகாரியாகப் பொறுப்பேற்றுள்ளார். இவர் எழுதிய சிறுகதைகள், கட்டுரைகள் முதலியன பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன.

நம் சங்கத்தின் முதல் நெறியாளர் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சில காலம் பொருளாளராகவும் பொறுப்பு வகித்தார்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு நாள் பிற்பகல் நண்பர் திரு க சோமசுந்தரம்என்னை என் அலுவலகத்தில்சந்தித்த காட்சி இன்றும் என் மனதில் அப்படியே பதிந்திருக்கிறது. அவருடைய கலைந்த கிராப்புத் தலையும், வியர்வை படிந்த முகமும் அவர் பல இடங்களைச் சுற்றி வந்திருக்கிறார் என்பதைச் சொல்லாமல் தெரிவித்தன. அவர் கையில் நாலைந்து கடிதங்கள் மடிக்கப்பட்ட ஒரு கட்டு இருந்தது. அதை நீட்டிப் படித்துப் பார்க்க வேண்டுமென்றார். நண்பர் சோமசுந்தரம் பேச்சு குறைவாகப் பேசினால் அவர் காரியத்தில் குறியாக இருக்கிறார் என்பது நான் அறிந்த அனுபவ உண்மை.

கட்டைப் பிரித்துப் படித்துப் பார்த்தேன். ''தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்'' என்று மேலே எழுதப்பட்டிருந்தது அதில் சில எழுத்தாளர்கள் கையெழுத்திட்டிருந்தனர். நானும் அதில் ஓர் உறுப்பினராகச் சேர வேண்டுமென்றார். அப்படியே சேர்ந்தேன் காரணம், சங்கம் செயல்பட வேண்டுமென்பதற்கு அவர் கொடுத்த விளக்கந்தான். நான் மட்டிலும் சேர்ந்தது போதாதென்றும், மற்றும் பல நண்பர்களைச் சேர்க்க வேண்டுமென்றும் சொன்னார். அவர் காண்பித்த உற்சாகத்திற்காகவும், உறுதிக்காகவும் நானும் சரியென்று ஒப்புதல் தெரிவித்தேன்.

பல நண்பர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர், பலருக்கு இச்சங்கம் செயல்படுமாவென்று ஐயம் எழுந்தது. இருப்பினும் எழுத்தாளர் கூட்டு முயற்சிக்குத் தடையாக நிற்கக்கூடாது என்று கருதி அவர்கள் விலகி நிற்கவில்லை. எழுத்தாளர்களை எங்கு கண்டாலும் நண்பர் சோமசுந்தரம் விடமாட்டார். அவர்களை உறுப்பினர்களாகச்

சேர்த்து விடுவார். நண்பர்களை வீடு தேடி, அலுவலகங்கள் தேடி, பங்குப் பணம் சேர்த்தார்.

கேரளா கூட்டுறவு

கேரளாவில் ஓர் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் அரசாங்க உதவியின்றியே செயல் பட்டு வருவதைப் பல எழுத்தாளர்கள் அறிந்திருந்தனர். அங்குச் செயல் படும்போது தமிழ் நாட்டிலும் ஏன் ஒரு சங்கம் செயல் படக்கூடாது என்று எண்ணத் தொடங்கினர். ஆனால் அந்த எண்ணத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கத்தான் தக்கவர் ஒருவர் இல்லாமல் இருந்தது. ஏற்கெனவே திரு. சோமசுந்தரம் காலஞ்சென்ற பேராசிரியர் அ முத்தையா அவர்களோடு சேர்ந்து இத்தகைய ஒரு சங்கத்தை அமைக்க 1955 ம் ஆண்டில் முயற்சி செய்தார். அம்முயற்சி என்ன காரணத்தினாலோ உருவாகாமல் போய்விட்டது. பிறகு 1958-ம் ஆண்டில் எழுத்தாளர்கள் 'ஆர்வி'யும், 'வேம்பு'வும் சங்கத்தைத் தோற்றுவிக்க முயற்சிகள் எடுத்து, பொறுப்பை திரு. சோமசுந்தரத்திடம் ஒப்படைத்தனர். திரு. சோமசுந்தரம் ஒரு காரியத்தில இறங்கி விட்டாரானால் அதில் இரண்டில் ஒன்ற காணாமல் விட மாட்டார்.

சங்கத்தைப் பதிவு செய்வதானால் ரூ2,000 பங்குப் பணமாகச் சேர்க்க வேண்டுமென்று அரசாங்கம் கூறிவிட்டது. இந்த ரூ 2,000 சேர்ப்பதற்குத்தான் திரு. சோமசுந்தரம் பெருமுயற்சிகள் எடுக்க வேண்டியதாயிற்று. இப்பணம் சேருவதற்கு இரண்டு ஆண்டுகள் பிடித்தன. எழுத்தாளர்கள் பலரின் நிதி நிலைமைதான் ஊரறிந்த ரகசியமாயிற்றே!

தோற்றம்

முடிவில் 1959 ம் ஆண்டில் சங்கம் பதிவு செய்யப்பட்டபோதிலும், 1961ம் ஆண்டு செப்டம்பர் 17 ம் தேதிதான் சங்கம் செயல் பட அரசாங்க அனுமதி கிடைத்தது. சங்கம் பதிவாவதற்கு அப்போது கூட்டுறவுத் துறைப் பொறுப்பேற்றிருந்த அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமனும், அப்போதிருந்த கூட்டுறவுத்துறைப் பதிவாளர் திரு. பாலசுந்தரமும் பெரிதும் உதவி புரிந்தனர். சங்கத்தின் சீரிய நோக்கங்களைப் புரிந்து கொண்டு ஊக்கமும், ஆக்கமும் அளித்தவர் அமைச்சர் அவர்கள்தான்.

முதல் நெறியாளர் குழு

எழுத்தாளர்களின் முயற்சிகளினால் சங்கம் ஆரம்பமாகிவிட்டது. ஆனால் அதில் யார் தலைவராக வருவது; யார் யார் நெறியாளர்களாகப் பொறுப்பேற்று நடத்துவது; யார் செயலாளராக இருப்பது என்பன போன்ற பல பிரச்னைகள் தோன்றின. இப்போது இவை 'சுண்டைக்காய்' அளவு பிரச்னைகளாகத் தோன்றினும், அன்று, ஆரம்பகாலத்தில் பெரும் பிரச்னைகளாகத்தான் இருந்தன. ஏதோ ஒருவிதமாக முதல் 'டைரக்டர்கள் போர்டு' தேர்ந்தெடுக்கப் பட்டது. அதன் தலைவர் திரு தி. ஜ. ர., செயலாளர் திரு க. சோமசுந்தரம். 'டைரக்டர்கள் போர்டு' தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டவுடன் எல்லாம் முடிந்து விடுகிறதா?

பிறகுதான் பெரும் தலைவலிகள் காத்துக் கொண்டிருந்தன. பிரசுரத்திற்கான நூல்களை எவ்வாறு தேர்ந்தெடுப்பது, நூலாசிரியர்களுக்கு எவ்வாறு கடன் கொடுப்பது, நூல்களைப் பிரசுரிக்கப் பணத்திற்கு என்ன செய்வது, அரசாங்கத்திற்கும், பணம் கொடுக்கும் பாங்கிக்கும் எவ்வாறு, யார் உத்திரவாதம் அளிப்பது என்பன போன்ற பெரும் பிரச்னைகள் எழுந்தன. ஆனால் ஒன்று மட்டும் உறுதியாக எல்லோர் மனதிலும் படிந்திருந்தது. ஆரம்ப கட்டத்தில் நல்ல முடிவுகள் எடுக்கப்பட்டால் ஒழிய சங்கம் எதிர்காலத்தில் நன்கு செயல்பட முடியாது என்பதுதான் அது. மேலும் சங்கம் செயல்பட நிதி வசதிகள் போதாதென்றும் இதற்கு அரசாங்கம் ஓரளவு உதவியளித்தால் அல்லாது, சங்கம் நஷ்டத்தில் செயல்

பட வேண்டியிருக்கும் என்றும் உணரப்பட்டது. விற்பனையைப் பொறுத்த வரையில் அதிகப்படியான தலைப்புக்களைப் பதிப்பித்தால்தான் கட்டுபடியாகுமென்று உணர்ந்து, அதற்கு நிதி வசதிகள் எவ்வாறு தேடுவது என்று சங்கம் ஆராய்ந்தது.

இந்நிலையில் தலைவர் திரு. தி. ஜ. ர. அவர்கள் உடல் நலக்குறைவு காரணமாகத் தம் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். அவருக்குப் பதிலாக யாரைத் தேர்ந்தெடுப்பது என்ற புதுப் பிரச்னை எழுந்தது. எழுத்துலகில் முன்னணியில் இருப்பவராகவும், சங்கம் நன்கு செயல்பட ஊக்கமும், ஆக்கமும், நல்ல தலைமையும் அளிக்கக்கூடிய ஒருவராகவும் அத்தலைவர் இருத்தல் வேண்டுமென்று எல்லோரும் உணர்ந்தனர். அப்போது தான் இப்போதுள்ள தலைவர் திரு கி. வா. ஜகந்நாதன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்நாளிலிருந்து சங்கத்திற்கு ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டதெனக் கூறலாம். வேகத்துடனும், தெளிவான குறிக்கோள்களுடனும் சங்கம் செயல்பட ஆரம்பித்தது. தலைவர் திரு. கி. வா ஜ. அவர்கள் எழுத்துலகப் பிரமுகர் மட்டும் அல்ல; பிரசுரத்துறையில் மிக்க அனுபவமும் உள்ளவர். அவர் தலைமை சங்கத்திற்கு ஒரு பெரும் பேறாக அமைந்தது.

மத்திய பாங்கு உதவி

சங்கம் ஒழுங்குபட்ட பிறகு அரசாங்கத்திடம் நிதி உதவி கோரினோம். ஆனால், கிடைக்கவில்லை. காரணம் என்னவெனில் இது எல்லோருக்கும் புதுமையாகக் காணப்பட்டது. பல ஐயங்கள் எழுந்தன. கூட்டுறவு மத்திய பாங்கின் தலைவர் டாக்டர் நடேசன் அவர்களிடம் ஒரு தூதுக்குழுவாகச் சென்று அப்பாங்கின் உதவி கேட்டோம். அவரும் ஆரம்பத்தில் பல ஐயங்களை எழுப்பினர். ''வெள்ளைக் காகிதமாக இருந்தாலும் விற்றுவிடலாம். ஆனால் அச்சான நூல்கள் விற்பனையாகாவிட்டால் எடை போட்டல்லவா விற்க வேண்டும், அப்போது ஏராளமாக நஷ்டமாகுமே?'' என்றார். ஆனால் அப்போது கூட்டுறவு முயற்சியில் தலை தூக்கி வந்த ஒரு தமிழ் தினசரி பற்றிய பேச்சு எழுந்தது. அதை ஓர் எடுத்துக்காட்டாகச் சொல்லி டாக்டர் நடேசனைச் சங்கத்தின் முயற்சிகளில் ஆர்வம் காட்டக் கேட்டுக் கொண்டோம். அவர் ஒருவாறு உண்மையுணர்ந்து கூட்டுறவு மத்ய பாங்கின் மூலம் ஓரளவு நிதி உதவி அளிக்க ஒப்புக்கொண்டார். மத்ய பாங்கு அளித்த நிதியைக்கொண்டு முதன் முதலாக நான்கு நூல்களைச் சங்கம் வெளியிட்டது. முன்னணியில் உள்ள தமிழ் எழுத்தாளர்களான திருவாளர்கள் அகிலன், சுகி சுப்பிரமணியன், தி. ஜானகிராமன், நாரண துரைக்கண்ணன் ஆகிய நால்வரும் தங்கள் நூல்களை முதன் முதலில் சங்கத்தின் மூலமாக வெளியிட முன்வந்தனர். இந்நான்கு நூல்களைப் பொறுக்கியெடுப்பதில் தலைவர் நல்ல கருத்துரைகளை வழங்கியதோடு, சங்கத்திற்கு அடிப்படைத் திட்டங்களையும் வகுத்துக் கொடுத்தார்.

தமிழ் உறவு நூல்கள் வெளியீடு

முதல் தொகுதி நூல்கள் 6-3-1964 அன்று வெளியிடப்பட்டன. அவைகள் வெளியிட்டவர் முதலமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள். வெளியீட்டு விழாவிற்குத் தலைமை தாங்கியவர் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. என். எஸ் எஸ். மன்றாடியார் அவர்கள். திரு ஆர். வேங்கடராமன் அவர்கள் 17-2-1965 அன்று இரண்டாம் தொகுதி நூல்கள் ஐந்தினை வெளியிட்டார். இன்று 36 நூல்கள் இரண்டு ஆண்டு காலத்தில் வெளியிடப்பட்டுள்ளனவென்றால் அதற்குரிய புகழ் நெறியாளர் குழுவையே சேரும். தலைவரும், செயலாளரும் மற்ற நெறியாளர்களும் பல சிரமங்களைப் பொருட்படுத்தாமல் சங்கத்தின் வளர்ச்சியையே மனதில் கொண்டு உழைத்து வருவது சங்கத்திற்கு எதிர்காலத்தில் நல்லதொரு நிலை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் இன்று இந்தியாவிலேயே ஒரு தனிப்பெரும் இயக்கமாக வளர்ந்துவிட்டிருக்கிறது. 'தமிழ் உறவு' சின்னம் ஒரு பெருமை மிக்க சின்னமாக விளங்குகிறது. அதன் ஒளி பல் வேறு துறைகளில் வீசும் காலம் தொலைவில் இல்லை எனலாம். டாக்டர் நடேசன் அவர்கள் இன்று ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் கண்டு பூரிப்படைந்துள்ளார். அமைச்சர் திரு. ஆர். வேங்கடராமன் அவர்களும் சங்கத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளார். ஆரம்பத்தில் அவர்கள் நேசக்கரம் நீட்டியிராவிட்டால், தொடர்ந்து சங்க வளர்ச்சியில் பெரும் அக்கறை காட்டியிரா விட்டால், இன்று இம்மலரை வெளியிடும் அளவுக்குச் சங்கம் வளர்ந்திருக்காது என்பது திண்ணம்.

இச்சமயத்தில் கூட்டுறவுப் பதிவாளராக இருந்து, தற்போது 'பப்ளிக் சர்வீஸ் கமிஷன்' உறுப்பினராகியுள்ள திரு வி. கே. அப்பாண்டராஜன் அவர்கள் சங்கத்தின் வளர்ச்சியில் காட்டிய ஆர்வத்தையும், ஊக்கத்தையும் குறிப்பிடாமலிருக்க முடியாது. அவருடைய ஆர்வம், மற்றக் கூட்டுறவுத் துறை அதிகாரிகளையும் தூண்டி, எச்சமயத்திலும் வேண்டும் உதவிகளையும், ஆலோசனைகளையும் அளித்து, சங்கம் வளர்ந்தோங்குவதில் உறுதுணையாயிருந்ததைக் குறிப்பிட வேண்டும்.

தமிழக அரசின் உதவி

தமிழக அரசாங்கமும் இன்று சங்கத்திற்கு பல உதவிகள் செய்வதற்கு முன் வந்துள்ளது. சங்க அலுவலகம் செயல்படுவதற்கு ஆண்டுக்கு ரூ. 2500 வீதம் மான்யம் அளிக்க ஒப்புக் கொண்டிருக்கிறது. இவ்வாண்டு வரவு—செலவுத் திட்டத்தில் நூல்களை வெளியிடுவதற்காக ரூ. 10,000 கடனாக அளிக்க ஒதுக்கியுள்ளது. முன்பு ரூ. 2,500 அலுவலகத்திற்கு வேண்டிய சில இன்றியமையாத பொருட்களை வாங்குவதற்காகக் கடனாகக் கொடுத்தது.

மத்திய அரசாங்கமும் நமது சங்கத்தில் அக்கறை காட்டியிருக்கிறது. மத்திய அரசாங்க அமைச்சரிடம் நிதி உதவி கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அவர் சங்கத்திற்கென்று ஒரு தனி அச்சகம் நிறுவுவதானால் பல லட்ச ரூபாய்கள் கொடுக்க முடியுமென்றார். இது நமக்குப் பெரிதும் ஊக்கமளிப்பதாக இருக்கிறது. விரைவிலேயே சங்கம் தன் சொந்த அச்சகத்தில் நூல்களை அச்சிடும் வாய்ப்பு ஏற்பட்டு விடலாம். இவை எல்லாம் எதிர்காலத்திற்கு மிக்க நம்பிக்கை அளிப்பவையாக உள்ளன.

நூலக இயக்கமும் விற்பனையும்

எனினும், பிரசுரிக்கப்பட்ட நூல்களை விற்பனை செய்வதுதான் சங்கத்தின் முன் மகத்தான பிரச்னையாக நிற்கிறது. எத்தனைக் கெத்தனை அதிகமாகவும், விரைவாகவும் நூல்கள் விற்பனையாகிறதோ அத்தனைக்கத்தனை ஆசிரியருக்கும் லாபம் மிகும்; சங்கத்திற்கும் லாபம். ஆனால், நிலைமை வேறு விதமாயிருந்து வருவதைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

தமிழகத்தில் தற்சமயம் நூலக இயக்கம் பெரும் அளவில் வளர்ந்திருக்கிறது. 1948ல் அமுலுக்கு வந்த பொது நூலகச் சட்டத்தின் பயனாக, தமிழ் நாட்டின் மாவட்டந்தோறும் ஒரு நூலக ஆணைக்குழு இயங்கி வருகிறது. ஒவ்வொரு குழுவும் அந்தந்த மாவட்டத்தில் பல கிளை நூலகங்களையும் நூல் வழங்கு நிலையங்களையும் நடத்தி வருகிறது. இவ்வாறு இந்த 12 நூலக ஆணைக்குழுக்களின் கீழ் 1—4—65ல் இருந்த புள்ளி விவரப்படி,

கிளை நூலகங்கள்—832.

நூல் வழங்கு நிலையங்கள்—1247

பணியாற்றி வருகின்றன. இந்த ஓராண்டுக் காலத்தில் இவற்றின் எண்ணிக்கை மேலும் உயர்ந்திருக்கும்

என்பது திண்ணம். சொத்து வரியின்மீது ரூபாய்க்கு 3 பைசா வீதம் நூலக செஸ் வரி விதித்து இந்நூலக ஆணைக் குழுக்களுக்கு பண வசதி செய்யப்பட்டிருக்கிறது. 5,000க்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள கிராமம் அல்லது நகரம் ஒவ்வொன்றிலும் கிளை நூலகங்கள் ஏற்படுத்தியும் 1,000க்கு மேற்பட்ட மக்கள் வாழும் கிராமங்களில் நூல் வழங்கு நிலையங்களை நிறுவியும் மக்களின் அறிவை விசாலப்படுத்த உதவ வேண்டும் என்ற அரசாங்கத்தின் நோக்கம் ஓரளவு வெற்றியடைந்து வருகிறது.

ஆனால் மற்றோர் விதத்தில் இந்த வளர்ச்சி நூல் வெளியீட்டுத் தொழிலைப் பாதித்திருக்கிறது. விலை கொடுத்து வாங்காமலே இஷ்டப்படி, நூல்கள் படிப்பதற்குக் கிடைப்பதால் தனிப்பட்டவர்கள் புத்தகங்களை வாங்குவது பெரும்பாலும் நின்றுவிட்டது எனவே புத்தகங்களை விற்பனை செய்யும் விஷயத்தில் மாவட்ட நூலக ஆணைக் குழுக்களையே பெரிதும் நம்பியிருக்க வேண்டி யிருக்கிறது.

மக்கள் முன் வருக

தமிழகத்தில் மக்களே தமிழ் நூல்களை வாங்கிப் படிக்கும் வழக்கம் வளர்ந்தால்தான் எழுத்தாளன் தன் எழுத்தை மட்டும் நம்பி வாழக் கூடிய வழி பிறக்கும். தமிழ் வளர வேண்டுமாயின் பல்வேறு துறைகளிலும் நூல்கள் பெருக வேண்டுமென்று சொல்லுகின்றனர். அதற்கு மக்கள் ஆதரவு மிக மிகத் தேவையென்று கூற வேண்டியதில்லை. மூன்று கோடி முப்பத்து ஏழு லட்சம் தமிழர்கள் தமிழ் நாட்டில் மட்டும் இருக்கின்றனர். இன்னும் இலங்கை, மலேசியா, இந்தியாவின் பிற பகுதிகளில் பல லட்சம் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்களிடையே எந்தத் தமிழ் நூலானாலும் பிரசுரமான ஒரு சில மாதங்களில் 5000 பிரதிகளாவது விற்பனையாகக் கூடிய வாய்ப்பு ஏற்பட வேண்டும். அது தான் தமிழ் வளர்ச்சிக்கு அறிகுறியாகும்.

25 சதவிகித லாபம்

சங்கம் ஓரளவு வளர்ந்து தமிழ் எழுத்தாளர்களுக்கெல்லாம் ஒரு புதிய சக்தியை, விழிப்பை உண்டு பண்ணியுள்ள இச் சமயத்தில் இன்னும் பல பிரச்னைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. தமிழ் எழுத்தாளர்களின் வாழ்வில் ஒளியூட்டும் வகையில் சங்கம் 20 முதல் 25 சதவிகிதம் லாபம் கிடைக்க வழி செய்துள்ளது. இது 1,000 பிரதிகளை வெளியிட்டதின் மூலம் கிடைத்த பேறு ஆயினும் 2000, 3000, 5000 என்று பிரதிகளை வெளியிட்டு அவைகளைக் குறுகிய காலத்தில் விற்கக் கூடிய நிலைமைகளும், சூழ்நிலைகளும் உண்டாகி விடுமே யானால் நூலாசிரியர்களுக்கு 30 முதல் 35 சதவீதம் வரை லாபம் கிடைக்க வழி செய்ய முடியும். அவ்வாறு ஏற்படும் நாள்தான் எழுத்தாளர்களின் பொன்னாள் ஆகும்.

முடிவில் தமிழ் எழுத்தாளர்களுக்கு ஒரு துணிச்சலான வேண்டுகோள். தங்கள் படைப்பை யார் உணர்ந்து பிரசுரிப்பார்கள் என்று அவர்கள் இனிமேல் ஏக்கம் கொள்ள வேண்டியதில்லை. நல்ல பிரசுரங்கள் வருவதற்கு இதுகாறும் இருந்த தடைகள் நீங்கி விட்டன. இச் சங்கம் உங்களுடையது. உங்கள் படைப்புகளுக்கு ஊக்கமும், ஆக்கமும் தருவதற்கு 'தமிழ் உறவு காத்திருக்கிறது. அதன் கதவுகள் திறந்தே இருக்கும், உண்மை எழுத்தாளர்களுக்குள் 'தமிழ் உறவு' வளர, எழுத்தாளன் வாழ்வில் ஒளி வீச, தமிழ் இலக்கியம் மறுமலர்ச்சியடைய இனிமேலும் காத்திருக்க வேண்டியதில்லை. இனிமேல் தமிழ் எழுத்தாளன் யாரையும் குறைகூற முடியாது. கட்டுதிட்டங்கள், தில்லுமல்லுகள் எல்லாம் தகர்ந்துவிட்டன. இனிமேல் அவன் எழுத்துலகச் சிற்பியாக எதையும் படைக்கலாம். அவற்றை ஊர் அறியச் செய்வதற்கும், அதன் பயனை அவன் அடையச் செய்வதற்கும், இதோ இருக்கிறது 'தமிழ் உறவு' *



திருக்குறளில் பொருள் நூற் கருத்துக்கள்

திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

பொதுப்பணிகளை இருவகைகளில் ஆற்றலாம். ஒன்று கிளர்ச்சி; மற்றது ஆக்கவழி. பின்னதையே தமக்குரிய நெறியாகக் கொண்டு ஒழுகும் மதுரை பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பிறந்தது 1901 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 8 ஆம் நாளில். தமிழார்வம் மிக்க தந்தை தென்பட்டினம் பொன்னுச்சாமிக் கிராமணியாரும் அதனோடு நாட்டுப்பற்று மிக்க தமையனார் கிருஷ்ணசாமிப் பாவலரும் இவரது உள்ளத்தில் இவ்விரு 'கனல்'களையும் இளமையிலேயே சுடரச் செய்தனர். அக்காலத்தில் தமிழில் பெரும் புலமையும் நாட்டில் மதிப்பும் பெற்றிருந்த சிங்காரவேல் முதலியார், கா. ரா. கோவிந்தராஜ முதலியார், கோ. வடிவேல் செட்டியார் முதலிய பேராசிரியர்களிடம் தமிழை ஆர்வத்தோடு பயின்ற இவர், 1920 இல் பி.ஏ. பட்டமும் 1922 இல் பி எல். பட்டமும் பெற்று 1923 இல் வழக்கறிஞராகவும் தொழில் நடத்தினார். 1936இல் சென்னை மாநகராட்சியில் உறுப்பினராகவும் இருந்தார். மகாகவி பாரதியாரின் நண்பரான இவர் 1941இல் காந்தியடிகளின் ஏவலின்படி தனிநபர் சத்யாக்ரக இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை புகுந்தார்.

சிந்தாதரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி இவரது ஊக்கத்தால் இன்றுள்ள நிலையை அடைந்துள்ளது. சென்னைத் தமிழ்ச் சங்கம், வேதாந்த சங்கம் ஆகியவையும் மற்றும் பல தமிழ், கல்விச் சாலைகளும் இவர் திறமையால் பணியாற்றின; ஆற்றி வருகின்றன. சென்னை மாநகர் நூலக ஆணைக் குழுவின் தலைவராகவும் இருந்துள்ளார். 1943 இல் சென்னையில் கம்பர் கழகத்தை துவக்கி வைத்த இவர் 1949இல் அதன் ஐந்தாவது மகாநாட்டிற்கும் 1966இல் பதினோராவது மகாநாட்டிற்கும் தலைமை தாங்கினார்.

மாநிலக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகவும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மொழி ஆராய்ச்சித்துறைத் தலைவராகவும் பாங்குறப் பணியாற்றியபின், சங்கம் வளர்த்த மதுரையில் நிறுவப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பொறுப்பேற்றுள்ளார்.

தாய்மொழியாம் தமிழேயன்றி, ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய அன்னிய மொழிகளிலும்; தெலுங்கு, கன்னடம், மலையாளம், வடமொழி, ஹிந்தி போன்ற சகோதர மொழிகளிலும் புலமையும்; வைணவம், சைவம், வேதாந்தம் ஆகிய சமயத்துறை, தத்துவம், உரைநூல், தர்க்க சாஸ்திரம், அறிவியல், மொழிநூல், பொருளாதாரம், வரலாறு ஆகிய துறைகளில் தேர்ந்து தெளிந்த அறிவும் பெற்றுள்ள இவரை அறிஞரும் நிறுவனங்களும் 'பல்கலைச் செல்வர்,' 'பன்மொழிப் புலவர்,' 'பெருந்தமிழ்மணி,' 'நடமாடும் பல்கலைக் கழகம்' என்றெல்லாம் பாராட்டுவதில் வியப்பென்ன விருக்கிறது?

சங்க வெளியீடான 'திருக்குறள் கனிகள்' என்ற தொகுப்பிலிருந்து நம் சங்க உறுப்பினரான திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் எழுதியுள்ள இக்கட்டுரையை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்.

1 வள்ளுவரும் பொருளாதாரமும்

முப்பால்: திருவள்ளுவருடைய நூலுக்கு முப்பால் என்றொரு பெயருண்டு. இதனைத் திரிவர்க்கம் என வடமொழியாளர் வழங்குவர். அவர்கள் கூறுகின்ற தரும சாத்திரம், அருத்த சாத்திரம், காம சாத்திரம் என்ற மூன்றையும் திருக்குறள் விளக்குகிறது என்பதே இதன் பொருள். இந்த மூன்றையும் திருவள்ளுவர் அறனாகவே கருதுவதனால் திருக்குறளை அறநூல் என்று வழங்குகின்றோம். பிற ஆசிரியர்கள் அறத்தொடு சேராத காமத்தையும் அறவழி வாராத பொருளையும் புறக்கணிப்பதில்லை. ஆனால் வள்ளுவரோ அறத்திலே விளையாத எதனையும் உடன்படுவதில்லை. இதனை நாம் மனத்திலே கொள்ளுதல் வேண்டும்.

பொருட்பால்: அருத்த சாத்திரம் என்பதே பொருட்பாலாகும். பொருள் என்ப

தற்கே பொருளுண்டாவது அரசியலுடன் விளங்கும் சமுதாயத்தில் தான். பொருட்பால் அரசியலைப் பற்றிக் கூறுகிறது. திருவள்ளுவர் கருத்தின்படி அரசியலின் பெருமையும், பயனும் குடிமக்களின் சிறப்பேயாகும். இதனாலேயே அந்தச் சிறப்பை உடன்பாட்டாலும், எதிர்மறையாலும் பொருட்பாலின் முடிமணியாக விளங்கும் குடி இயலில் (ஒழிபியல்) தெள்ளத் தெளிய விளக்குகின்றார்.

ஆறு அங்கமும் அரசும்: அரசியலைப் பழைய இந்திய முறைப்படியே படை என்றும், குடி என்றும், கூழ் என்றும், அமைச்சு என்றும், நட்பு நாடுகள் என்றும், நாட்டுக்குக் காவலான அரணென்றும், ஆறாகப் பகுத்து வள்ளுவர் ஆராய்கின்றார். அரசன் இந்த ஆறையும் போல ஒரு அங்கமாக நின்றுவிடாமல், அவற்றை உறுப்பாகக் கொண்டு விளங்கும் உறுப்பியாம் முழுப் பொருளாம் அரசாக விளங்குகிறான்.

கூழ் - பொருள்: இங்கே கூழ் என்பது உணவை மட்டும் குறியாமல் அரசியலின் பொருளாதார நிலை முழுவதுமே குறிக்கும். பொருள் செயல்வகை என்ற அதிகாரம் கூழ் என்று வள்ளுவர் முதலில் குறிப்பதனையே, அரசியலுக்கு ஏற்ப விளக்குகிறது.

பொருள் - பணம்: மதிப்பு (Value) என்பது எல்லோரும் அறிந்ததுதான். ஆனால் இந்த மதிப்பீடு ஆளுக்கு ஆள் மாறுபடுகின்ற ஓர் அகநிலையாகவே முதலில் நிற்கும். ஆனால் சமுதாயத்தில் மக்கள் கொண்டும் கொடுத்தும் உறவாடி ஒருவரை ஒருவர் உணர்ந்து வாழவரும்போது எல்லோரும் ஒன்றுபோல ஒப்புக் கொள்ளக் கூடிய புறநிலையாகவும், மதிப்பீடு விளங்க வேண்டும். இதனை எல்லோரும் அறிந்து கொள்ளக் கூடிய நிலையில், பண மதிப்பீடாகச் சமுதாயம் மதிப்பீட்டை அமைத்து விடுகிறது. அந்த மதிப்பீட்டை விலையென்றும் பேசுகிறோம். விலை ஏற ஏற மதிப்பும் ஏறுகிறது. இந்த வழியில்தான் பணம் அல்லது பொருளே மதிப்பீட்டின் அளவு கோலாக அமைந்து விடுகிறது. இங்கே அகநிலையாக மட்டுமல்லாமல், புறநிலையாகவே அளந்து எண்ணி அறியக்கூடிய நிலை எழுகிறது. இதனால் யாருடைய கையில் பொருள் இருக்கிறதோ, அவருடைய மதிப்பையும் அந்தப் பொருளின் விலைமதிப்பைக் கொண்டு எளிதில் அளந்து அறிந்து விடுகிற நிலையும் எழுகிறது. வேறுவித மதிப்புகள் இல்லை என்பதில்லை. ஆனால் அத்தகைய மதிப்பெல்லாம் அகநிலையாகவே அடங்கிக் கிடக்கும். பொருள் அளவை ஒட்டிய விலைமதிப்பே சமுதாயத்தில் உள்ள எல்லோருக்கும் விளங்கும். எனவே இன்று பொருளாதார அறிஞர்கள் பணத்தைப் பற்றியும், பொருளைப் பற்றியும் கூறுவனவற்றை வள்ளுவர் மிகச் சுருக்கமாகவும், மிகத் தெளிவாகவும் விளக்கி அவற்றின் அடிப்படை உண்மையை நம்முடைய கருத்தில் பதிய வைக்கிறார்.

> பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
> பொருளல்லது இல்லை பொருள்.

அதனால் ''இல்லாரை எல்லோரும் எள்ளு'' வது இயல்பே.

2. பிறநாட்டுப் பொருளாதாரம்

பிறநாடுகள்: ஆனால் இங்கே பணத்தை மட்டும் குறிக்கின்றார் என்பதில்லை. பணம் நாட்டுக்கு நாடு வேறுபடும். ஆனால் அந்தப் பணத்திற்கும் பொருள் தந்து நிற்கும் பொன் முதலிய பொருள்கள் எங்கும் ஒரே தகையன. ஆகவே, அரசியலறிஞர்களுக்கு இந்தப் பொருள் என்பதே எல்லாவற்றையும் விளக்கிவிடுகிறது. வெளிநாட்டிலும் எல்லாவற்றையும் செய்து முடிக்கிறது. எனவே, பிற நாட்டுப் பொருளாதார உண்மையையும் வள்ளுவர் உணராமலில்லை. முதலிலே ஆங்கிலேயர்கள் வாணிகத்தின் வழியே நம் நாட்டோடு, பொருள் தொடர்பு கொண்டு

பின்னர் அரசியலையும் கைப்பற்றிக் கொண் டார்கள். இந்த வரலாற்றின் தத்துவத்தைப்

பொருளென்னும் பொய்யா விளக்கம்
இருளறுக்கும் எண்ணிய
தேயத்துச் சென்று.

என்ற குறளில் தெளிவாக்குகிறார்.

போராட்டம்: பிற நாட்டு அரசியல் தொடர்பை 'நட்பு' என்ற பெருந்தலைப்பில் வள்ளுவர் விரிவாகக் கூறுகின்றார். நட்பு என்றிருந்தால் பகைவரும் இருப்பர் அல்லவா? இந்த இரண்டாட்டத்தில் போரும் எழும். அமைதியே வேண்டும் என்று நாம் இருந்தாலும் இன்று உலகம் இருக்கிற நிலையில் மண்ணாசை பிடித்தவர் களும் போர் வெறியர்களும் நம்மைத் தாக் கக் கத்தியை மறைவாகத் தீட்டிக் கொண்டு தான் இருக்கின்றனர். இதற்காக நம் படை வெற்றிபெறும் மாண்புடையதாக அமைய வேண்டும். வறுமை இருந்தால் படை வெல் லுமா? நேரே சுடுபோர் செய்யும் போதல்லா மல், குளிர் போர் வளரும் போதும், பொரு ளாதாரப் போர் நடைபெறும் போதும் அரசி யல் கொள்கை வழியே எழும் இரண்டாட் டம் மூளும் போதும், நம்மிடம் நல்லெண் ணம் இல்லாதவர்கள் நம்மை மதிக்க வேண் டும் என்று நாம் முயலும் போதும், நம்மை அதற்காக அஞ்சவேண்டும் என்று எண் ணும் போதும், பகைமையை மறந்து, பிறர் நம்முடைய உதவியைத் தேடவேண்டும் என்று திட்டமிடும் போதும், இந்த வகை யில் எல்லாம் நாம் விரும்பும் உலக அமைதி நிலையாக நிலவ வேண்டும் என்று உழைக் கும் போதும் நாம் என்ன செய்யவேண்டும்? நம்மையும் பிறரையும் வாழவைக்கக் கூடிய பொருள் நம் கையில் நிறைய இருப்பதற்காக நம் பொருளாதார நிலையை மிகமிக உயர்த்தி விட வேண்டும். அரசியல் சூழ்ச்சி எல் லாம் இப்படி முடிவில் பொருளின் ஆற்ற லாக அமைந்துவிடுகிறது.

செய்க பொருளைச் செறுநர்
செருக்கறுக்கும் எஃகதனில்
கூரியது இல்.

விளையாட்டு: அரசியலில் முன் கூறிய ஆறு உறுப்புக்களை உயர்த்துகிற முயற்சியும் அப்போது தான் விளையாட்டாக முடியும். எந்த முயற்சியும், போர் உள்பட, ஒரு போராட்டந்தான்; யானைகள் போடும் போராட்டம் போன்ற கடும் போராட்டந் தான். ஆனால் யானைப் போரில் நடுவே நாம் நிற்க முடியுமா? என்ன ஆகும்? அவற்றின் காலில் நசுக்குண்டு சாக வேண்டுவதுதான்! ஆனால் பள்ளத்தில் யானைகளை முட்டவிட்டு நாம் மலைமேலிருந்து பார்த்திருக்கக் கூடும் அல்லவா? அத்தகைய நிலையில் நம் முயற்சி நமக்கு ஓர் இடையூறில்லாமல், நாம் விரும்பிய வெற்றியைத் தரச் செய்ய வழி யுண்டா? வழியுண்டு என்கிறார் வள்ளுவர். நாடு தன் கை நிறையப் பொருளை வைத் திருக்கும் போது வெற்றி முயற்சியே விளை யாட்டாகும் என்கிறார். அமெரிக்காவும், ருஷ்யாவும் இவ் விளையாட்டை விளையாடி வரவில்லையா?

குன்றேறி யானைப்போர் கண்டற்றால்
தன்கைத்துஒன்று உண்டாகச்
செய்வான் வினை.

3. பொருளாதாரமே உயிர்நிலை.

பொருள் சிறப்பு: இங்கே பிறநாட்டு அரசி யல் சூதாட்டம் மட்டுமே குறிக்கப்பட வில்லை. ஒரு நாடு பலவகையிலும் எல்லா நாடுகளையும்விட உயர வேண்டுமானாலும் பொருள் படைத்து நின்றால்தான் முடியும் என்பதும் குறிக்கப்படுகிறது. மக்கள் உயர் வது கல்வியாலே என்று அறிந்து இருந்தும் அமெரிக்கா கல்வியைத் தன் நாட்டில் வளர்ப்பது போல நாம் வளர்க்க முடிகிறதா? இதற்கும் அதன் பொருளை நாடியல்லவா நாம் செல்லுகிறோம். உணவுக்குக் கையேந் துவதைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? எனவே, கடவுளைத் தேடுவதைப் பற்றிக் கூறுகின்றவர்களும் பொருளைத் தேடுவதைத் தான் உலகில் எங்கேயும் நாம் பார்க்கிறோம். தனிமனிதன் வாழ்விலும் சமுதாய வாழ்வி

லும் உலக வாழ்விலும் பொருளாதாரம் முதல் நிலை பெற்றிருப்பதை இன்றைய பொருளியல் வல்லுநர்களைப்போல வள்ளுவரும் அறிந்து வற்புறுத்தியுள்ளார்.

முப்பாலின் உயிர்நிலை: "அறம், பொருள், இன்பம் என்ற மூன்றில் எது உயிர் நிலையாக அமைவது?" என்ற கேள்வி மிகப் பழைய கேள்வி. அறம்தான் எதற்கும் தொடக்கம் என்பதே வள்ளுவர் கொள்கை என முன்னரே காட்டினேம். அறன் இழுக்காது அல்லவை நீக்குவதுதான் அரசு. ஆனல் அறத்தில் விளையும் அரசு, அறிவால் வளர்ந்தோங்கும். இவ்வாறு திறன் அறிந்து தீதின்றி வந்த பொருள் மேலும் மேலும் அறம் என்ற பழத்தை நாம் உண்ணத் தரும்; இன்பம் என்ற பழமும் பழுத்து ஊட்டும். இந்த வகையில் "பொருளே உயிர்நிலை" என்பவரது கொள்கையையும் வள்ளுவர் ஒப்புக்கொள்கிருர்.

தீதின்றி வாராப் பொருள்: ஆனல் தீதின்றி வாராத பொருளை அவர் தொடவும் மாட்டார். வீசி எறிய வேண்டும் என்கிருர். பொருளையே எண்ணி வாழும் போது "எதற்காக இந்தப் பொருள்?" என்பதையே மறந்து விடுகிறேம். நாமும் நம் சுற்றமும் நம் உலகமும் உயர்வதற்கு என்றே பொருள் தேட முந்துகிறேம். எனவே, நம்மவர்மேல் உள்ள அன்பும் உலகத்தினர் மேல் உள்ள அருளுமே பொருளைத் தேட நம்மை உந்துகின்றன. சமுதாயத்தை ஏமாற்றியும், வேலையாட்கள் வயிற்றில் அடித்தும் பொருள் தேடுவது சமுதாயக் கொலையாகும். எனவே பொருளின் உயிர்த் தத்துவம் இல்லாதபோது அதனை வெருளவே வேண்டும், தொடாது புரளவே விடவேண்டும்.

> அருளொடும் அன்பொடும் வாராப்
> பொருளாக்கம் புல்லார்
> புரள விடல்.

என்கிருர் வள்ளுவர்.

அருளும் பொருளும்: "அவ்வுலகத்திற்கு அருள் வேண்டும். இவ்வுலகத்திற்குப் பொருள் வேண்டும்" என்று சொல்லுவதை வள்ளுவரும் ஒப்புக் கொள்கிருர். ஆனல் அவ்வுலகம் எங்கோ இருப்பதல்ல. பெரியோர் பலரும் விரும்பும் உலகமே அது. அதில் இங்கேயே வாழத் தலைப்படுகிறவர்கள் அருட் செல்வத்தை நாடுகிருர்கள். ஆனல் அருளுலகமாக இந்த உலகம் மாற வேண்டுமானல் என்ன செய்ய வேண்டும்? பட்டினியை ஒழிக்க வேண்டும். அறியாமையை நீக்க வேண்டும். இன்ப வாழ்வு நிலைக்க வேண்டும். உலகத்தை எல்லாம் ஒரு குடும்பமாகக் கொண்டொழுகும் அருள் ஒழுக்கமும், அன்பில் பழகிய பழக்கமுமே யாம். அன்பில் பழுப்பது அருள். அந்தத் தாய் வெறுங்கையோடு இருந்தால் பயன் என்ன? உடலில் வன்மை இல்லாது பட்டினி கிடக்கும்போது அந்தத் தாய் தனது குழந்தைக்குப் பாலும் கொடுக்க முடியாது. பால் கொடுத்து வாழ ஒரு செல்வச் செவிலித் தாய் வேண்டும். பொருள் என்பதுதான் அந்தச் செவிலித் தாய். அவள் இருந்தால் தான் குழவி பிழைத்திருக்கும். எனவே வீட்டுவகையே மக்களனைவரும் பெற வேண்டும் என்று முயல்கின்றவர்களும் இந்த வகையில் பொருளை நம்பித்தான் வாழ வேண்டியிருக்கிறது. மக்களிடம் கடவுளைக் கண்டு வழிபடுகிற கொள்கையை ஒரு வகையில் பொது உடைமைக் கொள்கை எனலாம். பழைய சமயத்தின் உயர்வெல்லாம் இதிலும் இருக்கிறது. எனவே, இன்று பொருளாதாரமே சமயமாகவும் காட்சியளிக்கிறது. இதனலேயே வீட்டுலகை நம்பிய காந்தியடிகள் போன்றவர்கள் மலைக்கு ஓடிப்போய் தவம் செய்ய முயலாமல் மக்களிடையே வாழ்ந்து காந்தியப் பொருளாதாரத்தை நிலை நாட்ட முயல்கின்ருர்கள்.

> அருள் என்னும் அன்பீன் குழவி
> பொருள் என்னும் செல்வச்
> செவிலியால் உண்டு.

என்கிருர் வள்ளுவர்.

ஞானமே பொருள் : ஞானத்தால் மட்டுமே வீடு கை கூடும் என்பார்கள். அன்போடும் அறிவோடும் வந்த பொருளே ஞானத்தின் வடிவம். அதனால் அது ஒண் பொருளாகிறது. பொய்யா விளக்கமாகிறது என்கிருர் வள்ளுவர்.

4. அரசர் பொருள்

வெளிநாட்டுதவி : பிறநாட்டுப் பொது அரசியற் பொருளாதாரம் (Public Finance) என்பதனையும் வள்ளுவர் அறிவார். பகைமையே இல்லாத உலகம் அல்ல நாம் வாழும் உலகம். எனவே பகைவர் நம்மைத் தாக்கி இழவெடுக்கும் போது நாம் வென்ருல் அவரே இழவுக்கு ஈடு செய்யவேண்டும் அல்லவா? நாட்டிற்கு இதுவும் ஒரு வருவாய். இதனை ''ஒன்னுர்த்தெறு பொருள்'' என்று கூறுகிருர். இன்று இது இந்த நேர் வடிவத்தோடு விளங்குவதில்லை. சுரண்டல் கொள்கையை எல்லோரும் அறிவர். இந்தக் கொள்கையால் வரும் வருவாயும் உண்டு. வெற்றி இன்று போரால் மட்டும் வருவதில்லை. அமைதியிடையேயும் வெற்றி பரவுகிறது. ஆதிக்கம் ஓங்குகிறது. கடன் என்றும் கொடை என்றும் வலிய நாடு எளிய நாட்டிற்கு உதவுவதனை இன்று உலகில் எங்கும் காண்கிருேம். இதனுல் எழும் ஆதிக்கம் நல்லதாகவும் விளையலாம் ; தீயதாகவும் பழுக்கலாம். வட்டியோடு கடனைக் கொடுப்பதும் கப்பம் கட்டுவது போன்றதுதான். முன் கப்பம் கட்டினோர் அமைதிக்கு விலை கொடுத்தார்கள் ; இன்று பொருளாதார உயர்வுக்கு விலை கொடுக்கிருர்கள்.

தெறு பொருள் : ஒன்னுர் என்ருல் பகைவர் எனக் கொள்ளாது நம்மோடு ஒரு நாடாக ஆகிவிடாது நிற்போர் என்று பொருள் கொள்ள வேண்டும். தெறுதல் என்பதற்கு ஆதிக்கம் என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். ஆதிக்கம் நாளடைவில் கூட்டுறவாக மாறி இனிக்கும். எனவே வெளிநாட்டு உதவி என்ற பொருளில் சென்று 'தெறு பொருள்' தான் முடியும். மற்ருென்றும் உண்டல்லவா? குற்றவாளிகளும் ஒரு வகையில் நாட்டுப் பகைவர்களே. ஆதலால், அவர்களிடம் தண்டனையாகப் பெறும் பொருளும் 'ஒன்னுர்த் தெறு பொருளே'. ஆம் உலகம் முழுவதும் வாழ வேண்டும் என்ற எண்ணத்தோடு வரும் வெளிநாட்டு உதவியில், அதை உதவும் நாடு அதன் பகை நாடுகளின் ஆதிக்கத்தை அழிப்பதற்கு முயலும் நோக்கமும் உண்டு அல்லவா? ஆதலின் அதன் ஒன்ருரைத் தெறுபொருளாக அந்த உதவி அமைவதைக் காண்கிருேம். பிறநாட்டிலிருந்து வாணிகம் முதலியவற்ருல் வருபொருளும் இன்று அரசியல் ஆதிக்கத்துக்கடங்கியே வருகிறது. ஒரு நாட்டில் இருந்து இன்னெரு நாட்டிற்கு வாணிகத்தின் வழியே பொருள் வந்தாலும் அதற்கு விலையாகச் செலுத்துவதனை நாடு முழுவதும் விளைவிக்கும் பொருளினைக் கொண்டுதான் செலுத்துதல் வேண்டும். எனவே, இது தனியாட்களைப் பற்றியதாகாமல் நாடு முழுவதையும் பற்றிய சிக்கலாகிறது.

உள்நாட்டுப் பொருள் ; உறுபொருள் : செல்வம் என்ருல் நாம் அதனை விளைத்தல் வேண்டும். கடன் வாங்கினுலும் பின்னே விளைத்துத் தானே திருப்பிக் கொடுக்க வேண்டும். நாட்டின் விளைவில் ஒரு பகுதி அரசினைச் சேர வேண்டும். இல்லையானுல் நாட்டுக்காக இருக்கும் அரசு பின் எப்படி இயங்க முடியும்? நேர்முகமாக வருவாயில் ஒரு பகுதி கொள்வது பழைய காலத்திலிருந்துவரும் அரசுமுறை. 'நிலத்தில் விளைவதில் ஆறில் ஒன்று அரசினைச் சேரும்' என்பது பழமொழி. ஆனுல் இந்த விகிதம் அரசின் நிலைக்கேற்ப மாறலாம். இதனை 'உறுபொருள்' என்கிருர் வள்ளுவர். பரிமேலழகர் இதற்கு வேறுபொருள் கொள்வார். இருந்தாலும் அரசனுக்குரியது நிலம் முதலியன என்ற அடிப்படையில் வருவாயில் நேர்முகமாக அரசு பங்கு கொள்வதெல்லாம் உறுபொருளாக அடங்கும்.

உல்கு பொருள்: இப்படி நேர்முகமாகப் பங்கு கொள்வது பல இடங்களில் மக்களுக்குக் கசப்பாகலாம். எனவே, மறைமுகமாகப் பங்கு கொள்வதும் அரசியல் வழக்கம். வாணிகஞ் செய்வாரிடம் வருவாயில் பங்கு கொள்வது ஒன்று. அது உறுபொருளில் அடங்கலாம். ஆனால் பொருள்களை விற்க வரும்போது அதுவரும் எல்லைகளில் எல்லாமோ, விற்கும் இடத்திலோ பொருளின் அளவுக்கேற்பச் சுங்கம் விதிக்கும் வழியும் பழையதொரு வழியாகும். இதனை விலையோடு சேர்த்து விடுவதால் வணிக மக்கள் விலையை ஏற்றியே விற்பார்கள். கடைசியில் விலை கொடுத்து வாங்குகிறவர்கள் பொது மக்களேயாதலின் அவர்கள் தலைமேல்தான் முடிவில் இந்த வரிச்சுமை விழுகிறது. இது அவர்கள் மறைமுகமாகத் தரும் வரி எனலாம். இதனை 'உல்கு பொருள்' என்கிறார் வள்ளுவர்.

> உறுபொருளும் உல்கு பொருளுந்தன்
> ஒன்னார்த் தெறுபொருளும்
> வேந்தன் பொருள்.

என்று வகுத்துக் கூறுகின்றார் அவர்.

கொடுங்கோன்மை: ஆனால் மக்களுக்குப் பெருஞ்சுமையாக இல்லாமல் பொறுக்கக் கூடிய அளவில் அமைந்து, அரசினை வளர்க்கும் வகையில் மக்களுக்கெல்லாம் இன்பந்தருவதாக முடிவதே வரிக் கொள்கையாகும். நேரான முறை இது. எனவே இதனைச் செங்கோன்மை என்பர். அப்படி மக்கட் சுமையையோ இன்பத்தையோ பாராமல் அரசு ஆடும் வெறியாட்டத்திற்கு எல்லாம் பணம் வேண்டும் என வரி விதித்தால் நாடு செழிப்பது எங்கே?

> கூழும் குடியும் ஒருங்கிழக்கும்
> கோல்கோடிச் சூழாது
> செய்யும் அரசு.

நாகரிகமும் பண்பாடும் அழியும். ஆபயன் குன்றும். அறுதொழிலோரும் நூல் மறப்பர். நன்கொடை என்ற பெயரில் அரசியலார் திரட்டுவதும் கொடுங்கோன்மையாக முடியலாம். ஏன்? அது ஒரு பகற் கொள்ளையாகவும் முடியும்.

> வேலொடு நின்றான் இடு என்றதுபோலும்
> கோலொடு நின்றான் இரவு.

பூவிலிருந்து தேன் திரட்டும் வண்டுபோல அரசு வரியைத் திரட்டவேண்டும் என்பது பழைய கொள்கை. இல்லையானால் செல்வம் நிறைந்த நாடும் வரிக் கோளாறால் வறுமை நிறைந்த நாடாகும். நோட்டை அச்சிட்டு வறுமையை வளர்த்த நாடுகளின் வரலாற்றை நாம் அறியோமா? வள்ளுவரும் அறிவார்.

> இன்மையின் இன்னாது உடைமை
> முறைசெய்யா மன்னவன்
> கோற்கீழ்ப் படின்.

5 சமுதாய அமைப்பும் பொருளாதாரமும்

சமுதாயம்: சமுதாய அமைப்பினால் மக்களது பொருளாதாரம் மாறுவதனையும் வள்ளுவர் அறிவார். அரசு இருப்பதும், இதனால் வரும் இன்றியமையாத வருத்தங்களைப் பொறுத்துக் கொள்வதும் எதனால்? முடிவிலே சமுதாயம் அமைதியாக வாழ்ந்தால் தனியார்களான குடிமக்கள் தம் ஆளுமைத் திறம் எல்லாம் மலர வாழ்ந்து உலகினை வாழ்விப்பார்கள் என்பதாலேயாம். குடிமை, மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை என்பன எல்லாம் மக்களிடையே வளருவது அத்தகைய சமுதாயத்தில்தான்.

நல்குரவு நோய்: ஆனால் அங்கே நல்குரவுதான் பெரிய நோய்; பெரிய இடும்பை. அறத்திற்காகத் தியாகம் செய்வோரது நல்குரவு தவக் கோலமாகச் சிறக்கும். எனவே அறஞ்சாரா நல்குரவே கொடியது நல்குரவினால் தானே பிச்சை எடுக்க வேண்டி வருகிறது.

கூட்டுறவு: ஆனால் ஒருவரையொருவர் நாடி வாழ்வது பிச்சையாகாது. கூட்டுறவு

வாழ்க்கையின் விளக்கம் அது. கூட்டுறவுச் சங்கங்களில் கடன் வாங்குவதும் திருப்பிக் கொடுப்பதும் நடைபெறவில்லையா? இதுவும் ஓர் இரத்தல்தான். ஆனால் இப்படி இரப்ப வர்கள் இல்லையானால் நம்மிடம் அன்பு என் பது எப்படி வெளிப்பட்டு விளங்கும்?

> இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா
> ஞாலம் மரப்பாவை
> சென்றுவந் தற்று.

உயிர் என்றால் அன்பு தான். அன்பின் வழி யது உயிர் நிலை. அன்பிற்கு இடமில்லாத போது சமுதாயமே மரப் பொம்மைகளின் நடமாட்டமாகவே முடியும். ''ஆபுத்திரன் தனது அமுத சுரபியில் இருந்து எடுத்து, வாடியோர்க்குச் சோறு கொடுத்து வந்தான்; அவனைத் தண்டிக்க விரும்பிய இந்திரன் சோறு கேட்க ஒருவரும் அவனிடங் வராத படிச் செய்துவிட்டான்'' என்ற கதை இந்த உண்மையைத்தான் விளக்குகிறது. கூட்டுற வுத் தத்துவம் இங்கே தான் விளங்குகிறது. இதனை வள்ளுவர் நன்றாக அறிந்தார் என்றே கொள்ளுதல் வேண்டும். இந்தக் கூட்டுறவு வாழ்வை அறியாதவர்களே கய வர்கள்; போலி மனிதர்கள். அவர்கள் கைப்பட்டதே நன்றியில் செல்வம். ஆனால் இவ்வாறு கூட்டுறவு வாழ்வின் எதிர்மறை வழியாகக் கூட்டுறவுத் தத்துவத்தை வள்ளு வர் விளக்குவது மிகச் சுவை உடையது.

இரவச்சம்: ஒருவரை ஒருவர் இரந்து நிற்பது ஒன்று. அங்கே, ''இரத்தலும் ஈதலும் போலும் அங்கே கரப்பிலா நெஞ்ச மிலை'' ஆதலின் இரப்பதே. இரப்பானுக்கும் கொடுப்பவனுக்கும் இன்பம். அத்தகைய கூட்டுறவு நிலையை இரவு என்று சொல்வதற் கில்லை. உயிர் கொண்டு நிலைத்திருப்ப தற்கே இரப்பது என்பது இதனினும் வேறு. இது நல்குரவால் வருகின்ற பெருங்கேடு. ஆனால் பல சமுதாயங்களில் இப்படி இரந் தால் அன்றி உயிர் வாழ முடியாத பலர் இருக்கின்றனர். இதனைப்பற்றியும் வள்ளு வர் நினைத்துப் பார்க்கின்றார். ஒரு சிலர் இவ்வாறு பிச்சைக்காரர்களாக நாட்டில் வாழ்வது இயல்பே என்றும், கடவுள் நியதி என்றும், ஏதேதோ சிலர் கூறுவர். இந்தப் பிதற்றலை வள்ளுவர் ஒப்புக் கொள்ளவில்லை. கடவுள்தான் இப்படிப் பிச்சைக்காரர்கள் இருக்கும்படி படைத்தான் என்று யாராவது கூறினால் அந்தக் கடவுள் அணுவணுவாகத் தேய்ந்து ஒழிந்து போகட்டும் என்று பதில் கூறுவார். கடவுள் வாழ்த்துக் கூறிய வள்ளு வர் இப்படிக் கூறுவதன் பொருளென்ன? ''கடவுளல்ல இதற்குப் பொறுப்பு. சமுதா யமே இதற்குப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்ற கொள்கையை உடைய வர் வள்ளுவர்.

> இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
> கெடுக உலகியாற்றின்.

இங்கே உலகியற்றியான் என்பதற்குக் கடவுள் என்று பொருள் கொள்ளாமல் உலக சமுதாயத்தின் அமைப்பை உருவாக்கும் அரசியலறிஞர்களையும், அமைச்சர்களையும் குறிப்பதாகப் பொருள் கூறுவதும் உண்டு. எனவே இந்தக் கோளாறு சமுதாய அமைப் பினால் நேருகிறது என்பது அவருடைய கருத்து. இதனாலே தான் வள்ளுவர் வழி வந்த பாரதியார்,

> தனியொருவனுக் குணவிலையெனில்
> சகத்தினை யழித்திடுவோம்.

என்று பாடுகிறார்.

தனி மனிதன் மனப்போக்கு: சமுதா யத்தின் அமைப்பைப் பொறுத்ததோடு இந்தக் கோளாறு தனிமனிதனுடைய மனப் போக்கையும் ஒருவாறு பொறுத்ததேயாகும். இரந்து உயிர் வாழ்வோம் என்று துணிவது மனித இயல்பே யன்று. தன்னுடைய உழைப்பால் வருகின்ற கஞ்சி அவனுக்கு அமுதத்தைவிட மிக மிக இனியது. உழைப் பினால் தான் தனி மனிதனும் முன்னேறு கிறான்; சமுதாயமும் முன்னேறுகிறது.

உழவு: இந்த உழைப்பு ஒரு காலத்தில் மிக விளங்கித் தோன்றியது உழவில்தான்

அதனாலேதான் ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'' என்றும் ''சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்'' என்றும் உழவர்களை இரவாதவர் என்றும், அவர்களே இரப்பார்க்கு ஒன்று கரவாது ஈவார்கள் என்றும் சொல்லிவிடுகின்றார். இன்றும் பொருளாதார நிலையில் உணவை விளைவிக்கும் உழவே சிறந்து விளங்குகின்றது. அங்கே நிலத்தின் மண்ணை வேண்டிய அளவு உணக்குவதைப் பற்றியும், எருவிடுதலைப் பற்றியும், ஏர்கொண்டு உழுவதைப்பற்றியும், களை பிடுங்குவதைப்பற்றியும், நீர் பாய்ச்சுவதைப் பற்றியும், பூச்சி, புழு அண்டாதபடி பயிர் தழைத்து வளரும் வகையில் காப்பதைப் பற்றியும், அயராது எப்பொழுதும் சோம்பலின்றி உழைப்பதைப் பற்றியும், நிலத்திற்குச் செல்லாமல், கூடுமானால் நிலத்திலேயே வாழ்வதற்கு முயலாமல் உழவன் இருப்பானேயானால் நிலமகள் ஊடிக் கொள்வதனைப் பற்றியும் இலக்கியச் சுவை சொட்டச் சொட்ட வள்ளுவர் பாடுகின்றார்.

6. இயற்றல்

மும்முதல்: பொருளாதாரத்தைப் பற்றி எழுதுகின்ற இக்காலத்து நூலாசிரியர்கள் பொருள் விளைய இயற்கை வளம் இருத்தல் வேண்டும் என்றும், அந்த இயற்கை வளத்தைச் செல்வமாக ஓங்க வைப்பது மனித உழைப்பேயாதலின், அவ்வாறு திறனறிந்து உழைக்கும் தக்கவர்கள் வேண்டுமென்றும், விளைத்ததை யெல்லாம் உண்டு கழித்துவிடாமல் உழைத்து விளைத்ததின் ஒரு பகுதியை அடுத்த விளைவிற்கு மூலதனமாக அமைப்பது இன்றியமையாதது ஆதலினால், அவ்வாறு மூலதனம் அமைத்துத் தாழாது உயரும் செல்வர்களும் வேண்டும், என்றும் வற்புறுத்துகின்றார்கள். இயற்கை (Nature), உழைப்பு (Labour), மூலதனம் (Capital) என்ற மூன்றையும் நாம் காப்பியமாகக் கண்டு அனுபவிக்கின்ற முழு நிலையில் வள்ளுவர்,

> தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
> செல்வரும் சேர்வது நாடு.

என்று பாடுகிறார்.

பொருளாக்க முயற்சி: இவ்வாறு பொருளாதார நிலையைப் பெருக்கும்போது, இடனறிந்து, காலமறிந்து, வலி அறிந்து, தெரிந்து செய்யும் வகையறிந்து, துணையாவாரைத் தெளிந்து, பொச்சாப்பு இன்றி, ஊக்கத்தோடு உழைத்து, மடி என்பது இன்றி, இடுக்கண் வரும்போது அழியாது குற்றங்கடிந்து ஒழுகுபவனே ஆள்வினை உடையவனாவான் (Entrepreneur). அவன் செய்யும் வினை அவனுடைய மனத்திட்பத்தில் விளைந்த வினைத் திட்பமாக விளங்கும். அந்தத் திண்மையால் எண்ணியதெல்லாம் எண்ணியபடி நிறைவேறும். ஆனால் நுனிக்கொம்பேறி அஃதிறந்து ஊக்கும் நிலை அங்கு இராது.

வினையால் வினை ஆக்குதல்: இவ்வாறு முதலில் முனைந்து உழைத்து வந்தால் பொருளாதார நிலையில் ஒரு புதுமை பிறக்கும். அப்போது எழும் வளர்ச்சி தானாகவே தன்னிலிருந்து தொடர்ந்து பல வளர்ச்சிகளை விளைவித்துக் கொண்டே போகும். மோட்டார்க் காரை முடுக்கிவிட்டால், பின் முடுக்கவேண்டிய நிலையேயின்றித் தானாகவே ஓடிக்கொண்டே போகும். ஆங்கிலத்தில் 'Self Accelerating Economy' என்றும் 'Takeoff Period' என்றும் பேசுகின்ற பேச்சை ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றிப் பேசுவோரிடம் கேட்கலாம். இதனை வள்ளுவர் அறிந்திருந்தாற்போல பாடுகின்றார்.

> வினையால் வினையாக்கிக் கோடல்
> நனைவுகவுள் யானையால்
> யானையாத் தற்று.

திறன் அறிதல்: இந்த முயற்சிகளை எல்லாம் செய்யும் திறன் அறிந்து செய்தல் வேண்டும். அறிவுடைமை இங்கு இன்றியமையாது வேண்டப்படும். இதனாலேயே

'அறிவுடையர் எல்லாம் உடையர்' என்கிறார் வள்ளுவர். உலகத்தோடு ஒத்து ஒழுகுவதனையும், அஞ்சுவதை அஞ்சும் அறிவுடைமையையும், ஆவதை அறிந்து எதிரது காக்கும் அறிவுநிலையில் அதிர வருவதோர் நோயொன்று இல்லாமையையும் அவர் விளக்குகிறார். இன்று செய்திறம் அறியும் அறிவைப் பல நாடுகளும் எதிர்பார்த்து நிற்கின்றன. ஆங்கிலத்தில் 'Technical Know-How' என்று அடிக்கடி தினசரிகள் கூறுவது இந்த அறிவைப் பற்றித்தான். இது வாய் வழியாகவும் வரலாம். அதனாலேதான் ''கற்றிலன் ஆயினும் கேட்க'' என்கிறார் வள்ளுவர். செல்வம் வளர்வதற்குச் சிறந்த வழியாதலின் இதனை,

> செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்
> அச்செல்வம் செல்வத்துள்
> எல்லாம் தலை.

கல்வி: கற்க முடியாதபோது கேட்பது சிறந்ததாகலாம். ஆனால் கற்பதுதானே அடிப்படை. அந்தக் கல்வியோ இலக்கியம், பண்பாடு முதலியவாக விளங்கும் எழுத்துக் கல்வியாக இருக்கலாம். அல்லது ஒவ்வொன்றையும் அததற்குத் தகுந்த அளவை கொண்டு அளந்து காட்டி மேலே போகும் அடிப்படை விஞ்ஞானக் கல்வியாகவோ, அதைக் கொண்டு வளரும் நுண்தொழில் கல்வியாகவோ இருக்கலாம். இந்த நுண் தொழில் கல்விதான் திறனறிந்து செய்வதை விளக்குகிறது. பிற நாட்டில் உள்ள 'தொழில் நுட்பக் கல்வி அறிஞரை'யும் துணை செய்யக் கூவி அழைக்கின்றோம். பொருள் நிறைய இருக்கும்போது கடன் வாங்காவிட்டாலும் இத்தகைய கல்வியறிவுகளின் துணையை நாடியே நிற்கிறோம். அது மட்டுமல்லாமல் பொதுவாகப் பொருளாதார நிலை வளரவேண்டுமானால் அனைவரும் கல்வி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும். எல்லாவற்றையும் விட இந்தக் கல்வியறிவே மிகச் சிறந்த மூலதன முதலீடு என்கிறோம். இவற்றையெல்லாம் மனத்தில் கொண்டுதான் வள்ளுவர்,

> கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
> மாடல்ல மற்றை யவை.

என்று தனி மனிதனை நோக்கியும் உறுதி கூறுகிறார். கல்விதான் செல்வத்தைத் திறனறிந்து செயல் செய்து பொருளாதாரத்தை வளர்க்க உதவுகிறது. இல்லையானால் செல்வம் பாழாகிச் சமுதாயத்தைக் கெடுக்கின்றது. வீண் செலவு செய்வாரை வீணில் உண்டு களிக்கின்றார் என நிந்தனை செய்கிறார் பாரதி. வள்ளுவரும்,

> நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
> கல்லார்கட் பட்ட திரு.

என்று கூறுகிறார்.

7. ஈட்டல்

ஈட்டல்: பொருளை இவ்வாறு கூறிய வழிகளிலே இயற்றினால் மட்டும் போதாது. உண்டது போக ஈட்டித் திரட்டி வைக்கின்ற ஒரு நிலையும் உண்டு. இந்தப் பொருள் நிலை, மிகுதி உள்ள இடத்திலிருந்து மிகுதியில்லா இடத்தில் கொண்டு சென்று விற்றுப் பொருளீட்டலும் உண்டு. ஈட்டல் என்று சொல்லும் போது இப்படி வாணிகம் (Trade and Commerce) பொருளாதாரத்தில் நிலையான இடம் பெறுகிறது.

8. காத்தல்

சேமிப்பு, காத்தல்: இவ்வாறு திரட்டுகின்ற பொழுது வங்கிகள் போன்ற பண நிலையங்களும் இடம் பெறுகின்றன. இங்கேதான் பொருளை வீணாக்கிக் கழிக்காமல் சேமித்து வைக்கின்ற ஒரு புது வளர்ச்சி ஓங்குகின்றது. சேமம் என்றாலேயே காத்தல் என்றே பொருள். வீணாக உண்டு கழிக்காமல் காப்பது ஒன்று. பின்னும் நிறைவு செய்யக் கூடாத நிலையில் இயற்கைப் பொருள்களை பயன்படுத்திப் பிற்காலச் சமுதாயத்தை வறுமையில் வாடவிடுவது

கொடுமையிலும் கொடுமை. காட்டையழிப் பது முதலிய எல்லாம் சமுதாயத்திற்குத் தீமை விளைப்பனவே. மழையின்றி உண வுப் பஞ்சம் நம்மைப் பிடுங்கித் தின்னும் போது இதனை நாம் மறந்துவிட முடியாது. இவற்றை யெல்லாம் இவ்வாறு கேடு நிகழா மல் காப்பதும், காப்பதேயாகும். நீர் முத லிய பொருள்களை ஒருவருக்கும் பயனின்றிக் கடலிலோ, காற்றிலோ மறைந்து போகும் கொடுமையைத் தடுத்து நிறுத்திக் காப்பதும் காப்பேயாகும்.

> ஆகாறு அளவு இட்டிதாயினும் கேடில்லை
> போகாறு அகலாக் கடை.

என்பதும் ஒரு காவல் முறையே. இவற்றை யெல்லாம் செய்ய வேண்டுவதும் அரசின் கடமையாகும். எனவே அரசு இயற்றவும் வேண்டும். ஈட்டவும் வேண்டும்; காக்கவும் வேண்டும்.

9. வகுத்தல் (Distribution)

அனுபவமும் வகுத்தலும், இவ்வாறு கீரையை ஆய்ந்து கொண்டிருந்தால் மட்டும் போதுமா? அதனை உண்ணுதற்குத்தானே இவ்வளவு முயற்சியும்! எனவே பொருளை அனுபவிப்பது (Consumption) என்ற முடி வான பயனை நாம் மறந்துவிடக் கூடாது. இவ்வாறு அனுபவிக்க வரும்போது, எந்த முறையில் இந்தப் பயனைப் பிரித்துத் தருவது என்ற கேள்வி மிக மிகப் பெரிதாக எழு கிறது. உழைக்கின்றவர்கள் இருக்கின்றார் கள்; உழைப்புப் பயன் தருகிற வகையில் முதலீடு செய்பவர்கள் இருக்கிறார்கள். நேரில் இவ்வாறு உழைப்பவர்களேயன்றி இந்த முழுப்பயனும் விளைவதற்கு மறைமுக மாகத் தொண்டு செய்த சமுதாய அமைப்பும் இருக்கிறது. இவர்களுக் கெல்லாம் நீதி வழுவா நெறி முறையில் இயற்றி, ஈட்டி, காத்ததைப் பங்கிட்டுக் கொடுத்தல் வேண் டும்.

நீதி: இங்கே நீதி வழுவா நெறிமுறை யாவது எது? ஒரு காலத்தில் முதலீடு செய்த செல்வர்களே அனைத்தையும் கொண்டு சென்றார்கள். ஆடு மாடு போலத் தொழிலாளர்களும் உரிமையின்றி உணவு மட்டும் பெற்று வந்தார்கள். தொழி லாளர்க்கே எல்லாம் உரியது என்ற நிலையும் வந்தது. தொழிலாளர்க்கே அனைத்தும் உரியது என்ற கொள்கையும் பரவி வரு கிறது. எல்லோரும் ஒப்புக் கொள்ளும் வகையில் பொருளைச் சமுதாயம் பிரித்துத் தரவேண்டும். இவ்வாறு செய்ய வல்லதே அரசு.

> இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்லது அரசு.

என்று பாடுகிறார் வள்ளுவர்.

10. முடிவு

எனவே இந்நாளைய பொருளியல் கூறு கின்றவற்றையெல்லாம் ஒருவாறு மனத்தில் கொண்டுதான் வள்ளுவர் தம் பொருட் பாலைப் பாடியிருக்கிறார் என்று கூறமுடி கிறது.

அரசாங்கமும் அருந்தமிழும்

திரு. வே. கார்த்திகேயன், ஐ ஏ.எஸ்.,
நெறியாவர், தமிழ் வளர்ச்சித்துறை.



திரு. வே. கார்த்திகேயன் அவர்கள் 1924-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் நாள் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பொன்மார் என்னும் சிற்றூரில் பிறந்தார். இவர் தமிழ்ப் பெரும் புலவாரன பொன்மார் நடேச முதலியாரின் பெயரராவார். மாணவப் பருவத்தி லேயே முதன்மைத் தகுதிபெற்று விளங்கினுர். ஐ. ஏ. எஸ். தேர்வில் வெற்றி பெற்று நடுவன அரசிலும் மாநில அரசிலும் பல உயர் பதவிகளை வகித்துள்ளார். தற்போது தமிழ்நாட்டு அரசாங கத்தில் வேளாண்மைக்—கூட்டுறவுத் துறைகளில் செயலாளராகவும் தமிழ் வளர்ச்சித் துறை நெறியாளராகவும் பணியாற்றி வருகிருர். ''விவசாயப் புரட்சி'' என்னும் சிறந்த மொழி பெயர்ப்பு நூல் ஒன்றை ஆக்கியுள்ளார். அண் மையில் கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டைப்பற்றி நாம் அனைவரும் அறிவோம்.

தமிழ்நாட்டுப் பிரதிநிதிக் குழுவிற்குத் தமிழக முதலமைச்சர் அவர்களே தலைமை தாங்கிச் சென்ருர்கள். இம்மாநாட்டில் கலந்துகொண்ட திரு. கார்த்திகேயன் அவர்கள் மாநாட்டின் மொழிபெயர்ப்புக் குழுவிற்குத் தலைமையேற்று அரும்பணி யாற்றியுள்ளார். தமிழ் வளர்ச்சித் துறை தனியாகத் தொடங்கப்பெற்றுச் சில மாதங்களேயாகின்றன. இக்குறுகிய காலத்தில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கான ஆக்க வேலை கள் பல நடைபெற்றுள்ளன.

''வாஞர்ந்த பொதியின்மிசை
வளர்கின்ற மதியே
மன்னிய மூவேந்தர்கள்தம்
மடிவளர்ந்த மகளே''

என்று தமிழன்னையைப் பாராட்டுகின்ருர் அண்மையில் வாழ்ந்த அருங்கவிப் புலவர்* ஒருவர். நம் அன்னை நமக்குக் கற்றுக் கொடுத்த பசுந்தமிழை அன்னை என்றே இயம்பி மகிழ்கின்ருேம். இத்தகைய தமி ழன்னைக்கு அன்னையாய் விளங்கினுர்களாம் முடியுடை மூவேந்தர்கள்! மூவேந்தர் தாலாட்டிப் பாலூட்ட தமிழன்னை வளம் பெற்று வளர்ந்தாளாம்! கவிஞரின் படப்பிடிப்பு, நம்மைக் களிப் புக் கடலில் ஆழ்த்துகின்றது. தமிழக அரசர் அனைவருமே அருந்தமிழ் வளர்த்தனர். சிற்றரசர்களும் வள்ளல்களும் சிறிதும் பின்வாங்கவில்லை. தமிழகம் பல்வேறு பகுதிகளாய்ச் சிதறிக்கிடந்த காலத்திலெல்லாம் தமிழன்னையை விடாது நின்று காத்துவந்த பெருமை தமிழ்ப் பண்டித உலகையே சாரும். இவை யாவும் வரலாறு.

இன்று அரசர்கள் இல்லை; ஆனுல் அரசு உள்ளது. அரசன் தன் அழகிய பெயரை நமக்கு நல்கிவிட்டு அவன் மறைந்தே போனுன்! அரசர்களின் இடத் திலே அமைச்சர்கள் அமர்ந்து அரும் பணி ஆற்றி வருகின்ருர்கள். தமிழ்ப் பணியையே தன் தலையாய பணியாகக் கொண்டு திகழ்கின்றது தமிழ்நாட்டு அரசாங்கம். எத்தனையோ நற்கருத்துக்களை

* கரந்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம் பிள்ளை.

எண்ணி எண்ணி, ஆய்ந்து ஆய்ந்து, செயல் முடித்துச் செம்மையுடன் முன்நிற்கிறது செந்தமிழ் அரசாங்கம். தமிழறிஞர்களையெல்லாம் ஒன்று திரட்டி, அவர்களைப் பல குழுக்களாக அமைத்து அவர்களிடம் நல்ல வேலைவாங்குகின்றது தமிழ்நாட்டு அரசாங்கம்! புலவர்களும் தங்கள் உள்ளம் விரும்பும் தமிழ்ப் பணியைத் தங்குதடையின்றிச் செய்து முடிக்கின்றனர்.

தமிழுக்குத் தனித்துறை

தமிழுக்கென்றே தனித்துறை ஒன்றை அமைத்து, அதற்கொரு உயர் அதிகாரியை நெறியாளராக நியமித்தது அரசாங்கத்தின் அக்கறைக்கு ஓர் அணி முரசமாகும். சென்ற ஆண்டு ஆகஸ்டு இரண்டாம் நாள் (2-8-68) தமிழ் வளர்ச்சித் துறை துவக்கப் பட்டது. இந்நாள் தமிழ் மொழியின் வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நன்னாளாகும். இத்துறை இதுவரை ஆற்றியுள்ள தொண்டின் வகைகளை ஒரு சிறிது விளக்க விரும்புகிறேன்.

தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் என்ற ஓர் அரிய அமைப்பு சில்லாண்டுகளாக இயங்கி வருகின்றது இம்மன்றம் அடையாற்று ஆலமரம்போல் பல கிளைகளையுடையது. சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசளிக்கும் சீரிய திட்டத்தை இம் மன்றத்தின் துணைகொண்டு செயல்படுத்தி வருகின்றது தமிழ்நாட்டு அரசாங்கம். புதிய தமிழ் நூல்களை இருபது தலைப்புகளில் வகுத்து, பரிசிற்குரிய நூல்களைத் தேர்ந்தெடுத்துப் பரிந்துரை வழங்குகின்றது இம் மன்றம். ஒவ்வொரு பரிசும் ஆயிரம் ரூபாய் அளவினையுடையது! தமிழில் தீஞ்சுவை நூல் இயற்றவல்லார்க்கு இது ஓர் அரும் பெரும் பொற்கிழியன்றோ? 1959 முதல் 1963 வரை வெளிவந்த தமிழ் நூல்களில் மிகச் சிறந்த பத்து நூல்களைத் தேர்ந்து, அவற்றின் ஆசிரியர்களுக்கு இத் திட்டத்தின்கீழ் பத்தாயிரம் ரூபாயைப் பரிசாக நம் முதலமைச்சர் அவர்கள் பராபவ வருடப் பிறப்பன்று அளித்தார்கள்.

நாட்டுப் பாடல் தொகுப்பு

நாட்டுப் பாடல்கள் நம் உள்ளத்தில் தேங்கும் அயர்வினைப் போக்கி மகிழ்ச்சியினை மலரச்செய்யும் மதுர கீதங்கள் ஆகும். நம் நாட்டு மக்கள் எத்தனையோ பாடல்களைத் தங்கள் உள்ளத்தில் மட்டும் எழுதிக்கொண்டு உவகையுடன் பாடி வருகின்றனர். அவற்றையெல்லாம் தொகுத்து, ஏட்டில் எழுதி, அச்சியற்றி, அழகாய் வெளியிட அரசாங்கம் மேற்கூறிய மன்றத்தின் மூலம் முயன்று வருகின்றது. இதுவரை வெளிவராத, தகுதிவாய்ந்த நாட்டுப் பாடல்களைத் தொகுத்து வழங்குவார்க்கு அரசாங்கம் தக்க பொருளுதவி செய்ய முன் வந்துள்ளது. இத்தித்திக்கும் செய்தியினை நாம் திக்கெல்லாம் பரப்புவோமாக.

குழந்தைகள் இலக்கியம்

குழந்தைகள் இலக்கியம் என்றால் ஏதோ ஒரு புதிய துறை என்று நாம் எண்ணுகிறோம். பைந்தமிழ்ப் பாட்டி ஔவையார் அன்றே அழகிய ஆத்திச்சூடியைக் குழந்தைகளுக் கென்றே ஆக்கினர் என்பதை நாம் எண்ணிப்பார்ப்பதில்லை. இனிய, எளிய தமிழ் நடையில் கவர்ச்சி மிக்க நூல்கள் இன்று குழந்தைகளுக்குத் தேவை. பிஞ்சு உள்ளங்களில் நஞ்சைக் கலப்பது சிறிதும் கூடாது. எனவே, குழந்தை இலக்கியம் சீரிய முறையில் வளர்ச்சி பெற வேண்டும். குழந்தைகளுக்கென வெளியிடப் பெற்றுள்ள பாட நூல்களில் குற்றங் குறைகள் மலிந்து காணப்படுகின்றன. இம் மாசு மறுவுகளை எவ்வாறு நீக்குவது என்பதற்கும், குழந்தைகளுக்கான நூல்களில் என்னென்ன சொற்கள், செய்திகள் முதன்மையாக இடம் பெறவேண்டும் என்பதற்கும் ஆய்வு நடைபெற்று வருகின்றது. இப்பணியில் ஈடுபட்டிருப்பதும் தமிழ்வளர்ச்சி மன்றந்தான்.

தமிழில் சட்டங்கள்

திருவள்ளுவரின் திருக்குறள் உலகிற்கே ஓர் ஒப்பற்ற பொது நூலாக ஒளிர்கின்றது. எவ்வகுப்பாரும், எம்மதத்தாரும், எந்நிறத்தாரும் ஏற்கவல்ல பொதுக் கருத்துக்களை உதிர்த்து வைத்தார் அவ்வுலகப் புலவர். வாழ்க்கைச் சட்டங்களை வகுத்து வைத்தார் அப் பெரும்புலவர். திருக்குறள் எங்கும் சட்டக்கருத்துக்கள், கருத்துவேர்கள் குலுங்கிக் கிடக்கின்றன. தரணி போற்றும் நம் தமிழ் நாட்டு அரசாங்கம், நம்முடைய சென்னை உயர்நீதி மன்றத்திலே தமிழ்தான் வருங்காலத்தில் அரசோச்சும் என அறிவித்துள்ளது. நெஞ்சை அள்ளும் இச்செய்தியை நல்கிய நல்லரசு நீடினிது வாழ்க என வாழ்த்துகின்றனர் 'தமிழ் மக்கள். இன்றுள்ள நிலையில் சட்டக்கருத்துக்கள் ஆங்கில மொழியிலேதான் அழகுற வளர்ந்துள்ளன. எனவே, சட்டங்களையும், சட்ட நூல்களையும் தமிழில் ஆக்குவது அவசர வேலையாக அமைந்துவிட்டது. எண்ணிறந்த சட்டச் சொற்களுக்குப் புதிய தமிழ்ச் சொற்களை வடித்துத் தருதல் தேவையாகிவிட்டது. இதனை உன்னி, தமிழக அரசாங்கம் ஆட்சி மொழி பற்றிய சட்ட ஆணைக் குழு (Official Language Legislative Commission) ஒன்றை அமைத்துள்ளது. இக் குழுவில் சட்டநிபுணர்களும், தமிழ்ப்பேரறிஞர்களும் இடம் பெற்றுள்ளனர். இவ்வாறு ஆக்க வேலைகள் அடுக்கடுக்காய் நடந்து வருகின்றன.

கல்வெட்டு ஆராய்ச்சி

கல்வெட்டு ஆராய்ச்சி பல்லாண்டுகளாக நடைபெற்று வருகின்றது. ஆனால், முறையான முழு முயற்சி இதுவரை செய்யப்படவில்லை. பல பழைய கல்வெட்டுக்கள் படிக்க முடியா நிலையெய்தி அழிந்துபோகும் நிலையில் உள்ளனவென்பதை அரசாங்கம் அறிந்தது. இத் துயர நிலை போக்கத் திட்டம் தீட்டப்பெற்று ஆணைகள் வெளியிடப்பெறும் நிலையில் உள்ளன. இப்பயனுள்ள வேலை பத்தாண்டுகளில் நிறைவெய்தும். இதுவரை நகல் எடுக்கப் பெறாத கல்வெட்டுக்கள் படிக்கப் பெற்று, நவீன எழுத்து வடிவில் கொணரப்பெற்று வெளியிடப்பெறும். முன்னரே எடுத்தெழுதப் பெற்றுள்ள கல்வெட்டுக்களும் நன்கு ஆராயப்பெறும். நம் வரலாறும், பண்பாடும் கற்களிலன்றோ காட்சியளிக்கின்றன! அவை இனி ஏடுகளில் அச்சேறி, விரும்புவோர் இல்லங்களிலெல்லாம் விரைந்து வந்து சேரும். இதன் மூலம் தமிழகத்தின் முழுமையான வரலாறும் தெளிவுபெறும்.

நூலாசிரியருக்கு உதவி

சிறந்த நூல்களை இயற்றவல்ல எத்தனையோ ஆசிரியர்கள் பணமுடையால் மனம் உடைகின்றனர். நூல்களை எழுதி வைத்துக் கொண்டு எங்ஙனம் வெளியிடுவோம் என ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். இத்தகையோரின் தளர்ச்சியைப் போக்கத் தமிழக அரசாங்கம் முன்வந்துள்ளது. இதுவரை வெளிவராத பொருள்களைப்பற்றிய சிறந்த நூல்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தை அரசாங்கம் அறிவித்துள்ளது. நிதியுதவி விழையும் ஆசிரியர்களின் கையெழுத்துப் படிகளை ஆராய்ந்து, அரசாங்கத்திற்குப் பரிந்துரை நல்க ஓர் அறிவுரைக் குழுவினையும் (Advisory Committee) அரசாங்கம் அமைத்துள்ளது. நிதியுதவிக்கான விதிகள் விரைவில் வெளியிடப்பெறும். இவ்வரிய வாய்ப்பினைத் தமிழறிஞர்கள் நன்கு பயன் படுத்திக்கொள்வார்களென நாம் பூரணமாக நம்பலாம். நறுந்தமிழ் நூல்களை வெளியிடுதல் தமிழ் வளர்ச்சியில் ஒரு முதன்மையான படியன்றோ?

ஊர்ப் பெயர்கள் உருமாறிக் கிடக்கின்றன. அவை மெல்ல மெல்ல நல்ல வடிவில் அமைந்து வருகின்றன. ஆங்கிலத்தால் சிதைக்கப்பெற்ற இனிய ஒலிகள் மீண்டும் உயிர் பெற்று எழுந்துள்ளன. ஆயினும் ஆங்கிலத்திலன்றோ அந்தப் பெயர்

கள் எல்லாம் முதலில் எழுதப்பெற்றிருக்கின்றன. தமிழ் ஆட்சிமொழியாகிய பின்னர் இந்நிலை நீடிக்கலாமா? எங்கும் தமிழ் முழக்கம் கேட்கின்ற இந்நாளில் தமிழுக்கே முதலிடம் தருதல் வேண்டும். எனவே, நம் அரசாங்கம் நெடுஞ்சாலைத் துறையினருக்கு ஆணை ஒன்று அனுப்பியுள்ளது. 'புதிதாகப் பெயர்ப்பலகைகள் எழுதும்போது நகரப் பெயர்களையும், கிராமப்பெயர்களையும் முதலில் தமிழில் சற்றுப் பெரிய எழுத்துக்களில் எழுதவேண்டும் ஆங்கிலப் பெயர்களை இரண்டாவதாக எழுதவேண்டும் இவையே அரசாங்க ஆணையில் கண்டுள்ள செய்திகள். ''தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்'' என்ற கவியரசர் பாரதியாரின் கனவு நனவாகி வருகிறது

நிறுவனங்களுக்கு உதவி

அண்மையில் தமிழ்நாட்டு அரசாங்கம் தமிழ்வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வரும் அமைப்புக்களுக்கு நிதி உதவி அளித்துள்ளது. சென்னை நகரில் இயங்கிவருகின்ற தமிழ் வரலாற்றுக் கழகம், கல்வெட்டுக்களைப் படித்து, ஆராய்ந்து தமிழ் மக்களுடைய சரித்திரத்தை எழுதுவதற்கும், சைவ வைணவ மதங்களின் சரித்திரத்தை எழுதுவதற்கும் ஒரு திட்டத்தைத் தீட்டியுள்ளது. இத் திட்டத்தைச் செயல்படுத்த முதல் தவணையாக 35,000/- ரூபாய்களை அரசாங்கம் அளித்துள்ளது. இத்திட்டப்படி இயற்றப்பட்டுள்ள ''பல்லவர் செப்பேடுகள்'' என்ற முதலாவது புத்தகம் இப்பொழுது வெளியிடப்பெற்றுள்ளது. சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கமும் அண்மையில் அரசாங்கத்தின் உதவியைப் பெற்றது. இச் சங்கத்தின் ''இருபதாம் நூற்றுண்டு இலக்கியம்'' என்ற வரிசை நூலுக்கு 5,500/- ரூபாய் வழங்கப்பட்டது. அலகாபாத், தில்லி, கேரளம், ஆக்ரா, முதலிய பல்கலைக் கழகங்களில் தமிழ்ப் பேராசிரியர் பதவியை ஏற்படுத்த தமிழ்நாட்டு அரசாங்கம் இதற்கு முன் நிதி உதவி அளித்துள்ளது. இப்போது கல்கத்தா பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர் ஒருவரை நியமிப்பதற்குத் தமிழ்நாட்டு அரசாங்கம் நிதி உதவியளிக்க ஆணை வெளியிட்டுள்ளது. இந்த ஆணையின்படி ஒவ்வொரு ஆண்டிற்கும் 10,000/- ரூபாய்கள் ஐந்து ஆண்டுகளுக்கு நிதி உதவி அளிக்கப்படும். தமிழ்க்கலை மன்றம் நடத்தி வருகின்ற ''தமிழ்க்கலை'' என்ற ஆங்கில வெளியீட்டிற்கும், தென்மொழிகளின் புத்தக டிரஸ்ட்டிற்கும் (Southern Languages Book Trust) அரசாங்கம் தேவையான நிதியுதவியை அவ்வப்போது செய்து வருகின்றது. தில்லித் தமிழ்ச் சங்கமும், பெங்களூர்த் தமிழ்ச் சங்கமும் தங்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள் கட்டுவதற்கு நிதி உதவி கோரின. அவைகளுக்கு முறையே ஒரு லட்சம் ரூபாயும், ஐம்பதாயிரம் ரூபாயும் நடப்பு நிதி ஆண்டில் வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

உலக அரங்கில் தமிழ்

மலேசியாவில் ஏப்ரல் 17 ஆந் தேதி முதல் 23 ஆந் தேதி வரை நடைபெற்ற உலகத் தமிழறிஞர் மாநாடு பற்றி அனைவரும் அறிவீர்கள். இந்நாட்டிலிருந்து 47 தமிழறிஞர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள். இந்த அறிஞர் குழுவிற்குத் தமிழ்நாட்டு முதலமைச்சா அவர்கள் தலைமை தாங்கிச் சென்றுர்கள். தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளின் பிரயாணச் செலவின் ஒரு பகுதியைத் தமிழ்நாட்டு அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முன்வந்துள்ளது.

புதிய அணிகலன்கள்

தமிழ் வெளியீட்டுக் கழகம் இது வரை 72 நூல்களை வெளியிட்டுள்ளது. இந்த ஆண்டு புதிதாக 43 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த நூல்கள் யாவும் நிலைத்த பயனுடையவை ஆகும். இவை தக்க ஆசிரியர்களைக் கொண்டு எழுதப்பெற்றுச் சீரிய முறையில் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. இந் நூல் வரிசையில் மொழி

பெயர்ப்பு நூல்களும், முதல் நூல்களும் அடங்கியுள்ளன. இந் நூல்களின் அருமை பெருமைகளை மக்கள் உணரத் தொடங்கி விட்டனர். இந் நூல்கள் இப்பொழுது கணிசமான அளவில் விற்பனையாகி வருகின்றன.

அரசோச்சும் அன்னைமொழி

ஆட்சிமொழிச் சட்டத்தைத் தக்க முறையில் நிறைவேற்றிவைக்கத் தேவை யான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 1963-ல் துறைத்தலைமை அலுவலகங்களில் தமிழ்த்திட்டத்தின் முதல்நிலை நடை முறைக்குக் கொண்டுவரப்பட்டது. 1965, மார்ச் மாதம் இவ்வலுவலகங்களில் தமிழ்த் திட்டத்தின் இரண்டாம் நிலை நடை முறைக்குக் கொண்டுவரப்பட்டது. அரசாங்க செயலகத்திலும் 1-5-1966 முதல் தமிழ்த் திட்டத்தின் முதல் நிலையை அமுல் செய்யவேண்டுமென்று அரசாங்கம் உத்திரவு பிறப்பித்திருக்கிறது. எல்லா அலுவலகங்களிலும், தமிழில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்குத் தமிழ்ப் பயிற்சி அளிக்கும் திட்டம் நடைமுறையில் இருக்கிறது. அரசாங்கச் செயலரகத்துப் பணியாளர்களுக்குத் தமிழில் வரைவுகளும், குறிப்புக்களும், எழுதப் பயிற்சி தரும் நோக்குடன் வகுப்புக்கள் நடத்தப்படுகின் றன. 43 துறைகளுக்குரிய சிறப்புச் சொற் கள், துணை அகராதிகள் இதுவரை அச்சிடப்பெற்று அரசாங்க அலுவலகங் களுக்கு வழங்கப்பெற்றுள்ளன.

நமதருமைத் தமிழ்மொழி மிகவும் தொன்மைவாய்ந்தது. மிகுந்த வளப்ப முடையது.' 'தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்றார் கவியரசர் பாரதி யார். ''தமிழுக்கு அமுதென்று பேர்'' என்றார் அவருடைய அன்பர். மல்லிகைப் பூவைப்போல் மணம் வீசுவது நம் மொழி. நம்முடைய நாட்டில் மட்டுமல்லாமல், இலங் கையிலும், மலேசியாவிலும் நம் அன்னை ஒளிவீசுகின்றாள். தமிழ்நாட்டு அரசாங்கம் ஆற்றிவரும் புதிய பணிகளால் தமிழன்னை புதுப்புது அணிகலன்களைப் பெற்று மகிழ் கின்றாள். உங்கள் பங்கினையும் உவந்தளிப் பீர்களாக.

○ * ○

பாரதியாரின் வசன நூல்கள்

வி. எஸ். சுப்பையா, ஐ.ஏ.எஸ்.

"தமிழா......எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை; எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை. முந்திய சாஸ்திரந்தான் மெய்; பிந்திய சாஸ்திரம் பொய் என்று தீர்மானம் செய்து கொள்ளாதே. காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஓர் கணக்கு ஏற்பட்டிருக்கிறதா? தகப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லி மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கிறார்கள் என்று பஞ்சதந்திரம் நகைக்கிறது."

பாரதியார் எழுதிய தமிழ் வசனத்தில் ஒருபகுதி இது. வசனம் என்றால் இதுதான். உள்ளத்தில் பிறந்த உண்மையொளி வாக்கினிலே ஒளி வீசி, ஒலிக்கக் காண்கிறோம். பேச்சுத் தமிழின் இனிமைகளையும் வல்லமைகளையும் தேர்ந்தெடுத்து, செந்தமிழிலே இணைத்துச் செய்த உரைச்செல்வம் எவ்வாறு இருக்கும் என்பதற்கு இந்த ஓர் எடுத்துக்காட்டு போதுமானது, கருத்திலே புதுமை; சொல்லாட்சியிலே புதுமை; சொற்றொடர் அமைப்பிலே புதுமை. இங்ஙனம் வசனத்திலே புதுமைப் புரட்சி செய்த பாரதியார் நல்ல உரைநடையைப்பற்றி ஓரிடத்தில் தாமே எழுதியிருக்கிறார்.

"தமிழில் வசன நடை இப்போதுதான் பிறந்தது; பல வருஷமாகவில்லை. தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்; ஆதலால் இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்யவேண்டும். கூடிய வரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமம் என்பது என்னுடைய கட்சி. எந்த விஷயம் எழுதினாலும் சரி—ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம் ஒரு பத்திரிகை விஷயம்—எதை எழுதினாலும்



தமிழக அரசின் உணவுத் துறையில் கூட்டுச் செயலாளர் ஆகத் தற்போது பணியாற்றி வரும் திரு. வி. எஸ். சுப்பையா அவர்கள் பள்ளி நாட்களிலேயே தமிழார்வம் மிக்க, கதைகளும் கட்டுரைகளும், விமரிசனங்களும் எழுதினார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வீரவநல்லூர் கிராமத்தில் 1919 ஆம் ஆண்டு ஜூலை 23-ந் தேதி பிறந்தார். அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர் நிலைப்பள்ளியிலும் சென்னை மாநிலக் கல்லூரியிலும் கல்வி கற்றார். மத்திய அரசாங்க அலுவலகங்களிலும் அகில இந்திய ரேடியோவிலும் சேவைசெய்தபின், 1959முதல் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுள் ஒருவராகப் பணியாற்றுகிறார்.

1948 ஆம் ஆண்டில் கல்கி பத்திரிகை நடத்திய சிறு கதைப் போட்டியில் 'மடை காவல்' என்ற இவரது சிறு கதைக்குப் பரிசு கிடைத்தது. 'பேரும் புகழும்' என்ற இவரது கதைத் தொகுதி வெளிவந்துள்ளது. நம் சங்க உறுப்பினர்.

வார்த்தை, சொல்லுகிற மாதிரியாகவே அமைந்துவிட்டால் நல்லது. உள்ளத்திலே நேர்மையும் தைரியமும் இருந்தால், கை பிறகு நேராக எழுத்து எழுதும். தைரியம் இல்லாவிட்டால் வசனம் தள்ளாடும்; சண்டி மாடுபோல ஓரிடத்தில் வந்து படுத்துக் கொள்ளும்; வாலைப் பிடித்துத் திருகினாலும் எழுந்திருக்காது. வசன நடை, கம்பர், கவிதைக்குச் சொல்லியது போலவே, தெளிவு, ஒளி, எளிமை, ஒழுக்கம் இவை நான்குமுடையதாக இருக்க வேண்டும். இவற்றுள் ஒழுக்கமாவது, தட்டுத்தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை. தற்கால வசன நடையில் சரியான ஓட்டமில்லை. தள்ளாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. உள்ளத்திலே தமிழ்ச் சக்தியை நிலை நிறுத்திக்கொண்டால் கை நேரான நடை எழுதும்.''

உரை நடைக்குப் பாரதியார் வகுத்துத் தந்திருக்கும் இலக்கணம் இது. சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்னால், பாரதியார் எழுதிய இந்தக் கட்டுரை, நடையின் ஓட்டத்துக்கும் சிந்தனைத் தெளிவுக்குமே ஓர் எடுத்துக்காட்டாகத் திகழக் காண்கிறோம்.

பாரதியார் இயற்றிய உரைநடை நூல்கள் அவருடைய கவிதைகளைவிட அளவில் இருமடங்கு பெரியவை. ஆயினும் ஒரு மகாகவி என்ற முறையிலேயே நாடு அவரை அறிந்து போற்றி வருகிறது. வசனத்திலும் அவரது படைப்புகள் இறவா வரம் பெற்ற இலக்கியங்கள் என்பதை ஒரு சிலரே உணர்ந்திருக்கிறார்கள். பாரதியாருக்கு முன்னால் தமிழ் வசன நூல்கள் ஒன்றிரண்டே பிறந்திருந்தன. பெரும்பான்மையான புலவர்கள் வசனத்தைத் தாழ்ந்ததாகவே கருதினர். நச்சினார்க்கினியர், பேராசிரியர் போன்ற உரையாசிரியர்கள் எழுதிய கடின நடையையே பின்பற்றிப் பலர் எழுதிவந்தார்கள். நீண்டு வளைந்து இழுத்துப் பறித்துக்கொண்டு போடும் சொற்றொடர்களும், செய்யுளா, உரையா என்ற மயக்கத்தை ஊட்டும் ஓசையும், தமிழ் உரை நடையைத் தளையிட்டு, முன்னேறவொட்டாமல் செய்துகொண்டிருந்தது அவர்களது நடை.

தமிழ்க்கவிதைக்கு விடுதலைத் தேடித் தந்ததுபோலவே, மகாகவி பாரதியார் தமிழ் வசனத்தையும், பொருளற்ற கட்டுப்பாடுகளிருந்து விடுவித்துப் புதிய உயிரும் உணர்ச்சியும் ஊட்டினார். வழக்கு ஒழிந்த சொற்கள், செல்லரித்துப்போன பழமைக் கருத்துக்கள் இவற்றை ஒதுக்கித் தள்ளி, மக்கள் பேசும் உயிருள்ள தமிழில், சமுதாயத்தின் சிந்தனையில் கிளர்ந்த விஷயங்களைப்பற்றி எழுதலானார் பாரதியார். அரசியல், பொருளாதாரக் கருத்துக்களை ஆங்கிலத்தில் தான் சொல்ல முடியும், தமிழில் முடியாது என்ற அபிப்பிராயத்தை தகர்த்தெறிந்தார். மற்ற உலகமொழிகள் நூறு வருட காலமாக உரைநடையைக் கையாண்டுபெற்ற வசனத்திறமையை, தமிழ் ஒருதலைமுறையிலே பெற்றுவிடும் வண்ணம் ‘அற்புத எழுத்து’ எழுதினார் பாரதியார். கவிதைக்குரிய தமிழிலும் பொருட்கோப்பிலும் பாரதியார் இயற்றிய புரட்சியைவிட, ஒருபடி அதிகம் என்றே தோன்றுகிறது, வசனத்தில் அவர் நிகழ்ந்திய புதுமைப் புரட்சி.

தமிழ் உரைநடை புதிதாக உருவாகிற சமயத்தில், கெட்ட பழக்கங்களைக் கற்றுக் கொண்டுவிடக்கூடாது. தமிழ்வசனத்திற்குப் பத்திரிகைகள் மூலம் சிறப்பான எதிர்காலம் ஏற்படவிருக்கிறது என்ற எண்ணத்தை உள்ளத்தில் கொண்டு செம்மையான உரை நூல்களை எழுதலானார் பாரதியார். தாம் ஒரு மகாகவி என்று உணர்ந்திருந்தும் மக்களை உத்தேசித்து மக்களோடு நாள் தோறும் தொடர்புகொள்ளவேண்டும் என்பதைக்கருதி வசனகர்த்தாவாக மாறவும் பாரதியார் தயங்கவில்லை.

பிற மொழிகளிலும் இதே காட்சியை நாம் காணமுடியும். ஆங்கில மகாகவி

மில்டன், செய்யுளில் போலவே வசனத்திலும் பேராற்றல் படைத்தவர். ஷெல்லி, வொர்ட்ஸ்வொர்த், காலரிட்ஜ் போன்ற கவிஞர் பெருமக்கள் எழுதிய கட்டுரைகளும் உயிர்த்தன்மை நிரம்பியவை. பொதுவாகப் பாரதநாட்டில், சிறப்பாக தமிழகத்தில், தாம் கண்ட எல்லாப் பிரச்சினைகளைப்பற்றியுமே பாரதியார் எழுதியிருக்கிறார். ரயில்வே நிலைய வர்ணனையிலிருந்து வாழ்க்கை நிலையாமைவரை எழுதியுள்ளார். ஞானரதத்தின் பிரயாணத்தையும் சூரிய அஸ்தமன விந்தையையும் பரவச நிலையில் நின்று வர்ணித்த அவரே, பாடகர்களுக்குத் தேவையான குரல் பயிற்சி பற்றியும், பஞ்சாங்க கணித சீர்திருத்தம் பற்றியும் எழுதியிருக்கிறார். தீண்டாமைப் பிரச்சினை, உழைப்பின் பெருமை, சமதர்மம், பெண்விடுதலை, தேசியக்கல்வி, இந்து சமயம், சிறைச்சாலைச் சீரமைப்பு, வரதட்சிணை, ஆரோக்கிய வாழ்வு இப்படிப் பலதிறப்பட்ட விஷயங்களைக் குறித்து ஆழ்ந்த கருத்துக்களைத் தீர்க்கமாக எழுதியிருக்கிறார். கட்டுரைகளைவிடுத்து, கதைகள் விஷயத்திலோ, பாரதியாரின் மகோன்னத மேதை நம்மைப் பிரமிக்கவைக்கிறது. எத்தகைய உயர்ந்த மொழிக்கும் அணிகலனாகத் திகழக்கூடியது 'ஞானரதம்'. சந்திரிகையின் கதை, சின்னச் சங்கரன் கதை ஆகிய முற்றுப்பெறாத நாவல்களிலே பாரதியார் கையாண்டுள்ள நடை ஆற்றலுடையது. Satire எனப்படும் அங்கத நகைச்சுவையில் ''சின்னச் சங்கரன் கதை'' ஈடு இணையற்றது. 'உலக இலக்கியத்தில் சின்னச் சங்கரன் கதைக்கு ஒப்புவமை சொல்ல வேண்டுமானால் ஸ்பானிய நாவலாசிரியரும் மகாமேதையுமான ஸெர்வாண்டிஸ் எழுதிய டான்க்விக்ஸாட் (Don Quixtote) என்ற நூலைத்தான் சொல்லமுடியும்.

கற்பனைக்கு வாய்ப்பான ஒரு கருத்தை மையமாகக் கொண்டு புனைந்ததே ''ஞானரதம்''. எனவே, அதில், பாரதியாரின் எழுத்து, கவிதையின் சக்தியோடு, தேனாறு போலப் பாய்கிறது. உரை நடையில் எழுதிய ஒரு காவியமென்றே ஞானரதத்தைச் சொல்லிவிடலாம்.

ஞானரதத்திலிருந்து ஒருபகுதி—காந்தர்வலோகவர்ணனை.

''சரி, பர்வதகுமாரி; நான் பறப்பதெப்படி? உன்னைப்போல் எனக்கு இறகுகள் இருக்கின்றனவா?'' என்று கேட்டேன்.

''நான் வந்தபொழுது என்மீது இறகுகள் இருக்கக் கண்டாயா'' என்றாள்.

''உன் முகத்தைக் கண்டு பரவசமடைந்ததில் இறகுகளைக் குறிப்பிட முடியவில்லை. நீ பறக்கும் பிரஸ்தாபம் தொடங்கியபோதுதான் பார்த்தேன்.''

''ஸ்துதி பிறகு பேசலாம்; ஆரம்பத்திலே இறகுகள் கண்ணுக்குத் தெரிந்ததா சொல்.''

''தெரியவில்லை.''

''இந்த உலகத்தில் பறக்க வேண்டுமென்ற நினைவுண்டானவுடனே வெண்மை நிறங்கொண்ட வானிறகுகள் தோன்றுகின்றன. நீ பறக்க வேண்டுமென்று உள்ளத்திலே சங்கற்பஞ் செய்துகொள்.''

''சரி.''

''இப்போது என் கண்ணுக்குள்ளே உன்வடிவத்தைப்பார்.''

''பட்டப்பகல்போல வீசிய நிலவொளியிலே அவளுடைய அழகிய கண்களுக்குள் உற்றுப்பார்த்தேன். அங்கே எனது வடிவம் கந்தர்வரூபமாகத்தோன்றியது கண்டு வியப்படைந்தேன். ஆகா, நான் கனவுகளிலே என்னைக் கண்டபோது தோன்றிய வடிவம் நோயற்றது; சுருங்கலற்றது; மண்தன்மையில்லாதது; சௌந்தரியமானது. எனக்கும் இரண்டு வான இறகுகள் திடீரென்று முளைத்திருக்கக்கண்டேன். எனது ரூபம் இத்தனை மாறுபாடு அடைந்திருப்பதைக் கண்டு களிப்புற்று, உடனே அவள் முகத்தையும் பார்த்தேன். எனது கண்குறிப்பை நோக்கி என் மனதிடையே அப்போது நிகழ்ந்த எண்ணத்தை அறிந்துகொண்டுவிட்டாள்.''

சமஸ்கிருத உரை நூல்களின் உத்தியைப்பின்பற்றி, நவதந்திரக் கதைகளைச் சமைத்திருக்கிறார் பாரதியார். உலகியல் உண்மைகளை மக்கள் பேசும் உயர்தமிழில் அதி அற்புதமாக விளக்குகின்றன அந்தக் கதைகள். பாரதியாரின் நகைச்சுவையை கதைகளில் நெடுகக்காணலாம்.

''சந்திரிகையின் கதை'' பாரதியார் காலத்துச் சமுதாயத்தின் அருமையான படப்பிடிப்பு. ஆனால் வெறும் கருத்துப் பிரசார நூலன்று. விதவிதமான குணம் படைத்த பாத்திரங்களைத் தெளிவாகச் சித்திரிக்கிறார். பிரபல பத்திரிகையாசிரியர் ஜி. சுப்ரமணிய அய்யர் கதையில் ஒரு பாத்திரமாக வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. பாத்திரங்களின் பேச்சும் பாவனைம் இயற்கையாக, உண்மைத் தன்மையுடன் எழுதப்பட்டுள்ளன. ஓர் உதாரணம் பார்க்கலாம்.

''முத்தம்மாளின் மாமியார் ஒருத்தி அந்த வீட்டிலேயே இருந்தாள். அவளுக்கு அறுபது வயதிருக்கும், அவள் விதவை. அவள் பெயர் ராமுப்பாட்டி. அவளுக்கு க்ஷயரோகம் அன்று; காசரோகம். அதாவது சீக்ரத்தில் கொல்லுகிற கொடூரமான க்ஷயமில்லை. நோயாளியை நெடுங்காலம் உயிருடன் வதைத்து வதைத்துக் கடைசியில்கொல்லும்மாதிரி. இராத்திரி ஏழுமணியாகி விட்டால், அவள் இருமத்தொடங்கி விடுவாள். பாதிராத்திரி, ஒருமணி, காலை இரண்டு மணிவரை மகா பயங்கரமாக இருமிக்கொண்டே இருப்பாள். அந்த இருமலைக் கேட்டால் கேட்பவருடைய பிராணன் இரண்டு நிமிஷத்துக்குள்ளே போய்விடும் போலிருக்கும். ஆனால் ராமுப்பாட்டி சென்ற முப்பது வருஷங்களாக அப்படித்தான் இருமிக்கொண்டு வருகிறாள். அவளுடைய பிராணன் அணுவளவுகூட அசையவில்லை.''

சந்திரிகையின் கதையில் வருகிற சிறு பாத்திரங்களும் இவ்விதம் தெளிவாகச் சித்திரிக்கப்படுகிறார்கள். உரையாடற் பகுதிகள் எல்லாம் விளக்கவுரைகளாக இல்லாமல் நாடகத்தன்மையோடு தீட்டப்பட்டுள்ளன.

எத்தனையோ பல நாவல்களைத் தந்திருக்கக்கூடிய நாவலாசிரியர், அகால மரணமுற்றது நமது துர்ப்பாக்கியமே.

பாரதியாரின் வசன நூல்களைப்பற்றிப் பேசும்பொழுது, அவருடைய மொழிப் பெயர்ப்புக்களின் சிறப்பைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. வேத மந்திரங்கள் சிலவற்றையும், பகவத் கீதையையும், கதைகள் சிலவற்றையும், அவர்மொழி பெயர்த்திருக்கிறார். முதல் நூல்களின் நிலைக்கு ஏற்ற நடையில் அழகு ஒளிரும் அவருடைய மொழி பெயர்ப்பு, மற்ற மொழி பெயர்ப்பாளர்களுக்கெல்லாம் வழிகாட்டி நிற்கிறது என்று சொல்லவேண்டும்.

தமிழ் உரைச் செல்வத்துக்குத் திறமான அடிப்படை அமைத்துத் தந்தவர் மகாகவி பாரதியார். எளிமையும் தெளிவும் ஒளியும் ஓட்டமும் கொண்ட ஆற்றுப்பெருக்கைப் போன்ற செம்மையான உரைநடையின் ஆதிகர்த்தா பாரதியார். 1921க்குப் பிறகு தமிழ் வசனத்தில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய முன்னேற்றம் பெரும்பாலும் பாரதியார் காட்டிய பாதையிலேயே நடந்து வருகிறது.

பாரதியாரின் நூல்களில் நாம் காணும் சமஸ்கிருத மொழிப்பிரயோகங்களுக்குப் பதிலாகத் தமிழ்த் தொடர்களும் புதியகலைச் சொற்களும் இப்பொழுது எழுத்தாளர்களால் எடுத்தாளப்பட்டு வருகின்றன. இப்படி அந்தந்த கால கட்டத்திற்கு ஏற்ப, தமிழ் உரைநடை இலக்கியத்தில் மாறுதல் நிகழ்வது இயல்பு.


மாறுதல் இன்றி வளர்ச்சி ஏது? ஆயினும் பாரதியார் தந்த பொது அடிப்படை உறுதி நிறைந்தது. அசைக்க முடியாதது. அந்த அடிப்படையின்மேல் எத்தனை அடுக்கு மாடிகள் வேண்டுமானாலும் கட்டிக் கொண்டே போகலாம். கட்டுவதற்கு வேண்டிய திறனும், ஊக்கமும், தைரியமும் தான் எழுத்தாளப் பெருமக்களுக்கு வேண்டும். ○

சென்னை மாவட்ட நூல்நிலைய ஆணைக்குழு

திரு. வி. என். சுப்பராயன் பி.ஏ.,

பொது மக்களுக்கு நூலகச் சேவை செய்வதற்கான சட்டமியற்றிய முதல் இராச்சியம் சென்னைதான். டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன் அவர்களின் இடைவிடா முயற்சியால், தாமாக முன்வந்து சேவை செய்யும் இயக்கங்களையே நம்பியிராமல், சட்டமியற்ற வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. இதன் விளைவாக 1948ஆம் ஆண்டில் ''சென்னை பொது நூல்நிலையங்களின் சட்டம்'' இயற்றப்பட்டது. இச்சட்டம் 1-4-1950-இல் அமுலுக்கு வந்தது. இச்சட்டத்தின் கீழ் நூல்நிலைய ஆணைக் குழுக்கள் என்னும் தாமே இயங்கும் அமைப்புகள் எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டன. இந்த அமைப்புகளின் நடவடிக்கை, நிர்வாகம் மாவட்டக் கல்வி அதிகாரியை (அவர் வகிக்கும் பதவியின் காரணமாக) செயலாளராகக் கொண்ட ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

சென்னையைத் தவிர மற்ற மாவட்டங்களின் நூல் நிலைய ஆணைக் குழுக்கள் அநேகமாக ஸ்தல ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையே கொண்டிருக்கின்றன. சென்னை நகரத்தில் உள்ள குழுவில் 8 அங்கத்தினர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவராயும், மூன்று பேர் சென்னை மாநகராட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்டவராயும் உள்ளனர். அங்கத்தினர்கள் தம்முள் ஒருவரைத் தலைவராகத் தெரிந்தெடுக்கின்றனர். அங்கத்தினர்கள் மூன்று ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கின்றனர். பொது நூலகங்களின் இயக்குநர், உள்ளூர் நூல்நிலைய ஆணைக் குழுக்



தமிழ்நாடு அரசாங்கத்தின் நிதித் துறையில் 15 வருட சேவைக்குபின் தூத்துக்குடி, கோவை, மதுரை, போன்ற பெரிய நகரங்களின் நகராட்சிகளின் ஆணையராகப் பொறுப்பேற்று நிர்வகித்தவர் திரு. வி. என். சுப்பராயன் அவர்கள் சென்னை மாநகராட்சியிலும் 3 ஆண்டு காலம் ஆணையாளராகப் பணியாற்றினர். பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பு பல பொதுநல ஸ்தாபனங்களிலும் கல்வி நிறுவனங்களிலும் பங்கு கொண்டு ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் பணியாற்றி வருகிறர். சென்னை மாநகர நூலக ஆணைக்குழுவின் தலைவர்.

களைக் கண்காணித்து வருகிறார். இப்பொழுது உயர் கல்வி இயக்குநரே பொது நூலகங்களின் இயக்குநராகவும் இருக்கிறார். நூலக ஆணைக்குழுக்களின் முக்கிய வேலை பொதுமக்களுக்கு நூலகச் சேவை கிடைக்கச் செய்வதுதான். சொத்து வரியின் மீது வசூலிக்கப்படும் நூலகத் தீர்வையே இவ்வமைப்புகளின் மூல வருமானமாக இருக்கின்றது. சென்னை நகரத்தைத் தவிர மற்ற மாவட்டங்களில் உள்ள நூலக ஆணைக் குழுக்களுக்கு நூலகத் தீர்வை மூலம் பெறப்படும் தொகைக்குச் சமமான உதவிப்பணம் அரசாங்கம் கொடுக்கிறது. சென்னை நகரத்திற்கு இவ்வித உதவிப் பணம் எதுவும் கொடுக்கப்படுவதில்லை. சென்னை நகர மாவட்ட நூலக ஆணைக் குழு, சென்னை மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டுக் கொடுக்கப்படும் நூலகத் தீர்வையைக் கொண்டே நூலகச் சேவை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1948-இல் இயற்றப்பட்ட சென்னை பொது நூலகங்களின் சட்டம் 1-4-1950 முதல் அமுலுக்கு வந்துவிட்ட போதிலும், 1954ஆம் ஆண்டின் இறுதி வரை சென்னை நகர உள்ளூர் நூலக ஆணைக்குழு எந்தவிதமான முக்கிய அலுவல்களிலும் ஈடுபடவில்லை. இதன் காரணமாகத் தீர்வைப் பணம் குவிந்து கொண்டேயிருந்தது.

அடுத்த ஆண்டில் அப்போதைய தலைவர் திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் அவர்கள், ஸவுத் இந்தியா ஆட்டோமொபைல் அஸோஷியேஷன் அருகிலுள்ள வாடகைக் கட்டிடமொன்றில் ஒரு மத்திய நூல்நிலையம் தொடங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். சென்னை மாவட்ட மத்திய நூல்நிலையம் அப்போதைய கல்வி மந்திரியான திரு. சி. சுப்பிரமணியம் அவர்களால் 1-7-1954 அன்று திறந்து வைக்கப்பட்டது. அச்சமயம் நான் சென்னை மாநகராட்சியின் ஆணையராக இருந்தேன். என்னுடைய வேண்டுகோளின் பேரில் திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் சென்னை மாநகராட்சி நடத்தி வந்த 73 வாசகசாலைகளை எடுத்து, அவைகளைக் கிளை நூலகங்களாக நடத்தவாரம்பித்தார். இவ்விதம் சென்னை நகரத்தில் பொது நூலகச்சேவை நடப்பதற்கான அஸ்திவார மிட்ட பெருமை திரு. ம பொ. சிவஞான கிராமணியாருக்கு உரியதாகும்.

உரிய மூன்றாண்டுகளுக்குப் பிறகு 1957ஆம் ஆண்டில் இவ்வாணைக்குழு திரும்ப அமைக்கப்பட்டது. புதிதாக அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட ஒரு சில அங்கத்தினருள் நானும் ஒருவனாயிருந்தேன். இக்குழு 5-8-57-இல் என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. உரிய காலம் முடிந்தவுடன் அடுத்து இருமுறை நான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அரை நூற்றாண்டுக்கு மேல் குடிமகனாக நான் இருக்கும் இந்நகரத்திற்குச் சேவை செய்ய எனக்கு வாய்ப்பளித்தமைக்கு அரசாங்கத்திற்கும், பொது நூலகங்களின் இயக்குநருக்கும், சென்னை மாவட்ட ஆணைக்குழுவின் அங்கத்தினர்களுக்கும் நன்றியுடையவனாகயிருக்கிறேன்.

1957-இல் திரும்ப அமைக்கப்பட்ட ஆணைக்குழு ரூ. 17 இலட்சத்திற்கு மேல் குவிந்துள்ள ஓர் அமைப்பின் பொறுப்பு தன்னிடம் உள்ளது பற்றி மகிழ்ச்சியடைந்தது. நாங்கள் அந்தப் பணத்தை வீணாக்காமல் திறமையாக முதலீடு செய்யவிரும்பினோம். ஒன்றரை இலட்சம் தவிர மற்றப் பணம் வட்டி எதுவும் கிடைக்காது நடைமுறைக் கணக்கில் இருப்பதை நாங்கள் கண்டோம். இருந்த பணத்தைக் குறிப்பிட்ட கால இருப்புத் தொகையில் தகுந்தவாறு முதலீடு செய்வதன் மூலம் உள்ளூர் நூலக ஆணைக்குழு கடந்த 8 ஆண்டுகளில் ரூ. 5 இலட்சத்திற்கு மேல் வட்டியாகச் சம்பாதித்துள்ளது.

சென்னை மாவட்ட மத்திய நூல் நிலையம் இடம் போதாத ஒரு வாடகைக் கட்டிடத்தில் இருந்ததால், அதற்கு ஒரு புதிய கட்டிடம் கட்ட வேண்டியிருந்தது. தகுந்த நிலப் பகுதி ஒன்றை வாங்கி அங்கு சென்னை மாவட்ட மத்திய நூல்நிலையக் கட்டிடத்தை அமைக்க நாங்கள் தீர்மானித்தோம். தற்போதுள்ள சுமார் 63 மனைப் பரப்புள்ள இடத்தை ரூ. நாலரை இலட்சத்திற்கு அதிர்ஷ்டவசமாக நாங்கள் வாங்கினோம். இது மனை ஒன்று ரூ. 7,150 விலையடக்கமாகிறது. மவுண்டுரோடில் தற்சமயம் மனையொன்று ரூ. 50,000 விலையாயிருக்கிறது. ரூ. 4 இலட்சத்திற்கு வாங்கிய நிலம் இப்போது ரூ. 30 இலட்சம் பெறுமானமுள்ளதாயிருக்கிறது.

நாங்கள் நிலம் வாங்கிச் சிறிது காலமான பிறகு சென்னை மாவட்ட மத்திய நூல் நிலையம் இருந்த கட்டிடத்தின் சொந்தக்காரர் எங்களைக் காலி செய்யச் சொல்லி அறிக்கை கொடுத்தார். புதிதாக வாங்கப்பட்ட நிலத்தின் பின் பகுதியில் குழாய் உத்திரங்களுள்ள (Tubular Tresses) ஒரு கட்டிடம் கட்டி, அந்தக் கட்டிடத்திற்குச் சென்னை மாவட்ட மத்திய நூல் நிலையத்தைத் தற்காலிகமாக இடம் பெயர்த்தோம். பிறகு நாங்கள் இந்தக் கட்டிடம் கட்ட ஆரம்பித்து தளவாடங்கள், சாமான்கள் உள்பட ரூ. 23,96,100 செலவில் கட்டி முடிந்தோம். இந்த வேலையைப் பொது மராமத்து இலாகாவிடம் ஒப்படைத்திருந்தால் நாங்கள் சுமார் 3.80 இலட்சம் சதவீதப் பணமாகக் கொடுக்க வேண்டியிருந் திருக்கும். இவ்வேலையை அரசாங்கத்திலிருந்து கடனாகப் பெற்ற ஒரு பொறியாளரின் உதவியைக் கொண்டு செய்ததனால் கட்டிடம் கட்டுவதை மேற்பார்வையிடுவதற்கான ரூ. 1.7 இலட்சம் மாத்திரமே செலவு ஆயிற்று. சுமார் 12,760 ச. அடிப் பரப்புள்ள அடித்தளமும் முதல் மாடிப் பகுதியும் நூல்நிலைய ஆணைக் குழுவின் இருப்பிடமாயுள்ளன.

இதுவரை சென்னை மாவட்டத்திய நூல் நிலையமிருந்த பின்புற முள்ள கட்டிடத்தின் பெரும்பான்மையான பாகம் இப்போது குழந்தைகள் நூல்நிலையமாக உபயோகப் படுத்தப்படுகிறது. இரண்டாவது, மூன்றுவது, நான்காவது மாடிகள் வாடகைக்கு விடப்படுகின்றன. ஒவ்வொரு மாடிக்கும் வருஷத்திற்கு ஓர் இலட்சம் ரூபாய் வாடகை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாணைக்குழு நிலத்தின் பின் பகுதியில் ரூ. 4.78 இலட்சத்தில் ஒரு கட்டிடம் கட்டி அதை மாதம் ரூ. 6970 குத்தகைக்கு பிரிட்டிஷ் கவுன்சிலுக்கு (British Council) விட்டிருக்கிறது. இவ்விதம் சென்ற 8 ஆண்டுகளில் தன்னுடைய வரவு செலவுகளைத் திறமையாகவும் கவனமாகவும் நடத்தி ரூ. 33 இலட்சம் செலவில் ரூ. 60 இலட்சம் பெறுமானமுள்ள ஒரு முகாமைப் படைத்துள்ளது. குத்தகைக்கு எடுத்திருந்தால் ரூ. 20,000 கொடுக்க வேண்டியிருந்திருக்கக் கூடிய 30,000 ச. அடி. இடத்தைப் பெற்றிருப்பதுடன், ஆண்டிற்கு ரூ. 4 இலட்சம் நிரந்தர வருமானம் தரக்கூடிய ஒரு மூலதனத்தையும் அது ஏற்படுத்தியுள்ளது. வரிகளையும் பாதுகாக்கும் செலவுகளையும் கழித்த பிறகு ஆண்டிற்கு ரூ. 3 இலட்சம் வருமானத்தை எதிர்பார்க்கலாம். நூல்நிலையத்தை நடத்த உபயோகிக்கப்படும் இரண்டு தளங்களையும் விட்டு விட்டால் மூலதனத்தைச் சுமார் ரூ. 23 இலட்சம் என்று எடுத்துக் கொள்ளலாம். இதில் நிகரமாகத் திரும்பப் பெறுவது சுமார் 13 சதவீதமிருக்கும். இது குறித்த கால இருப்புத் தொகையில் முதலீடு செய்வதிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானத்தைக் காட்டிலும் சுமார் இரு மடங்காகும். சென்னை நகர நூலக ஆணைக்குழு சென்னை மாவட்ட மத்திய நூல்நிலையத்தையும், 93 கிளை நூல் நிலையங்களையும், குழந்தைகளுக்கான ஒரு நூல் நிலையத்தையும் நடத்தி வருகிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் நூலகச் சேவைகளை எவ்வளவு

தூரம் பொதுமக்கள் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் காட்டும்.

1. சென்னை உள்ளூர் நூல்நிலையக் குழுவினால் வாங்கப்பட்டுள்ள புத்தகங்களின் மொத்த எண்	3,28,779
2. சென்னை மாவட்ட மத்திய நூல் நிலையத்திலுள்ள புத்தகங் களின் இருப்பு	46,929
3. கிளை நூல்நிலையங்களிலுள்ள புத்தகங்களின் இருப்பு	2,81,908
4. சென்னை மாவட்ட மத்திய நூல் நிலையத்திற்கு வரும் பத்திரிகை சஞ்சிகைகளின் எண்	152
5. சென்னை மாவட்ட மத்திய நூல் நிலையத்தில் படிக்கப்பட்ட புத்தகங்களின் எண்	2,84,456,
6. சென்னை மாவட்ட மத்திய நூல் நிலையத்திலிருந்து கடனாகக் கொடுக்கப்பட்ட புத்தகங்களின் எண்	20,456
7. கிளை நூலகங்களில் படிக்கப் பட்ட புத்தகங்களின் எண்	77,83,627
8. கிளைநூலகங்களிலிருந்து கடன் கொடுக்கப்பட்ட புத்தகங்களின் எண்	2,77,542

நூலகச் சேவை பயன்படுத்தப்படும் அளவு திருப்திகரமாக இருப்பதாக நாங்கள் சொல்ல முடியாது. யு. எஸ். ஐ. எஸ். நூலகம், பிரிட்டிஷ்கவுன்ஸில் நூலகம், சர்வகலா சாலை நூலகம், கன்னிமாரா நூலகம் போன்ற பல நூலகங்கள் நகரத்தில் இருப்பது சந்தேகமின்றி எங்கள் மத்திய நூல் நிலையத்திற்கும் கிளை நூலகங்களுக்கும் வரும் மக்களின் எண்ணிக்கையைப் பாதிக்கிறது. இருந்த போதிலும் நம்முடைய இலவச நூலகங்களுக்கு வருபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய நிறைய இடமிருக்கிறது. பொதுமக்களைக் கவர்வதற்கும் எங்கள் சேவையை நன்கு பயன்படுத்திக் கொள்வதற்கும் எங்களால் இயன்றதையெல்லாம் நாங்கள் செய்து வருகிறோம்.

கீழ்க்கண்ட திட்டங்கள் சென்னை நகர உள்ளூர் நூல்நிலைய ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

1. அங்கத்தினர்களுக்கு வீடு வீடாகச் சென்று புத்தகங்கள் கொடுத்தல்

சென்னை உள்ளூர் நிலைய ஆணைக்குழு நூலகங்களின் அங்கத்தினர்களுக்கு, அவர்களின் வீடுகளுக்கு சைகிள்களிலும் மூன்று சக்கர வண்டிகளிலும் புத்தகங்கள் எடுத்துச் சென்று கொடுக்கப்படுகின்றன. அவர்கள் இருப்புத் தொகையாக ரூ. 5ம் பெயரளவிற்குச் சந்தாவாக மாதம் நான்கணாவும் கொடுக்கின்றார்கள். மூன்று சக்கர வண்டி திருவல்லிக்கேணி, சிந்தாதிரிப் பேட்டைப் பகுதிகளில் இயங்குகிறது. சைகிள் வண்டிகள் 22 மாநகராட்சி வட்டங்களுள்ள (தற்போது எங்கள் கிளை நூலகச் சேவை பெறாத) கிழக்கு மேற்கு, தெற்குப் பகுதிகளில் இயங்குகின்றன. இத்திட்டம் மற்றப்பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படுவதுடன் கிளை நூலகங்கள் இல்லாத பகுதிகளுக்கும் இவ்வசதி கிடைப்பதற்குத் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது.

2. மோட்டார் வண்டி மூலம் புத்தகங்கள் பட்டுவாடா செய்தல்

சில கிளை நூலகங்களில் இட வசதிக் குறைவினால் போதுமான புத்தகங்கள் இருப்பதில்லை. வாசகர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய இக்கிளை நூலகங்களுக்கு அவ்வப்போது புத்தகங்கள் மோட்டார் வண்டி மூலம் பட்டுவாடா செய்யப்படுகின்றன. அநேக கிளை நூலகங்களில் எங்களுக்கு இடவசதி ஒரு பிரச்னையாக இருந்து வருகிறது. முன்பு மாநகராட்சி வாசகசாலைகள் நடத்தி வந்த இடங்களில் நாங்கள் 63 கிளை நூலகங்கள் நடத்தி வருகிறோம். இவைகளில் பெரும்பான்மையானவை சிறிய அறைகள். இங்கு புத்தகங்கள் வைக்கக் கூடிய அலமாரிகளுக்கும் பீரோக்களுக்கும் இடம் போதவில்லை. நாங்கள் எங்களால்

முடிந்தவரை தகுந்த கட்டிடங்களைப் பெற முயற்சி செய்து வருகிறோம். ஆனால், வாடகைக்கோ, விலைக்கோ இவ்விதக் கட்டிடங்கள் கிடைப்பது மிகவும் கடினமாயிருப்பதை நாங்கள் காண்கிறோம். பொது அமைப்பாக இருப்பதால், வாடகையைக் கட்டுப்படுத்தும் சட்டத்தின் கீழ் அநுமதிக்கப்படுவதைக் காட்டிலும் அதிக வாடகை எங்களால் கொடுக்க முடியவில்லை. அந்த வாடகைக்கு எங்களுக்கு யாரும் கட்டிடம் கொடுக்க விரும்பவில்லை. கட்டிடம் கட்டக் காலி இடங்களை விலைக்கு வாங்கவும் முயற்சி செய்துவருகிறோம். இதுவும் சுலபமானதாகக் காணப்படவில்லை. நாங்கள் மேலும் முயற்சி செய்து கொண்டேயிருப்போம். இப்போது சிறிய அறைகளில் நடத்தப்படும் கிளை நூலகங்களை இன்னும் தகுந்த கட்டிடங்களுக்கு மாற்ற முடியும் என்று நம்புகிறோம். இது அவசியமாகிறது. ஏனென்றால் மாநகராட்சி பள்ளிக்கூட சுற்றுவளைவிற்குள் தற்சமயம் இருக்கும் அறைகளைக் காலி செய்யச் சொல்லி எங்களைக் கேட்டுக் கொண்டேயிருக்கிறது.

3. உயர்தர ஆரம்பப்பள்ளிச் சிறுவருக்கு சுற்று நூலகத் திட்டம்

பொது நூலகங்களின் இயக்குநர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களால் 11-7-61 அன்று துவக்கி வைக்கப் பெற்றது. பள்ளிச் சிறுவர்களுக்கு, தங்கள் பாட புத்தகங்களைத் தவிர பொழுது போக்குடன் அறிவு வளர்ச்சி தரக்கூடிய புத்தகங்கள் கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன் இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 100 உயர் தர ஆரம்பப் பள்ளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார்வண்டி ஒன்றின்மூலம் புத்தகங்கள் பட்டுவாடா செய்யப்படுகின்றன. பள்ளிக்கூட நிர்வாகத்திடமிருந்தோ, குழந்தைகளிடமிருந்தோ இருப்புத் தொகை எதுவும் இதற்காக வசூக்கப்படுவதில்லை. ஒரு தடவையில் அநேகமாக ஒவ்வொன்றிலும் 10 பிரதிகளுள்ள 10 புத்தகங்கள் ஒரு தட்டில் வைத்துக் கொடுக்கப்படுகின்றன. 15 நாட்களுக்கு ஒரு முறை இவை திரும்பப் பெறப்பட்டு, புதுப் புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றன. இப்பொழுது இந்தத்திட்டம் சென்னை நகரில் உள்ள எல்லா ஆரம்பப் பாடசாலைகளுக்கும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. இந்த திட்டம் விரிவுபடுத்தப்பட்ட விழா 1965-ம் டிசம்பர் மாதம் 12ந் நாளன்று சென்னை நகர மேயர் திரு. மைனர் மோசஸ் தலைமையில் மதிப்பிற்குரிய சென்னை மாகாண முதல் அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்களால் சென்னை மாவட்ட மத்திய நூலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

4. மாதர்களுக்கு வீட்டில் படிக்க, பெண் ஆசிரியைகள் மூலம் புத்தகங்கள் கொடுத்தல்

தாமாக முன்வந்து சேவை செய்யும் ஆரம்பப்பள்ளி பெண் ஆசிரியைகளிடம் 5க்கு மேற்படாத புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றன. இவ்வாசிரியைகள் இப்புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றன. இவ்வாசிரியைகள் இப்புத்தகங்களைப் பெண் வாசகர்களுக்குக் கொடுக்கிறார்கள். இந்தப் புத்தகங்களுக்கான இருப்புத் தொகை எதுவும் வாங்கப்படுவதில்லை. இத்திட்டம் பொது நூலகங்களின் இயக்குநர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களால் 8-11-61 அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

5. மருத்துவமனை நூலகச் சேவை:

ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகள் தங்கள் நேரத்தைப் பயனுள்ளதாகச் செலவு செய்ய சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் நூலகச் சேவை ஆணைக்குழுவால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் அப்போது வருவாய் சுகாதார மந்திரியாக இருந்த திரு. எம். ஏ. மாணிக்கவேலு அவர்களால் 14-3-60 அன்று துவக்கப்பட்டது. இந்தத் திட்டம் 1-5-1963 முதல் கீழ்ப்பாக்க மன நோய் மருத்துவ மனைக்கும் 13-8-1964 முதல் ஸ்டான்லி (ராயபுரம்) மருத்துவ

மனைக்கும், 25-9-64 முதல் ராயப்பேட்டை அரசாங்க மருத்துவ மனைக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

6. புத்தகபட்டுவாடா நிலையங்கள்

மாநகராட்சி வட்டங்களில், முக்கியமாகக் கிளை நூலகங்கள் தற்சமயம் இல்லாத இடங்களில், புத்தகப் பட்டுவாடா செய்யும் நிலையங்கள் ஆரம்பிக்கும் திட்டம் பரிசிலனையில் இருக்கிறது. பெரவள்ளூர் அகரத்தில் ஒரு நிலையமும், கோட்டூர் அடையாறில் மற்றொரு நிலையமும் திறக்கப்பட்டுள்ளன. தகுந்த இடங்கள் கிடைத்தால் மேலும் இவ்வித நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

7. பார்வை, கேள்விப் படிப்பு

ஒரு 16 மி.மீ.சினிமாப் படம் காட்டும் கருவி மூலம் நகரத்தில் பல்வேறு பாகங்களிலும் படக் காட்சிகள் நடத்தப் பெறுகின்றன. காட்சி நடக்கும் சமயத்தில் நூலகங்களில் கிடைக்கும் புத்தகங்களைப் பொது மக்கள் நன்முறையில் பயன்படுத்தும்படி பிரசாரம் செய்யப்படுகிறது. எல்லோருக்கும் சுவாரசியமுள்ள மற்றப் பொருள்கள் பற்றியும் படங்கள் காட்டப்பெறுகின்றன. சராசரி மாதத்திற்கு 15 காட்சிகள் காட்டப் பெறுகின்றன.

8. சிறைச்சாலையில் நூலக சேவை :

சென்னை நகர மத்திய சிறைச்சாலையில் உள்ள சிறைக் கைதிகள் பயன் அடையக் கூடிய வகையில் அங்குள்ள கைதிகளுக்கு நூல் வழங்கும் திட்டம் ஒன்று 1965-ஆம் வருடம் டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

9. நடமாடும் நூலகம் :

சென்னை மாவட்ட மத்திய நூலகத்திற்கு வர இயலாதவர்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் பேருந்தி (Modile Van) மூலம் ஆங்காங்கே உள்ள மக்களுக்கு நூல்கள் விநியோகிக்கும் திட்டம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதற்கென சென்னை மாவட்ட மத்திய நூலக ஆணைக் குழு ரூ. 1,00,000 ஒதுக்கியுள்ளது. ○



திருமதி சரஸ்வதி ராம்நாத்

நமது சங்க நெறியாளர் குழுவின் முன்னாள் உறுப்பினர். ஹிந்தியிலிருந்து தமிழிலும், தமிழிலிருந்து ஹிந்தியிலும் பல நூல்களை மொழிபெயர்த்துள்ளார்.




திரு மு. நமசிவாயம்

சங்க நெறியாளர் குழு உறுப்பினர். வாழ்க்கை வரலாறுகளையும், தலைவர்கள் சொற்பொழிவுகளையும் தொகுத்து பல நூல்களாக வெளியிட்டுள்ளார்.

உடலும் மனமும்

திரு. ந. சிதம்பர சுப்ரமண்யன்



காரைக்குடியில் 30–11–1912 இல் பிறந்த திரு. ந. சிதம்பரசுப்பிரமணியன் கற்றதும் தொடங்கியதும் கணக்குத் தணிக்கையாளர் (ஆடிட்டர்) தொழில். ஆனால், 20 ஆண்டு காலமாக வாகினி ஸ்டுடியோவில் மானேஜராக இருந்து வருகிறார். 1935 முதல் எழுதிவருகிறார். கலைமகளிலும் மணிக்கொடியிலும் பல கதைகள் வெளியாகியிருக்கின்றன. ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் இவரது கதைகள் மொழி பெயர்க்கப்பட்டு வெளியாகியுள்ளன. இவருடைய இசைப் புலமைக்கும் ஈடுபாட்டுக்கும் இதயதாகம் என்ற நாவல் சான்று. இந்நூல் இந்தியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. 3 சிறுகதை தொகுதிகளும் ஊர்வசி என்ற நாடகமும், வெளியாகியுள்ளன. விண்ணும் மண்ணும், விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் என்ற கட்டுரைத்தொடர்களும் நூல் வடிவில் வெளிவருகின்றன. நம் சங்கத்தில் ஆரம்ப முதலே உறுப்பினர். இது பதிவாகு முன் பொருளாளராகவும் இருந்தார்.

ஒரு ஊரில் அரசன் ஒருவன் இருந்தான். அவன் முதுகு கூனியிருந்தது. தன் தேசத்திலே, தலை சிறந்த சிற்பியைக் கூப்பிட்டுத் தன்னைப் போலவே ஒரு சிலையைச் செய்யச் சொன்னான். ஆனால் ஒரு சிறு வித்தியாசம். அந்தச் சிலைக்குக் கூன் இருக்கக் கூடாது என்று கட்டளையும் இட்டு விட்டான். சிற்பம் தயாராயிற்று. கூன் இல்லாதபடியால் சிலையும் அழகான தோற்றத்தைக் கொண்டிருந்தது. தினந்தோறும் அரசன் அச்சிலையிடம் போய்நிற்பான். "ஆகா, நான்தான் நிமிர்ந்து நிற்கிறேனே? என் கூன் எங்கே போயிற்று" என்று சொல்லிக் கொண்டே, அந்தச் சிலையின் அழகில் ரசித்துப்போய் நிற்பான். நாள் ஆக ஆக ஒரு அதிசயம் நிகழ்ந்தது. அரசனுடைய கூன் சிறிது சிறிதாக நிமிர்ந்தது. சிலையைப் போலவே அரசனும், அழகனாக ஆகிவிட்டான்.

நம் எண்ணம், நம்மை எப்படி பாதிக்கிறது என்பதற்கு, இதை ஒரு சிறந்த உதாரணமாகக் கொள்ளலாமல்லவா? ஆதி சங்கரர், புழு குளவியை நீடித்து நினைத்து குளவியாகவே ஆகிவிடுகிறது என்று சொல்லவில்லையா? மனத்திற்கும் உடலுக்குமுள்ள உறவை இந்த உதாரணங்கள் வெளிக்காட்டுகின்றன அல்லவா ?

மனம் என்பது என்ன? அது உடலின் ஒரு பகுதிதானா? அல்லது அப்பாற்பட்டதா என்பதையெல்லாம் விஞ்ஞானிகளும் தத்துவஞானிகளும் தொன்றுதொட்டு இன்று வரை விவாதித்துக் கொண்டு வருகிறார்கள். உடலும் மனமும் ஒன்றையொன்று பலவிதங்களில் பாதித்துக்கொள்கின்றன என்பதை நாம் அறிகிறோம். மருத்துவ சாஸ்திரத்திலே

உடல்-மனப்பகுதி என்று ஒன்று இருக்கிறது. (Psycho-Somatic Mediscine) - Psycho என்ருல் மனம். Soma என்ருல் உடல். உடலுக்கும் மனத்திற்கும் உள்ள தொடர்பை வைத்துக் கொண்டு இந்த முறை ஆராயப்படுகிறது. வைத்தியம் செய்பவர்கள் உடலுக்கு மாத்திரம் வைத்யம் செய்தால் போதாது, மனதையும் அறிந்துதான் சிகிச்சை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது இந்த சாஸ்திரம்.

ஒரு முதலாளிக்குப் பலத்த நஷ்டம் ஏற்பட்டு விடுகிறது. அதனுல் அவருக்கு ரத்தக் கொதிப்பு ஏற்பட்டு விடுகிறது. குடும்பத்திலே தாங்க முடியாத ஒரு துக்கத்தை அடைகிருர் ஒரு மனிதர். அந்த அதிர்ச்சியினுல், ஒரு பக்கம் பட்சவாதத்தால் தாக்கப்படுகிறது. திடீர் திடீர் என்று தீர்மானம் செய்யக்கூடிய நிர்வாகிகளுக்கு, குடற்புண்கள் ஏற்படுகின்றன என்பதைத் தற்காலத்திலே கண்கூடாகக் கண்டிருக்கிருர்கள். இந்தப் புண்களுக்கு வைத்தியம் செய்யும் பொழுது வயிற்றுக்குள்ளே என்ன ஆகாரம் செல்கிறது என்பதைப் பரிசீலனை செய்யும் பொழுதே, மனத்திற்குள்ளே என்ன எண்ணங்கள் செல்கின்றன என்பதையும் ஆராய வேண்டும் என்று சொல்கிறது இந்த சாஸ்திரம்.

ஒரு காலையோ, கண்ணையோ, கையையோ இழந்துவிட்டவர்கள், அங்கம் இல்லாமையால் படும் கஷ்டத்தைவிட, அங்கஹீனர்களாகி விடுவோமே, என்ற மனத்துயரத்தினுலே, மேலும் அதிகமாகக் கஷ்டப்படுகிருர்கள் என்று சொல்கிருர்கள் ஆராய்ச்சியாளர்கள். ஆகவே உடலுக்கும் மனத்திற்கும் உள்ள உறவை, பிரிக்க முடியாத தொகு விஷயமாக அவர்கள் கருதுகிருர்கள்.

போதையில் இருப்பவனுக்கு புத்தி தடுமாறுகிறது. அஜீரணத்தால் அவஸ்தைபடுபவனுக்கும் மனநிலை பாதிக்கப்படுகிறது. உடல் நிலையைப் பொறுத்து மனநிலை மாறுகிறது. மனநிலையைப் பொறுத்து உடல் நிலை மாறுகிறது. ஒன்று தெரியாது தாக்கப்பட்டால் அதன் பிரதிபலிப்பு மற்றதற்கும் ஏற்படுகிறது என்பதை அனுபவத்தில் கண்டிருக்கிருர்கள்,

இதனுல், மனம் என்பது உடலின் ஒரு பகுதிதான் என்று சொல்லிவிட முடியுமா? மூளை, உடலின் ஒரு அங்கம் என்பதை யாவரும் ஒப்புக்கொள்ள முடியும். ஆனுல், மனமும் மூளையும் ஒன்றுதானு ? இல்லையென்ருல் அது எத்தன்மையது? உடலும் அதன் அங்கங்களும், பௌதிகப் பொருள்கள் என்பதை ஐயப்பாடின்றிச் சொல்லலாம். அவற்றிற்கு உருவம், பரிமாணம், கனம், முதலிய குணங்கள் இருக்கின்றன. ஆனுல், மனம் என்பதையும் இதற்குள் அடக்கிவிட முடியுமா? அதற்கு உருவம் உண்டா? அசைவு உண்டா? மனத்திற்கு இவைகள்யெல்லாம் இல்லையே? மனமும், மற்ற இந்திரியங்களைப் போன்று இருந்தாலும், ஒரு அவயவமாக இருந்தாலும் அதன் தன்மை முற்றிலும் மாறுபட்டிருக்கும். ஆனுல், அதுவோ, அதற்கு மாருக, நமக்கு அகப்படாத ஒரு தன்மையைக் கொண்டிருப்பதால்தான், நமக்கு அதன்மேல் ஒரு ஆதிக்கமும் இல்லாமல் போகிறது.

இன்று ஏகாதசி விரதம். ஆகாரம் வாய்க்குள்ளே போகாமல் வாயை மூடிவிட்டால், விரதம் பூர்த்திதான். ஆனுல் நம்மனம், ஆகாரத்தைப்பற்றி நினைக்காமல் செய்ய நம்மிடம் என்ன சக்தி இருக்கிறது. ஏகாதசி விரதம் இருந்து கொண்டபடியே, ''மோகன் கபே காபியும், ரவா தோசையும் வேறு எங்கு கிடைக்கும்'' என்று நாக்கிலே ஜலம் ஊற நினைத்துக்கொண்டே பட்டினி கிடக்கலாமல்லவா! வேலைக்காரப் பையன், தினம், நமக்குத் தெரியாமல் தோட்டத்தில் உள்ள ரோஜாப்பூவைப் பறித்து விடுகிருன். நாம் கோபித்துக் கொண்டு அவன் கையில் உள்ள பூவைப் பிடுங்கி வைத்துக் கொள்

கிறேம். ஆனல், அந்தப் பையன் கொண்டுள்ள ''ரோஜாப்பூ வேண்டும்'' என்ற எண்ணத்தை அவன் மனத்திலிருந்து பிடுங்கி விட நம்மால் முடியாதல்லவா?

இதனுல்தான், நாம் எத்துணை அரிய பெரிய சாதனைகளைச் செய்யக் கூடியவர்களாயிருந்தாலும் மனத்திடம் மாத்திரம் நம் சாகஸம் செல்லாது, என்பதை நம் பெரியவர்கள் கண்டு கொண்டிருந்தார்கள். தாயுமானவர் இதை வெகு நன்ருக விளக்கிக் காட்டியிருக்கிருர்

கந்துக மதக்ரியை வசமா நடத்தலாம்
  கரடிவெம்புலி வாயையும் கட்டலாம்
ஒரு சிங்கம் முதுகின் மேற் கொள்ளலாம்.
  கட்செவி எடுத்தாட்டலாம்
வெந்தழலின் இரதம் வைத்துஐந்து
  லோகத்தையும்
  வேதித்து விற்றுண்ணலாம்
வேருெருவர் காணுமல் உலகத்துலாவலாம்
  விண்ணவரை ஏவல் கொள்ளலாம்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம்
  மற்ருெரு சரீரத்திலும் புகுதலாம்
சலமேல் நடக்கலாம், கனல்மேலிருக்கலாம்
  தன்னிகரில் சித்திபெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
  திறமறிது. சத்தாகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவானதெய்வமே
  தேசோ மயானந்தமே,

என்று சிந்தையை அடக்குவது, மற்ற சித்திகளை யெல்லாம்விடச் சிரமமான காரியம் என்பதை மிகவும் விளக்கமாகச் சுவாமிகள் சொல்லியிருக்கிருர் அல்லவா!

மனம் உடலின் ஒரு அங்கமாக இருந்து விட்டால், அதற்கு இவ்வளவு சக்தி வந்து விடுமா! மனிதனுடைய தன்மையையே ஆட்டிவைக்கும் அற்புத சக்தி ஏற்பட்டு விடுமா? மனிதனுடைய தளைக்கும் விடுதலைக்கும் மனம்தான் காரணம் என்று சொன்னுர்கள் பெரியவர்கள். அப்படி இருக்கும் பொழுது, உடலையும் வாழ்க்கையையும் ஆக்ரமிக்கும் சக்தி வாய்ந்த மனம் எப்படி உடலின் ஒரு உறுப்பாக இருக்க முடியும்.

மற்ருென்றையும் கவனிக்கலாம். நாம் தெருவிலே நடந்து போய்க்கொண்டிருக்கையிலே, எதிரே நண்பன் வந்து கொண்டிருக்கிருன். நம் மனசு ஆபீசிலே அன்று காலை 'புள்ளி கணக்கு' அவசரமாகத் தயாராக வேண்டுமே என்பதையே நினைத்துக்கொண்டிருக்கிறது. அதனுல் எதிரே வந்த மனிதனைக் கவனிக்கவில்லை, ஆனுல் வந்த நண்பன் ''என்னடா, ராமா; பார்த்துக் கொண்டே, முகம் கொடுத்துப் பேசாமல் போகிருய்'' என்று குற்றம் சாட்டுகிருன். ''இல்லையடா, கோவிந்தா நான் வேறு யோசனையில் இருந்து விட்டேன், கவனிக்கவில்லை. மன்னித்துவிடு'' என்று சமாதானம் சொல்கிறேம். இதனுல் ஒன்று நிச்சயமாகிறதல்லவா; கண் பார்த்தால் போதாது? மனமும் அத்துடன் சேர்ந்தால்தான், அந்த நிகழ்ச்சி நம்முடையதாக ஆகிறது. அது போலவே, ''நாம் சம்பளத்திற்கும், கொடுக்க வேண்டிய மாதாந்திரப் பட்டியலுக்கும் கணக்குப் போட்டு, சரிக்கட்டுமா துண்டுவிழுமா'' என்று யோசித்துக் கொண்டிருக்கையில், 'ஸார்' என்று வாசல் பக்கம் ஒருவர் கூப்பிடுகிருர். ஆனுல் நமக்குக்கேட்கவில்லை. பையன் வந்து யாரோ வந்திருக்கிருர்கள் என்று சொல்லும்பொழுதுதான் தெரிகிறது. காது செவிடில்லை. சப்தம் காதில் விழாமல் இல்லை. பின் ஏன் கேட்கவில்லை, காதும் மனமும் ஒன்று சேரவில்லை. இப்படி எதனுல், இந்த உடலுக்கே ஒரு சைதன்ய சக்தி ஏற்படுகிறதோ, அதைப் போய், இதுவும் உடலின் ஒரு அங்கம் என்று சொல்லுவ்து, தொன்னைக்கு நெய் தான் ஆதாரம் என்று சொல்வது போல் இருக்கிறதல்லவா!

இந்தப் பிரச்சினையை விளக்கும் வகையில், விக்ரமாதித்தன் கதையில், ஒரு சுவையான உதாரணம் இருக்கிறது. மதனசுந்தரி என்ற பெண்ணும், அவள் புருஷனும் தமயனும், வெளியூருக்குப் போகும்பொழுது, ஒரு காளி கோவில் அருகே தங்குகிருர்கள்.

அண்ணனும், புருஷனும் கோவிலுக்குச் சென்று காலம் ஆகியும் வராத காரணத்தால், மதனசுந்தரியும் கோவிலுக்குச்சென்று பார்த்தகாலத்தில், தலைவனும், தமயனும், தலைவேறு உடல்வேருகக் கிடக்கக் காண்கிருள். மனம் பதறி, தன் சிரத்தையும் காளிக்குப் பலி கொடுக்க நினைத்து வாளை எடுக்கையில், காளி பிரசன்னமாகி, கீழே கிடக்கும் உடலையும், தலையையும் ஒன்று சேர்க்கச் சொல்கிருள். அந்தப் பெண்ணும் அப்படியே செய்ய, இருவரும் உயிர்பெற்று எழுகின்றனர். உயிர்பெற்ற அந்த இருவரையும் கண்டு அந்தப் பெண் திடுக்கிட்டாள். என்ன கோரம்! தமயன் உடலில், புருஷன் தலையையும், புருஷன் உடலில் தமயன் தலையையும் மாற்றிப் பொருத்தி விட்டாள். இந்த இருவரில் இவள் யாருக்கு மனைவி என்று கேட்கிறது வேதாளம். என்ன விசித்திரமான கேள்வி! என்ன பயங்கரமான கேள்வி! ஆனுல், இதற்கும் விக்ரமாதித்தன் அருமையான பதிலைத்தான் தருகிருன். ''இந்த இருவரில், எவன் ஒருவன் இவள் என் மனைவி என்று நினைக்கிருனே, அவனுக்குத்தான் மனைவி'' என்கிருன் விக்ரமன். புருஷன் தலையை உடையவன்தானே அப்படி நினைக்க முடியும். மனிதனுக்கு உடல் பிரதானமல்ல. மனம்தான் பிரதானம் என்பதற்கு இது ஒரு நல்ல விளக்கம் அல்லவா.

வேறு ஒரு உதாரணத்தையும் பார்ப்போம். குடியானவன் ஒருவன், வீட்டிற்குக் கூரை வேய்ந்து கொண்டிருந்தான். அப்பொழுது 'சுருக்கென்று' அவன் கையில் ஏதோ பட்டது. கையைத் தடவிக்கொடுத்து விட்டு, வேலையைச் செய்து கொண்டிருந்தான். கூரை வேய்ந்து முடிந்துவிட்டது. ஒரு வருஷம் ஆனதும், கூரைகள் பழசாகப் போனமையால், புது ஓலைகளை வேய்ந்து கொண்டிருந்தான். ஒரு இடத்தில் கூரை கலைப் பிரிக்கும் பொழுது, மூங்கிலோடு மூங்கிலாக, ஒரு பாம்பின் எலும்பு அப்படியே தைக்கப்பட்டுக் கிடந்தது. முந்திய வருஷம் கூரையை மூங்கில்மேல் வைத்துக் கட்டும் பொழுது, இந்த பாம்பையும் சேர்த்து வைத்துக் கட்டிவிட்டான். அந்தப் பாம்பே அவன் கையைப் பிடுங்கி இருக்கிறது. அவனுக்குப் பளிச்சென்று அது ஞாபகம் வந்தது. போன வருஷம் கையில் சுருக்கென்று வலித்ததே, அது இந்தப் பாம்பின் கடிதான் போலும், என்பது புலனுயிற்று. அவ்வளவுதான். உடலிலே வேர்வை உண்டாயிற்று. உடல் பதறியது. கீழே இறங்கிக் கொண்டிருக்கும் பொதே விஷம் 'கிடுகிடு' என்று ஏற ஆரம்பித்தது. சிறிது நேரத்திம் உயிர் துறந்தான். உடல் கடிபட்டபொழுது அவனுக்கு ஒன்றும் நேரவில்லை. அவன் மனம் அதை அறிந்துகொண்ட பொழுதுதான் அதற்கு வேகம் உண்டாயிற்று, இது விசித்ரமல்லவா.

மனம் உடலைச் சார்ந்ததுதான், அது மூளையை இருப்பிடமாகக் கொண்டது, என்று சொல்லும் நவீன விஞ்ஞானிகளுக்கு, ஆணித்தரமாகப் பதில் சொல்லியிருக்கிருர், பிரஞ்சு தத்துவஞானி ஹென்ரி பர்க்ஸன். ஆணியிலே சட்டையை மாட்டி வைக்கிருேம். அதனுல் சட்டையும் ஆணியைச் சேர்ந்தது என்று நாம் சொல்லமாட்டோம் அல்லவா! மூளை நம் புலன்கள் மூலமாக, பல உருவங்கள், அனுபவங்கள், உணர்ச்சிகள் இவற்றை யெல்லாம் வாங்கிக் கொள்கிறது உண்மைதான். ஆனுல், அவைகளை வேண்டிய போது கொண்டு வருவதற்கும், வேண்டாத போது தள்ளிவிடுவதற்கும், சைதன்ய சக்தி கொண்ட மனத்தால்தான் முடியுமே தவிர உடலின் அங்கமான மூளையினுல் மாத்திரம் அது முடியாது. அவர் சொல்கிருர்:

''நம் பிரக்ஞை, சிந்தனு சக்தியெல்லாம், மூளையுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே மூளையிருக்கும் பிராணிகளுக்கு இந்த சக்தி இருக்கும். மற்ற பிராணிகளுக்கு இருக்காது என்பது இதிலிருந்து உண்டாகிறது. இந்த

வாதத்திற்கு ஆதாரமேயில்லை என்பதை சுலபமாக விளக்கிவிடலாம். இந்த நியாயப் படி, நம்முடைய ஜீரணம் வயிற்றுக்குள்ளே நடக்கிறபடியால், வயிறுள்ள பிராணிகளால் தான் ஜீரணிக்க முடியும் என்று நாம் சொல்ல வேண்டும். அது முற்றிலும் தவறான அபிப் ராயம். ஜீரணம் செய்வதற்கு வயிறே தேவையில்லை. ஜீரணத்திற்கு என்று தனி உறுப்புக்கூடத் தேவையில்லை. உறுப்புக் களை வித்தியாசமாகக் கொள்ளாத அமீபா பூச்சிகூட தன் ஆகாரத்தை ஜீரணித்துக் கொள்கிறது. உண்மை என்ன வென்றால், பலதரப்பட்ட முறையில் இயங்கும் உடல் உறுப்புக்களிலே, தனித்தனிக் காரியங் களைச் செய்வதற்குத் தனித்தனியே உறுப் புக்கள் வேலைகளைப் பிரித்துக் கொண்டிருக் கின்றன. ஒவ்வொரு அலுவலை ஒவ்வொரு உறுப்பு செய்கிறது. வயிறு, ஜீரணம் செய் வதற்காக ஏற்பட்ட கருவியாக அமைந்து நிற்கிறது.

''அதுபோலவே, மனிதனுடைய பிரச் னையும் அறிவும், மூளையோடு சம்பந்தப்பட் டிருக்கிறது என்பதில் சந்தேகத்திற்கிடமே யில்லை. அதனால் அறிவிற்கும் மனத்திற்கும் மூளை அத்யாவசியமானது என்று முடிவு கட்டிவிடமுடியாது. கீழ் வரிசைகளிலுள்ள ஜீவராசிகளை நாம் பார்த்தோமானால், நரம் புத் தொகுதிகள் தனித்தனியாக இருக் கின்றன. சில இடங்களில், மறைந்து போய் விடுகின்றன, மேல் வரிசை ஜீவவர்க் கத்தின் சைதன்ய சக்தியானது, சிக்கலான நரம்பு மண்டலத்தில் இருக்கிறது. ஆகவே நம் சைதன்யம், அறிவு, நரம்பு மண்டலத் தின் மூலமாகவே பரவுகிறது, என்பதையும், நரம்புகள் மறைந்து போகும், உடலோடு கலந்து போகும் இடத்திலேகூட அது பரந்து செல்கிறது என்பதையும் ஊகித்துக் கொள்ளலாம். ஆகவே, எல்லாப் பிராணி களுமே அறியும் சக்தியைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் அறியும் சக்தி உயி ருடன் சம்பந்தப்பட்டது''

அதாவது, மனம் என்பது உடலுடன் சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல அது உயிரு டன் சம்பந்தப்பட்டது என்கிறார் அவர்.

[வெளிவரப்போகும் விஞ்ஞானமும் மெய்ஞானமும் என்ற புத்தகத்திலிருந்து]

ஒவ்வோர் உயிரும் கடவுள் அம்சம் என்று எண்ணி, எல்லா உயிர்களிடத்தும் அருள் உணர்ச்சியோடு நடந்துகொள்பவனே அறிஞன்.

—வடலூர் வள்ளலார்

திசை மாறும்

திரு. கோமேதகவேலு
நெறியாளர்
அரசாங்க எழுதுபொருள், அச்சகத்துறை

உள்ளங்கள் ஒன்றுபட்டே உழைக்கும் எண்ணம்
உள்ளுலகில் துளிர்த்துவிடின் ; கீழ்மேல் என்ற
கள்ளமனப் போக்குகளும் காழ்ப்பு நாற்றக்
கசிவுகளும் தாமாகத் தொலைந்து போகும் !
நல்லமனத் தார்அறிவின் உறவி னாலே
நலிவுற்றார் முதுகெல்லாம் நிமிர்ந்து போகும் !
தொல்லைகளின் பிறப்பிடமாம் வேற்று மைகள்
தூள்படினோ, இப்பூமிச் சொர்க மாகும் !

வான்உண்டு நிலவுண்டு ; அவைக ளோடு
வகைவகையாய் வெள்ளிமீன் கூட்ட முண்டு
கூன்முதுகு உலகுண்டு ; பகலோன் உண்டு
கோள்நிலைகள் இவையிங்கே ஒன்று பட்டத்
தேன்உணர்வில் கூட்டுறவில் இயங்கா விட்டால்
தென்றலுண்டா மழையுண்டா புல்பூண் டுண்டா ?
''நான்நீ''என் றேகுழையும் நிலைதான் உண்டா ?
நாம்நடத்தும் வாழ்க்கைநா டகம்தான் உண்டா?

''வெட்டுறவு நமக்குள்ளே வேண்டாம் ; தீய
வீண்கரவு மனத்துள்ளே வேண்டாம் ; மேலும்
தொட்டுறவு கொள்வோம்நாம் உயர்வோம் ; நாளும்
துளிர்ப்போம்இக் கூட்டுறவால் என்றே'' ஆர்த்துக்
கூட்டுறவில் கைகோத்த எழுத்தா ளர்தம்
கனிவுமுகம் காண்பதுவோர் இன்பக்காட்சி !
பட்டுறவு கருகாமல் நீர்வார்த் திங்கே
பயன்பெறுநல் திருநோக்கோ வாழ்த்தும் நோக்கு !

ஊருலகின் உயர்வுகூட் டுறவில் உண்டு
உன்உயர்வும் என்உயர்வும் அதில்தான் உண்டு
பாரில்நாம் வெற்றிநடை போட இந்தப்
பாதையிலே எத்துறையும் இயங்க வேண்டும் !
வேறுணர்வு கிளைக்காமல் - தவறான நோக்கம்
விளையாமல் காத்திட்டால் - சிங்கா ரித்த
தேரைப்போல் திருநாடு பொலிவில் போகும் !
திசைமாறி மறுமலர்ச்சிப் பால்தேன் பொங்கும் !

புகழ் பெற்ற அழகு

மனித நாகரிகம் முதன்முதலில் தென்னகத்தில்தான் தோன்றியது என்பார்கள். இத்தகு வளமான மண்ணின் எழிலான இடங்கள் நெஞ்சைக் கவர்பவை.

சென்னைத் தலைநகரம் சாந்தி மிகுந்த பட்டினம்.

விசாலமான நீண்ட கடற்கரை சென்னையின் தனிச் சிறப்பு.

மரகத மலையிலிருந்து அமிர்தம் பொழிவதுபோல், குற்றாலத்தின் குளுமையான நீர் வீழ்ச்சி, உடலுக்கும் உள்ளத்துக்கும் மட்டற்ற சுகம் தருவதாகும்.

மூன்று கடல்கள் தொட்டு விளையாடும் தென் எல்லையாம் குமரிமுனையின் காட்சி கண்ணுக்கும் கருத்துக்கும் ஒப்பற்ற விருந்து.

நீலகிரியின் மையத்தில், இயற்கை எழில் கொஞ்சும் இடமாய், மலைகளின் ராணியாக விளங்கும் உதகையின் எழிலை சர்வ தேசத் தலைவர்களும் போற்றுகிறார்கள்.

தென்னகத்தின் கலாச்சாரத் தலைநகரம் மதுரை, கோடைக்கால சொர்க்கம் கொடைக்கானல், கோயில் சிற்பக் கலையில் தன்னிகரற்ற மாமல்லபுரம், காஞ்சீபுரம், எழில் சிந்தும் ஏர்க்காடு, கம்பீரம் வாய்ந்த திருச்சி மலைக்கோட்டை, சித்திரக் கலையின் பெட்டகம் சித்தன்ன வாசல் ஆகியன எல்லாம் தமிழ்நாட்டில் கண்டு களிக்கத்தக்கவை.

(தமிழ்நாடு அரசாங்கச் செய்தித் துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது)

கூட்டுறவு வெற்றி பெற....



திரு. வி. கே. அப்பண்டராஜன், ஐ.ஏ.எஸ்.

கூட்டுறவுத்துறையின் மாநிலப் பதிவாளாராகப் பணியாற்றி, தற்சமயம் சென்னை பப்ளிக் சர்வீஸ் கமிஷன் உறுப்பினராக இருந்து வருகிறார். கூட்டுறவுத்துறையில் நீண்டகால அனுபவம் பெற்றவர். இவரது காலத்தில் கூட்டுறவு இயக்கம் விரிவடைந்து பல புதிய துறைகளில் அடியெடுத்து வைத்துள்ளது.

நம் சங்கம் வளர்ச்சியடைவதில் இவர் காட்டிய ஊக்கமும் ஆதரவும் குறிப்பிடத்தக்கவையாகும்.

கூட்டுறவு அல்லது கூட்டு முயற்சி என்ற சொல்லிலேயே அதன் பொருளும் தொக்கி நிற்கிறது. கூட்டாக ஒருவருக் கொருவர் ஒத்துழைத்துத் தொழில் புரிந்து பயனடைவதே கூட்டுறவு. இதையேதான் 'ஒருவருக்கு உதவ எல்லோரும், எல்லோருக்கும் உதவ ஒருவர்' என்ற கூட்டுறவுத் தத்துவம் கூறுகிறது. இந்தக் கூட்டுறவுத் தத்துவத்தின் அடிப்படையில் உருவாகும் அமைப்புக்களே கூட்டுறவுச் சங்கங்கள்.

''கட்டுப்பாடான ஒரு நிறுவனத்தின் மூலம் சுய உதவியைத் திறமையாகச் செய்து கொள்வதே கூட்டுறவு'' என்று சர் ஹாரஸ் பிளங்கெட் (Horace Plunkett) என்பார் குறிப்பிட்டுள்ளார். ''மக்கள் தம்மிச்சையாக ஒன்று சேர்ந்து ஒரு நிறுவனமாக அமைவதில் ஒருவகைதான் கூட்டுறவு. ஒருவருக் கொருவர் சமம் என்பதை அடிப்படையாகக் கொண்டு தங்களுடைய பொருளாதார நலன்களை வளர்த்துக் கொள்வதற்காகவே அவர்கள் அப்படி ஒன்று சேருகிறார்கள்'' என்கிறார் கால்வெர்ட் (Calvart). ''பொருளாதார பலமில்லாதவர்கள் ஒன்று சேர்ந்து, கூட்டாகத் தொழில் நடத்துவதற்காக ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பே கூட்டுறவு. அது தன்னல உணர்ச்சி இல்லாத பணியின் மூலம் நடத்தப் பெறுவது. இந்தக் கூட்டுறவில் சேர்ந்த அவரவரும் எந்த அளவுக்கு நிறுவனத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்களோ, அந்த அளவில் இதன் லாபத்தில் பங்கு பெறுகிறார்கள்,'' என்கிறார் டாக்டர் சி.ஆர். பே (Dr. C.R.Fay). இவர் கூட்டுறவுச் சங்கம் ஆற்றும் பணியைத் 'தொழில்' என்று குறித்துக் காட்டுவதோடு, மனிதனின் இயல்பை ஒத்த முறையில் பொதுநலமே குறிக்கோளாய்க் கொண்டு சங்க உறுப்பினர்கள் இயங்க வேண்டும் என்றும் கூறுகிறார். இவ்வாறு பலரும் பல விளக்கங்களைக் கூறியுள்ளனர். அவை எல்லாம் ஒரே கோட்

பாட்டையே வலியுறுத்துகின்றன. அதாவது, நேர்மையான முறையில் பொதுவான பொருளாதார நன்மையை அடையக் கருதி, தனி நபர்கள் கூட்டாகத் தோற்விப்பவைதான் கூட்டுறவு நிறுவனங்கள்.

கூட்டுறவு அமைப்பு மற்ற அமைப்புக்களிடமிருந்து எப்படி வேறுபடுகின்றது என்பதை, ஹோலியோக் (Holyoke) என்பார் பின்வருமாறு விளக்குகிறார், "கூட்டுறவு, யாருடைய செல்வத்தையும் நாடுவதில்லை; எவரையும் கொள்ளையடிப்பதில்லை; சமூகத்தில் கலவரம் எதையும் விளைப்பதில்லை; அரசியல் நிபுணர்களுக்குத் தொல்லை கொடுப்பதில்லை; யாருடனும் ரகசியக் கூட்டுச் சேருவதில்லை; தன்னலன்களைப் பாதுகாப்பதில் தொழிற் சங்கம் (Trade union) எதுவும் அதற்குத் தேவையில்லை; அதில் பலாத்கார எண்ணத்துக்கு இடமில்லை. சமூக ஒழுங்குமுறை எதையும் அது குலைப்பதில்லை. எவருடைய அந்தஸ்தையும் கண்டு அது பொருமை கொள்வதில்லை; தானம் எதையும் ஏற்பதில்லை; யாரிடமும் தயா தாட்சண்ணியத்தை எதிர்பார்ப்பதில்லை; சோம்பேறிகளோடு சற்றும் உறவு கொள்வதில்லை, உழைப்பாளிகளுக்குத் துரோகம் செய்வதில்லை." இத்தகைய சிறப்பு அம்சங்களைக் கொண்ட கூட்டுறவு, இன்று நம் நாட்டில் மக்களை எதிர் நோக்கியுள்ள பல்வேறு பொருளாதாரப் பிரச்னைகளுக்கும் தகுந்த வழிகாட்டியாக விளங்குகிறது. நம் நாட்டில் கூட்டுறவு முறை புகாத பொருளாதாரத் துறை இல்லை என்றே கூறலாம். விவசாயம், மற்றும் தொழில் துறைகளில் இன்று முக்கியப் பங்கு வகிக்கிறது. இவ்வாறு பல துறைகளிலும் வளர்ந்து வரும் கூட்டுறவு, நம் நாட்டில் முதலில் எப்படித் தோன்றியது என்பதையும் கூட்டுறவு இயக்கத்தின் வெற்றிக்கு அடிப்படைத் தேவை என்ன என்பதையும் சிறிது ஆராய்வோம்.

நம் நாட்டுக் கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றிலேயே 1892ம் ஆண்டு மிக முக்கியமான ஆண்டாகும். அந்த ஆண்டில் தான் சென்னை அரசாங்கத்தார் ஸர். பிரெடெரிக் நிக்கல்சன் என்னும் உயர் அதிகாரியை, ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்ய அனுப்பினர்; அங்கு அமுலிருக்கும் கூட்டுறவு அமைப்பு முறைகளைப் பயின்று, அம்முறைகளை எந்த அளவுக்கு இந்தியச் சூழ்நிலையில் பயன் படுத்தலாம் என்பது பற்றி ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும்படிக் கேட்டுக் கொண்டனர். அங்ஙனமே அன்னுர் ஐரோப்பிய நாடுகளில் இயங்கும் கூட்டுறவு அமைப்பு முறைகளைத் தீவிரமாக ஆராய்ந்தார்; வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தமது அறிக்கையை, அதன் பலனாக 1895ம் ஆண்டு சமர்ப்பித்தார். நம் நாட்டுக் கிராம மக்களின் கடன் சுமையைக் குறைக்க ஜெர்மனியில் இயங்கும் ரெய்பீஸன் கூட்டுறவுச் சங்கங்களின் மாதிரியில் நம் நாட்டிலும் கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டும் என்பது அவரது அறிக்கையின் சாரமாகும். ரெய்பீஸன் கூட்டுறவுச் சங்கங்கள் என்ருல் என்ன, அவற்றைத் தோற்றுவித்தவர் யார் என்பதை இங்கு நினைவு கூர்வது பொருத்தமாயிருக்கும்.

ரெய்பீஸன் என்பார் 1818ம் ஆண்டு ஜெர்மனியில் தோன்றினுர். அவர் ஜெர்மானிய ராணுவத்தில் ஓர் உயர்ந்த அதிகாரி. அவரது கண் பார்வை சீர்கேடடைந்ததால், அவர் ராணுவத்திலிருந்து விலக நேர்ந்தது. 1845ம் ஆண்டு ஜெர்மனியிலுள்ள வெஸ்டர் வால்டு மாவட்டத்திற்கு அவர் மேயராக நியமிக்கப் பட்டார். 1846-1847ம் ஆண்டுகளில் ஜெர்மனியைத் தாக்கிய கடும் பஞ்சத்தில் அதிக அவதிக்குள்ளான மக்கள் வெஸ்டர் வால்டுமாவட்டத்து மக்கள். இம்மாவட்டத்திலுள்ள விவசாயிகள், யூதர்களிடம் பெருந் தொகைகளுக்குக் கடன்பட்டு, கடன் சுமையிலிருந்து மீள முடியாமல் பெருந்துயரில்

ஆழ்ந்தனர். இம்மக்களின் துயரம், ரெய்பீஸனைப் பெரிதும் வாட்டியது. இம்மக்களின் துயரைத் துடைக்க, ரெய்பீஸன் சிறு முதலீட்டுடன் ஒரு கூட்டுறவு ரொட்டிக் கிடங்கு ஆரம்பித்தார். இக்கிடங்கு விவசாயிகளுக்குப் பேருதவி புரிந்தது; சந்தை விலையில் பாதி விலைக்கு அவர்களுக்கு ரொட்டி கிடைக்கச் செய்தது. 1849ம் ஆண்டு ரெய்பீஸன், கால் நடை வாங்கும் கூட்டுறவுச் சங்கம் ஒன்றைத் தோற்றுவித்தார். இதைத் தொடர்ந்து இவர் ஆரம்பித்த கிராம பாங்கிகள் தான் உலகப் புகழ் பெற்ற ரெய்பீஸன் பாங்கிகள் என்று வழங்குகின்றன. ரெய்பீஸன் முதலில் ஆரம்பித்த கிராம் பாங்கியின் மூலதனம் 300 பவுன்களே (சுமார் ரூ 4,000). ரெய்பீஸன் ஆரம்பித்த இப்பாங்கிகள், கடன் கொடுக்கும் யூதர்களின் பிடியிலிருந்து மக்களை மீட்டன. ரெய்பீஸன் தமக்கோ தமது பாங்குக்கோ புகழ் வேண்டுமென்று ஒருபோதும் விரும்பினதில்லை. பணிவும், அடக்கமும் பொருந்திய ஒரு சுய நலமற்ற மனிதர் அவர். முதலில் அவர் ஆரம்பித்த பாங்கியின் முன்னேற்றம் மிகச் சாதாரணமாகவே இருந்தது. முதல் பாங்கி ஆரம்பித்து ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பே இரண்டாவது பாங்கி தோன்றியது. மூன்ருவது, நான்காவது பாங்கிகள் முறையே 1862, 1868ம் ஆண்டுகளில் தோன்றின. 'ரெய்பீஸன் சங்க'ங்களின் மிகமுக்கிய அம்சம் ஊதிய மற்ற 'கௌரவ சேவை' யாகும். இந்தப் பாங்கிகளின் நிர்வாக அங்கத்தினர்கள் யாவரும் தன்னலமின்றி, சேவை மனப்பான்மையுடன், பிரதி பலன் கருதாது ரெய்பீஸனைப் போலவே உழைத்து, பாங்கிகள் தழைத்தோங்கச் செய்தனர். இப்பாங்கிகளை மாதிரியாகக் கொண்டே கூட்டுறவுச் சங்கங்களை நம் நாட்டில் ஏற்படுத்த வேண்டுமென்று நிக்கல்சன் தமது அறிக்கையில் குறிப்பிட்டார். இதன் பிறகுதான் ரெய்பீஸன் பாங்கு மாதிரியில் கிராம நாணயச் சங்கங்கள் நம் நாட்டில் தோன்றி, நம் நாட்டு விவசாயிகளைக் கடன் சுமையிலிருந்து மீட்கப் பேருதவி புரிந்தன.;

தமது அறிக்கையின் முகவுரையின் இறுதியில் சர் நிக்கல்சன், கூட்டுறவு இயக்கம் வெற்றியடைய அடிப்படைத் தேவை என்ன, கூட்டுறவின் எதிர்காலம் எதிலிருக்கிறது என்ற விஷயம் பற்றிய கருத்துக்களைக் கூறியுள்ளார். அவை உலகக் கூட்டுறவு இயக்க வரலாற்றில், பொன்னெழுத்தில் பொறிக்கத் தக்க வாசகம் ஆகும்.

''எவர்கள், மக்களோடு மக்களாக இருந்து, அவர்கள் நடுவே வாழ்ந்தாலும் மதிநுட்பத்திலும் ஞானத்திலும் ஆற்றலிலும் அவர்களைவிட உயர்ந்தவர்களாய் விளங்குகிருர்களோ அவர்களைத் தான் வருங்காலத்தில் கிராமக் கடன் வசதி சார்ந்திருக்கிறது. ஜெர்மனி, இத்தாலி இரண்டிலும் தோன்றிய சீர்த்திருத்த வாதிகள் இத்தகையோரே. இவர்கள் அந்த நாடுகளில் சாமானிய மக்களுக்குக் கடன் வசதிகளை அளிக்கும் மகத்தான நிறுவன முறைகளை அமைத்தார்கள். 'ரெய்பீஸன்' என்ற பெயர்ச்சொல் இன்று, குறித்த ஒரு மனிதரையோ, முறையையோ சுட்டுவதாக இல்லை; அந்தச் சீர்திருத்தப் பெரியாரிடம் மிகுந்து துலங்கிய பேரார்வம், செயலாற்றல், பொறுமை, தொடர்ந்த ஊக்கம் இவற்றை எல்லாமே அது சுட்டுகிறது. மேலும், மேலே சொன்ன நிறுவன முறைகளிலும் அவற்றையொத்த மற்ற நிறுவன முறைகளிலும் பரிபூர்ணமாய் வளர்ந்துள்ள கூட்டுறவு உணர்ச்சி, சிக்கனம், சுய-பரஸ்பர உதவி ஆகியவற்றையும் அது சுட்டுகிறது. இந்த அறிக்கை முழுவதையுமே பின் வரும் இரண்டே வார்த்தைகளில் சொல்லி விடலாம்; 'ரெய்பீஸனைக் கண்டு பிடியுங்கள்.''

கூட்டுறவு இயக்கம் ஒரு சமுதாய-பொருளாதார (Socio-economic) இயக்கமாகும்.

கூட்டுறவுச் சங்கங்கள் திறம்படச் செயல்பட மகளிரும், யுவர்களும் இவ்வியக்கத்தில் பெருவாரியாகச் சேர்ந்து, முக்கியப் பொறுப் பேற்று, ரெய்பீஸனைப் பின்பற்றி, சுயநல நோக்கமின்றி, சமுதாய நலனுக்காக உழைக்க வேண்டும். நம் நாட்டுக் கூட்டுறவு இயக்கத்தின் பெருங்குறை, பெருவாரியான அளவில் மகளிரும் இளைஞரும் இதில் பங்கு கொள்ளாததே. அவர்கள் இவ்வியக்கத்தில் ஈடுபட வேண்டுமானால், பள்ளியில் பயிலும் பொழுதே அவர்களுக்குக் கூட்டுறவுத் தத்து வத்தைப் போதிப்பதுடன், ரெய்பீஸன் போன்ற தன்னலமற்ற கூட்டுறவாளர்களின் வரலாற்றை எடுத்துச் சொல்லி, அவர்களி டையே பல 'ரெல்பீஸன்'களை உருவாக்க வேண்டும்.

சர் நிக்கல்சன் கட்டிக் சுாட்டியுள்ளபடி கூட்டுறவு இயக்கத்தின் வெற்றிக்கு அடிப் படைத் தேவை, 'ரெய்பீஸனை போன்ற தன்னலமற்றகூட்டுறவாளர்களே. அரசியல், சாதி, சமயம், இனம் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டு, பிரதிபலன் எதிர்பாராது, ரெய்பீஸன் காட்டிய வழியில் ஊக்கமும் உறுதியும் கொண்டு உழைக்கும் கூட்டுற வாளர்களிடந்தான், கூட்டுறவு இயக்கத்தின் வெற்றியும், வளர்ச்சியும், எதிர்காலமும் அடங்கியிருக்கின்றன. அத்தகைய 'ரெய் பீஸன்'கள் நம் நாட்டுக் கூட்டுறவு இயக்கத் துக்கு மிக அவசியம். எவ்வளவுதான் கூட்டுறவுத் தத்துவம் சிறப்பு வாய்ந்ததெனி னும், அது செயல் முறையில் வெற்றிபெற, ஊக்கமும் உழைப்பில் ஆர்வமும் கொண்ட, தன்னலமற்ற பல 'ரெய்பீஸன்'கள் தேவை.

மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். நம் நாட்டின் எதிர்காலம் கூட்டுறவு இயக்கத் தின் எதிர்காலத்தையே பொறுத்திருக்கிறது. கூட்டுறவு இயக்கத்தின் எதிர்காலமோ 'ரெய் பீஸன்'களாக விளங்கப் போகும் நம் நாட்டு இளைஞரிடமும் மகளிரிடமுமே இருக்கிறது. எனவே, நம் நாட்டின் இளைஞரும், மகளிரும் கூட்டுறவுத் தத்துவத்தைப் பூரணமாக உணர்ந்து, தன்னலம் மறந்து, சமுதாயத் தின் நலனை மனத்துட்கொண்டு 'ரெய்பீஸன்' காட்டிய வழியில் நடக்க வேண்டும். அதுவே நாடும் இயக்கமும் ஆக்கம் பெற உதவும் மார்க்கம்.


*

உண்மை எப்பொழுதும் உண்மையாகத்தான் இருக்கும். ஆயிரம் பேர் சேர்ந்து உண்மை அல்ல என்று சொல்வதற்காக உண்மை பொய்யாகாது. அப்படித் தான் ஆக்க வழி அல்லது ஆதலைச் சார்கின்ற வழியானது என்றைக்கும் நன்மையைத் தான் பயக்கும், அந்தவழியிலே நடப்பவர்கள் மிக்க சிலராகவே இருக்கலாம். ஆனாலும் ஆக்கம் ஆக்கந்தான். அதைச் சார்வதற்குரிய வழி நன்மை பயப்பதுதான்.

—கி வா. ஜ.

குழந்தை இலக்கியம்

'கல்வி' கோபாலகிருஷ்ணன்



குழந்தைகளுக்கு எத்தகைய நூல்கள் தேவை.

குழந்தைகளின் பண்புகளை வளர்க்கும் நூல்கள் தான் தேவை என்று சிலர். நல்ல கதைகள் மூலம் தான் பண்புகளைப் புகட்ட வேண்டும் என்று வேறு சிலர். விஞ்ஞான அறிவு நம் நாட்டிற்கு எதற்கு என்று சிலர். அது மிக மிக அவசியம் என்று மற்றும் சிலர் - இப்படியெல்லாம் கூறப்படுவதைக் கேள்விப்படுகிறோம். குழந்தைகளின் உள்ளத்தை அறிந்தவர்கள் இத்தகைய கேள்விகளை எழுப்பவே மாட்டார்கள்.

குழந்தைகள் தம்மைச் சுற்றி உள்ள உலகை வியப்புடன் காண்கின்றன. சூழ்நிலையில் உள்ளதை இன்னதென்று அறிய ஆவல் கொள்கின்றன. இந்த ஆவலைப் பூர்த்தி செய்யக் கண், காது, வாய், போன்ற புலன்களின் துணை கொண்டு அறிய முயல்கின்றனர். 'இது என்ன! ஏன்! எப்படி?, என்ற கேள்விகளைக் கேட்டுப் பெற்றோரையும் மற்றோரையும் திணரடிக்கின்றனர். இயற்கை விஷயங்களைத் தெரிந்து கொள்ளக் குழந்தைகளுக்கு உள்ள இந்தத் துடிப்பின் காரணத்தினால் எல்லாவற்றைப் பற்றியும் எழுதலாம். ஆனால், எதை எழுதினாலும் குழந்தைகளுக்குச் சுவை பட எழுதவேண்டும். சுவைபட எழுதினோமானால் குழந்தைகள் அந்த நூல்களை விரும்பிப் படிப்பார்கள். பல நூல்களை விரும்பிப் படிப்பதால் அவர்களுடைய அறிவு தானாகவே விசாலமடைய இடமுண்டு.

ஆரம்ப ஆசிரியர்களுக்காகவே 'கல்வி' என்ற பத்திரிகையை எட்டு ஆண்டுகள் நடத்தி, 'கல்வி, என்ற அடைமொழியைத் தம் பெயருடன் இணைந்துக்கொண்டவர் திரு எஸ். கோபாலகிருஷ்ணன். சுதேசமித்திரன் ஞாயிறு மலரிலும், வாரப்பதிப்பிலும் சிறுவருக்காக எழுதி வருகிறார். சிறுவருக்கு விளங்கும் வகையிலும் விரும்பிப் படிக்கும்படியாகவும் விஞ்ஞான கதை நூல்களை எழுதி வருகிறார்.

இதுவரை இவர் எழுதியுள்ள 64 சிறுவர் நூல்களில் 'பறக்கும் பாப்பா', 'மந்திரவாதியின் மகள்', 'பண்டை உலகில் பறக்கும் பாப்பா', என்ற 3 நூல்கள் இந்தியக் குடியரசின் குழந்தை இலக்கியப் பரிசு பெற்றவை 'மிட்டாய் பாப்பா' என்ற நூல் ஐக்கிய நாடுகள் சபை நிறுவனமான 'யுனெஸ்கோ' முதியோர் கல்வி நூலுக்கான பரிசு பெற்றது. இக்கதையை குழந்தை திரைப்படக் குழுவினர் வண்ணப்படமாகத் தயாரித்துள்ளனர். அகில இந்தியத் திரைப்படப் போட்டியில் இந்தப்படம் குழந்தைகளுக்கான திரைப்படத்துக்கான பரிசைப் பெற்றது. 'மணி என்ன?' என்ற நூல் தென் மொழிகள் புத்தக டிரஸ்ட் நடத்திய குழந்தை இலக்கியப் போட்டியில் முதற் பரிசு பெற்றது.

'பறக்கும் பாப்பா' தெலுங்கு, கன்னடம், மலையாள மொழிகளிலும் 'மணி என்ன?' கன்னடம், மலையாளம் ஆகியவற்றிலும் சந்திரனுக்குச் செல்வோம் என்ற நூல் தெலுங்கிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. கடைசியாக உள்ள நூல் நம் சங்கத்தின் 'தமிழ் உறவு' வெளியீடாக தமிழில் வெளியிடப்பெற்றுள்ளது.

நம் சங்க நெறியாளர் குழு உறுப்பினரான திரு. கோபாலகிருஷ்ணன் நல்ல ஓவியருங்கூட.

குழந்தைகள் விரும்பும் வகையில் எழுதப் படாத பாடநூல்களை அவர்கள் வெறுக்கிறார்கள்; வேண்டா வெறுப்புடன் படிக்கிறார்கள். குழந்தைகளின் அறிவை வளர்க்கும் நோக்கத்துடன் எழுதப்படும் பாட நூல்களைச் சில கட்டுத்திட்டங்களுக்கு ஏற்ப எழுத வேண்டிய காரணத்தால் குழந்தைகளுக்குப் பிடித்தமான வகையில் எழுத முடிவதில்லை. ஆனால் குழந்தை எழுத்தாளர்கள் இக்குறையை நீக்கப் பாடபுத்தகத்தில் தரப்படும் அதே விஷயங்களைக் குழந்தைகளுக்குப் பிடித்தமான கதை உருவத்திலோ, அவர்களின் வியப்பை ஊட்டும் வகையிலோ துணை நூலாக வடித்துக் கொடுத்தால் குழந்தைகளின் கல்விக்குப் பேருதவி புரிந்ததாக இருக்கும்.

'குழந்தைகளுக்குக் கல்வியைப் புகட்ட முயல்வது தவறு. அவர்களின் அறிவை வளர்க்கவே வழி வகுக்கவேண்டும்' என்று உலகமேதை மாண்டிசோரி அம்மையார் கூறியுள்ளார். இந்தத்தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே அந்த அம்மையார் தம் கல்வி போதனு முறையை அமைத்துள்ளார். குழந்தைகளுக்கு விளையாட்டு என்றால் மிகப்பிடித்தம். யாதொன்றையும் ஸ்பரிச உணர்ச்சியால் அறிய விரும்பும் ஆவல் குழந்தைகளிடம் அதிகம். இந்த இயல்புகளைப் பயன்படுத்தி விளையாட்டுக் கருவிகளைக் கொடுத்து அவைகளின் மூலம் கல்வியைப் போதிக்க அவர் வழி வகுத்துள்ளார்.

அதேபோல் குழந்தைகளுக்குப் பிடித்தமான சிலவற்றைக் கருத்தில் கொண்டு குழந்தை எழுத்தாளர்கள் தம் கதைகளை எழுதத் தொடங்குவார்களானால் குழந்தை உலகம் அப்படைப்புகளை விரும்பிப்படிக்கும். அன்றாடம் காணும் வீட்டு விலங்குகளையும், நம்மிடையே புழங்கிவரும் மனித அளவுகளையும் குழந்தைகள் அவ்வளவாக விரும்புவதில்லை. காணுதற்கரிய காட்டு விலங்குகளையும், உண்மையில் வாழ்க்கையில் காணமுடியாத உடல் பெருத்த அரக்கர்களையும், சித்திரக்குள்ளர்களையுமே காணவிரும்புகின்றனர். இத்தகைய பாத்திரங்களைக் கொண்ட குழந்தை நூல்கள் சிரஞ்சீவி இலக்கியங்களாக ஆனதில் வியப்பு என்ன இருக்கிறது?

அதே போல் தங்களால் செய்ய இயலாத காரியங்களை இக்கதாபாத்திரங்கள் செய்வார்களானால் தம்மையே இக்கதா பாத்திரங்கள் என்று எண்ணி இவ்வரிய சாதனைகளைத் தாமே செய்து முடித்ததாக மகிழ்வதும் குழந்தைகளின் இயல்பு. அக்காரணத்தால் ஆழ்கடலைக்கடத்தல், ஆகாயத்தில்பறத்தல், அரக்கர்களைக் கொல்லுதல், மதயானையை அடக்குதல், சிங்கத்தின் மீது சவாரி செய்தல் போன்ற சம்பவங்கள் சிலரின் விருப்பத்திற்கு உள்ளாகின்றன. இதைத் தவிர சுறுசுறுப்பு, தலை தெறிக்கும் வேகம், காதைத் துளைக்கும் ஒலி இவைகளும் குழந்தைகளுக்குப் பிடித்தமானவை. இவை குழந்தை நூல்களில் நிரம்ப இடம் பெறுதல் நல்லது.

அது நிற்க, 'விஞ்ஞான அறிவைக் குழந்தை நூல்களில் புகுத்த வேண்டுமா?' என்ற கேள்வியைச் சிலர் எழுப்புகின்றனர். ஏதோ கிரகங்களுக்கு ராக்கெட்டில் பயணம் செய்வது ஒன்றையே இவர்கள் விஞ்ஞானம் என்று கருதுவதால் இக்கேள்வி பிறக்கிறது. இயற்கையில் உள்ள ஒவ்வொன்றும், ஏன் அண்ட சராசரத்தில் உலவும் கோடானு கோடி நட்சத்திரங்களும் கூடச் சில விதிகளுக்கு உட்பட்டே நடமாடுகின்றன. இவ்விதிகளை இன்னதென்று நிர்ணயிப்பதே விஞ்ஞானமாகும்.

ஒரு தாவரத்தை எடுத்துக் கொண்டு அதன் வாழ்க்கையைப்பற்றி ஆராய்ந்தால் எல்லாத்துறை விஞ்ஞான அறிவும் அதில் இடம் பெறுகின்றது என்பதை அறியலாம். அதன் பாரம்பரியத்தை ஆராய உடற்கூறு (Biology) தேவை. மண்ணை ருசி மிகுந்த மாங்கனியாக ஆக்குவதை ஆராய, இரசாயனம் (Chemistry) நமக்கு உதவுகிறது.

அதன் வாழ்க்கையின் போக்கை அறிய தாவர இயலும் (Botany), உலகில் குறிப் பிட்டபகுதியில் அத்தாவாரம் வளருவதற் கான காரணத்தை பூகோளமும் (Geograpy) பெருமரங்கள் பலடன் கனமுள்ள இலை களைகளைத் தாங்கி நிற்பதற்கான அடிப்படைத் தத்துவங்களை அறியப் பொறி இயலும் (Engineering) உதவுகின்றன. இவ்வகையில் ஒவ்வொரு தாவரமும், உயிர் இனமும், சூழ் நிலையில் உள்ள காற்று நீர், கல், மண் எல்லாமுமே தம்முள் பல விஞ்ஞான அடிப் படைத் தத்துவங்களை அடக்கிக் கொண் டிருக்கின்றன. இத்தகைய அடிப்படைத் தத்துவங்களையே விஞ்ஞானிகள் தம் ஆராய்ச்சியின் மூலம் நமக்கு வெளியிடு கின்றனர். இந்த அறிவே விஞ்ஞானமாகும்.

இதுவரை விஞ்ஞானிகள் தம் ஆராய்ச்சி யின் மூலம் வெளியிட்டுள்ள விஞ்ஞான அறிவு அவ்வளவையும் குழந்தைகளுக்கு எடுத்துரைக்க வேண்டுமென்பதில்லை. அது இயலாத காரியமும் கூட. குறிப்பாக ஒவ்வொரு துறையிலும் அடிப்படைத் தத்துவங்களைக் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறலாம். ஆனால், முன்பு கூறியபடி குழந்தைகளுக்குச் சுவைபடக் கூறுதல் மிக மிக அவசியம். இது எழுத்தாளரின் திறமையைப் பொறுத்ததாகும்.

ஓர் உதாரணம் கூறுகிறேன். பாலைவனம் என்றதும் நம் மனக்கண்முன் ஒன்றும் விளை யாத மணல் மைதானம் என்று ஓர் உணர்ச்சி எழுகிறது. ஆனால், பாலைவனத்தில் கோதுமை, சோளம், திராட்சை, அத்தி, அன்னாசி, ஆரஞ்சு போன்ற ருசி மிகுந்த பழங்கள் விளைகின்றன. இவை குறிப்பிட்ட நீர்ஊற்றுச் சோலைகளில் மட்டும் பயிரிடப் படுகின்றன. அதைத் தவிர பாலைவனத்தில் 7000 அடி உயர மணல் மலைகள் உள்ளன. குழந்தைகளின் வியப்பைத் தூண்டக் கூடிய இவ்வதிசயத்தை முதலில் கூறி பாலை வனத்தைப்பற்றிக் கூறத் தொடங்கினால் மற்றச் செய்திகளை அவர்கள் விரும்பிப் படிப்பார்கள்.

நம்புதற்கரிய செய்திகளைச் முதலில் குழந்தைகளுக்குக் கொடுத்தல் அவசியம். ஆனால் அவை உண்மைக்குப் புறம்பாகவும் இருத்தல் கூடாது.

குழந்தை நூலாக எதை வேண்டு மானாலும் எழுதலாம். முழுக்க முழுக்கக் கற்பனையில் உருவாக வேண்டு மென்ப தில்லை. நம்மைச் சுற்றி உள்ள உண்மை களைக் கற்பனை என்ற கயிற்றில் கோத்து நல்லதோர் குழந்தை இலக்கியத்தைப் படைக்க முடியும். ஆயிரம் நூலாசிரியர்கள் இதில் ஈடுபடவும் இடமுண்டு. குழந்தை களுக்கு எத்தகைய நூல் எழுதுவது என்ற வீண் சர்ச்சையில் கவனத்தைப் போக்கா மல் அவரவர்களுக்கு ஏற்ற துறையில், குழந்தைகள் விரும்பிப் படிக்கும் வகையில், சிறுவர்களின் நற்பண்புகளையும் அறிவையும் வளர்க்கும் நல்ல நூல்களை எழுத எல்லா எழுத்தாளர்களும் முன் வந்து இதை நற்பணியில் ஈடுபடவேண்டும் என்பது என் அவா. ●

ஒவ்வொரு மொழியும் ஓர் ஆலயமே;
அம்மொழியைப் பேசுகின்றோரின் ஆத்மாவே
அதில் உறையும் தேவன் — ஓ. டபிள்யூ. ஹோம்ஸ்.



தமது கொள்கையையும் கருத்தையும் விட்டுக் கொடுக்காமல், அதே சமயத்தில் பிறருடைய கருத்துக்கும் மதிப்புக் கொடுப்பது என்பது மிக சிரமமான காரியம். மருத்துவக் கலையிற் போலவே இந்தக் கலையிலும் வல்லவர் தமிழ்நாடு கூட்டுறவு யூனியன் பொதுச் செயலாளர் டாக்டர் பி. நடேசன் எம்.பி., பி.எஸ். கூட்டுறவு இயக்கத்தில் 1935ல் ஈடுபாடு கொண்டதிலிருந்து இன்று வரை இவரால் வளர்க்கப்பட்டும், ஆதரிக்கப்பட்டும் வந்துள்ள கூட்டுறவு நிறுவனங்கள் கணக்கற்றவை. சுமார் ரூ. 1கோடிக்குமேல் லேவாதேவி நடத்திவரும் ஜார்ஜ் டவுன் கூட்டுறவு பாங்கு இவரது நிர்வாகத் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. இந்தியாவிலேயே மிகவும் உன்னதமாக இயங்கும் கூட்டுறவு பாங்கு என்று ரிசர்வ் பாங்கு இதைப் பாராட்டியிருப்பதைக் குறிப்பிட வேண்டும். தமிழ் நாட்டில் கூட்டுறவுத் துறையில் பல நிறுவனங்களில் பல பதவிகளையும் வகித்து வரும் டாக்டர் நடேசன், அகில இந்திய ரீதியிலும் தேசிய கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவுப் பண்டக சாலைகள் பற்றிய விசாரணைக் கமிட்டி போன்றவற்றில் பொறுப்பேற்று, கூட்டுறவு இயக்கம் பரவப் பணியாற்றி வருகிறார்.

சேலம் ஜில்லா ஆத்தூரில் 2-10-1902ல் பிரபல குடும்பத்தில் பிறந்த டாக்டர்நடேசன், இளைஞருக்குரிய உற்சாகமும் சுறுசுறுப்பும் கொண்டு தாமும் இயங்கி, மற்றவரையும் இயக்குவிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ராஜ்யபாங்கின் சென்னைக் கிளை உபதலைவராகவும், சென்னை நூலக ஆணைக்குழு, மெடிகல் கௌன்சில், மீன்வள ஆலோசனைக்குழு, விவசாயிகள் அரங்கு, மற்றும் பல பொது நல நிறுவனங்களிலும் பொறுப்புள்ள பதவியேற்றுப் பணியாற்றி வரும் இவர், நமது சங்கத்தின் டைரெக்டர்களில் ஒருவர்.

ஆல், அறுகு போல்....

டாக்டர் பி. நடேசன் எம்.பி , பி.எஸ்.

நமது பாரத நாடு 16,06,742 சதுரமைல் பரப்புள்ளது. இதில் ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. நம் தேசத்தின் மக்கட் தொகை 1961ஆம் ஆண்டின் கணக்குப்படி 43 கோடிக்கும் அதிகமாகும். ஆண்டொன்றுக்குச் சுமார் 1.2 கோடிப் பேர் வீதம் மக்கட்தொகை அதிகரித்து வருகிறது. உலக மக்கட் தொகையான 330 கோடிப் பேரில், சுமார் எட்டில் ஒரு பகுதியினர் நம் தேசத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

பரந்த இப் பரத கண்டத்தில் கூட்டுறவு இயக்கமானது நன்கு முன்னேறியிருக்கிறது. 1904-ம் ஆண்டில் நம் நாட்டில் தோற்றுவிக்கப்பட்ட இந்த மாபெரும் இயக்கமானது தேச விடுதலைக்குப் பின் நாட்டில் நன்கு வேரூன்றி பல துறைகளில் முன்னணியில் இருந்து வருகிறது. சுமார் 3 லட்சத்துக்கும் அதிகமான கூட்டுறவுச் சங்கங்கள் நம் நாட்டில் உள்ளன. அவற்றில் ஈடுபட்டுள்ள மக்களின் தொகை 4 கோடிப் பேர் ஆகும்.


இந்தியாவின் மற்றப் பகுதிகளைக் காட்டிலும் தமிழ் நாட்டின் கூட்டுறவு வளர்ச்சியானது தனி மதிப்புடன் விளங்குகிறது. மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகம் கூட்டுறவு வளர்ச்சியில் சிறப்புடன் இருந்து வருவது கண்கூடு. 50,000 சதுரமைல் பரப்புள்ள தமிழகத்தில் உள்ள 18,648 கிராமங்களிலும்நகர்ப்புறங்களிலும் கூட்டுறவு முயற்சி சிறந்து விளங்குவதைக் காண்கிறோம். எல்லாக் கிராமங்களிலும் இந்த இயக்கம் பரவி சுமார் 89 சதவிகித கிராம மக்கள் இதில் இன்று பங்கு கொண்டுள்ளார்கள் என்பதே அதன் முக்கியத்துவத்துக்குச் சிறந்த சான்றாகும்.

கூட்டுறவு இயக்கம் தோன்றி 60 ஆண்டு கட்கும் அதிகமாக ஆகின்றது. ஆரம்பத் தில் கிராம நாணய சங்கங்கள்தான் ஏற்பட் டன. நம் மாநிலத்தில் செங்கல்பட்டு மாவட் டத்தில் முதல் கூட்டுறவு நாணயச் சங்கம் அமைக்கப்பட்டது. 1904-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட திரூர் கூட்டுறவு நாணய சங்கம் என்னும் அந்த ஸ்தாபனம் இன்றும் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

நம் மாநிலத்தின் இயக்க வளர்ச்சிக்கு, அரசாங்கம் அளித்துள்ள ஆதரவும், அதைக் காட்டிலும் அதில் ஈடுபட்டுப் பாடுபடும் தலை வர்களின் ஊக்கமும் முயற்சியும் முக்கிய காரணங்களாகும். 1912-ம் ஆண்டுக்குப் பிறகு நம் மாநிலத்தில் கூட்டுறவு முன்னேற் றத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்படலாயிற்று. நாணய லேவாதேவியல்லாத இதர துறை களிலும் இந்த இயக்கம் பரவிற்று. அதுவும் நாடு சுதந்தரம் பெற்ற பின்னர் அரசாங்கம் வகுத்த ஐந்தாண்டு திட்டங்களின் காரண மாக இயக்க வளர்ச்சியின் வேகம் மிகச் சிறந்து விளங்கிற்று. பல்வேறு துறைகளில் கூட்டுறவு முயற்சியானது நம் மாநிலத்தில் பரவிற்று. ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றியுள்ள இந்த மாபெரும் இயக்கத்தின் மிக நல்ல பலன்களை மக்கள் அடைந்து வருகிறார்கள். ''எங்கும் கூட்டு றவு, எதற்கும் கூட்டுறவு'' என்ற ஒரு சிறந்த நிலை உருவாயிருப்பதை நாம் காண்கின்றோம் தமிழகத்தில் இன்று உள்ள சுமார் 20,000 கூட்டுறவு சங்கங்களே இதற்குத் தக்க சான்றாகும்.

மக்களுக்குக் கடன் கொடுக்கும் லேவா தேவிச் சங்கங்களைத் தவிர, அவர்களின் வாழ்க்கைத் தேவைகளை வினியோகிக்கும் கூட்டுறவுப் பண்டசாலைகள் என்ன, விளை பொருள்களை விற்றுத் தரும் விற்பனைச் சங் கங்கள் என்ன, பால் வழங்கும் பால் சங்கங் கள் என்ன, இன்னும் வீடுகட்டும் சங்கங் கள், தொழிலாளர் சங்கங்கள், நெசவாளர் சங்கங்கள், விவசாயப் பண்ணைகள், கூட் டுறவு அச்சகங்கள், மீனவர் சங்கங்கள் போன்ற பல சங்கங்கள் ஏற்பட்டுள்ளன. இன்னும், பக்குவச் சாலைகள், நூற்பாலைகள், சர்க்கரை ஆலைகள் போன்ற பெரிய தொழில் முயற்சிகளிலும் கூட்டுறவு அதன் அன்புக் கரத்தை விரித்துள்ளது. கூட்டுறவு முயற்சி யால் இயங்கும் நாளிதழ் பத்திரிகையும் நம் மாநிலத்தில் வெற்றியுடன் நடைபெறுகிறது. இவ் வகையில் நம் மாநிலத்திலேயே முதன் முறையாக, பிரபல எழுத்தாளர்களை உறுப் பினர்களாகக் கொண்ட தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் தோற்று விக்கப்பட்டு, நல்ல முறையில் செயலாற்றி வருவதையும், பல அரிய வெளியீடுகளைப் பிரசுரம் செய்து வருவதையும் குறிப்பிடுதல் வேண்டும்.

தனி மனித முயற்சியைவிடப் பலர் ஒன்று சேர்ந்த முயற்சியின் மேன்மைக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் இந்த இயக்கம் மக்க ளின் அன்றாட வாழ்க்கையில் நன்கு பின்னிப் பிணைந்து தேசத்தின் முன்னேற்றத் துக்குச் சிறந்த கருவியாக, ஜனநாயக சோசலிச சமுதாய அமைப்புக்கு ஏற்ற குறிக்கோளைத்தையும் நிறைவேற்றும் ஆற்றல் வாய்ந்த அரும் பெரும் சக்தியாக, கலங்கரை விளக்கமெனத் திகழ்கிறது. இன்று உள்ள உணவு நெருக்கடியைத் தீர்த்துவைக்கும் முயற்சியில் மகத்தான சேவையையும், தியாகத்தையும் நமது கூட் டுறவு ஸ்தாபனங்கள் புரிந்து வருகின்றன என்பதை நாம் கண் கூடாகக்காண்கிறோம். பசியும் பிணியுமற்ற இன்ப வாழ்வு நிறைந்த சமதர்ம சமுதாயத்தை (Cooperative Common -wealth) உருவாக்க நாம் உறுதி பூண்டிருக் கும் இவ்வேளையில், இந்த இயக்கத்தின் புனிதத்தையும், பெருமையையும் பாது காத்து, மேலும் மேலும் பயன்பெற, பரந்த மனப்பான்மையுடனும், உறுதியான உள் ளத் தூய்மையுடனும் செயலாற்றுவோமாக. நாட்டில் சிறந்து வளர்ந்துவரும் கூட்டுறவு இயக்கத்தின் பண்பு குன்றாமல் அதைப் பேணிப் போற்றுவோம் என்று உறுதி கொள்வோமாக.



திரு எஸ். கே. ராமன் என்னும் இயற் பெயரை யுடைய இவர் நெல்லை மாவட்டத்தில் திருக் குற்ருலத்துக்கு அருகிலுள்ள சாம்பூர் வடகரை எனும் ஊரைச் சேர்ந்தவர். 2—10—1917 இவரது பிறந்தநாள். தென்காசியில் பள்ளியிறுதி வகுப்பு வரை படித்தபின், சிலகாலம் தம் ஊரிலேயே 'போட்டோ ஸ்டீடியோ' நடத்திவந்தார். பின்னர் சென்னையில் படக்கம்பெனிகளின் பிரதிநிதியாக இருந்தார். 1942 இறுதியில் பம்பாய் சென்று பல பிரபல கம்பெனிகளின் சுருக்கெழுத்தாளராகவும் 1953லிருந்து இந்திய அரசின் செய்தித் திரைப் படத் துறையில் தமிழ் செய்தி விமரிசகராகவும் வேலைபார்த்தார். 1961 இல் சென்னை திரும்பி தற்போது வானெலியின் சென்னை நிலையத்தில் பணியாற்றி வருகிருர்.

திரு மாயாவி 1937 முதல் எழுதி வருகிருர். இது வரை 300 சிறுகதைகளும் 25 நாவல்களும் வெளி வந்துள்ளன. ரேடியோ நாடகங்கள் 100 எழுதி யுள்ளார். நூல்வடிவில் பிரசுரமாயுள்ளவை நாவல் கள் 25, கதைத்தொகுதிகள் 13, மொழி பெயர்ப்பு நூல்கள் 8, பிரயாணக்கட்டுரை 1 (வெளிவர இருக் கிறது). 'வாடாமலர்' என்ற இவருடைய நாவல் தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் பரிசு பெற்றிருக்கிறது. 'கிரகணம்' என்றநாவல் ஹிந்தியிலும், 'அலைகடல்' என்பது கன்னடத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு, நூல்களாகவும் வெளிவந்துள்ளன. இவருடைய சிறுகதைகள் கன்னடம், ஹிந்தி, ஒரியா, சிந்தி, அஸ்ஸாமிய மொழி, காஷ்மீரி மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, அம் மொழிச் சஞ்சிகை களில் பிரசுரமாகியுள்ளன.

நம் சங்க நெறியாளர் குழுவில் தொடக்க முதலே உறுப்பினர்.

நாவல் எழுதலாம்

மாயாவி

'நாவல் எழுத என்ன வேண்டும் ?' என்ற தலைப்பை இட்டுக்கொண்டு இந்தக் கட்டு ரையை ஆரம்பிக்கும்போது, என் கண் முன்பு முதலில் வந்து நிற்பவை, நல்ல 'பூல்ஸ்கேப்' காகிதத்தில் ஒரு ரீமும், முழு 'ஸ்வான் இங்க்' பாட்டில் ஒன்றும், புதிய பவுண்டன் பேனு ஒன்றுந்தான். ஆமாம்; 'சுவர் இருந்தால்தானே சித்திரம் எழுதமுடி யும்?' என்றவாறு இவை இல்லாவிட்டால் நிச்சயமாக ஒருவரும் நாவலே எழுத முடி யாது. வேண்டுமானுல், என்னைப்போல் எழுத்தை நீட்டும் பழக்கமில்லாத எழுத்தா ளர்கள் ஒரு ரீம் காகிதத்தை அரை ரீமாகவோ, கால் ரீமாகவோ குறைத்துக் கொள்ளலாம்; முழு இங்கிப் புட்டிக்குப் பதிலாக, அரை குறையாக நிரப்பப்பட்ட இங்கிப் புட்டியையோ, அல்லது இப்பொழுது இங்கி அடைக்காமலே எழுதும் பேனு ஒன்று வந்திருக்கிறதே, அதையோ எடுத்துக் கொள்ளலாம். ஆனுல் இப்படிப் பட்ட பேனுவை நம்பி நாவலை எழுதத் தொடங்கும் எழுத்தாளர்களுக்கு நான் ஓர் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். நீங்கள் கடைசி வரையில் முழுசாக ஒரு நாவலை எழுதியே தீருவது என்ற தீர்மானத்துடன் உட்காரு வதானுல், கையோடு காவலாக ஒரு இங்கிப் புட்டியும், சாதாரணப் பேனு ஒன்றும் தயா ராக வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்ருல் நீங்கள் மிகவும் சுவாரசியமாகக் கதாநாய கியை வில்லனிடமிருந்து காப்பாற்றும் கட் டத்தை எழுதிக் கொண்டிருக்கும் சமயம் பார்த்து, அந்த ஊற்றுப்பேனு மக்கர் செய்து, உங்கள் கற்பனை ஊற்றை வற்ற அடித்து விடக்கூடும்.

அடேயப்பா! நாவலைப்பற்றி எழுத ஆரம்பித்த நான் பேனாவைப்பற்றியே ஒரு நாவல் எழுதத்தொடங்கி விட்டேனே! ஆமாம்; நாவல் எழுத விரும்புகிறவர்கள் முதலில் காகிதமும் பேனாவும் தேடிக் கொள்ள வேண்டும். அப்புறம்...? உடனே நீங்கள் ஒரு மன உறுதியும் செய்து கொள்ள வேண்டும். இந்த நாவலை எழுதி முடிக்கும் வரையில், நான் பேனாப்பிடித்து வேறு எதுவும் எழுதுவதில்லை-ஊரிலிருக்கும் மனைவிக்குக் காதல் கடிதம், உற்ற நண்பர்களுக்கு இலக்கிய விவாதக் கடிதம், உங்கள் விசிறிகளின் பாராட்டுகளுக்குப் பதில் கடிதம்; எதுவானாலும் சரி, எழுதுவதில்லை என்ற பிரதிக்ஞை யும் செய்து கொள்ள வேண்டும். நான் ஏன் இவ்வளவு கடினமான 'கண்டிஷன்' போடு கிறேன் என்றால், என் அனுபவத்தில், 'இதோ ஒரு நாவல் எழுதிவிட்டுத்தான் மறு வேலை என்று ஆரம்பித்த பல எழுத்தாளர்க்கு முதல் அத்தியாயத்தைத் தாண்டி அப்புறம் போக முடியாதபடி மேற்சொன்னவை போன்ற வேடிக்கையான தடைகள் சிலவும் குறுக்கிட்டிருக்கின்றன. ஆகவே, நாவல் எழுதுவது என்று துணிந்தால், மனசை வேறுவித விசாரங்களில் அலைய விடாதிருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

நாவல் எழுதுவது, அதிலும் சற்றுப் பெரிய நாவலை எழுதுவது என்பது சிறுகதை எழுதுவதைப்போல் சில மணி நேரத்துக்குள் முடியும் வேலையல்ல. அதற்கு ஒருமுகப் பட்ட ஈடுபாடு இல்லாவிட்டால், முதல் அத்தி யாயத்தில் சீதாவாக இருந்த கதாநாயகி, நான்காவது அத்தியாயத்தில் ராதாவாக மாறி, கடைசி அத்தியாயத்தில் கீதாவாகச் செத்து ஒழிந்துவிட நேரிட்டுவிடும். தவிர, நாவலை எழுதும்போது சிக்கலான பல கட் டங்களைத்தாண்ட நேரிடும். எத்தனை மண் டையை உடைத்துக் கொண்டாலும் அந்தக் கட்டத்தைத் தாண்ட வழி புலப்படாது. அத் தகைய சமயத்தில், வேறு ஏதாவது ஒரு வேலையைப்பற்றி நினைத்துக் கொண்டால், அதை முடித்துவிட்டு வருவோமே என்று தோன்றுமேயன்றி, வில்லனிடம் சிக்கிக் கொண்டிருக்கும் கதாநாயகியை விடுவிக்க மார்க்கம் தேடும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட உங்களுக்குத் தோன்றாது. ஒரு தடவை அப்படி உங்கள் மனசைப் பிற விஷயங்களில் அலைய விட்டீர்களோ, அவ் வளவுதான்-அப்புறம் உங்கள் கதாநாயகி இந்த ஜன்மத்தில் வில்லனிடமிருந்து விடு படப் போகிறதும் இல்லை; நீங்கள் நாவல் எழுதி முடிக்கப் போகிறதும் இல்லை.

சமீபத்தில் நான் ஒரு காஷ்மீரி எழுத்தா ளர் வீட்டுக்குப் போயிருந்தேன். காஷ்மீரிப் பத்திரிகை உலகில் அவர் மிகவும் பிரபல மானவர். நூற்றுக்கணக்கான மணி மணி யான சிறு கதைகளை அவர் எழுதியிருக்கிறார். "நீங்கள் நாவல் எதுவும் எழுதவில்லையா?" என்று அவரைக் கேட்டேன் "ஓ! எழுதி யிருக்கிறேனே!" என்றார் அவர். "அவை புத்தகமாக வந்திருக்கின்றனவா?" என்று விசாரித்தேன். இல்லை; அவை பத்திரிகை யிலே வெளி வரவில்லையே!" என்றார் அவர். "ஏன்?" என்று ஆச்சரியத்தோடு வினவி னேன். அவற்றை நான் இன்னும் பூர்த்தி செய்யவில்லை; அதனால்தான்" என்று ஒரு போடுபோட்டார் பாருங்களேன். அவர் மேலும் பேசியபோது அந்த எழுத்தாளர் இதுவரையில் சுமார் பதினைந்து தடவைகள் பதினைந்து தனித் தனி நாவல்களை எழுத ஆரம்பித்தார் என்றும், இடையே குறுக் கிட்ட வேறு வேலைகள் காரணமாக அவற் றில் ஒன்றைக் கூட இன்னும் முடிக்காமல் இருக்கிறார் என்றும் அறிந்தேன். ஆகவே தான் சொல்லுகிறேன், நாவல் எழுதுவது என்று துணிந்தால் நிச்சயமாக அதை முடிக் கும் வரையில் வேறுவித எழுத்து வேலையில் ஈடுபடுவதில்லை என்ற பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று.

சரி; அந்தப் பிரதிக்ஞையும் செய்து கொண்டாயிற்று. அடுத்ததாக வேண்டியது என்ன?

அடுத்ததாக வேண்டியது நீங்கள் எப்படிப்பட்ட நாவலை எழுதப்போகிறீர்கள் என்பதைப்பற்றி ஓர் நிர்ணயம். காதல் நவீனமா, துப்பறியும் நவீனமா, சாதாரணக் குடும்ப வாழ்வைப்பற்றிய நவீனமா, நாட்டில் மலிந்து கிடக்கும் குறைகளை எடுத்துக் காட்டித் திருத்தும் படிப்பினை நவீனமா; இப்படி இன்னும் எத்தனையோ வகை இருக்கின்றனவே, அவற்றில் எதைப்பற்றி எழுதுவது என்பதைப்பற்றிய நிர்ணயம்.

இது முடிந்து விட்டால் அடுத்தபடியாக நாவலுக்கான அடித்தளத்தை அமைக்க வேண்டும். அதாவது கதை அமைப்பையும், தலைப்பையும் பற்றி நிச்சயிக்கவேண்டும். இந்த இரண்டையும் அமைக்கும் விதம் எழுத்தாளருக்கு எழுத்தாளர் மாறுபடும். சிலர் கதைக் குறிப்பைத் தயாரித்து வைத்துக் கொண்டு நாவலை எழுதத் தொடங்கி விடுவார்கள். நாவல் வளரும்போதோ, அல்லது அதை எழுதி முடித்த பிறகோ, கதைக்கேற்ற தலைப்பைக் கொடுப்பார்கள். வேறு சிலர் முதலில் கதையின் கொள்கைக் தலைப்பை இட்டுவிட்டு, அத்தலைப்பின் அடிப்படையில் கதையின் குறிப்பைத் தயாரித்துக் கொண்டு, நாவலை எழுதத் தொடங்குவார்கள்.

கதைக் குறிப்பு என்பது என்ன? அது ஒன்று எதற்கு? என்று கேட்கலாம். 'எங்கேயாவது பிளான் இல்லாமல் கட்டிடம் கட்டுகிறார்களா?' என்றுதான் உங்களைத்திருப்பிக் கேட்கிறேன். பிளான் இல்லாமல் நாவல் எழுத ஆரம்பித்தால், பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதை போல், சில சமயம் நீங்கள் எந்தக் கொள்கையின் அடிப்படையில் நாவலை எழுதத் தொடங்குகிறீர்களோ, அதற்கு நேர் விபரீதமான கொள்கையை ஸ்தாபிப்பதாக உங்கள் நாவல் முடிந்து விடக்கூடும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வேறொன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நாவல் என்பது சிறு கதையைப்போல், ஒரே ஒரு குண சித்திரத்தையோ, ஒரே ஒரு சம்பவத்தையோ மாத்திரம் விவரிப்பதல்ல, பல்வேறு சுவையுடைய பல பாத்திரங்கள் நடமாடும் களம் அது. பாவையாட்டத்தில் எவ்வாறு ஒவ்வொரு பாவைக்கும், கயிறு கட்டி ஆட்டுவிப்பவர், தேவையானதை தேவையான இடத்தில், தேவையான அளவு ஆட்டுவிக்கிறாரோ, அவ்வாறு உங்கள் நாவலின் பாத்திரங்களை ஆட்டுவிக்க வேண்டும் ஆகவே ஆரம்பத்திலே இந்த ஆட்டத்துக்கு ஒரு குறிப்பு வகுத்துக் கொள்ளுவது அவசியமாகும்.

நாவலை விரிவாக எழுதத் தொடங்கும் போது இந்தக் குறிப்பு வகுத்திருக்கும் எல்லையைத் தாண்டி எந்தப் பாத்திரமும் சென்று விடாதபடி பார்த்துக் கொண்டீர்களானால் போதும், உங்கள் நாவல் நல்ல நாவலாக அமைந்தாலும் அமையாவிட்டாலும், அது எந்தக் கொள்கையைப் பின்பற்றி எழுதப் படுகிறதோ, அந்தக் கொள்கைக்கு நேர் மாறாக மாத்திரம் போய்விடாது.

ஆயிற்று; குறிப்பையும் வகுத்துக் கொண்டு விட்டீர்களானால், அப்புறம் மளமள வென்று எழுதத் தொடங்க வேண்டியதுதான்.

நாவலைக் கோவையாகச் சுவையாக எழுதுவது ஒரு கலை. முன்பே சொன்னபடி நாவல் சிறுகதை யல்ல. 'ஒரு சிறுகதையில் எழுதக் கூடியதை அதைவிடப் பல மடங்கு பெருகிய அளவில் எழுதுகிறோம். சொல்லப்போகிற விஷயம் இரண்டிலும் ஒன்றுதான். என்றாலும், இதில் விரிவாகச் சொல்கிறோம். ஆகவே படிக்கிறவர்களுக்கு அலுப்புத் தட்டாமல் எழுத வேண்டும்,' என்ற இந்தத் தத்துவத்தை நன்றாக மனதில் பதிய வைத்துக் கொண்டு, உங்கள் நாவலில் ஒவ்வொரு இடத்திலும் இதனைப் புகுத்திப் பார்த்துக் கொண்டு மேலே செல்ல வேண்டும்.

கதையை இரண்டு கிளைகளாகப்பிரித்துக்கொண்டு எழுதிச்செல்வது ஒரு வகை. எந்த ஒரு கிளையையும் பல பக்கங்கள் தொடர்ந்து எழுதாமல், ஒரு சுவையான, அல்லது பரபரப்பான கட்டத்தில் அப்பகுதியைச் சட்டென்று நிறுத்தி விட்டு, அடுத்த பகுதிக்குச் சென்று விடுவது. அவ்வாறே இந்த அடுத்த பகுதியையும் ஒரு சுவையான இடத்தில் நிறுத்தி விட்டு, பழைய பகுதிக்குக் திரும்பி வந்து மேலே செல்வது. இப்படிச் சென்று இறுதியில் இரு பகுதிகளையும் இணைத்துக் கதையை முடித்தால் வாசகர்களின் ஆவலை நாவல் நெடுக நிலவி நிற்கச் செய்யலாம்.

இப்படி நெடுங் கதையான நாவலை அலுப்புத் தட்டாமல் வாசிக்கச் செய்ய எத்தனையோ வழிகள் இருக்கின்றன. ஒவ்வொருவர் ஒவ்வொரு பாணியைக் கையாளுகிறார்கள்.

முடிவு-நாவலின் முடிவு- மிகவும் முக்கியமானது. அது அழகாக அமையாவிட்டால், கதை முழுவதுமே சுவை குன்றியதாகப்போய் விடலாம். சாதாரணமாக, முடிவில் உங்கள் நாவலின் கருத்தைப் பிரதிபலிக்கும் உத்தி (Climax) வந்து சேரும்படி செய்து விட்டீர்களானால் நீங்கள் வெற்றியடைந்து விட்டீர்கள் என்று நிச்சயமாகச் சொல்லலாம்


நம் எழுத்தாளர்களிடையே சிறு கதை எழுதுபவர்கள் நூறு பேர் இருந்தால் அவர்களில் ஒருவர் இருவர்தான் நாவல் எழுதுபவர்களாக இருக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம் ''பெரிய காரியமாயிற்றே'' என்ற மலைப்புத்தான். ஒரு தடவை ஒரு நாவலைத் துணிந்து எழுதிவிட்டால், பிறகு நாவல் எழுதுவது ஒன்றும் அவ்வளவு பிரமாதன காரியமல்ல என்பது உங்களுக்குத் தெரிந்துவிடும்.

உங்களை ஊக்க எனக்குத் தெரிந்த அளவு நாவல் எழுத என்ன வேண்டும் என்பதைப் பற்றி ஒரு சிறு குறிப்புக் கொடுத்து விட்டேன். இன்னும் என்னை விட அதிகமாக இவ்விஷயத்தை அறிந்தவர்கள் எத்தனையோ பேர்கள் இருப்பார்கள். அவர்களையும் கலந்து கொண்டு, எங்கே எழுத ஆரம்பியுங்கள் பார்க்கலாம் ஒரு நல்ல நாவலை.

(திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்க இலக்கிய மலரில் இருந்து)

எல்லாக் கலைகளையும் விட வாழ்க்கை பெரிது; இதை விடவும் ஒருபடி மேலே செல்கிறேன். பூரணத்துவத்தை எட்டும் வாழ்க்கையைக் கொண்ட மனிதன்தான் பெரிய கலைஞன். சீலம் நிறைந்த வாழ்க்கையின் கட்டுக்கோப்பும் அடிப்படையும் இல்லாத கலை என்ன கலை?

—காந்தியடிகள்.



திரு கி. வா. ஜகந்நாதன் அவர்கள்
(தலைவர்)

நெறியாளர்



திரு. அகிலன்



திரு. ஆர்வி



திரு. எச் வைத்யநாதன் (பொருளாளர்)



திரு. மாயாவி



திரு.
டி. என் சுகி சுப்பிரமணியன்


குழுவினர்



திரு.
நாரண துரைக்கண்ணன்



திரு.
கல்வி கோபாலகிருஷ்ணன்



திரு. சாண்டில்யன்



திரு. மு. நமசிவாயம்



திரு. பூவாளூர் சுந்தரராமன்



டாக்டர் பி. நடேசன், எம்.பி.பி.எஸ்.,
(பொதுச் செயலாளர், தமிழ்நாடு கூட்டுறவு யூனியன்.)

அடித்தளம்

குமாரி ஆர். சூடாமணி



தமிழ் எழுத்துலகில் புகழுடன் விளங்கும் பெண் எழுத்தாளர்களில் இவரும் ஒருவர். 1954 ஆம் ஆண்டில் எழுத்துலகுக்கு அறிமுகமானுர். 1957ல் 'கலைமகள்' வெள்ளி விழா சிறுகதைப் பரிசும் 1959ல் நாவல் பரிசும், 1961ல் ஆனந்தவிகடன் நாடகப் போட்டியில் 'இருவர் கண்டனர்' என்ற நாடகம் எழுதி 2ம் பரிசும் பெற்றவர். இதுவரை 8 நூல்கள் வெளியாகியிருக்கின்றன. 1964—65ல் சங்கீத நாடக சங்கம் இவருடைய 'அன்புடன் மரகதம்' என்ற நாடகத்தைச் சிறந்ததாகத் தேர்ந்தெடுத்தது.

ஜெர்மன், கன்னடம், ஹிந்தி மொழிகளிலும் குமாரி சூடாமணியின் கதைகள் மொழி பெயர்க்கப்பட்டு வெளியாகியுள்ளன. ஆங்கிலத்திலும் கதைகள் எழுதிவருகிறுர்.

கிளப்பில் டென்னிஸ் விளையாடிய பின் மற்றவர்களோடு மேஜையைச் சுற்றி அமர்ந்து குளிர்பானம் அருந்திக்கொண்டிருந்தபோதுதான் அந்தப் பேச்சு என் காதில் விழுந்தது.

காட்சி எனக்கு மறக்கவே இல்லை. நீல டிஸ்டெம்பர் பூசிய உயர் சுவர்களுள்ள அறை, ஓரங்கள் தோறும் வட்ட மேஜைகள், பிறை வடிவில் சுற்றிய கூடை நாற்காலிகள். ஒரு பக்கச் சுவரில் ஐதிகப் பாணியில் வரையப்பட்ட தியாகராஜ சுவாமிகளின் கோட்டுச் சித்திரம் ; எதிர்ப்புறம், இரண்டும் கலை என்பதால் மட்டுமே ஜோடி சேரத்தக்க, நவீன பாணி உருக்குலைவு ஓவியம். சீலையற்ற 'கிரில்' அமைப்பு. ஜன்னல் வழியே வெளியிலிருந்து தலைகாட்டும் பசு மரங்கள்—அவற்றை அடுத்து டென்னிஸ் கோர்ட். அங்கு இரண்டு பெண்மணிகளின் ஒற்றைப்படை ஆட்டம். அறையைச் சார்ந்த சிறு இடைவெளியில் மறுகோடியிலிருந்து தெரியும் வாசகசாலை. அங்கு ஒரு மேஜையருகில் யாரோ ஒருவர் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்த பத்திரிகையின் மேல் 'இல்லஸ்டிரேடட் விக்லி' என்ற எழுத்துக்கள் தெரிந்தன. எங்கள் மேஜையிடை பிச்சுமணி, அருணுசலம், நான். சுழல் விளக்கின் வெம்மையொளி அருணுசலத்தின் வழுக்கையான உச்சி மண்டையில் ஒரு பொட்டாகப் பளபளத்துக்கொண்டிருந்தது. மேலே சுழன்றுகொண்டிருந்த மின் விசிறியின் இயக்கத்தில் இலேசான கிரீச்சொலி, மேஜை மீது நீல நிறத்தில் கைத்தறி விரிப்பு. அதன் ஒரு மூலையில் எப்போதோ காப்பி கொட்டிப்போன அடர்ந்த சிறு கறையின் அடையாளம். மற்ற இருவரும் குளிர் பானத்தை உறிஞ்சிக்கொண்டிருக்க, நான் இன்னும் 'ஸ்ட்ரா'விஞல் ஐஸ் கட்டியைப்

பானத்தில் கலக்கிக் கொண்டிருந்தேன். பிறகு, கலக்கலை நிறுத்திய பின்னும் முந்தைய சுழற்சியின் தொடராக ஐஸோடு கூட இன்னமும் வளையமிட்டுக்கொண் டிருந்த பானத்துள் குழாயை இங்கு ஒரு வாய் உறிஞ்சினேன்.

என் வரையில், சிரிப்பும் உல்லாசமுமாய் இயங்கிய காலத்தில் கடைசி நிமிஷம் அது தான். அடுத்த விநாடி பேச்சு என் காது களில் விழுந்தது.

''உங்களுக்குத் தெரியுமா ஸார்? அந்த பாங்குப் பையன் குமரேசன் இருக்கானே, அவன் நடத்தை நாளுக்கு நாள் மோசமாகி, இப்போதெல்லாம் பிள்ளையாண்டான் வீட் டுக்கே வரதில்லையாம். கிளி மாதிரி பெண்டாட்டி, சிறு பெண், வீட்டில் அழுது கொண்டிருக்கு'' என்றார் பிச்சுமணி.

என் கையசைவு நின்றுபோயிற்று. சட் டென்று அவரை ஏறிட்டு நோக்கினேன். இந்த இருவரையும் கிளப்பில் சந்தித்து டென்னிஸ் என்றும் ரம்மி என்றும் கடந்து போகும் பொழுதுபோக்குகளிடையே பெயர் பரிச்சயம் செய்துகொண்டிருந்தேனே தவிர நெருங்கிய பழக்கம் கிடையாது. ஆகவே எனக்கு இவ்விஷயத்தில் இருக்கக் கூடிய அக்கறை அவர்களுக்குத் தெரிந்திருக்க வில்லை.

நான் ஏறிட்டுப் பார்த்ததில் என்னையும் தங்கள் உரையாடலில் சேர்த்துக்கொள்ளும் விதமாக அவர் என்னை நோக்கி, ''உலகம் போகிற போக்கைப் பார்த்தால் ஒண்ணுமே பிடிக்கல்லே மிஸ்டர் ராமலிங்கம்'' என்றார்.

''அவன் இப்படி தறிகெட்டு அலைவது தான் ரொம்ப நாளாய் நடக்குதே! இதில் அதிசயம் என்ன?'' என்று சூள்கொட்டி னார் அருணசலம்.

''அப்படி இல்லை. பெண்டாட்டின்னு ஒருத்தி இருக்கும்போது கொஞ்சம் ஒழுங்கா யிருக்கலாமில்லையா? அப்படி இவனும் இருப்பான்னுதான் நினைச்சேன். ரொம்பவும் இஷ்டப்பட்டு அந்தப் பெண்ணைச் செய்துண் டான்னு கேள்வி.''

''என்ன அநியாயம்!''

''இதுக்கு அவன் கல்யாணமே செய்துண் டிருக்க வேண்டாமே! அப்படி இருந் திருந்தா ஏதோ கெட்டுத் தொலையட்டும்னு கூடக் கைகழுவி விட்டுடலாம்.''

''அது சரிதான், இப்போ இன்னொரு வாழ்க்கையையும் இல்லே பாழாக்கறான்.''

''அந்தக் கண்ணருவிதான் சகிக்கல்லே மிஸ்டர் அருணசலம். எவளெவள் பின்னு லேயோ ஓடிண்டிருக்கானும் காலிப்பய.''

''ஆள் பார்க்க அழகனாச்சே! எல்லாரை யும் மயக்கறானுக்கும். தாயார் தகப்பனார் கண்டிக்கறதில்லையா?''

''கண்டிக்காமல்? அந்தப் பேச்செல்லாம் எடுபடுமா இப்படிப்பட்ட ஆசாமிகளிடம்? புத்தி சொல்லிக் கேட்கிறவனாய் இருந்தா முதலில் ஏன் கெட்டுப் போறான்? பெரியவர் போலீஸ் ஆபீசரா யிருந்து ஊரிலிருக்கற வாளையெல்லாம் அடக்கி யாண்டாராம். பெற்ற தறுதலையிடம் ஒண்ணும் நடக் கல்லே.''

என் கை சில்லிட்டுக்கொண்டே வந்தது. ஐஸ் பானத்தைப் பற்றியிருப்பதாலா? அதை மேஜைமேல் வைத்தேன். இருந்த தாக உணர்ச்சி பறந்தே விட்டது. தாகம் மட்டு மென்ன, எல்லா உணர்ச்சியும்தான்.

குமரேசன், அழகன். மணமான வாலிபன். பாங்க்வேலை. அப்பா போலீஸ் அதிகாரி...

அதனால் என்ன? அதே வர்ணனை களுடன் வேறொருவன் இருக்கமுடியாதா? ஐயோ கடவுளே, அப்படியே இருக்கவேண் டும், வேறொருவனாய் இருக்கட்டும்...

''மாமனார்க்காரர் ஏதும் செய்யமுடி யலையா?''

''பாவம் அவரென்ன செய்வார்? ரொம்ப சாது, நல்லவர். தர்மலிங்கம் என்கிற பெயருக்கு ஏத்தபடி தர்மத்தில் நிற்கிறவர் தான். அப்பேர்ப்பட்டவருக்கா இப்படி ஓர் அடியை ஆண்டவன் தரணும்?''

என் வாய் உலர்ந்தது. உடலில் திடீரென்று எல்லா இயக்கமும் நின்றுபோய் விட்டதுபோல் இருந்தது. நெஞ்சம் துடிதுடித்து எழுந்ததெல்லாம் கூட உள்ளேயே அமுந்தி இன்னும் வெளியில் தெறித்து விழாத தாபமாகத்தான் இருந்தது. அதிர்ச்சி மிகுதியின் மரத்த பிரமிப்பில் உமிழ் நீரை விழுங்கிக் கொண்டேன். தர்மலிங்கம், அந்த வாலிபனின் மாமனார் தர்மலிங்கம். இனியும் என்ன சந்தேகம்?

''ஸார், அந்தத் தர்மலிங்கம்...'' என் வாயிலிருந்துதான் ஒலி வந்தது.

''அவர்தான், பிரபல எஞ்சினீர்'' தர்மலிங்கத்தின் முதலெழுத்துகளையும் அவர் பணியாற்றிய நிறுவனத்தையும் தெளிவாகக் கூறினார் பிச்சுமணி.

தலைமுதல் பாதம் ஈறாக ஒரு கணத்தில் நனைத்துவிட்ட வேர்வையில் என் வெள்ளை நிஜாருக்குள்ளும் கால்கள் சிலிர்த்து நடுங்கின. முதுகில் பட்டையாய்த் துணி உடலோடு ஒட்டிக்கொண்ட சில்லிப்புத் தெரிந்தது.

குமரேசனா—அந்தக் குமரேசனா—ஒழுக்கமற்று அலைந்துகொண்டிருக்கிறான்? இது நிஜந்தானா? கனவில்லையா? என் மூச்சு வேகப்படலாயிற்று. கண்கள் விரிந்து வெளியில் நரம்போரங்கள் அழுத்தம் கொண்டு வலித்தன! நெஞ்சில் என்னமோ புகை புகையாகச் சுருண்டு வந்து அடைத்தது.

''ஆனாலும் அடாத செயல். தெய்வந்தான் இவர்களை யெல்லாம் கேக்கணும். மனைவி இருக்கறப்போ இப்படி ஒரு ஆட்டமா! அட பாவி!''

''அந்தப் பெண், தர்மலிங்கத்துக்கு ஒரே குழந்தை ஸார்! ரொம்பவும் செல்லமாய் வளர்ந்த குழந்தையாம். பார்க்க எத்தனை லட்சணமாயிருப்பா தெரியுமா? அவள் பேர் கூட என்னவோ சொன்னார்கள், நினைவில்லே.''

புவனா, அவள் பெயர் புவனா. எனக்குத் தெரியும், அந்தச் செல்லக் குழந்தையின் பெயர்-புவனா...

திடீரென்று என் மனம் வேதனைப் பெருக்கெடுத்து மௌனமாக அலறியது

''ஐயோ புவனா, உனக்கு எத்தகைய துரோகம் செய்துவிட்டேனம்மா குழந்தாய்!

''என்ன மிஸ்டர் ராமலிங்கம், 'கூல் டிரிங்க்'கை அப்படியே வச்சிட்டீங்களே!'' என்றார் அருணாசலம்.

உட்கார்ந்திருந்த நாற்காலியின் இரு பிடிகளையும் கெட்டியாய்ப் பற்றினேன். உணர்ச்சி உள்ளே பொங்கிக் குமுற நான் அசைவிழந்து உட்கார்ந்திருந்த வேளையில், மற்றவர்களின் கேள்வி கூடச் சரியாய் உணர்வில் பதிய வில்லை. வாயெல்லாம் உலர்ந்த போதும் அந்தப் பானத்தை எடுத்துப் பருக வேண்டும் என்ற நினைப்பில்லை. வெறிக்க அதைப் பார்த்துக் கொண்டிருந்தேனே தவிர, உள்ளம் வேறு நினைவுகளில், வேதனையின் சுழிப்பில், சிக்கித் துடித்துக் கொண்டிருந்தது.

மேஜை விரிப்பின் நீல நிறத்தின்மேல் அந்த அடர்ந்த காப்பிக் கறை; மின் விசிறியின் கிரீச்சொலி; குழல் விளக்கின் கண் கூசும் ஒளிக்கொடுமை, புலன்கள்மீது இயந்திரத் தன்மையுடன் படியும் பதிவுகள்.

புவனா......அவள் வாழ்வு சிதைந்து விட்டது!

இன்பமே வடிவாக ஓடியாடிக் குதித்து மகிழ்ந்திருந்த அந்த அருமைச் செல்வி இன்று பெண்மையின் ஏக்கத் துடிப்பில் துயரம் தாளாது நொந்து நலிந்துகொண்டிருக்கிறாளா! 'கிளி மாதிரி பெண்டாட்டி வீட்டில் அழுது....' புவனா அழுகிறாள். மைதீட்டிய ஒளி விழிகளிலே கண்ணீர். இருபத்திரண்டு

வயது இன்னும் முடிவுருத பொற்சிலைக்கு, அதனினும் உயரிய பொன்ஞன உள்ளத்துக்கு. இந்தச் சீரழிவு புவனு என்றுமே அன்பும் மென்மையும் கொண்ட பூவியல் குழந்தை. அதிர்ந்து பேச அறியமாட்டாள். வெறுப்போ கடுமையோ சிறுமையோ அவள் இயல்பில் கிடையாது. அன்பு செய்ய மட்டுமே சற்ற அப்பாவி. பாலில் சர்க்கரை போல் அன்பில் தன்னை அழித்துக்கொண்டு இனிக்கும் இயல்பினள். மற்றவர் 'இதோ ஒரு பொக்கிஷம்' என்று உணர்ந்து போற்றத் தவறி விட்டால் தன்னைப் பொக்கிஷமென்று காட்டிக்கொள்ளத் தெரியாத முத்துச் சிப்பி. அத்தகையவள் இவ்வாறு புறக்கணிக்கப்பட்டுப் புழுதியில் சேர்வது தகுமோ? புவனுவின் வாழ்வு,இப்படி அவலம் உறலாமோ ? அவள் விழிநீர் பெருக்கி அழலாமோ? அருமை உணராதவன் கையில் இதழ் பிய்ந்த நறுமலராய் அவள் அழிவுறலாமோ ? அந்தக் குழந்தையின் கண்ணீர் வழியும் முகத்தை எண்ணிப் பார்த்தாலும் மனம் துன்பம் தாங்காமல் புரள்கிறதே ?

''என்ன ஸார் முகமெல்லாம் வெளுத்துப் போயிட்டுது ?

''மயக்கம் வரும் போலிருக்கா ?''

இருவரும் அக்கறையுடன் என் பக்கம் முகம் நீட்டினுர்கள்.

''மயக்கமில்லை, சும்மா......'' என் வாய்ச் சொற்களில் தெளிவில்லை. உணர்வெல்லாம் புவனு நிறைந்த பின் வேறெதற்கும் இடமில்லை.

''மயக்கம்தான் ஸார். வெயில் இப்படி அப்படியா கொளுத்துகிறது ?''

''உடம்பெல்லாம் வேர்த்துக் கொட்டியிருக்குதே பாவம்.''

''அந்தக் 'கூல்டிரிங்'கைக் குடியுங்க ஸார், கொஞ்சம் இதமாயிருக்கும்.''

என் கையில் யாரோ எதையோ கொடுத்தார்கள். அதைச் சுற்றி என் விரல்கள் வளைந்தன. வாய்க்குக் கொண்டு சென்றன. எதையோ என் வாய் விழுங்கியது எனக்கு எதுவுமே தெரியாது.

'குமரேசன் ஒழுக்கங்கெட்டவன். எவளெவளையோ பின்பற்றி ஓடுகிருன்.'எனக்குத் தெரிந்ததெல்லாம், நான் உணர்ந்ததெல்லாம் அவ்வளவுதான். அந்தக் குமரேசனை மணந்து துன்புறுகிருள் புவனு. என் இதயம் பதறிப் பதறி அதிர்ந்து கொண்டிருந்தது. நெஞ்சைச் சுற்றி இருள் கப்பிக்கொண்டு உள்ளெங்கும் கனத்து நொந்தது. தலையைப் பிய்த்துக்கொண்டு சுவரில் மோதிக் கொள்ள வேண்டும்போல் என்னுள்ளம் துடித்தது. உயிரை இரண்டாகப் பிளந்து எறிந்து விட வேண்டும்போல் தாபம் கனன்றது.

இதை... ..இந்த அவலத்தை... ...இந்த வாழ்வுச் சிதைவை. ...

ஐயோ ஆண்டவனே, நான் தடுத்திருந்திருக்கலாம் !

ஏன் செய்யவில்லை? நான் ஏன் அதைச் செய்யவில்லை ?

நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு எழுந்தேன்.

''இன்னும் கொஞ்சம் இளைப்பாறிட்டுப் போங்களேன் மிஸ்டர் ராமலிங்கம் ?''

''ஆமாம். இன்னுங்கூட உங்க உடல் தள்ளாடறது.''

''பரவாயில்லை. ஒண்ணும் பயமில்லை ரொம்ப தாங்ஸ். வரட்டுமா ?''

கிளப்பிலிருந்து கிளம்பி வீடு நோக்கி நடக்கலானேன். இரவின் இருளும் விளக்குகளின் ஒளியும் ஒன்ருேடொன்று போட்டியிட்டன. என் நெஞ்சில் பாரம் ஏறிக் கொண்டே இருந்தது. சிறிது நேரத்துக்குப் பின் அந்தக் கனத்தில் என் கால்கள் தொய்ந்து போகவும் வீதியில் விளக்குக் கம்பத்தின்மீது சாய்ந்துகொண்டேன். மிகுந்த ஆயாசமளிக்கும் உடற்பயிற்சி செய்துவிட்டு வந்ததுபோல் மூச்சு இறைத்தது.

''அண்ணு, இந்தச் சம்பந்தம் வேண்டாம். பையனின் நடத்தை சரியில்லையாம். நம் புவனுவுக்கு வேறு இடம் பாருங்க.''

இப்படி நான் கூறியிருந்திருக்கலாமோ? தகுந்த சமயத்தில் எச்சரிக்கை விடுத்திருந்திருக்கலாமோ? அப்போது என் அண்ணு தம் செல்வ மகளை இந்தக் கயவனுக்கு மணமுடிக்காமல் வேறு வரன் பார்த்திருப்பாரோ ?

நான் ஏன் எச்சரிக்காமல் போய்விட்டேன்?

திருமணத்துக்கு இரண்டு நாள் முன்பு—இரண்டே இரண்டு நாள் முன்பாகத்தான்—குமரேசனின் நடத்தையைப் பற்றி என்னிடம் ஒருவர் தூற்றிப் பேசக் கேட்டேன். அப்போது எனக்கு ஏற்பட்ட திகைப்பையும் குழப்பத்தையும் வேதனையையும் என்னவென்று விவரிப்பது !

இரண்டே நாள் முன்பாகத் திருமணத்தை நிறுத்துவதென்ருல் அதற்கு மிக அழுத்தமான காரணம் வேண்டும். இந்த ஏச்சு வெறும் வதந்தியின் விளைவாக இருந்தால் ? குமரேசனை நான் அதற்குமுன் பார்த்துப் ப்ழக நேர்ந்த சில சந்தர்ப்பங்களில் அவன் மிகக் கண்ணியமாகவும் அடக்கமாகவுமே காணப்பட்டான். பெண்களின் பக்கம் அவன் தலையுயர்த்தி நான் கண்டதில்லை. அவனுடையது நல்ல குடும்பம்; கௌரவமான குலம். பையனைப் பற்றிய அவதூறை நம்ப எனக்குக் காரணமேதும் கிடைக்கவில்லை.

மேலும் பையனின் தகப்பனுருக்குப் பூர்விகச் சொத்து ஏராளமாய் இருந்தது. பெற்ருேரின் ஒரே குழந்தையான குமரேசன்தான் அத்தனைக்கும் வாரிசு. இவ்வளவு செல்வச் செழிப்புள்ள இடத்தில் என்னுடைய அண்ணு சம்பந்தம் செய்கிருரே எனறு பலர் வயிறெரிந்ததை நான் அறிவேன். வரனைத் தூற்றியவரும் அண்ணுவோடு இரண்டொரு சமயம் மனவேற்றுமை கொண்டிருந்தவர்தாம். அவர் பேச்சை நான் எவ்வாறு நம்பித் திருமணத்தை நிறுத்த முயல முடியும்? அப்படி நான் ஏதாவது முயன்றிருந்தால் அண்ணு என்மீதே திரும்பிவிடுவார் என்ற அச்சமும் எனக்கு இருந்தது. தர்மலிங்கத்தைவிட அந்தஸ்தில் மிகத் தாழ்ந்தவன் இந்த ராமலிங்கம் நான் தம்மீது பொருமை கொண்டிருப்பதாகச் சில ஆண்டுகளாகவே அண்ணு தவருன கருத்துடையவராய் என்னேடு தொடர்பை வெகுவாகக் குறைத்து விட்டிருந்தார். ஊரின் இரு முனைகளில் இருந்த நாங்கள் சந்தித்துக் கொள்வதே ஆபூர்வம். ஆகவே நான் ஏதாவது சொல்லியிருந்தால், நான் ஆற்ருமை கொண்டு திருமணத்தை நிறுத்த முயல்வதாகவே அண்ணு நினைத்திருப்பார். ஆயினும் புவனுவைக் குழந்தையாய்த் தோள்மேல் போட்டு விளையாட்டுக் காட்டி வளர்த்த பாசம் என்னை அலைத்தது. இந்த அவதூறில் ஏதேனும் உண்மையம்சம் இருந்து விட்டால் குழந்தையின் வாழ்வு என்ருவது?

என்ன செய்வதென்று தெரியாத நிலையில், மிகவும் தெளிவுள்ளவரும் நான் பெருமதிப்புக் கொண்டிருந்தவருமான ஒரு முதியவரிடம் சென்று விஷயத்தை வேறு யாருடைய பிரச்னையோ போலக் கூறி வழி கேட்டேன். அவரிடம் எனக்கு மிகுந்த பரிச்சயமும் அவர் தீர்மானங்களில் நம்பிக்கையும் உண்டு.

அவர் கூறினுர். ''திருமணம் நடக்கறதுக்கு ரெண்டு நாள் முந்திக் கிளம்பும் பேச்செல்லாம் வெறும் வம்பாய்த்தான் இருக்கும். உண்மையில் அக்கறை உள்ளவராயிருந்தால், அப்படித் தூற்றியவர் இம்மாதிரி சம்பந்தம் பேசப்படுகிறதுன்னு தெரிஞ்சவுடனேயே வந்து இது நல்ல வரனில்லை' அப்படின்னு சொல்லி யிருக்க மாட்டாரா? இப்போ சொல்றது எனக்கு நம்பகமாய்த் தோணலலே. மேலும் இந்த நாளில் பல வாலிபர்களைப்பற்றி இப்படியெல்லாம் சொல்ருங்க

அது பாதி சமயம் பொய். உண்மையாய் இருக்கற சந்தர்ப்பங்களில்கூட, முதலில் சற்று உல்லாச புருஷர்களாய் இருக்கறவங்க கல்யாணத்துக்குப் பின் அனேகமாய்த் திருந்தித்தான் போயிடறுங்க. ஆகவே இம்மாதிரி கடைசி சமயத்தில் புரளி செய்யறதெல்லாம் கல்யாணத்தைக் கலைக்கறதுக்குச் செய்யும் முயற்சியின்னே எனக்குத் தோணுது. இதை வெளியில் சொல்லிப் பெண் வீட்டுக்காரர்களை ஏன் வீணுய்க் குழப்பிக் கலவரப்படுத்தணும்? உன் நண்பனின் இடத்தில் நான் இருந்தால் இதைப் பத்திக் கவலையே படமாட்டேன். விஷயத்தை மறந்துட்டு நிம்மதியாய்க் கல்யாண விருந்தைச் சாப்பிடப் போயிடுவேன்.''

நானும் அவ்வாறே செய்தேன்.

அதன்பிறகு—ஓராண்டுக்குப் பிறகு—இந்தப் பேரிடி!

நான் அன்று அண்ணுவிடம் எச்சரிக்கை செய்யாது போய்விட்டேனே! காதில் விழுந்த விஷயத்தை அவரிடம் சொல்லி விட்டு முடிவான தீர்மானத்தை அவரே செய்துகொள்ளட்டும் என்று அன்று நான் யோசித்திருந்தால்? நான் ஏன் தீர்மானத்தின் பொறுப்பை என்மீது ஏற்றுக் கொண்டேன்? இப்போது வதந்தி உண்மை என்று ஆகிவிட்டதே! அன்றைக்கு நான் குறுக்கிட்டுக் கல்யாணத்தை நிறுத்தி யிருந்தால் இன்று அந்த இளம் பெண்ணின் வாழ்வு இப்படிக் குலைந்து போயிருக்காதே! வேறு நல்ல பையனுக்கு வாழ்க்கைப்பட்டு அவள் வாழ்வு இன்பகரமாய் இருந்திருக்குமே! அம்மா புவன, உன் வாழ்வைச் சிற்றப்பனுன நானே சிதைத்து விட்டேனம்மா! உன் அழுகைக்கு நான்தான் காரணமடி குழந்தை! உன் துன்பத்துக்குப் பொறுப்பாளி இந்தப் பாவிதான்!

ஐயோ, எனக்கு மன்னிப்பு உண்டா? குற்றச் சுமை அழுத்தும் என் மனச்சாட்சிக்கு இனி நிம்மதி ஏது?

உயிரை வேரோடு பற்றி இழுத்துக் குலுக்குவது போல் துன்பம் என்னுள் சூருவளி ஆடியது விளக்குக் கம்பத்தின் மீதே வெறியன்போல் என்னையே நொந்து கொண்ட ஆத்திர வேதனையில் 'பாவி பாவி' என்றவாறு தலையை மோதிக்கொண்டேன். இரும்புத் துண்டுகளாகி விட்ட பாதங்களை இழுத்துக் கொண்டு வீடுவந்து சேர்ந்ததும் படுக்கையில் முகம் கவிழ்த்துக் கதறி அழுதேன். தொடர்ந்த நாட்கள், அதே இருட் கோலத்தினூடே ஊர்ந்தன. வேலை, பொழுதுபோக்கு, உடலியக்கம் எதிலும் ஓர் இயந்திரம் அசைந்ததே தவிர மனத்தின் பதிவு அதில் இல்லை. நாட்களின் நியமம் சுமையாய் வருத்தியது. குழந்தை எப்படி இருக்கிருளோ, அவளைப் போய்ப் பார்த்து வரவேண்டும் என்ற துடிப்பெல்லாம், அத்துயரில் என் பொறுப்பின் வடிவத்தைக் காணக் கூசிய குற்ற உணர்வின்முன் செயலிழந்துபோயின. அன்ருடம் அந்த நினைவின் தாபம்; அதன் வேதனையிடை மாதத்தின் ஓட்டம். பிறகு இனியும் பொறுக்க இயலாமை. அவளைப் பார்க்க மனம் தாங்காதெனினும் அவளைப் பற்றிய பேச்சையேனும் கேட்க அவாவுறும் பரிவின் துன்பமயத் தூண்டுதலோடு கனவில் இயங்குவதையொத்த மருட்சியின் நிழலிலே அண்ணுவின் வீடு நோக்கி நடந்தேன்.

அண்ணு வாடி உருக்குலைந்து சோக பிம்பமாய் வாசல் வராந்தாவில் உலாவிக் கொண்டிருந்தார். ஏற்கெனவே என்னிடம் அதிகப் பற்று இல்லாத அவருக்கு மன வருத்த நிலையில் என்னைப் பார்த்துப் பேசவும் விருப்பமில்லை போலும். நான் அருகில் நெருங்கியபோதே உள்ளே சென்று விட்டார்.

செயலற்று நின்றேன். திரும்பிப் போகவும் மனம் வரவில்லை. மெள்ள ஹாலில் நுழைந்து ஓரமாய் ஒதுங்கி என்னை யாராவது கவனிப்பதற்காகக் காத்து நின்றேன்.

காலம் நெஞ்சோடு இறுகிக் கனத்துத் தொங்கிய கணக்கற்ற யுகங்களுக்குப் பின், அண்ணி தற்செயலாய் ஹாலுக்கு வந்தார்கள். என்னைக் கண்டதும் அவர்கள் முகம் சிணுங்கியது. அந்தத்தாயின் முகத்தில் கவிந்திருந்த துயரத்தை என்னவென்று சொல்வேன்! அதன் காரணமாய் அவர்களின் அலட்சியத்தைப் பொறுத்துக் கொள்ள நான் தயாராயிருந்தேன்.

''அண்ணி......'' என் தொண்டையில் தான் என்ன வரட்சி! ''புவனாவின் புருஷனைப் பத்தி......ரொம்ப வருத்தமாயிருக்குது...''

''ஏன் தம்பி என்னமோ துக்கம் விசாரிக்க வருப்பலே வறீங்க? அந்தப் பையன் உயிரோடுதானே இருக்கான்! நாளைக்கே குணம் திருந்தி அவளண்டை வரான். இதுக்கு ஏன் மூஞ்சியை இப்படித் தூக்கி வச்சிக்கணுமாம்? பொறுக்காதவங்க கண்பட்டுத்தானே இப்படி ஆயிடிச்சு!'' என்று என் முகத்தில் அடித்தாற்போல் பதில் வந்தது.

நான் தலை குனிந்து நின்றிருந்தேன். அந்த அடியைப் பெறத் தகுந்தவன்தான் நான் என்பதை அண்ணிக்கு எப்படிச் சொல்வேன்! மனம் வெடித்த வேதனைப் புயலிலே அண்ணியின் கால்களில் விழுந்து ''என்னை மன்னிச்சிடுங்க, உங்க மகள் வாழ்வுக்கு நஞ்சாய் இருந்தது நான்தான்'' என்று கதற வேண்டும் போல் இருந்தது.

என் முகத்துக் கருமையைக் கண்டுதான் மனம் தளர்ந்தார்களோ? கடுமையாய்ப் பேசிவிட்டோமே என்ற கழிவிரக்கமோ? தன் துன்பத்தின் மிகையால் பீறி வந்த நெகிழ்ச்சியோ? மறுகணம் அண்ணி மனமுடைந்து குலுங்கக் குலுங்க அழுதவாறே சொற்களை உதிர்த்தார்கள்.

''என்னன்னு சொல்வேன் தம்பி...கல்யாணத்துக்கு முந்தியே அந்தப் பையனைப் பத்திப் பலபேர் சொன்னாங்க...இப்படிப் பட்ட ஒழுக்கங்கெட்ட பையன் உனக்கு வேண்டாம்டி மகளே அப்படின்னு உங்க அண்ணாவும் நானும் அடிச்சிக்கிட்டோம்... பாவி கேட்டாளா?... அவனைக் கட்டலேன்னா உயிரை விட்டுடுவேன்னு குதிச்சாள்...என் அன்பாலே திருத்திடறேன் பாருன்னு சவால் விட்டாள்...அப்படி என்னதான் ஒரு பிடிப்போ அந்தக் காவாலியண்டை... என்ன சொக்குப்பொடி போட்டு அப்படி என் மகளை ஒரு பார்வையில் மயக்கிட்டானோ!... அவள் அத்தனை பிடிவாதம் பிடிக்கறப்போ நாங்க என்ன செய்யறது? கல்யாணத்தை நிச்சயம் செஞ்சோம்...இப்போ? பயந்த படியே ஆச்சு...மோசம் போயிட்டேனேன்னு கதறிக்கதறி அழுகிறது பைத்தியக்காரப் பொண்ணு... பார்த்துத் துடிச்சுகிட்டு இதோ, பெத்தபாவி இன்னும் உசிரோட நிக்கறேன்...''

என் உடலெங்கும் ஒரு படபடப்பு. அன்று கிளப்பில் ஆகியதுபோல் இப்போதும் வேர்வை வெள்ள மிட்டது. அண்ணியின் சொற்கள் புரியப் புரிய என் கண்கள் அகன்று வெறித்தன.

முன்பே அவர்களுக்கெல்லாம் தெரிந்திருந்த விஷயந்தான்! நான் சொல்லாததினால் எவ்வித வித்தியாசமும் நேரவில்லை! புவனாவின் துன்பத்துக்குப் பொறுப்புச் சுமந்த பாரம் என்மீதிருந்து நீங்கிவிட்டது!

சிறிது நேரம் அந்த நினைவின் ஆறுதலைச் சுவைத்தவாறு நின்றிருந்தேன். அப்பாடா, தீங்கு என்னால் விளையவில்லை. உடலில் வந்து தாக்கிய திடீர் தளர்ச்சியில், கண்களில் பொங்கிவிட்ட ஈரத்திரையில், இலேசானதொரு விடுதலை உணர்வு பாய்ந்து சூழ்ந்தது. இதயத்தின் இறுக்கம் சட்டென்று நெகிழ்ந்து மூச்சு முட்டுவதுபோல் இருந்தது. எண்ணமற்ற வெளியில் கனமற்றுச் சிலிர்த்துக்கொண்டு நின்றேன்.

அந்த உணர்ச்சியை ஒரு நிமிஷம் முழுவதும் அனுபவித்துத் திளைத்தபிறகுதான் என்


உடல் திடுக்கிட்டுச் சிலிர்த்தது. ஒரு கரிய மூட்டம் மீண்டும் வந்து முன்பைவிடப் பயங்கரமாய் நெஞ்சைக் கௌவலாயிற்று.

ஆறுதலுணர்வா! என் உள்ளத்திலா! என்ன அநியாயம்! அப்படியானால் நான் அனுபவித்திருந்த அபரிமித துன்பமெல்லாம் புவனாவின் துயரத்துக்காக அல்லவா? அதில் எனக்குப் பொறுப்பு இருந்ததாய் நான் எண்ணியிருந்ததால் தானா? என் குற்ற உணர்ச் சிக்காகத்தானா? இப்போது என் பொறுப்பு நீங்கிய தென்பதால் இந்த நிம்மதியா? நிம்மதி! இன்னொரு வாழ்வின் சிதைவுக்கு முன்னாலேயே எனக்கு நிம்மதி! நான் அடைந்த வேதனையெல்லாம் என் பொருட் டாகத்தான், பிறர் துன்பத்துக்காக அல்ல. அதுதானா அர்த்தம்? புவனாவின் கண்ணீர் முகத்தை மீறி, என்னுள் இந்த விடுதலை யுணர்வு தோன்றுவதானால் நான் எத்தகைய ஈனன்! மனித அனுதாபத்தின் அடிப்படை இவ்வளவு கீழ்மையானதா? சுயநலமானதா? மானிட நோக்கங்களின் அடியிற் கிளறினால் இவ்வளவு குப்பையா?

என்னிடத்தில் எனக்கு அக்கணம் எத் தகைய வெறுப்புத் தோன்றியது! 'அடே ராமலிங்கம், நீ இத்தனை கேவலமானவனா! உன்னோடு எப்படியடா இனி வாழ்வேன்?' என்று இவன் வீழ்ச்சியை எண்ணி மனம் குமுறி நான் உடைந்துபோய்க் கண்ணீர் பொருக்கியபோது, தன் சோகத்தில்தான் நான் இரக்கத்துடன் தோழமை கொள்வதாக நினைத்து மனம் கசிந்த என் அண்ணி, தன் கண்களைத் துடைத்துக் கொள்ள ஆரம்பித் தார்கள். ○

படைப்பில் அளந்து காணமுடியாத அருமையுடையது இமயம் போன்ற மலை களும் அல்ல; நயாகரா போன்ற அருவிகளும் அல்ல; மனிதனின் மனமே அளத்தற் கரிய விந்தை உடையது. உலகம் படைப்பின் அருஞ்சிறப்போடு ஒப்பிடக் கூடியது உள்ளம் படைக்கும் கலைக் கற்பனையே யாகும். அது பற்றியே இலக்கியத்தை நான்முகன் படைப்போடு ஒப்பிட்டுச் சீர்தூக்க முனைந்தார் புலவர் ஒருவர். மற்றக்கலைகள் உணர்வின்பத்தை மட்டும் வழங்கும், இலக்கியக் கலையோ அதனைக்குறைவின்றி வழங் குவதோடு கருத்துச் செல்வத்தையும் காத்துவைத்து உதவுகின்றது. நமக்கு முன் வாழ்ந்தோர் எல்லோருடைய வாழ்க்கை அனுபவத்தையும் சேரக்காத்து, அவர் கற்ற வை பெற்றவை அனைத்தையும் நாமும் கற்றும் பெற்றும் மேன்மேலும் வளர்ந்திடுமாறு செய்வது இலக்கியக் கலையாகும்.

—'இலக்கியக்கலை' நூலின் முகவுரையில்
டாக்டர். மு. வ.



'தெளிவு, மிகத் தெளிவு, மிகமிகத் தெளிவு' என்று 'எழுத்து'க்கு இலக்கணம் வகுத்துள்ளார் ஓர் ஆங்கில ஆசிரியர். திரு. தி.ஜ.ர. அவர்களின் நடை அதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். வார்த்தைகளின் மீது மின்னலைப் போல ஒளிவிசி அவற்றை 'டால்' அடிக்க வைக்கும் அடைமொழிகளைப் பொருத்தமாக உபயோகிக்கும் அதே சமயத்தில், இயற்கையா யமைந்து விட்ட சுலபமான நடை அவருடைய எழுத்தின் 'முத்திரை'.

திரு. தி.ஜ.ர. வின் முழுப் பெயர் தி. ஜ. ரங்கநாதன் என்பதாகும். எண்ணமும் செயலும் நாவுக்கரசுக்கே என அர்ப்பணித்த அப்பூதி அடிகள் வாழ்ந்த 'திங்களூர்' இவரது பூர்விகம். 1901ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பிறந்தார். எழுத்துத் துறையில் 1923ஆம் ஆண்டில் புகுந்த இவர், தஞ்சையிலிருந்து வெளி வந்து கொண்டிருந்த 'சமரச போதினி'யில் சில காலமும், பின்னர் காரைக்குடியில் அறிஞர் ராய.சொ. நடத்திய 'ஊழியன்' பத்திரிகையில் சில ஆண்டுகளும், உதவி ஆசிரியராகவும் மற்றும் சுதந்தரச் சங்கு, ஹநுமான், சக்தி, பாப்பா, ஹிந்துஸ்தான், நவமணி பத்திரிகைகளில் ஆசிரியராகவும் இருந்தார். இப்போது தமிழில் உள்ள ஒரே ஒரு திரட்டு' சஞ்சிகையான 'மஞ்சரி'யின் பொறுப்பாசிரியராக இருந்து அதை நிர்வகித்து வருகிறார்.

தாய் நாட்டின் விடுதலைக்காக நடந்த சத்யாக்ரக இயக்கத்திலும் பங்கு கொண்டு ஓராண்டு காலம் சிறை வாசம் அனுபவித்தவர் தி. ஜ. ர. இது காந்தி—இர்வின் ஒப்பந்தம் முறிந்ததை யடுத்து நடந்தது.

இவருடைய கட்டுரைகளும் கதைகளும். 200க்கு மேற்பட்டவை பல பத்திரிகைகளிலும் வெளியாகியுள்ளன. நூல் வடிவில்—சிறுகதைத் தொகுதிகள்–5, மொழிபெயர்ப்புகள்–6, கட்டுரைத் தொகுதிகள்–8, வாழ்க்கை வரலாறுகள்–6, சிறுவர் இலக்கிய நூல்கள்–3. ஆகியவை வெளியாகியுள்ளன. 'நொண்டிக் கிளி' என்ற சிறுகதைத் தொகுப்பு தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசையும், 'வண்ணாத்திப் பூச்சி', 'பாப்பாவுக்கு பாரதி' என்ற குழந்தைகளுக்கான 2 நூல்கள் தமிழக அரசினரின் பரிசையும் பெற்றிருக்கின்றன.

இவர் நம் சங்கத்தின் முதல் தலைவர்.

தமிழில் விஞ்ஞானம்

திரு தி. ஜ ர.

'தமிழில் முடியுமா ?' என்று ஒரு கேள்வி கேட்டு, இதையே ஒரு புத்தகத்தின் தலைப்பாகப் போட்டு, எளிய பௌதிக நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார் ராஜாஜி. இது நடந்தது சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு. நான் அதைச் சற்று நகைச் சுவையோடு விமர்சனம் செய்ய எண்ணி, 'இந்த நூலின் மூலம் ஸயின்ஸைத் தமிழில் எழுத முடியும் என்று ராஜாஜி நிரூபித்து விட்டார் ; ஆனால், படித்துப் புரிந்துகொள்ள முடியும் என்றுதான் நிரூபிக்கவில்லை' என்று ஒரு பத்திரிகையில் குறிப்பிட்டேன். இதனால் அப்போது சில நண்பர்கள் மன வருத்தங்கூட அடைந்தார்கள். அது போகட்டும். ராஜாஜியே அன்று தாம் இந்த விஷயத்தில் கொண்டிருந்த கொள்கைக்கு இன்று விரோதி போல் தோன்றுகிறார். ஆனால், உண்மை இது வல்ல. பல விஷயங்களிலும் ராஜாஜியின் அடிப்படைக் கருத்துக்கள் மாறவில்லை என்றே நான் மதிக்கிறேன். ஒரே மனிதன், ஒரே விஷயத்தின் வெவ்வேறு அம்சத்தை வெவ்வேறு சூழ்நிலையில் அழுத்தமாய்க் கூறநேர்கிறது. இது ஏதோ முன்னுக்குப்பின் மாறுபாடுபோல் தோன்றுகிறது. ஏனென்றால், ஒவ்வொரு விஷயத்திலும் முரண்பாடான பல அம்சங்கள் உண்டு. ஓர் அம்சத்தை விட்டு மற்றோர் அம்சத்தை வலியுறுத்தும் போது, இந்த நிலை ஏற்படுகிறது. ஆனால், ராஜாஜியின் அன்றைய நிலையையும் இன்றைய நிலையையும் ஒப்பிட்டுச் சீர்தூக்கிப் பார்ப்பதற்காக இதை நான் எழுதவில்லை. அன்று ராஜாஜி எழுப்பிய கேள்வியும் அதற்காக ஒரு புத்தகத்தின் மூலம்

அவரே முயன்று தந்த பதிலும் இன்று வரையில் சற்றும் மாருமல் அப்படியே இருந்து வருகின்றன. சொல்லப் போனுல், அன்றைவிட இன்றை நிலைமை மிக மோசம். இதையே குறிப்பிட விரும்புகிறேன்.

'தும்பை விட்டு வாலைப் பிடிப்பது போல' என்று பழமொழி சொல்லுவார்கள். தமிழிலே ஸயின்ஸ் அறிவைப் பரப்பி வளர்க்கும் விஷயத்தில் நாம் 'தும்பை விட்டு' பல்லாண்டுகள் ஆகிவிட்டன. அரசியல், சமூகம், சரித்திரம் இப்படிப் பல துறைகளின் ரீதியாக எத்தனையோ நிர்ப்பந்தங்கள் அதற்குக் காரணமாகும். இப்போது சுதந்தரச் சூழ்நிலையில் 'வாலைப் பிடிக்கிறோம்'. உண்மையில் 'வாலை'க்கூட அல்ல; வாலின் நிழலை. மாடு வெகுதூரம் ஓடிவிட்டது. தலை தெறிக்கும் வேகத்தில் ஓடிக்கொண்டேயிருக்கிறது. நம் சுதந்தர உதய காலக் கதிரொளியில் அந்த வாலின் நிழல் வெகு நீண்டு தெரிகிறது. விஞ்ஞானத் துறையில் மட்டும் அல்ல; வேறு எத்தனையோ துறைகளிலும் இப்படித்தான்.

தாய் மொழியில் ஸயின்ஸ் இலக்கியத்தை வளர்க்கும் விஷயத்தில் 'ஜப்பானைப் பார்', 'ருஷ்யாவைப் பார்' என்றெல்லாம் சொல்லிப் பயனில்லை. நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இருந்த ஸயின்ஸ் வளர்ச்சி நிலை வேறு; இன்றுள்ள வளர்ச்சி நிலை வேறு. அன்றைய ஸயின்ஸ் நிலையை ஒரு மண்மேட்டுக்கு ஒப்பிட்டால், இன்றைய ஸயின்ஸ் நிலையை இமய மலைக்கு ஒப்பிட வேண்டும். தவிர, நாளுக்கு நாள் விஞ்ஞானத்தின் பல துறைகளிலும் புதுப்புது விஷயங்களைக் கண்டுபிடித்து வருகிறார்கள்.

இந்த நிலைமையில் ஸயின்ஸைத் தமிழில் கொண்டுவர முயலும் முறைகளுக்கு, நமக்கு உதாரணமாக ஜப்பான் போன்ற நாடுகளைக் கொள்ள முடியாது. 'சகல ஸயின்ஸ் நூல்களையும் 'கிடுகிடு' என்று தமிழிலே மொழி பெயர்த்து விட்டால் போகிறது" என்று நம்மில் பலர் நினைக்கிறார்கள். இது சாத்தியம் இல்லை என்று அவர்கள் அறிய வில்லை. "கலைச் சொற்கள் இல்லாதது தானே இதற்கு இடைஞ்சல். அடுக்கடுக்காய்க் கலைச் சொற்களைப் படைத்து விட்டால் இது சாத்தியப்பட்டு விடுமே" என்று மற்றும் சிலர் எண்ணுகிறார்கள். இலக்கியத்தாலும் வழக்கினாலும் தான் சொற்களுக்குப் பொருளும் பயனும் ஏற்பட்டு, அவை நிலைப்படும்; அகராதியால் அல்ல. இதை உணரவில்லை இவர்கள். சென்ற முப்பதாண்டுகளில், ஏராளமான பணச் செலவில் மூன்று 'சொல்லாக்கல்'கள் நடந்திருக்கின்றன. இரண்டின் பட்டியல்கள் நிலைக்கவில்லை. இந்த மூன்ருவதன் பட்டியலாவது நிலைக்குமா, அல்லது அவை போன வழியே இதுவும் போய்விடுமா என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம். தவிர, எத்தனை எத்தனையோ பொருளுக்கு இந்த மூன்ருவது பட்டியலிலும் சொல் இல்லை; படைக்க முடியாமல் தான் அவற்றை விட்டிருக்கிறார்கள். ஓர் ஆங்கிலச் சொல்லுக்கு ஒரு தமிழ்ச் சொல் என்று பட்டியல் தயாரித்து அகராதிப் படுத்தி விடுவது ஒன்றன் மூலமே ஸயின்ஸ் இலக்கியம் தமிழில் வந்து பரவி, வளர்ச்சி அடைய முடியாது. இந்தச் 'சொல்லாக்கல்' கலைச் சொற்களையே பள்ளிப்பாடப் புத்தகங்களிலெல்லாம் பயன்படுத்த வேண்டும் என்ற சர்க்காரின் நிர்ப்பந்தத்தாலும் பிரச்னை தீர்ந்து விடாது; புதிய சிக்கல்கள் தான் உண்டாகும்; உண்டாகின்றன. ஆயினும், இந்த முப்பது ஆண்டுகளாகப் பொருளை விட்டுச் சொல்லுக்கு நிழல் குத்தி--கற்பனை எதிரிகளோடுமல்யுத்தம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இதனுல் நாம் தமிழை வளர்க்கவில்லை; அதற்குத் துரோகமே செய்கிறோம்.

விண்ணூர்தி என்கிறார் தனித் தமிழ்ப் புலவர். விமானம் என்கிறான் ஏழு 'காலம்' கொட்டையெழுத்தில் பத்திரிக்கைக்காரன்; 'அதோ ஓர்

ஏரோப்ளேன் போகுது பார்' என்று கூச்சலிடு கிறது குடிசைக் குழந்தை! ஒவ்வொரு குடிசையி லிருந்தும் 'ஏரோப்ளேன்' என்ற சொல்லை விரட்டி, 'ஸைக்கிள்' என்ற சொல்லை விரட்டி, 'ரேடியோ' என்ற சொல்லை விரட்டி முடிந்தாக வேண்டுமா என்ன? அது முடியத்தான் முடியுமா? ஒரு நாட்டிலே புதும் அந்நியப் பொருளோடு அந்நியச் சொல்லும் அந்நாட்டினர் பேசும் மொழி யில் வந்து புகுந்து கொண்டே யிருக்கின்றன. அவற்றை விரட்டி, பதில்வெட்டுச் சொற்களைத் தாமே தயாரித்துக் கொள்வதில் சிலர் முனைந்து கொண்டிருப்பது நல்ல பொழுது போக்குத்தான். சில சமயம் அது திறன் மிக்க அரசியல் சூழ்ச்சி யாகவும் இருக்கலாம். ஆனால், அறிவுத்துறை வளர்ச்சிக்கு அது பயன்தர வேண்டுமே! தருமா? தர என்ன வழி? நாம் அமைதியாய், மனம் பதறு மல், தெளிவாய்ச் சிந்திக்க வேண்டும்.

ஸயின்ஸ் இலக்கியத்தை நான்கு வகை யாகப் பிரிக்கலாம்; (1) சாதாரண மக்கள் படித்; தறிய உதவும் நூல்கள்; (2) பாடப் புத்தகங்கள்; (3) கல்லூரிக்கு அப்பாற்பட்ட தொழில் நுட்பச் சிறப்பறிவுக்கு உதவும் நூல்கள்; (4) அசல் ஆராய்ச்சி நூல்கள். இந்த நான்குக்கும் பொது வாக இன்று வரையில் ஆங்கிலத்தையே சார்ந்தி ருக்கிறோம். (இன்று ஏதோ சற்று அப்படியும் இப்படியுமாய்க் குட்டை குழப்பிக் கொண்டிருக் கிறோமே, அதை மறந்து விடுங்கள்.) உண்மை நிலை இது. ஆங்கிலத்தை உடனடியாய்க் கை விடலாம் என்று எந்த அறிவாளியாவது எண்ணு கிறுனு? எண்ணத்தான் முடியுமா? அப்படி யென் ருல், கலைச் சொல் பட்டியல்களில் ஆங்கிலச் சொல் எதற்கு? அதை ஏன் நம்மால் விட்டொ ழிக்க முடியவில்லை? தமிழ் தனித்தியங்கவல்லது என்று உருமுகிறவர்கள் உருமட்டும்; தனித் தியங்க இந்தத் தமிழ்ச் சொல்லாக்கல் கலைச் சொற்களுக்கு இன்று ஆற்றல் கிடையாது; இவற்றுக்கு ஆங்கிலத்தின் துணை வேண்டி யிருக்கிறது. இவற்றுக்கு விளக்கம் காண, ஆங் கிலத்தையே நாட வேண்டியிருக்கிறது.

இதெல்லாம் போகட்டும். சந்திரனைக் குடி யேற்ற நாடாக்க இப்போதே அங்கே இரண்டு அசுரர்கள் கொடி நட்டு வரும் இந்த விஞ்ஞான யுகத்தில், எந்த நாட்டுப் பொது மக்களும் பரவ லாய் விஞ்ஞானத்தின் அடிப்படைகளை நன்ருய் அறிந்திருப்பது அவசியம். அதுவும், ஜனநாயகம் உயிர்த்திருக்கவும் நல்ல முறையில் இயங்கவும் நாட்டு மக்கள் அனைவருமே விஞ்ஞானத்தின் பல துறைகளிலும் அடிப்படை அறிவு படைத் திருப்பது முக்கியம் என்று அமெரிக்கா போன்ற நாடுகளில் பல அறிஞர்கள் கருதுகிருர்கள்; தங்கள் கருத்தின் நியாயத்தைக் காரண காரிய வாதத்தோடு விளக்கவும் விளக்குகிருர்கள். பொதுமக்கள், சாதாரண மக்கள் என்றெல்லாம் சொல்லும் போது, அவர்கள் ஏதோ தனித்த பிரிவினர் என்று எண்ணத் தேவை யில்லை. வாழ்க்கையில் எத்தனை எத்தனையோ துறைகள் இருக்கின்றன. எல்லாத் துறைகளிலும் நிபுணர், மேதை, கரைகண்டவர் யாரும் இல்லை. சட்டத் துறை நிபுணர் பலரும் பௌதிகம், இலக்கியம், கலை இப்படி எண்ணற்ற பிற துறைகள் பற்றிய மட்டும் சாமானிய மனிதர் தானே? மனிதருக்கு மருத்துவம் செய்கிறவர், தம் ரேடியோவுக்கு 'மருத்துவம்' செய்துவிடப் பிறரைத்தான் நாட வேண்டியிருக்கிறது. ஸயின்ஸின் பலதுறைகளி லும் அடிப்படை விஷயங்களை இந்தப் பல துறைப் படிகளில் எழுதும் நூல்களைக் கூடச் 'சாதாரண மக்கள் படித்தறிய உதவும் நூல்கள்' என்ற முதல் வகையில்தான் சேர்க்க வேண்டும்.

மற்ற மூன்று வகைகளும் இருக்கட்டும். இந்த முதல் வகையில் பல ஸயின்ஸ் நூல்கள் இப்போதே தமிழில் தோன்றி யிருக்கின்றன. ஆனாலும் அவை பிரபலப் படவில்லை; மக்களிடம் செல்வாக்குப் பெறவில்லை. ஆங்கிலத்தில் இத் தகைய ஆயிரக் கணக்கான நூல்கள் தோன்றி. உலகெங்கும் ஆங்கிலேயரிடம்—அவரிடம் மட்டும் அல்ல, ஆங்கிலமறிந்த மற்ற எல்லாரிடமுமே பரவிப் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருக்கின்றன,

இந்த வித்தியாசம் ஏன்? நம் மக்களுக்கு விஞ்ஞான அறிவிலே ஆசையில்லையா? மற்றவரின் மதிநுட்பத்துக்கு நம் மக்களின் மதிநுட்பம் குறைவானதா? இந்த இரண்டும் அபாண்டமாகும். உண்மையில் இவை காரணம் அல்ல. தோன்றியுள்ள தமிழ்ப் புத்தகங்கள் மீதுதான் குற்றம். அந்தக் குற்றத்துக்கு ஓரளவு காரணம், நவீன விஞ்ஞான அறிவுக்கு அவசியமான கலைச் சொற்கள் இல்லாதது என்பதும் உண்மைதான், ஆனால் கலைச்சொல் இல்லாத இந்தக் குறையைப் பாடப் புத்தகங்களாலோ, அவற்றினும் கடினமான உயர்வகை விஞ்ஞான நூல்களாலோ சமாளிக்க முடியாமல் போகலாம். பொதுமக்கள் படித்தறியும் ஸயின்ஸ் நூல்களிலே இதைச் சமாளிக்க முடியும்; ஆங்கிலத்தில் இப்படிச் சமாளித்தேயிருக்கிறார்கள். பொது மக்களுக்குரிய ஸயின்ஸ் புத்தகமும் ஸயின்ஸ் பாட புத்தகமும் ஒன்றே போல் நம்மில் பலர் எண்ணி மயங்குகிறார்கள். "விஞ்ஞானம் என்றாலே, புரிந்து கொள்வது கொஞ்சம் கஷ்டந்தான். சிரமப் பட்டே படித்தறிய வேண்டும். ஆங்கில ஸயின்ஸ் புத்தகம் மட்டும் எல்லோருக்கும் புரிந்து விடுகிறதா?" என்று சிலர் சொல்வதும் உண்டு. இதில் சிறிது உண்மை இருக்கிறது; ஆனால், முழு உண்மை அல்ல. பொது மக்களுக்கான ஆங்கில நூல்களைச் சற்றுச் சிரமப்பட்டால், ஒருவன் புரிந்து கொள்ள முடிகிறது; அத்தகைய தமிழ் நூல்களை எவ்வளவு சிரமப்பட்டுப் படித்தாலும் புரிந்து கொள்ள முடியாது என்ற நிலை இருக்கலாமா? இதற்கு மாற்று என்ன? எனக்குச் சில யோசனைகள் தோன்றுகின்றன. அவற்றைத்தான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

முதல் முதலாக, 'விஷயம் முக்கியம், சொல் அல்ல. விஷயத்துக்குச் சொல் ஒரு சாதனமே' என்பதை மனத்தில் நன்றாய் முடி போட்டுக் கொள்ள வேண்டும். பொது மக்களுக்கான ஆங்கில நூல்களை முன்மாதிரியாக நாம் கொள்வோம். ஆனால், அவற்றை அப்படியே நாம் பின்பற்றலாகாது. ஏனென்றால், விஞ்ஞானத் துறையில், ஆங்கிலம் மிகவும் வளர்ந்த மொழி; தமிழ் இனித்தான் அடியெடுத்து வைக்க வேண்டும். பொது மக்களுக்கான விஞ்ஞான நூல்களை ஆங்கிலத்தில் (1) ஒரு கதை அல்லது வரலாறு மாதிரி வளர்த்தியும் சுவை படவும் பலர் எழுதுகிறார்கள்; (2) இயன்ற வரையில் கலைச் சொற்களை நீக்கிச் சாதாரணச் சொற்களைக் கொண்டே பல விஷயங்களை விவரிக்கிறார்கள்; (3) மிகச் சில கலைச் சொற்களைத் தவிர்க்க முடியாத நிலை வரும் போது மட்டுமே அவற்றை உபயோகிக்கிறார்கள்; (ஆனால் அவற்றின் பொருளைத் தெரிந்து கொள்ள எத்தனை எத்தனையோ அகராதிகள் ஆங்கிலத்தில் இருக்கின்றன; ஸயின்ஸ் சொற்களுக் கென்றே பல சிறு அகராதிகளும் பெரிய அகராதிகளும் விரிவான பொருள் அகராதிகளும் இருக்கின்றன.)

இந்த மூன்றாவது விஷயம் தான்--தவிர்க்க முடியாத நிலையில் சில கலைச் சொற்களை உபயோகிக்க நேரும் நிர்ப்பந்தந்தான்—தமிழிலே விஞ்ஞானப் பொது அறிவு நூல் ஆசிரியர்களுக்குத் தொல்லை கொடுப்பது. ஆயினும் விஷய விளக்கம் தரும் அகராதிகள் இல்லாத குறையை வெறும் சொல்லாக்கல் பட்டியல்களைக் கொண்டு தீர்க்க முடியாது; அவரவரே தம் இஷ்டப்படி படைத்துக் கொள்ளும் சொற்களைக் கொண்டும் தீர்க்க முடியாது. இன்னொரு விசித்திர நிலைமையும் விஞ்ஞானப் பொது அறிவுத் தமிழ் நூல்களின் குறைக்குக் காரணமாயிருக்கிறது. ஏதோ ஒரு விஞ்ஞானத் துறையில் சிறப்பான ஞானம் பெற்றிருப்பவர், அதை ஆங்கிலத்தின் மூலமே அடைந்தவராயிருக்கிறார்; அவருக்குத் தமிழிலே எழுதும் ஆற்றல் சற்றும் இருப்பதில்லை. சரளமாகவும் சுவையாகவும் தமிழிலே எழுதக் கூடியவருக்கோ, கதையும் சட்டுரையும் எழுதியே பழக்கம்; பள்ளியில் அல்லது கல்லூரியில் கற்ற ஏதோ சிறிது விஞ்ஞானத்தையும் மறந்து விட்டவர் இவர்! அப்படி மறக்கவில்லை என்றாலும், அன்று படித்த பாடப் புத்தக ரீதியும் அதில் வந்த ஆங்கிலக் கலைச் சொற்களும் இவருடைய மனத்தைக் கெட்டியாய்ப் பற்றி அழுத்திக் கொண்டிருக்கின்றன. விஞ்ஞான விஷயத்தைத் தெளிவாய் ஜீர்ணம் செய்து கொண்டு சொந்த நடையிலும் ரீதியிலும் எழுதும் வல்லமை அல்லது நோக்கம் இவருக்கு இருப்பதில்லை,

பொது அறிவு விஞ்ஞானத் தமிழ் நூல்களை எழுதுவோர் அத்தகைய ஆங்கில நூல்களைவிட இன்னும் தெளிவாகவும் விளக்கமாகவும் வளர்த்தி எழுத வேண்டும். குறிப்பாய்ச் சொல்லப் போனால், ஓர் ஆங்கில நூலின் அடக்கப் பொருளை, நாலு தமிழ் நூல்களாக விரித்து விளக்கி எழுதும் தேவை கூட ஏற்படும். ஒரு விஷயத்தைப் பற்றி எழுதப் புகுகிறவர், முதலில் அதைப் பற்றி நன்ருய் விவரமாய்த் தாம் புரிந்துகொள்ள வேண்டும். எழுதப் போகும் விஷயத்தைப் பற்றி, எழுதப் போகிற அளவுக்குப் புரிந்து கொண்டால் போதாது; அதைப் போல் பத்து மடங்கு புரிந்து கொண்ட பிறகே, எழுதத் தொடங்க வேண்டும் உதாரணமாக, ஒரு 'கிரிஸ்டல் ரேடியோ'வைப் பற்றி ஒருவர் எழுதுவதாக வைத்துக் கொள்வோம். ஆங்கிலத்திலுள்ள ஒரு கிரிஸ்டல் ரேடியோ விவரத்தைப் படித்துவிட்டு, உடனே அதைப் பற்றித் தமிழில் எழுத உட்கார்ந்து விடக் கூடாது. தாமே சில கிரிஸ்டல் ரேடியோ ஸர்க்கூட்டுகளை அமைத்துப் பார்க்க வேண்டும். கிரிஸ்டல் ரேடியோவுக்கு மேற்பட்ட சில ரேடியோ நுணுக்கங்களையும் செயல் தத்துவங்களையும் படித்தறிய வேண்டும். எவ்வளவு படித்தும் ஐயம் ஏற்படும் விஷயங்களை அந்தத் துறை வல்லவர்களிடம் கேட்டுத் தெளிந்து கொள்ள வேண்டும். அப்புறந்தான், கிரிஸ்டல் ரேடியோ பற்றி — அதற்கு மேற்பட அல்ல — எழுத வேண்டும். விஞ்ஞானப் பொது அறிவு நூல் ஒன்றை எழுதுகிறவர், தம்மால் தவிர்க்க முடியாத ஒவ்வொரு கலைச் சொல்லை உபயோகிக்கும் போதும், அதன் பொருளை உதாரணங்களோடோ, வேறு வகையிலோ நன்ருய் விளக்க வேண்டும்; அதற்கு உரிய திட்டமான விவரத்தைத் தர வேண்டும். புத்தகத்தின் இடையே கலைச்சொற்களை என்ன உருவில்—தூயத் தமிழிலோ, கலப்பட மொழியிலோ ஆங்கிலத்தில் தானோ, என்ன உருவிலாயினும் சரி—உபயோகித்தாலும் பரவாயில்லை: அப்படி உபயோகிக்கும் சொற்கள் அனைத்துக்கும், கட்டுரையின் அல்லது புத்தகத்தின் இறுதியில், ஆங்கிலத்துக்குத் தமிழும், தமிழுக்கு ஆங்கிலமும் அடங்கிய இரண்டு கலைச்சொல் பட்டியல்களை அகராதி வரிசைப் படுத்தித் தர வேண்டும். இரண்டு பட்டியல்களால், இருமடங்கு இடம் தேவைப்படுமே என்று எண்ணினல் சிக்கன வழி ஒன்றைக் கையாளலாம். ஆங்கிலச் சொற்களை மட்டும் ஓர் அகராதி வரிசையிலும் தமிழ்ச் சொற்களை மட்டும் இன்னேர் அகராதி வரிசையிலும் தரலாம். இந்தச் சொற்களுக்கு முதலில் வரிசை எண் கொடுத்து ஒவ்வொரு சொல்லுக்கும் இறுதியில், அதற்குச் சமமான மறுமொழி சொல்லின் வரிசை எண்ணைக் குறித்து விடலாம். இத்தகைய இருவழிப் பட்டியல் அல்லது பட்டியல்கள் மிகவும் அவசியம். மேல் படிப்புக்கோ, தெரிந்தவரிடம் சந்தேகம் கேட்டுக் கொள்ளவோ இத்தகைய பட்டியல்கள் அவசியம்; உதவியாயும் இருக்கும்.

பாடப் புத்தகங்களை எழுதுவோரும் தயாரிப்போருங் கூட இந்த மாதிரி முறைகளைப் பின்பற்றினல், மிகவும் பயன் விளையும் என்பது என் கருத்து. ஆனல், அது கல்விமான்களையும் கல்வித் துறையினரையும் பொறுத்த விஷயம். அவர்கள் தம் வழியில் செல்லட்டும்; நமக்குள்ள வழியை நாம் கடைபிடிப்போம். பொது மக்கள் படித்தறிவதற்கான விஞ்ஞானப் புத்தகங்களை எழுத்தாளர்களான நாம் எழுதினல், அவை நன்ருய் விற்ருக வேண்டும். அப்போது தான் நாம் எழுதிய எழுத்தும் பயன்படும்; நாமும் பயன் பெறுவோம். தெளிவாயும், சரளமாயும், கவர்ச்சியாயும் இராது புத்தகத்தை எழுதி வைத்துவிட்டு, அது விற்காததற்கு மக்களைக் குறைகூறிப் புண்ணியமில்லை. பொது மக்களுக்கான இத்தகைய நூல்கள் முற்றும் அடிப்படை விஷயங்களையே தாங்கியிருக்க வேண்டிய அவசியம இல்லை. அடிப்படை விஷயங்கள் தொடங்கி, இன்றைய விஞ்ஞான முன்னேற்ற உச்சகட்ட விஷயங்கள் வரையில். ஆங்கிலத்தில் இருப்பதே போல், தமிழிலும் பலதரப் புத்தகங்கள் பலபடிகளில் வரலாம், வரமுடியும். இத்தகைய புத்தகங்களைத் தமிழிலே கொண்டுவர வேண்டும் என்ற திட்டத்தோடு, இதில் ஆர்வமுள்ள எழுத்தாளர்களும் வெளியீட்டாளர்களும் முயன்ருர்களானல் நிச்சயம் வெற்றி கிட்டும். ஆங்கிலத்தில் பயிற்சி சற்றும் இராத பல மக்களும, அதில் போதிய பயிற்சி பெருத மக்களும் வர வர அதிகமாகிக் கொண்டிருக்கிருர்கள்; ஆனல், அவர்கள் தமிழில் நல்ல படிப்பாளிகளா யிருக்கிருர்கள். அத்தகையோரில் மிகப்பலர், விஞ்ஞான அறிவு பெறப்பேரார்வம் காட்டுகிருர்கள். அவர்களுக்கு நன்ருய்ப் பயன்படும் நூல்கள் வருவது, தமிழின் வளர்ச்சிக்கே பேருதவி. அத்தகைய நூல்கள் தான் கலைச் சொற்களுக்குப் பொருளும் பயனும் தந்து அவற்றையும் நிலைப்படுத்த முடியும். பயிர் செலவுக்கு நிலத்தைப் பண்படுத்துவது போல, தமிழிலே சிறந்த விஞ்ஞான இலக்கியம் தோன்றி வளர்ந்து சிறப்புற அடிகோலவும் அத்தகைய நூல்கள் பெரிதும் உதவும்.

எழுத்து, படிப்பு, வியாபாரம்

திரு. ‘ அகிலன் ’.



அகிலாண்டம் என்ற இயற் பெயருடைய திரு. அகிலன் 27-6-1922ல் புதுக்கோட்டையில் பிறந்தார். கல்லூரிப் படிப்புக்குப் பின் 1941 முதல் 1944 வரை நாட்டின் விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்டார்.

அஞ்சல் துறையில் 1945 முதல் பணியாற்றி வந்த இவர், தமிழ்த் தாயின் சேவையில் தம் முழு நேரத்தையும் பயன்படுத்தும் துணிவுடன் 1957 இல் அவ்வேலையை விட்டுவிட்டார். 1938 முதல் எழுத்துத்துறையில் ஆர்வம் காட்டிவரும் இவருடைய முதல் படைப்பான ‘பெண்’ என்ற நாவல், 1946ல் ‘கலைமகள்’ நாவல் போட்டியில் முதல் பரிசு பெற்றதுடன் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டையும் பெற்றது. ‘நெஞ்சின் அலைகள்’ என்ற மற்றொரு நாவல் மேற்படி கழகத்தின் முதற்பரிசையும், ‘வேங்கையின் மைந்தன்’ எனும் நாவல் சாஹித்ய அகாடமியின் பரிசையும் பெற்றன.

இதுவரை அகிலனது 10 நாவல்களும், 9 சிறுகதைத் தொகுப்புக்களும், மற்றவகை நூல்கள் 10ம், நூல் வடிவில் வெளியாகியுள்ளன. இவருடைய ‘குழந்தை சிரித்தது’ என்ற சிறுகதைத் தொகுப்பு ஆங்கிலம், ரஷ்யன், ஜெர்மன், செக் மொழிகளிலும், மற்றும் சில மலையாளம், கன்னடம், தெலுங்கு, குஜராத்தி, மராத்தி, ஹிந்தி, வங்காளம் ஆகிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

தொடக்க காலம் முதலே நம் சங்கத்தின் நெறியாளருள் ஒருவராக இருந்து வரும் திரு. அகிலனின் ‘சகோதரர் அன்றோ?’ என்ற சிறுகதைத் தொகுப்பு ‘தமிழ் உறவு’ வெளியீடுகளுள் முதலாவதாக அமைந்ததும் குறிப்பிடத் தக்கது.

எழுதுவதன் நோக்கம் படிப்பதற்காகத்தான். எழுதுவோருக்கும் படிப்போருக்கும் இடையில் தொடர்பு ஏற்படுத்திக் கொடுப்பவர்கள் புத்தகம் வெளியிட்டு விற்பனை செய்பவர்கள். ஆகவே இந்தத் தொழிலில் மூன்று சாராருக்கும் பொறுப்புக்களும் உண்டு; கடமைகளும் உண்டு; பயனும் உண்டு.

எழுத்தைப் பொதுவாக இரண்டு பெரும் பிரிவுகளுக்குள் அடங்கியதாகப் பிரிக்கலாம்: மனிதர்களுடைய புறவாழ்வுக்கு வேண்டிய அறிவைத் தூண்டிவிடக் கூடிய எழுத்து; அகவாழ்வுக்கு வேண்டிய உள்ளப் பண்பாட்டை மலர்விக்கும் எழுத்து,

இன்றைய உலகத்தில் மனிதன் வசதியோடு வாழ வேண்டுமானால் அவனுக்கு ஓரளவாவது அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், சமூக இயல் முதலிய புறவாழ்வுத் தேவைகள் பற்றிய அறிவு அவசியமாகிறது. மனிதன் உடல் உணவோடு திருப்தியடைகிற மிருகமல்ல. அவனுடைய அறிவுப் பசியைத் தூண்டிவிட்டு, அதற்கு உணவளிக்கக் கூடியவை புறவாழ்வு பற்றிய நூல்கள்.

அடுத்தாற்போல், மனிதன் அகவாழ்வும் வாழ வேண்டியவனாக இருக்கிறான். தன்னுடைய புலன்களை ஒழுங்குபடுத்தி, நல்ல மகனாக, கணவனாக, குடும்பத் தலைவனாக, நண்பனாக, சமுதாயத்து மனிதனாக அவன் வாழ்ந்து தீரவேண்டும். மனிதத் தன்மை, பண்பாடு, அழகுணர்ச்சி போன்றவைகளையும் அவன் தன்னுள்ளே வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இதற்காகத் தான் முன்பெல்லாம் ‘அ’ என்ற எழுத்தைச் சொல்லிக் கொடுக்க முனைந்தபோதே, ‘அறம் செய விரும்பு’ என்று சொல்லிக் கொடுத்தார்கள். இப்படி நெஞ்சக்கு ருசியையும் உணவையும் அளிக்கக் கூடிய நூல்களே அகத்துறை நூல்களான சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள் போன்றவை அறம், இன்பம் இந்த இரண்டையும் உள்ளத்திலே மறைமுகமாகத் தூண்டிவிடக் கூடியவை. மனிதன் புறப்பொருளில் மட்டும் அறிவு பெற்றவனாகவோ, பணம் பெற்றவனாகவோ இருந்தால் அவன் மனிதனாகி விடமாட்டான்,

ஆகவே, 'எழுத்து'க்கு மனிதனுடைய அகவாழ்வையும் புறவாழ்வையும் ஒழுங்குபடுத்தும் கடமையிருக்கிறது. அதனால்தான் பழங்காலத்தில் எழுதுவோருக்குச் சமுதாயத்தில் ஓர் தனி மதிப்பு இருந்து வந்தது. அவர்களது தொடர்பைப் பெறுவது அவசியம் என்பதை அரசர்களும் வள்ளல்களும் உணர்ந்தார்கள். அவர்கள் கொடுத்த ஆதரவால் இலக்கியங்கள் வளர்ந்தன.

உலகத்தில் குடிமக்களின் இயக்கம் தோன்றிய போதும், எழுத்து பரவலாக அச்சில் வந்த போதும், ஏன் இன்றுங்கூட, அந்த மதிப்பு அதற்கு உரியவர்களுக்கு இருக்கத்தான் செய்கிறது. புகழுக்குரிய தொழில் என்று கருதப்படும் தொழில் எழுத்துத் தொழில்.

படிப்பு பரவியவுடன்........

கல்வி ஒரு சிலருக்கு மட்டுமின்றிப் பொதுவாகப் பரவத் தொடங்கிய காலத்தில், இந்த எழுத்துத் தொழிலில் ஈடுபட்டவர்கள் மட்டுமின்றிப் பதிப்பகத்தாரும் ஓர் பெருமை மிக்க தொழில் என்றே இதில் ஈடுபட்டார்கள். திடீரென்று குறுக்கு வழிகளில் இலாபத்தையோ, எப்படியும் பொருள் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடோ, இருபது ஆண்டுகளுக்குமுன்பு வரையில் பதிப்பகத் தொழிலில் பலர் குதிக்கவில்லை. இந்தத் துறையில் முன்பு எழுத்தாளர்களைப் போலவே பதிப்பாளர்களும் பெரும் நஷ்டமடைந் திருக்கிறார்கள். ஆனால் பொருளாதாரத் துறையின் பயன் அருகியிருந்த அந்தக் காலத்தில், இந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு ஒரு தனி மதிப்பு இருந்தது; பெருமை இருந்தது; புகழ் இருந்தது. உயர்ந்த தொழில் செய்யும் கண்ணியமான மனிதர்களாக வாசகர்களால் அவர்கள் மதிக்கப்பட்டு வந்தார்கள். ஏனென்றால் வாசகர்களின் நேரடித் தொடர்பு அவர்களுக்கு இருந்தது. பணம் கொடுத்துப் புத்தகங்களை வாங்கிப் படிப்போர், எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும், அவர்கள் புத்தகத்தின் தரம், அதன் உட்பொருள். அதன் ஆசிரியரின் தகுதி இவ்வளவையும் சீர்தூக்கியே வாங்கினார்கள். விலையும் நியாயமான விலையாகவே இருந்தது.

முக்கியமான விஷயம் இது. பணம் கொடுந்து வாங்கிய புத்தகங்களை வாங்கியவர்கள் விரும்பிப் படித்தார்கள். இரவல் வாங்கியும் பலர் அவர்களிடமிருந்து படித்தார்கள். எழுத்தாளரோ, பதிப்பாளரோ, வெறும் பணத்துக்காக மட்டும் அந்தத் தொழிலைச் செய்யாததால், வாசகர்களின் படிப்பு என்னும் சொத்தும் அவர்களுக்குக் கிடைத்தது. ஒருமுறை கூட, ஒரு வாசகரால் கூடப் பிரித்தும் பார்க்கப்படாத மூன்றாந் தரப் புத்தகத்துக்கு அன்று பொருளும் கிடைத்ததில்லை; புகழும் கிடைத்ததில்லை.

அரசாங்கத்தின் உதவி

நல்ல புத்தகங்களைக்கூட வாங்கிப் படிக்கும் சக்தி பலரிடம் இல்லையென்பதாலும், நல்ல புத்தகங்களை எழுதுவோரும் வெளியிடுவோரும் நாட்டில் பெருக வேண்டுமென்பதாலும் தமிழ்நாடு அரசாங்கம் உயர்ந்த நோக்கத்தோடு ஒரு நூலகத் திட்டத்தைக் கொண்டு வந்தது. மாவட்ட நூலகங்கள் தவிர, பஞ்சாயத்து நிறுவனங்களும் பல நூலகங்கள் திறந்து, பொதுமக்களுக்கு நல்ல நூல்களை வழங்குவதற்கு இந்தத் திட்டம் வழிவகுத்தது. பள்ளிக்கூடங்கள் திறந்ததோடல்லாமல், முன் யோசனையோடு இப்படி அறிவுத் துறையில் ஓர் பாதை வகுத்துக் கொடுத்த தமிழ்நாடு அரசாங்கம் பாராட்டுக்குரியதுதான்.

இந்த நூலகத் திட்டம் மட்டிலும் எல்லா இடங்களிலும் சரிவரச் செயல்பட்டிருக்குமானால்—,

(1) தமிழ் நாட்டில் இதுவரை வெளியாகியுள்ள எல்லா சிறந்த நூல்களும், விரும்பிப் படிக்கும் ஒவ்வொரு வாசகருக்கும் எளிதில் கிடைத்திருக்கும். நூலகங்களில் படிப்போர் கூட்டம் எப்போதும் நிரண்டிருக்கும்;

(2) மக்கள் விரும்பிப் படிக்கக் கூடிய தரமான நூல்களுக்கோ, மக்கள் படிக்க வேண்டிய தரமான நூல்களுக்கோ, நூலகங்களின் அலமாரிகளில் இடமில்லாமல் போகாது;

(3) படிப்பாரற்ற நூல்களும், தேடுவாரற்ற அச்சுப் போட்ட தாள்களும் அங்கு உறங்கிக் கொண்டிருக்கமாட்டா. வெளியில் ஒரு விலைக்குக் கிடைக்கும் அதே நூல், நூலகத்தில் மட்டும் இரட்டிப்பு விலையோடு காட்சி தராது;

(4) புத்தகம் வெளியிடும் தொழிலை ஒரு மதிப்புள்ள தொழிலாகவும், எழுதும் தொழிலைச் சமுதாயப் பணியாகவும் கொண்டுள்ளவர்கள் மிகவும் ஊக்கம் பெற்றிருப்பார்கள். மிகச் சிறந்த புது நூல்கள் தொடர்ந்து வெளி வந்து, தமிழ் நாட்டில் நூல் படிக்கும் ஆர்வமுள்ளவர்களின் எண்ணிக்கையைப் பல மடங்கு பெருக்கியிருக்கும்.—ஆனால், துரதிர்ஷ்ட வசமாக, நூலகங்களில் படிக்கும் வாசகர்களைவிட, நூலகங்களுக்கென்றே எழுதுவோர் மிகுந்து விட்டார்கள்,

காரணம் என்ன ?

'விற்பனைக் கழிவு' முறை என்ற ஒன்றை வைத்து, அதிகமான 'விற்பனைக் கழிவு' தரும் பதிப்பகத்தாரிடம் நூல்களை வாங்குவது என்ற பழக்கமே, பின்னால் விளைந்த பல தவறுகளுக்கு மூல காரணமாக இருந்திருக்கக் கூடும் என்று எனக்குத் தோன்றுகிறது.

'டெண்டர்' போட்டு, குறைந்த செலவில் பிற பொருட்களை வாங்குவது போன்ற ஓர் சிவப்பு நாடாத் தன்மை புத்தகங்கள் விஷயத்திலும் எப்படியோ புகுந்து கொண்டது. அதிகமாக விற்பனைக் கழிவு கொடுக்கக் கூடிய பதிப்பகத்தார்கள் அதிர்ஷ்டசாலிகளானார்கள், கழிவு அதிகமாகக் கொடுப்பதற்கென்றே புத்தகங்களுக்கு அதிக விலை போடப்பட்டன. புத்தகங்கள் எழுதுவதற்கு அந்தந்தத் துறையில் பயிற்சியும் அநுபவமும் பெற்ற எழுத்தாளர்கள் அவசியமில்லை என்ற போக்கும் வந்து விட்டது. எழுத்துக்குப் போதிய பணம் கேட்காமல், அதிகப் பக்கங்களைக் குறைந்த காலத்தில் எழுதித் தருபவர்களைத் தேடிப் பிடித்து வரலானார்கள்.

புத்தகத்துக்குள்ளே உள்ள பொருள் என்ன? அது எந்த முறையில் எழுதப் பெற்றிருக்கிறது? அதை எழுதியவர்கள் யார்? அந்த நூலுக்கு வைக்க வேண்டிய நியாயமான விலை என்ன?— இந்த விஷயங்கள் யாவுமே சில நூலகங்களில் கவனிக்கப்படவில்லை, விற்பனைக் கழிவே முதற் தகுதியும் முழுத் தகுதியும் ஆகிவிட்டது

பெருமைக்கும் புகழுக்கும் உரிய பணியாக இந்தத் தொழிலைச் செய்து கொண்டிருந்த எழுத்தாளர்களும் பதிப்பாளர்களும் பிழைக்கத் தெரியாதவர்கள் என்ற பட்டம் கட்டிக் கொள்ள வேண்டிய நிலை வந்தது. செல்வாக்கு, சிபாரிசு, செலவு—முதலிய குறுக்கு வழிப் போட்டிகள் பதிப்பகத்தாரிடையே ஏற்படத் தொடங்கின.

எழுத்தாளர்களே அவசியம் இல்லை என்ற நிலையில் புத்தகங்கள் அமோகமாக விற்பனையாகத் தொடங்கிவிட்டன! ஒரு சில குறிப்பிட்ட பதிப்பாளர்களைத் தவிர, மற்றவர்களின் கணக்கைப் பார்த்தால், அவர்கள் எழுத்தாளர்களுக்கு எவ்வளவு சதவிகிதம் பணம் கொடுத்திருக்கிறார்கள் என்பது விளங்கும். அவர்களையும் முழுவதும் குறை சொல்லிப் பயனில்லை. புத்தக விற்பனைக்கு, அவர்கள் எழுத்தாளர்களுக்குச் செலவழிப்பதைவிட வேறு வழிகளில் செலவழிக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. ஆகவே, எழுத்தாளர்களும் அவர்களுடைய படைப்புக்களும் புறக்கணிக்கப்படுவதில் வியப்பொன்றுமில்லை. இதன் விளைவாக வாசகப் பெருமக்களும் அவர்கள் விரும்பும் நூல்களை விலை கொடுத்துத்தான் வாங்கிப் படிக்க முடிகிறது. பணம் கொடுத்து வாங்க முடியாதவர்கள் சிரமப்படுகிறார்கள், எப்போதும் போல.

இனிச் செய்வதென்ன?

அரசாங்கம் இந்தத் தவறுகளை நன்றாகப் புரிந்து கொண்டு விட்டது. நல்ல நோக்கத்துடன் தொடங்கப் பெற்ற ஓர் நற்செயல், அந்த நோக்கத்துக்கு எதிராகவே சில இடங்களில் செயல்பட்டு வருவதை அது தெரிந்து கொண்டு விட்டது. உருப்படியான முறையில் மீண்டும் அதைச் சீராகச் செயல்படச் செய்ய வேண்டுமென்றே முக்கியமான பொறுப்புக்களில் இருப்பவர்கள் விரும்புகிறார்கள்.

அவர்களுடைய சிந்தனைக்காகவும், வாசகப் பெருமக்களின் சிந்தனைக்காகவும் சில யோசனைகள் கூற முன்வருகிறேன். எழுத்தாளர்கள் சிலருடனும் பதிப்பாளர்கள் சிலருடனும் கூடிப் பேசிய பிறகு எழுந்த சிந்தனைகள் இவை. இந்தத் துறையில் உள்ள பலருடைய சிந்தனைகளை நான் பிரதிபலிப்பதாகவும் கொள்ளலாம்.

எனது யோசனைகளாவன:

(1) விற்பனைக் கழிவு கேட்கும் முறையை உடனடியாக நீக்கிவிட வேண்டும். பல தவறுகளின் ஆணி வேரை இதனால் களைந்துவிட முடியும்.

(2) விலைக் கட்டுப்பாடு அவசியம். இத்தனை பக்கங்களுள்ள நூலுக்கு இவ்வளவுவிலை என்ற ஒரு நிர்ணயம் வேண்டும். ஒரு சில குறிப்பிட்ட,—மிகச் செலவோடு தயாரிக்கப்படும்—அத்தியாவசியமான நூல்களுக்கு மட்டிலும் விதிவிலக்கு அளிக்கலாம்.

(3) எழுதிய ஆசிரியர், எழுதப்பட்டுள்ள பொருள், எழுதப்பட்டுள்ள முறை இவற்றைப் பரவலான அளவில் பரிசிலீத்த பிறகே நூலகங்களுக்குப் புத்தகங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்தந்தத் துறைகளைச் சேர்ந்தவர்கள் அடங்கிய குழுக்களை அமைப்பது அவசியம். அவர்களுக்கு நூல்களைப் படித்துப் பார்ப்பதற்காகச் சிறு ஊதியமும் அளிக்கப்படவேண்டும். இம்முறையால் தவறுகளை முற்றிலும் நீக்கிவிட முடியாதென்றாலும். கணிசமான அளவு தவறுகள் குறைய இது வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை.

உணவு உற்பத்தித் துறையில் அதை உற்பத்தி செய்வோருடைய நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சிந்தனை, உள்ளம், ஆத்மா இவற்றுக்கு உணவான எழுத்துக்களைப் படைப்போர் நலனைப் பாதுகாக்க அது முன்வருமானால் அது சமுதாயத்தின் வளர்ச்சிக்குச் செய்யும் பெரும்பணியாம். 'கலப்பட நூல்கள்' வெளியிடும் களைகளைக் களைய வேண்டியதும் அவசியம்.

எழுதுவோருக்குப் பாதுகாப்புக் கூடத் தேவையில்லை. அவர்களுடைய நலன் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு அரசு முனைந்தாலே போதும். எழுத்தாளர்கள் பொருள் திரட்டி மாளிகைகள் எழுப்ப விரும்புவதில்லை. ஆனால் எழுத்துப் பணியைச் செவ்வனே முடிப்பதற்கு, அவர்கள் உயிர் வாழ்ந்திருக்க வேண்டியதும் அவசியமல்லவா? நூலகத் திட்டத்தால் இதுவரை எழுத்தாளர்கள் அடைந்துள்ள பயன் என்ன?—கணக்கெடுத்துப் பார்த்தால் உண்மை விளங்கும். ★

சோஷலிஸம் தழைத்து ஓங்குக!



நாரண துரைக்கண்ணன்

மணிவிழாக் கண்ட எழுத்தாளர்களில் ஒருவர். புகழேந்தி பிறந்த பொன் விளைந்த களத்தூர்இவரது பூர்விகம் .திருவள்ளுவர் வாழ்ந்த மயிலையில் 1906ல் பிறந்தார். லோகோபகாரி, தேச பந்து, திராவிடன், இந்தியா ஆகிய பத்திரிகைகளில் பணி புரிந்தபின் 32 ஆண்டுகளாக பிரசண்ட விகடனிலும் ஆனந்த போதினியிலும் ஆசிரியர் பதவி வகித்தார். செங்கை மாவட்ட தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர். தமிழ் எழுத்தாளர் சங்கமும் தமிழ்நாடு நாடக சங்கீத சங்கமும் இவருக்கு கேடயமும் விருதுகளும் வழங்கிக் கௌரவித்துள்ளன.

40 ஆண்டுகளாக தமிழ் எழுத்துலகில் முன்னணியில் இருந்து வரும் திரு. நாரண துரைக்கண்ணன் கணக்கற்ற நாவல்களும் சிறுகதைகளும் பாடல்களும் எழுதியுள்ளார். நம் சங்கத்தின் நெறியாளர்களில் ஒருவர்.

சோஷலிஸம் என்றோர்சொல் சொன்னதெவர்? அவர்தாம்
ஒப்புரவு மிக்கதொரு ஒப்பற்ற மனிதர்;
சோஷலிஸ தத்துவமே சமதர்ம மதுதான்;
சொகுசான வாழ்வுதரும் மனிதகுலத் தோர்க்கே;
சோஷலிஸ மில்லையெனில் இவ்வுலக முழுதும்
சுடுகாடாய் மாறிடுமே! சிறிதும் பொய்யில்லை;
சோஷலிஸக் குடியரசே சொர்க்க மதுவாமே!
சொன்னேங்கேள்; சடுதியிலே அதுகாண வாரீர்! (1)

பேதமற்ற சமுதாயம் பொலிந்திடுதல் வேண்டுமென்று
மொழிந்தவர்கள் நம்முன்னோர் பற்பலரா மன்றே!
வேதமுதல் உபநிடதம் புராணஇதி காசமெலாம்
விதவிதமா யிதையேதான் விளம்புவதைக் கண்டோம்;
போதிசத்(து)வன் புத்தபிரான் புகன்ற உண்மை எதுவோ?
பொய்யாத திருக்குறளில் சொல்லியது அதுவாம்;
ஏதிதுபோல் உயிர்க்கொள்கை? இனிதேற்க வேண்டும்;
எத்தர்களும் ஏய்க்காமல் ஏற்றது புரிவீரே! (2)

'ஒன்றுகுலம் ஒரேதேவன்' என்றுரைத்தான் மூலன்
உவப்பாக இச்சொல்லை உள்ளமதில் ஏற்றோம்;
அன்றைக்கே அகிலமெலாம் அறைந்தவர் நந்தமிழர்;
அவனியுள மனிதரெலாம் அறிந்து வருகின்றார்;
நன்றேநாம் உரைப்பதுகேட்டு நடந்திடுதல் நன்றாம்;
நன்றாக யோசிப்பின் நல்வாழ்வு வாய்க்கும்;
இன்றேஇப் போதேநாம் இதைச் சொல்லல் வேண்டும்;
இதொன்றும் புதுமையில்லை; ஏற்றிடுவீர் எல்லாம். (3)

'ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரு மெவரும்
ஒருமையுளராகி உலகியல் நடத்த வேண்டும்;
இச்சாதி சமயங்கள் விகற்பங்கள் தவிர்ந்தே
எவ்வுலகுஞ் சன்மார்க்கப் பொது வடைதல் வேண்டும்;
செத்தாரை எழுப்பவல்ல ஞானசித்த ரான
ஜீவகாருண்ய இராம சோதிலிங்க வள்ளல்
மெத்தமெத்த உளமுருகி அருட்பாவில் சொன்னான்;
மேலான நலன்கோரும் நாம் ஒழுக வேண்டும். (4)

ஒப்புரவாய் குடியரசு ஒத்தியங்கு மானால்
உவமையிலாத் தமிழரெலாம் ஓங்கியே வாழ்ந்திடுவர்;
ஒப்புரவின் ஒல்காத உயர்ந்தோர்க ளெல்லாம்
உண்மையா யுழைத்தாலே ஒற்றுமைய தாவர்;
இப்பிறவி பெற்றோர்கள் எல்லோரும் போற்றி
இன்புறவே வாழ்வதற்கு வழிவகைகள் காணீர்!
ஒப்பில்லாப் பொதுவுடமை சமுதாயங் காண
ஒன்றாக உழைத்திடுவோம்; உலகோரே! வாரீர். (5)

குடிமக்கள் சொன்னபடி குடியரசும்
பாரதத்தில் குடியே றிற்று;
அடிபிசகா நல்லநெஞ் சுரமுடைய
இந்தியர்கள் ஏற்று வாழ்வார்;
அடிமையில்லை; ஆளரில்லை; அனைவருமே
எசமானர் ஆனார்; பாரீர்!
கடியொன்றில் கொண்டு விட்டோம்
குடிமைநீதி கொள்ளு வீரே. (6)

சமதர்மக் குடிசையில் சகலர்க்கும்
சமவாய்ப்பு தருதல் வேண்டும்;
எமக்காகும் பொருளெல்லாம் பகுத்துண்ண
எல்லார்க்கும் ஈய வேண்டும்;
உமக்காக வென்றுதனித் தனியேதான்
எப்பொருளும் இருத்தல் கூடா;
நமக்கென்றே அனைத்தையுமே பொதுவாக்கி
நலமாய் வாழ் வோம். (7)

செல்வத்தில் சிறந்தவாகள் தர்மகர்த்தரா
யிருத்தல் மட்டும் போதா!
செல்வத்தைச் சீராகச் செழுங்கிளைக்கே
சமமாக்கி மகிழ்தல் வேண்டும்;
நல்வித்தை சான்றாண்மை பண்பினோடு
நோயில்வாழ்வு குடிமை மற்றும்
பல்விதமாம் நன்மைகளும் எல்லார்க்கும்
நாம்விதித்தல் நன்று மன்றோ! (8)

முப்பாலை முழுதாக மொழிந்தாரே
வள்ளுவராம் பெருமான் தானும்
செப்பாத பொருளில்லை; ஒப்புரவைச்
சிறந்ததென்றே ஓங்கிச் சொன்னார்;
ஒப்புவமை யில்லாத பொதுவுடமைச்
சமுதாயம் பூத்தல் நன்றே!
இப்பாரில் இதுபோல இலையென்றே
எல்லோரும் இசைக்கச் செய்வீர். (9)

நாற்பதுநால் கோடி நல்பாரத
மக்கள் நன்றாய் வாழ,
ஏற்புறவே எல்லாமும் எல்லார்க்கும்
இசைவாக ஈதல் வேண்டும்;
பார்ப்பவர்கள் போற்றி சொலப் பாங்காக
உள்ளதனைப் பகிர்தல் வேண்டும்;
மேற்கொளற்கு ஈதன்றி நெறிமார்க்கம்
இதனினும் வேறில்லை யாமால். (10)

ருசி பேதம்

உடலை ஓம்புதற்கே உணவு என்பதை நாமறிவோம்; நம் உள்ளமும் நன்கறியும். ஆயினும் உணவில் சுவை தேடுகிறது நாக்கு. சுவை உணரா உணவுக்குப் பத்தியம் எனப் பெயரிட்டு, உடலுக்கு அது ஆக்கந் தருவதெனினும் கசப்போடு உட்கொள்ளுகிறோம்.

உணவின் சுவையை ஆறுகப் பகுத்து ரசித்த தமிழ் இதயம், உள்ளம் விரும்பும் சுவைகளையும் ஒன்பதாகப் பகுத்து வைத்துள்ளது. காவியத்தில், கதையில், நாடகத்தில் இந்த ஒன்பது சுவைகளும் தத்தம் அளவில் மிகாமல் நிற்பின் அதனால் கிடைக்கும் இன்பம் தன்மயமானதாகும். இந்த இன்பம், சுவைகள் அனைத்துக்கும் அப்பாற்பட்டது; அவற்றின் விளைவானது என்பதை மறந்து விடக் கூடாது. மனத்தின் நுகர்ச்சியையும் கடந்து நிற்கும் இந்த இன்பம் பூரணமானது; நித்திய மானது; உண்மையானது. ஆகவே அழகானது. இதையே 'சத்தியம், சிவம்; சுந்தரம்' என்கின்றது வேதம்.

'வாணிக எழுத்து'

அழிவற்றதான இன்ப அனுபவத்தைத தான் பெற்றவாறு, தன் வாசகனும் பெறவேண்டும்; ரசிக்க வேண்டும் என்று கவிஞன் ஒவ்வொருவனும், எழுத்தாளன் ஒவ்வொருவனும் அவாவுகிறான். "உங்கள் கதையைப் படித்தேன்; அற்புதம்" என்று கூறிவிட்டால் போதும், அந்த ரசிகனின் அடிமையாகி விடுகிறானே எழுத்தாளன்; அதன் ரகசியம் இந்த அவாதான். இதையே சங்கப் புலவராகிய பெருஞ்சித்திரனார் மற்றோர் வகையாகக் கூறுகிறார்.

குன்றும் மலையும் பலபின் னொழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செயற்கென
நின்ற வென்னயந் தருளி ஈதுகொண்டு
ஈங்கனம் செல்க தானென, என்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்!
காணாது ஈத்த இப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசிலன் அல்லேன் பேணித்
தினையனைத் தாயினும் இனிது அவர்
துணையளவு அறிந்து நல்கினர் விடினே.

—புறநானூறு 208

பொருள் தருவான் என்பதற்காகவா புலவர் அதியமானிடம் போனார்? புலமையை ரசித்து, அதன் வரிசை யுணர்ந்து அவன் பரிசில் தந்திருந்தால் அது அவருக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்திருக்கும். அஞ்சியின் பரிசில், அப்பொழுது புலவருக்கு, அவன் ரசனையின் உருவமாக விளங்கியிருக்கும். தம்மைக் காணவும் செய்யாது, அவன் கொடுத்த பொருள்—பணம்—அவருக்குப் பிச்சையாகவே

—ந சோமசுந்தரம்—

செயலாளர்

தமிழ் எழுத்தாளர்

கூட்டுறவுச் சங்கம்.

தோன்றுகிறது. வாணிகப் பரிசிலன்—பிச்சைக்காரன்—அல்லேன் என்று அலமருகிறார். 'யாங்கறிந்தனனோ தாங்கருங் காவலன்' என்ற அடியிலும், 'காணாதீத்த இப்பொருட்கியானோர் வாணிகப் பரிசிலன் அல்லேன்' என்ற அடிகளிலும் புலவரின் உள்ளக் கொதிப்பு நன்கு புலப்படுகின்றதன்றோ?

ஆக, அன்றும், இன்றும், என்றும் தன் அறிவால் தான் நுகர்ந்த இன்பத்தை வாசகனிடமும் பிரதிபலிக்கச் செய்யவேண்டும் என்பதே எழுத்தாளனின்—கவிஞனின்—கலைஞனின் குறிக்கோளாக இருந்து வருகின்றது. மகாகவி பாரதி, கண்ணனிடம்,

என்கண்ணை மறந்துன்னிரு
கண்களையே என்னகத்தில்
இசைத்துக் கொண்டு
நின்கண்ணால் புவியெல்லாம்
நீஎனவே நான்கண்டு

நிறைவு கொள்ள வேண்டுவது போல, ரசிகனும் எழுத்தாளன் கண்களால், மனத்தால் அவன் கண்டதைத் தானும் காண்கிறான். இந்த மந்திரவித்தை கைவந்திருப்பதன் காரணமாகவே எழுத்தாளனுடைய பொறுப்பு அதிகமாகிறது.

நாவலும் சிறு கதையும் மேலைநாட்டு இறக்குமதிகள் என்பதால், அங்குள்ள சமுதாய இயல்புகளையும் அதே போல இறக்குமதி செய்யவேண்டும் என்பது அவசியம் இல்லை. அவைதாம் உயர்ந்தவை என்பதும் இல்லை. ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு தனிப்பண்பு, மரபு, எண்ணம், வாழ்க்கைத் தத்துவம் உண்டு. காலத்தின் மெருகு இவற்றில் ஏறக்கூடும் எனினும் இவற்றின் அடிப்படைத் தன்மை மாறுவதில்லை. பெண்ணைக் கவர்ச்சிப் பொருளாக்கி அதன் மூலம் மக்களை ஈர்ப்பது மேனாட்டு நாகரிகம். இதை வாணிகத்தில், எழுத்தில், தொழிலில், எத்துறையிலுமே காண்கிறோம். அவர்கள் சமுதாய அமைப்பு அம்மாதிரி! காலமும் இடமும் அப்படிப்பட்டவை. அவர்கள் வாழ்க்கைத் தத்துவமும் சமுதாய எண்ணங்களும் அவற்றிற்கு ஏற்றபடி அமைந்துவிட்டன. நம் நாட்டின் பண்பும், எண்ணமும் அவற்றிற்கு நேர் மாறானவை. இதை மறந்து லீலாவுக்கும் ராம் சேவுக்கும் சேலையும் சூட்டும் உடுத்தி, லீலா, ராமனாக்கி விடுவதால் இலக்கியம் வளர்ந்து விடாது; சமுதாயத்துக்கும் பயனில்லை.

'எழுதத் தெரிந்தவனுக்கு, உலகம் அனைத்தும் அதில் உள்ள யாவையும் கருப்பொருளாகும்' என்கிறான் ஓர் ஆங்கிலக் கவிஞன். பெண்ணை வைத்து, காமக்களியாட்டத்தை வர்ணித்துத்தான் கதை எழுத வேண்டும் என்பதில்லை. காதலை வர்ணிப்பதோ, பெண்ணைக் கருப்பொருளாக்கிக் கதை எழுதுவதோ கூடாது என்று நான் கூறவில்லை. வழக்கு விசாரணையில் புதிய சாட்சியங்களை நிருபிக்கு முன்பு, அதற்குப் போதுமான நிலைக்களம் அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது வழக்கறிஞர்களின் சம்பிரதாயம். அதே போல, எதைக் கூறுமுன்பும் அதற்குப் போதுமான, நிலைக்களம் அமைத்துக் கொள்ளவேண்டும்.

'திருமண மண்டபத்துக்கு வரும் சீதையைக் கண்டவுடனே ஆண்டிருந்த அனைவரும்—தசரதனும் சனகனும் வசிட்டனும் ராமனும் ஒழிய மற்ற அனைவரும்—எழுந்து நின்றனர்; அவர்கள் கைகள் தாமே சிரமேற் கூப்பின' என்று மிதிலைச் செல்வியை அறிமுகம் செய்து வைக்கிறார் கம்பர். பின்னால், 'கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையில் கரந்த காதல் உள்ளிருக்கும் எனக் கருதி உடல் புகுந்து தடவியதோ ஒருவன் வாளி' என்று விபீடணன் ராவணனின் உடலம் முழுவதும் ராம சரங்கள் துளைத்திருப்பதைக் கண்டு வருந்துகிறானே, அதற்கான நிலைக்களத்தையல்லவா இங்ஙனம் அமைத்துக் கொள்கிறார். கணவன், தந்தை, குரு, மாமனார் ஆகிய மரியாதை செலுத்தத் தக்க உறவினர் தவிர மற்றவர்களுக்கு வணங்கும் தெய்வமாகத் தோற்றியவள் சனகன் புதல்வி. தாயெனத் தகையாளைக் காமுறுதல் எத்தனை இழிவு; தவறானது? இப்படி நிலைக்களம் அமைத்துக் கொள்ளாமல் ராமன் மனைவியான சீதையை ராவணன் காமுற்றான் என்று மட்டும் சொல்லி, ராமபாணம் ராவணனைத் துளைத்துவிட்டன என்று கவிஞன் கூறியிருப்பானேயானால், ராவணன் செய்த அளவிலாத் தீமையின் உரத்தை அளந்தறிய இயலுமா? சீதையின் தன்மையை, அவள் வெறும் கற்பரசி மட்டுமன்று, கண்டோரெல்லாம் தொழும் தாய் என்பதை, பின்புலமாக வைத்துப் பார்க்கும்போதன்றோ ராவணனுடைய தீமையின் அளவின்மையை உணர முடிகிறது.

இங்ஙனம் போதிய நிலைக்களம் அமைத்துக் கொள்ளாவிடின் எழுத்தின் கருத்து, மையமான கருப்பொருள் தெளிவுபடுவதில்லை. அதனோடு நில்லாமல் தீமையையும் விளைக்கிறது. கதையில் முதன் முறையாக பஸ் ஸ்டாண்டில் சந்தித்துக் கொள்ளும்போது இளைஞனும் குமரியும் 'காதல் சம்பாஷணை'யில் இறங்கிவிட்டால் என்ன ஆகும்? படிக்கும் இளையோரின் உள்ளத்தில் 'காதல்' நடுத்தெருச் சரக்காக மலிந்துவிடுகிறது. தங்களை நடுத்தெரு ரோமியோக்களாகவும் ஜூலியட்டுகளாகவும் எண்ணி அவதிப்படுகிறார்கள். எண்ணத்தில் படிந்துவிட்ட இந்த மாசு அந்தக் கணத்துக்கு மட்டும் அல்ல; அந்தத் தலைமுறைக்கு மட்டுமல்ல, அந்த இனத்துக்கே சாபத்தீடாக அமைந்துவிடும்.

காதலினால் மாந்தருக்கு ஆண்மையுண்டாம் என்கிறார் பாரதி. கற்பெனும் திண்மை, பெண்மையின் பெருந்தகவு எனும் திருவள்ளுவர், பிறனில் விழையாத பேராண்மையை ஆணுக்கு அணிகலம் ஆக்குகிறார். கவிச்சக்ரவர்த்தி கம்பர் மாற்றான் சிறையில் அரக்கியர் நடுவில் தன்னந்தனியளாய் மருகிய போதும் அதற்குரிமையற்ற அனுமனால் சிறை மீட்கப்படுவதைச் சீதை விரும்பவில்லை. அவள் கணவன், தன் வீரங் காட்டித் தன்னை விடுவிப்பதையே விரும்புகிறாள். தமிழ் இலக்கணத்தின் சிறப்பான அகப்பொருளின் உள்ளடக்கம் இவைதாம்; காதலையும் வீரத்தையும் தமிழிலக்கியங்கள் போற்றுவதன் சூட்சுமமும் இதுவேதான். ஆணும் பெண்ணும் ஒரே தன்மையின்—பொருளின் இருபுறங்கள் என்பது நம் பண்பாடு. இந்தக் கோட்பாட்டில் 'ஈர்ப்புச் சக்திக்குத் தனி இடமில்லை. அவை இரண்டும் இரு வேறு தன்மைகள்; பொருள்கள் என்பது மேலைநாட்டு சித்தாந்தம். ஆகவே, ஈர்ப்புச் சக்தி' அங்குச் சிறப்பிடம் பெறுகிறது. பொருளின் பருமை, அளவு, தன்மை இவற்றிற் கேற்றபடி, அச்சக்தி அளவும் மாறுபட்டுக் கொண்டேயிருக்கிறது—அதிகரிக்கிறது, குறைகிறது, இல்லாமலும் போய்விடுகிறது. இந்த உண்மைகளை மறந்து 'சோதனை செய்கிறோம்' என்று பொய்யாகக் கற்பனை செய்து கொண்டு எழுதுவோமானால் விளையும் தீமை ஏராளம்.

'இல்லை எனக்காகவே, என் மகிழ்ச்சிக்காகவே' படைக்கும் என் ஆற்றலின் பயனாய் எழும் (பிரசவ) வேதனையைத் தீர்த்துக்கொள்வதற்காகவே எழுதுகிறேன்; என்பாரும் உளர். ஆனால், இது உண்மைக்கு மாறான கூற்று. தங்களுக்காக எழுதிக் கொள்பவர்கள், கையால் காகிதத்தில் எழுதி, தாங்களே பார்த்துக் கொண்டு, பத்திரமாய் வைத்துக் கொள்வது தானே? புத்தகமாக அச்சாகி வரவேண்டும்; பத்திரிகைகளில் வெளியாக வேண்டும் என்றெல்லாம் கவலைப்படுவானேன்? படைப்பின் அந்தரங்கம், இயற்கை—அந்த ஆவல். இதில் தவறொன்றும் இல்லை. இந்த உண்மையை ஒப்புக் கொள்ளும் திரந்தான் தேவை.

ஏன் ? எதற்கு ? யாருக்கு ?

அச்சுக் கலையும் வானொலியும் பரவிவிட்ட இந்தக் காலத்தில் எழுத்தாளர்கள் தங்கள் மீது சுமந்துள்ள பொறுப்பை உணர்ந்து கொள்ளவேண்டும். தங்கள் எண்ணம் இவற்றின் மூலமாகச் சமுதாயம் முழுவதும் எளிதில் பரவிவிடும் எனும் கண்ணோட்டத்தோடேயே அவர்கள் தங்கள் எழுத்தாற்றலைச் செயலாக்க வேண்டும். 'எவருக்காக எழுதுகிறோம்? எதற்காக எழுதுகிறோம்; விளையும் பயன் என்ன?' என்ற கேள்வி, எழுதுபவன் உள்ளத்தில் எழுமானால், அவன் எழுத்திலும் ஒளி பிறக்கும்; சமுதாயமும் விளக்கம் பெறும். விஞ்ஞான அறிவின் அடிப்படையே 'ஏன்?' என்ற வினாத்தானே? இந்தக் கேள்வி பிறந்த போதே உண்மை காணும் தெளிவும் தோன்றிவிடுகிறது.

நாடும் சமுதாயமும் இன்றுள்ள நிலையில் இந்தக் கேள்விக்கு மிகுந்த அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அரசியல் சுதந்தரம் நிலைக்க, பொருளாதார விடுதலை தேவை. அதற்குச் சமுதாயத்தில் அமைதி நிலவ வேண்டும். சாவமைதி அல்ல; உள்ளடங்கிய நீராவி, ரயில் எஞ்சினை உந்துகிறதே அது போன்ற செயலூக்கத்துக்கு உள்ளடங்கிய சக்தியினால் விளையும் 'உயிர்ப்புள்ள அமைதி'யே வேண்டும்.


கணத்துக்குக் கணம் அசுர வேகத்தில் மாற்றங்களை நிகழ்த்தி வருகிறது, விஞ்ஞானம். சதா சர்வதா விழிப்பும், விஷயங்களை உள்ளே வாங்கிக் கொள்ளக்கூடிய மனத்தெளிவும், புரிந்து தொழில்படும் அறிவும், இவற்றை எல்லாம் தாங்கவல்ல உடல் திண்மையும் இன்று மக்களிடம்—முக்கியமாக இளைஞரிடம் குடிகொள்வது இன்றியமையாதது. இதற்கும் இந்த 'உயிர்ப்புள்ள அமைதி' நிலவவேண்டும். இதற்குத் துணை நிற்பது எழுத்தாளர்களின் கடமை.

உணவுக்கு நாக்கு ருசி தேடுகிறது. ஆனால் ஒரே ஒரு சுவையை மட்டுமல்ல; ஆறு சுவைகளை நாடுகிறது. ஒரே சுவையை மட்டும் நீடித்து உட்கொண்டாலும் உடல் பிணிவாய்ப் படுகிறது. நவரசங்களும் அங்ஙனமே மனித உணர்ச்சிகளை நுகர்விப்பதோடு, ஊக்கத்துக்கும் காரணமாய் அமைகின்றன. வீரச்சுவையை மட்டுமே ரசிக்கும் சமுதாயம் வெறும் விலங்கினமாக வாழ்கிறது. சிருங்காரத்துக்கு மட்டுமே இடங் கொடுத்தால், ஆண்மை குன்றி, ஊக்கம் இழந்த சமுதாயத்துக்கு வித்தாகிறது.

அன்னை படைக்கும் அன்னத்தில் அறுசுவை உணவும் தம்மில் மிகாது அளவுடன் இருந்தால் உடலும் உள்ளமும் தெம்பு கொள்கிறது. ஆசிரியன் படைக்கும் இலக்கியத்திலும் எண்சுவையும் தம்மில் மிகாது அளவில் நின்றால், வாசகனின் சுவைக்கும் ஆற்றல் பெருகும்; நிலைத்த இன்பம்—சிருங்காரம் அல்ல,—ஆனந்தம்—விளையும்; உயிர்ச் சக்தி தோன்றும். இந்தச் சக்தியே சமுதாயத்தை உயர்நிலைக்குக் கொண்டு செலுத்தும் வல்லமை படைத்தது.

'வறுமையைப் பங்கிட்டு, பரவலாக்குவதல்ல அரசின் வேலை. செல்வத்தைப் படைத்து, வாழ வைப்பதே' என்கிறார்கள் பொருளாதார வல்லுநர்கள். இது எத்துறைக்கும்—எழுத்துத் துறைக்கு முக்கியமாக—பொருந்தும். ரசிகத் தன்மையைக் கீழிறக்கி வாசகரைப் பெருக்கிக் கொள்பவன் பெருஞ்சித்திரனார் கூறுவது போன்று, "வாணிக எழுத்தாளன். வாசகனைத் தன்னிலைக்கு உயர்த்தி, தான் காண்பவற்றைத் தான் கண்டபடி காணுமாறு செய்வதே கலைஞன், எழுத்தாளன், கவிஞன் பணி. இதில் தவறினால்..........

அறுசுவை எனினும் கெட்டும் போனால், ருசி பேதப்படுகிறது. அதைத் தூக்கி, எறிந்துவிடுகிறோம்.



நெல்லை ஜில்லாவில் பரம்பரையாகவே செல்வமும் செல்வாக்கும் மிக்கதோர் குடும்பத்தில் 1904ஆம் ஆண்டில் பிறந்தார் திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை. திருநெல்வேலி ஹிந்து கலாசாலையில் படித்தார். நெல்லை ஜில்லாவில் இவரது கூட்டுறவு இல்லாத பொது நிறுவனமே இல்லையெனலாம். தென்காசி திருவள்ளுவர் கழகத்தின் தலைவராக 1955 முதல் சிறந்த முறையில் அதை நடத்தி வருகிறார். 1957 முதல் நெல்லை மாவட்ட ஆணைக்குழுவின் தலைவரா இருந்து வருகிறார். மற்றும் குற்றாலம் ரோட்டரி கிளப்பை ஸ்தாபித்து அதன் தலைவராகவும், பாங்க் ஆப் மதுரை நெறியாளராகவும், திரவியம் தாயுமானவர் இந்து கல்லூரி, இலஞ்சி ராமசாமி ப பிள்ளை உயர்நிலைப்பள்ளி, ஈச்வரன் பிள்ளை ஆரம்பப்பள்ளி ஆகியவற்றின் செயலாளராகவும் தென்காசி கூட்டுறவு நில அடமான பாங்கு தலைவராகவும் திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலய தர்மகர்த்தராகவும் திரு. பிள்ளை அவர்கள் பொறுப்பேற்று ஆற்றி வரும் பணிகள் பலப்பல.

1960 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு சட்ட மன்றத்தில் உறுப்பினராக இருந்து வரும் திரு. சிதம்பரம்பிள்ளை மாநில பொது நூலகக் குழுவின் உறுப்பினரும் ஆவார்.

நெல்லை நூலக இயக்கம்

திரு. சிதம்பரம் பிள்ளை எம் எல். சி.

நம் பாரதத்தில் முதன்முதலாகப் பொது நூலக இயக்கத்தைத் துவக்கிய பெருமை தமிழ் நாட்டையே சாரும். மத்திய நூலகத்தைத் திறந்து பொது நூலகப் பணியைத் துவக்கிய பெருமை நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுவையேசேரும். நெல்லை மாவட்ட ஆணைக் குழு, தனது குறைந்த வருவாயில் அதிக அளவு நூலகங்களைச் சிறப்புற நடத்தி வருகிறது. தற்போது 84 நூலகங்களும் 34 வழங்கு நிலையங்களும் இயங்கி வருகின்றன. இவ்வாண்டு மேலும் 12 நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

பாளையங்கோட்டை பெருமாள்புரத்தில் பெண்களுக்கென ஒரு நூலகம் திறக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. நெல்லை பாளையங்கோட்டை, மேலப்பாளையம் நகர மன்றப் பகுதிகளில் உறுப்பினர் இல்லங்களுக்குச் சுழலும் நூலக வண்டி மூலம் நூல்கள் வழங்கப்படுகின்றன. மாவட்ட மத்திய நூலகத்திற்கு நவீன நூலகக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப் படுகிறது. நெல்லை நகரின் நூலக வளர்ச்சியைக் கருதி அந்த நூலகக் கட்டிடத்தை நெல்லை நகர் மன்றத்தார் விஸ்தரிக்கின்றார்கள். நெல்லை மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக நூல்களைப் படிப்பவர் தொகை பெருகியுள்ளது.

சென்னை மாநில அரசின் முயற்சியாலும் நூலகத்துறை இயக்குநர் பத்மஸ்ரீ நெ. து. சுந்தரவடிவேலு எம்.ஏ. எல்.டி. அவர்களின் சிறந்த பணியாலும், தமிழ் நாட்டில் பொது நூலக இயக்கம் நகரங்களிலிருந்து கிராமங்கள் வரை நன்கு பரவியுள்ளது. நூலகம் இல்லாத ஊரைப் பார்ப்பது அரிது என்ற நிலை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

சிறந்த நவீன கட்டிட வசதியுடன் கூடிய நூலகங்கள், மக்கள் தேவைக்கான நூல்கள் பத்திரிகைகள், உறுப்பினர்களுக்கு வீடுகளில் வழங்குவதற்காக சுழலும் நூலகக் கார்கள், பிரசார வான்கள் அவசியம் தேவை. நூலக வாரம் கொண்டாடுவதின் மூலம் நூலகஇயக்கம் மக்களிடையே வளர்ந்திருக்கிறது. பெரும்பான்மை நூலக ஆணைக் குழுக்களுக்கு நூலகவரி மூலம் கிடைக்கிற வருமானம், அதிக அளவு நூலகங்களை

திறப்பதற்கோ, நூல்கள் பத்திரிகைகளை வாங்குவதற்கோ போதிய அளவில்லை. ஒரு சில அதிக வருவாயுள்ள நூலகக் குழுக்கள் மென்மேலும் அபிவிருத்தி யடைந்திருக்கின்றன. நிதி பற்றாக்குறை காரணமாக குறுகிய வருவாயுள்ள மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் வளர முடியாமலிருக்கின்கன. இந்த நிலையைப் போக்கவும், நாடெங்கும் ஒரேசீராக வளர்ச்சியடையச் செய்யவும் அரசினர் இப்போது கொடுத்துவரும் மானியத் தொகையை, தேவைக்குத் தக்கபடி உயர்த்த வேண்டும். இப்போதுள்ள முறையின்படி ஆணைக்குழுவின் சொ · வருவாய்க்குத் தக்க மானியம்தான் பெற முடியும். இந்நிலை மாறி தேவைக்கான நிதியை அரசினர் மானியமாக வழங்க வேண்டும். நூலக வரியை உயர்த்தலாம். அல்லது பொழுதுபோக்கு வரியில் கிடைக்கிற வருமானத்தில் மூன்றிலொரு பங்கு மானியமாக நூலக ஆணைக்குழுக்களுக்கு வழங்கலாம்.

மேலும் நூலக ஆணைக்குழுவின் வருமானமான நூலக வரியை நகர மன்றங்களோ ஊராட்சி மன்றங்களோ உடனடியாக செலுத்துவதில்லை. அவைகளை நீக்க வேண்டிய தவசியம், சர்க்கார் ஊராட்சி, நகர மன்றங்களுக்கு வழங்கும் தொகைகளில் நூலக வரியைக் கழித்து விட்டு வழங்கலாம். அறிவை விசாலப் படுத்தவும், சிறந்த இலக்கிய நூல்களைப் படிப்பதற்குமுள்ள ஆர்வம் வளர்ந்து வருகிறது, பலதுறைகளில் தமிழ் நூல்கள் வெளிவந்தால், மக்களின் தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய முடியும். விற்பனையையும் லாபத்தையும் கருதி, தரக் குறைவான புத்தகங்களை வெளியிடுவது உகந்த தல்ல. சமுதாயத்தை ஒழுக்கம் பண்பு, அறிவு நிறைந்ததாக அமைக்கிற பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு. இதைக் கருத்தில் கொண்டு எழுத்தாளர்கள் அத்தகைய நல்ல பண்புகளை வளர்க்க உதவுகிற நூல்களை வெளியிட முன்வர வேண்டும்.

சென்னை மாநில அரசு தமிழ் வெளியீட்டுக் கழகம் மூலம் பலதுறைகளிலும் நூல்களை வெளியிட்டுப் பெரிய சேவைசெய்துவருவது மிகவும் பாராட்டத் தக்கது.

உயர்ந்த நோக்கத்தோடு துவக்கப்பெற்று, நல்ல முறையில் இயங்கி வரும் தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் பலதுறையிலும் அரிய பெரிய நூல்களை வெளியிட்டு, தமிழ் நாட்டிற்குச்சீரியசேவைசெய்யவும், அப்பணி மேன்மேலும் வளர்ந்து சிறப்புறவும் வாழ்த்துகிறேன்.

நூலக ஆணைக் குழுக்கள்

தமிழக பொது நூல் நிலையச் சட்டத்தின் பயனாக 1950 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் மாவட்டந்தோறும் நூலக ஆணைக்குழுக்கள் அமைக்கப்பெற்று. அவை 5,000க்கு மேற்பட்டு மக்கள் வசிக்கும் இடங்களில் கிளை நூலகங்களும் 1,000த்துக்கு மேற்பட்ட ஜனத் தொகையிருக்கும் கிராமங்களில் நூல் வழங்கு நிலையங்களும் நிறுவியுள்ளன. இவற்றைத் தவிர, மாதர்க்கென்றும், குழந்தைகட்கென்றும், ஆராய்ச்சிக்கு என்றும் சில விசேஷ நூலகங்களையும் இவை நடத்தி வருகின்றன. மோட்டாரில் கொண்டு சென்று வீடு வீடாக வழங்கியும் மக்களின் அறிவைப் பரப்பும் பணி, நூலக ஆணைக் குழுக்களால் இம் மாநிலத்தில் சீரிய முறையில் நடைபெற்று வருகிறது.

சொத்து வரியின் அடிப்படையில் ரூபாய்க்கு 3 பைசா விதம் 'நூலக செஸ்' ஆக வசூலித்து, நூலக ஆணைக்குழுக்களின் நிதி வசதிக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.


தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டம் தவிர மற்ற 12 மாவட்டங்களிலுமாகச் சேர்ந்து மொத்தம் 1216 கிளை நூலகங்களும் 2233 நூல் வழங்கு நிலையங்களும் திறக்கப் பட்டுப் பணியாற்றி வருகின்றன.

மாவட்ட வாரியாகக் கிளை நூலகங்களின் எண்ணிக்கை மட்டும் கீழே தரப்பட்டுள்ளது. இது 1—4—66இல் இருந்த நிலை. இந்த 3 ஆண்டு காலத்தில் இந்த எண்ணிக்கை மேலும் உயர்ந்திருக்கக் கூடும்.

மாவட்டம்	கிளை நூலகங்கள் எண்ணிக்கை
1. சென்னைமாநகர்	93
2. செங்கல்பட்டு	105
3. தென்னார்க்காடு	103
4. தஞ்சாவூர்	60
5. திரிசிராப்பள்ளி	100
6. மதுரை	150
7. ராமநாதபுரம்	125
8. திருநெல்வேலி	96
9. நீலகிரி	29
10. கோயம்புத்தூர்	177
11. சேலம்	100
12. வடார்க்காடு.	87

மாஸ்கோவில் மூன்று ஆண்டுகள்

—:திரு. எஸ். என். சொக்கலிங்கம்:—



லண்டன் பல்கலைக் கழகத்தில் நூல் வெளியீட்டுத் துறை நுணுக்கங்களைப் பற்றி ஓராண்டு காலம் சிறப்புப் பயிற்சி பெற்று, மாநில இடைநிலைக் கல்வித் துறையில், பாட நூல் வெளியீட்டுச் சிறப்பு அலுவலர் ஆகப் பணியாற்றி வரும் பேராசிரியர் திரு. எஸ். என். சொக்கலிங்கம் பிறந்தது 4—4—1928-ல்; செங்கை மாவட்டம் பிள்ளையார் குப்பத்தில். பி. ஒ. எல். (ஹானர்ஸ்) படிப்பை முடித்து 1949 முதல் தமிழ் விரிவுரையாளராகப் பல அரசாங்கக் கல்லூரிகளில் பணியாற்றியுள்ளார். 1957 முதல் 1960-ம் ஆண்டு வரை மாஸ்கோவில் தங்கிச் சோவியத் கலை அமைச்சுத் துறையின் அயல் மொழி வெளியீட்டகத்தில் மொழி பெயர்ப்பாளராக இருந்து, பல ரஷ்ய நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். மேனாடுகள் பலவற்றிற்கும் சென்றிருக்கிறார்.

நான் மாஸ்கோ நகரில் மூன்றாண்டுகள் வாழ்ந்தேன். சோவியத் யூனியன் கலை அமைச்சுத் துறையைச் சார்ந்த அயல் மொழி வெளியீட்டகத்தில் தமிழ் மொழிபெயர்ப்பாளனாகப் பணிபுரியுமாறு நம் அரசாங்கத்தினர் என்னை அனுப்பி வைத்தனர். அங்கு யான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் இக் கட்டுரையில் சுருக்கி யெழுதுகின்றேன்.

மாஸ்கோவில் கோடை காலத்தில் பகற்போது மிகுந்தும் இரவுப் பொழுது குறைந்தும் அமைகின்றன. குளிர் காலத்திலோ இரவுப்பொழுதுமிகுதியாகவும் பகற்பொழுது குறைவாகவும் இருக்கின்றன. கோடையில் கடிகாரத்தைப் பார்க்கும் போது இரவு 11 மணியாய் இருந்தாலும், ஞாயிறு மறையாமல் ஒளி வீசும். இரவு நான்கு மணிக்கு எழுந்து பார்த்தால் ஞாயிறு தோன்றியிருக்கும். அங்கு காலம் இவ்வாறு வேறுபடுவதால் ஒரு நாள் நண்பர் ஒருவரோடு பேசிக் கொண்டிருந்த போது அவர் “நீங்கள் எப்போது படிப்பது வழக்கம்?” என்று என்னை வினவினர். சிறிது நேரம் சிந்தனை செய்த பிறகு, ‘இரவு நேரத்தில் படிப்பேன்’ என்று கூறினேன். நான் கூறியதைக் கேட்டதும் அவர் திடுக்கிட்டதை முகத் தோற்றம் புலப்படுத்தியது. அப்பொழுது எனக்குத் தெளிவாக ருஷ்ய மொழி பேசத் தெரியாததால் பேசாமல் இருந்து விட்டேன்.

இரவும் மாலையும்

சில மாதங்கள் சென்றபின் ஒரு நாள் வீட்டில் தொலைபேசி (Telephone) ஒலித்தது. குரல் வாங்கியை (Receiver) கையில் எடுத்ததும் பழகிய அந் நண்பர் என் வீட்டிற்கு மாலை பத்துமணிக்கு வருவதாகச் சொன்னார். மாலை பத்து மணி என்றதும் எனக்கு வியப்பு ஏற்பட்டது; ஒருவேளை அவசரத்தில் இரவு என்று சொல்வதற்குப் பதிலாக மாலை என்று சொல்லியிருக்கக் கூடும் என்று தவறாகப் புரிந்துகொண்டு, “நீங்கள் மாலை 10 மணிக்கு என்று கூறியபோது இரவு பத்து மணிக்கு என்றுதானே சொல்ல நினைத்தீர்கள்?” என்றேன். “அப்படியொன்றும் இல்லை; மாலை 10 மணிக்குத்தான்” என்று அவர் அழுத்தந்திருத்தமாகக் கூறியதோடு, மாலை 6 மணி முதல்

12 மணி வரை மாலை எனச் சொல்வது அவர்கள் வழக்கம் என்றும், 12 மணிக்குப் பின்னரே இரவு தொடங்குவதாகவும் கூறினார். அப்போதுதான் நான் இரவில் படிப்பது வழக்கம் என்று சொன்னபோது அவருக்குத் தூக்கி வாரிப் போட்டதன் காரணம் விளங்கியது.

சோவியத் யூனியனில் இளவேனிற் காலம், கோடை காலம், இலையுதிர் காலம் என்னும் நான்கு கால வேறுபாடுகள் காணப்படினும் நமக்கு எப்போதும் குளிராகவே தோன்றும். இளவேனிற் காலத்தைத் 'தளிர்ப் பருவம்' எனலாம். அக் காலத்திலேதான் எங்கும் செடி கொடி மரங்களெல்லாம் தளிர் விட்டுப் பூக்கத் தொடங்கும். கோடை காலத்தில் பூங்காக்களிலெல்லாம் பல வண்ண மலர்கள் எழிலுறப் பூத்துக் குலுங்கும். மெல்லிளங் காற்றில் அவ் வழகிய மலர்களும், பின்னிப் பிணைந்த கொடிகளும், இலை அடர்ந்த மரங்களும் ஆடி அசையும் வேளையில் காண்போர் உள்ளத்தில் இன்பம் பொங்கும். கோடையில் பலர் நகரின் வெம்மை தாங்காது காட்டுப்புறங்களுக்குச் சென்று காலங் கழிப்பர். கோடையில் பள்ளிகள் மூடப்படுவதால் இளஞ் சிறார்களும், மாணவர்களும் நாட்டின் பல்வேறு இடங்களைக் காணச் செல்வதுண்டு

இலையுதிர் காலம் தொடங்கினால் நமக்குக் கவலை தோன்றும். அத்தகைய காலத்தை நாம் நம் நாட்டிற் கண்டதில்லை. மரங்களினின்று இலைகள் உதிர்ந்து வெறுங் கிளைகளே தோற்றமளிக்கும். காணுமிடமெல்லாம் அடி மரமும், வெற்றுக் கிளைகளுமே தென்படும். இலையற்ற மரங்களை நோக்கும்போது இரக்கமும் வியப்பும் மாறி மாறி அரும்புவதோடு, இயற்கைக் கோலத்திலும் நம் மனம் ஈடுபடும். செல்வக் குடியில் பிறந்து சீரும் சிறப்புமுடையவராய் வாழ்ந்தோர் வறுமையுற்று உற்றார் உறவினரின்றித் தனியராய் இருப்பதையும் நினைவுறுத்தும்.

பனிப் பஞ்சு

வெண்பனிக் காலத்தைக் காணும்போது நமக்கு ஒரே புதுமையாய் இருக்கும். வெண்பனித் துகள்கள், வானிலிருந்து இடையறாது விழுந்த வண்ணம் இருக்கும். அவை எங்கும் நிரம்பிப் பார்க்குமிடமெல்லாம் ஒரே வெண்மையாய்க் காட்சியளிக்கும். 'தூய வெண்மை' என்பதன் நல்லழகை இவ் வெண்பனியிலேதான் இனிது காணலாம். 'இயற்கையே வெள்ளாடை உடுத்துத் துறவுக் கோலம் பூண்டிருக்கிறதோ!' என்னும் ஐயம் நம் உள்ளத்தில் அரும்பும். வெண்பனி கொட்டிக் கொண்டிருந்தாலும் சாலையில் போக்குவரத்து ஒழுங்காக நடப்பதற்கு இடையூறு நேராமல் சாலைகளைப் பெருக்கிக் கொண்டே இருப்பர். இவ் வெண்பனிக் காலத்தை அந் நாட்டவர் பெரிதும் விரும்புகின்றனர். சிறுவர் 'ஸ்லெட்ஜ்'களில் (Sledges) அமர்ந்து மேடான இடங்களிலிருந்து பள்ளமான இடங்களுக்குச் சறுக்குவார்கள். நம்பியரும், நங்கையரும் வெண்பனியில் சறுக்கிக்கழிகளைக்'(Ski) கொண்டு சறுக்கி விளையாடுவார்கள். வெண்பனி விழுந்து படிந்தபின் பனிக் கட்டியாய் மாறும். பனிக்கட்டியில் சறுக்குதற்குரிய 'பூட்ஸ்'களை (Skates) அணிந்து கொண்டு அழகுறச் சறுக்கி ஆடி மகிழ்வார்கள். பனிக் கட்டி படிந்த இடத்தில் 'ஐஸ் ஹாக்கி' (Ice Hockey) விளையாடுவதுண்டு.

பருவ நிலை மாறுபாடுகளுக்கு ஏற்ப மக்களின் உடைகளும் மாறுவது இயல்பே. கடுங் குளிரில் செவ்வையாக உடை அணிந்து அதன் மேல் பெரிய 'மேலங்கிகளை' (Over coats) மாட்டிக் கொள்வர். சில விலங்குகளின் அதளும், மென் மயிரும் குளிர் கால உடைகளைச் செய்வதற்குப் பயன்படுகின்றன. கைகளில் கதகதப்பான கையுறைகளை (gloves) அணிந்திருப்பர். பொதுவாக மக்களுக்குத் தேவையான எல்லா உடைகளும் தைத்தே விற்கப்படுகின்றன. ஆயினும் தனியே அளவு கொடுத்தும் தைத்துக் கொள்ளலாம்.

வெயிலும் குளிரும் உலகில் சில இடங்களில் மிகுதியாயும், சில இடங்களில் குறைவாயும் இருக்கின்றன மக்கள் உண்ணும் உணவும் அவற்றைப் பெரிதும் பொறுத்தேயுள்ளன. இயற்கை அன்னை எவ்வெவற்றை வழங்குகிறாளோ, அவ்வவற்றை அவரவர்கள் உண்டு, உடலோம்பி வருகிறார்கள். சோவியத்து யூனியனில் மக்கள் பெரிதும் புலால் உண்கிறார்கள். மரக்கறி உணவை மட்டும் உண்டு வாழலாமென்று அங்குள்ள ஒருவரிடம் கூறினால், அவர் நம்மை வியப்போடு நோக்குவார். அங்கு கோதுமை, அரிசி, மக்காச் சோளம் உள்ளிட்ட பல்வகை உணவுப் பொருள்கள் கிடைக்கின்றன. பால், தயிர், வெண்ணெய், நெய், பல்வகைப் பாலாடைக் கட்டிகள் ஆகியவையும் மிகுதி; பழங்களுக்கும் குறைவில்லை.

தேவைக்கேற்ற ஊதியம்

அலுவலகங்களில் அலுவலர் பலரும் எட்டு மணி நேரம் வேலை செய்கின்றனர். அந்த அளவை ஏழுமணியாகவும், சிற்சில தொழிலகங்களில் ஆறுமணியாகவும் குறைக்க அரசாங்கத்தினர் முடிவு செய்துள்ளனர். காலை ஒன்பது மணிக்கு வேலை நேரம் தொடங்குகிறது. மக்கள் பேரார்வத்துடன் கடுமையாக உழைகிருர்கள். பொருள் வளத்தில் சோவியத்து நாடு உலகிலேயே முதலிடம் பெற வேண்டும் என்ற அடிப்படை நோக்கமே அவர்களை ஊக்கி வருகிறது. இன்றைய சமுதாயத்தில் உழைப்புக்கு ஏற்ற கூலி கிட்டுகிறதே ஒழியத் தேவைக்கு ஏற்ற ஊதியம் கிட்டவில்லை. ஒருவனுடைய தேவைக்கு வேண்டுவதைக் கொடுக்க வேண்டும் என்ற குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுகின்ருர்கள்.

மக்கள் தங்கட்கு வேண்டிய பொருள்களை அரசாங்கக் கடைகளில் வாங்கிக் கொள்கிருர்கள். பொருள்களின் விலை அரசாங்கத்தால் இவ்வளவு என உறுதியாக்கப்பட்டு அவ்விலைக்கே பொருள்கள் விற்கப்படுகின்றன. நான் அங்கிருந்த மூன்ருண்டுகளில், ஒவ்வோர் ஆண்டும் நுகர் பொருள்கள் (Consumer goods) பலவற்றின் விலை குறைந்து வருவதைக் கண்டேன். எங்கும் கலப்படமற்ற துப்புரவான பொருள்கள் குறைந்த விலைக்கே விற்கப்படுகின்றன. மக்கள் செறிவு மிக்கிருப்பதால், பொருளை வாங்குவதற்கு அணி வரிசையில் நிற்க வேண்டியிருக்கும். "கூம்" "ஸும்" போன்ற பெரிய அரசாங்கக் கடைகளில் வழக்கமாய் இருக்கும் நீளணியில் நெடு நேரம் காத்து நின்று வாங்குவது நமக்கு எரிச்சலாக இருக்கும்.

கலைவளர்க்கும் 'மெட்ரோ'

மக்கள் போக்கு வரவிற்குப் பஸ்ஸுகளும் டிராலி பஸ்ஸுகளும், மின்னியங்கு வண்டிகளும், இரயில்களும் உதவுகின்றன. பூமிக்கடியில் அடிக்கொருதடவை ஓடும் இரயிலைக் (மெட்ரோ) காணும் போது நமக்கு அது ஒரு புதுமையாய்த் தோன்றும். தரை மட்டத்திலிருந்து ஒவ்வொரு மெட்ரோ நிலையத்திற்கும் இறங்கவும் ஏறவும் படிகள் அமைக்கப்பட்டு, அவை மின்சாரத்தால் இயக்கப்படுகின்றன. நாம் படியில் போய் நின்றுகொண்டால், மெட்ரோ நிலையத்திற்குள் செல்லலாம். அப்பொழுது வெளியிலிருந்து வருகிறவர்கள் படியில் ஏறி நின்று தரைமட்டத்திற்கு வருவார்கள். படிகளில் நின்றவண்ணம் இறங்குவதும், மேலே ஏறுவதும் பார்க்கப் பார்க்க அழகாய் இருக்கும். ஒவ்வொரு மெட்ரோ நிலையத்தையும் ஒரு கலைக் கோயில் என்றே கூறலாம் மெட்ரோ நிலையங்கள் வகைவகையான விளக்குகளால் அணி செய்யப்பட்டும், வித விதமான வண்ணங்கள் தீட்டப்பட்டும், பலதிறப்பட்ட பளிங்குக் கற்களால் கட்டப்பட்டும், பற்பல விநோதமான சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பட்டும் காண்பார் உள்ளத்தைக் கொள்ளைக் கொள்ளத் தக்கனவாய் அமைந்துள்ளன. மெட்ரோ நிலையம் கோடையில் குளிர்ச்சியாகவும், குளிர் காலத்தில் கதகதப்பாகவும் இருக்கும். மெட்ரேவிலும் பஸ்ஸிலும் பயணம் செய்யும் மக்கள் ஏதேனும் நூலைப் படித்த வண்ணம் இருப்பார்கள்.

கோர்க்கி பூங்கா

மாஸ்கோவில் பல பூங்காக்களை அழகாக அமைத்துள்ளனர். மிகவும் பெரிய பூங்காவைப் "பண்பாட்டுப் பூங்கா" என்றும் "கோர்க்கி பூங்கா" என்றும் சொல்லுகிருர்கள். அதில் நூலகங்களும், படிப்பகங்களும், திரைப்பட அரங்கங்களும், நாடக மேடைகளும், சர்க்கஸ் கூடாரங்களும், விளையாட்டுக் கூடங்களும், இன்பப் பொழுது போக்குக்கான பல சாதனங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவை மக்கள் அமைதியாகக் கருத்தூன்றிப் படிப்பதற்கும் சிந்திப்பதற்கும் ஏற்றனவாகவும், உலாவுதற்கும் தகுந்தனவாகவும் உள்ளன.

புலவர்கள் பெயராலும் சிந்தனையாளர்கள் பெயராலும் பொருட்காட்சிச் சாலைகள் பலவற்றைக் கட்டி, அப்பெருமக்கள் படித்த நூல்கள், பயன் படுத்திய பொருள்கள் முதலியவற்றைத் தொகுத்து வைத்துள்ளனர் அவற்றுள், அங்கிருக்கும் லெனின் பொருட்காட்சிச்சாலை தனி மாண்புடையது.

கல்விக்கு மிகுந்த உயர்வு அளிக்க வேண்டும் என்னும் நோக்குடன், சோவியத்து யூனியனிலேயே மிக உயரமானதாக மாஸ்கோ பல்கலைக் கழகத்தைக் கட்டி, "லமனேஸவ்" என்ற பேரறிஞரின் பெயரை

அதற்குச் சூட்டியுள்ளனர். அதில் யான் கண்டபோது 22,000 மாணவர் கற்றனர். லெனின் குன்றில் கட்டப்பட்டுள்ள அப் பல்கலைக்கழகம் 32 மாடிகளைக் கொண்டுள்ளது. அங்குள்ள விடுதியில் எண்ணற்ற அறைகள் அமைந்துள்ளன. ஒவ்வோர் அறையிலும் ஒவ்வொரு நாள் தங்க நினைத்தால் அங்கிருக்கும் எல்லா அறைகளிலும் தங்குவதற்கு ஏறத்தாழ 56 ஆண்டுகள் ஆகும் எனச் சொல்கின்றனர்.

3250 நூல் நிலையங்கள்

மாஸ்கோ, நூல் நிலையங்களுக்குப் புகழ் பெற்றது. மாஸ்கோவில் மட்டும் 3250 நூலகங்கள் உள்ளன என்றும், அவற்றில் 13 கோடி நூல்கள் இருக்கின்றன என்றும் கூறுகின்றனர். இரு கோடி புத்தகங்கள் சீராக அடுக்கப்பட்டு அமைந்துள்ள லெனின் அரசாங்க நூல் நிலையத்தைப் பார்ப்போர் இறும்பூதெய்துவர். பாரிசில் உள்ள தேசிய நூல் நிலையத்தையும், இலண்டனில் உள்ள பிரிட்டிஷ் பொருட்காட்சிசாலை நூல் நிலையத்தையும் பார்த்திருப்பதால், உண்மையில் இதுவே பெரியது என்று உறுதியாகக் கூறத் தோன்றுகிறது. லெனின் அரசாங்க நூலகத்தில் சில தமிழ் நூல்களும் இடம் பெற்றிருக்கின்றன.

உலகிலுள்ள மிகப் பெரிய நாடக அரங்கனுள் ஒன்றான "பல்ஷோய்" அரங்கத்தில் முதல் தரமான பேசாக் கூத்து (Ballet), இசைக் கூத்துக்களையும் (Opera) காணலாம். அங்குப் பல கலை அரங்கங்களில் ருஷ்ய நாடகங்களும், வெளிநாட்டு நாடகங்களும் நடித்துக் காட்டப்படுகின்றன. கலை, பல் வகைப் புதுமையோடும் அழகோடும் களிநடம் புரிவதைக் கண்டு மகிழலாம். மாஸ்கோவிலுள்ள மாபெரும் இசை அரங்கத்தை, அந்நாட்டின் தலைசிறந்த இசை அமைப்பாளரும் இசை உலகப் புகழ்பெற்றவருமான "செகோவோஸ்கி"யின் பெயரால் வழங்குகின்றனர். அங்குள்ள இசைக் கல்லூரியில் ஐரோப்பிய நாட்டு இசை வல்லுநர்களின் இசை நுணுக்கங்களை மாணவர் ஆழ்ந்து பயின்று வருகின்றனர்.

லெனின் உடல்

செஞ்சதுக்கத்தி லுள்ள 'கிரெம்லின்' கோட்டைக்குள் காணவேண்டிய இடங்கள் பலவாம். அங்கிருக்கும் 'மசோலி'யத்தைக் காண்பதற்கு வெண்பனி கொட்டினாலும் கடுங்காற்று அடித்தாலும் மக்கள் வரிசை வரிசையாய் நின்று கொண்டிருப்பார்கள். மசோலியத்தில் லெனின், ஸ்டாலின் ஆகிய பெரியோர்களின் உடல்கள் சிறிதும் கெடாமல், அறிவியல் முறையில் பாதுகாக்கப்பட்டுக் கண்ணாடிப் பேழைகளில் வைக்கப்பட்டுள்ளன. பெருந்தலைவர் இருவரும் தத்தம் வழக்கமான உடை அணிந்து உறங்கிக் கொண்டிருப்பது போலவே காணப்படுகிறது. நம் நாட்டில் பெருங்கோயில்களுக்கு முக்கியத் திருவிழாவின் போது மக்கள் கூட்டம் கூட்டமாக செல்வது போல, அங்கும் திரளான மக்கள் நெடு வரிசையில் எப்பொழுதும் நின்ற வண்ணமாய் இருப்பார்கள். இன்று லெனின் உடல் மட்டும் அங்கு வைக்கப்பட்டு இருக்கிறது.

மக்களின் உழைப்பு

"உலகிலேயே முதலில் புரட்சியை ஏற்படுத்தியவர்களும் யாங்களே! போர் வெறி கொண்டு அலைந்த ஜெர்மானியர்களை வென்று முறியடித்தவர்களும் யாங்களே! முதல் ஸ்புத்னிக்கை விண்ணில் செலுத்தியவர்களும் யாங்களே; இதுவரை அறியப்படாமல் இருந்து வந்த சந்திரனின் மறுபகுதியின் தோற்றத்தை நிழற்படம் எடுத்தவர்களும் யாங்களே!" என்றெல்லாம் சோவியத்து மக்களுட் சிலர் பெருமையுடன் கூறுவதைக் கேட்டிருக்கிறேன்.

உலகில் அமைதியை நிலை நாட்டவும், சோவியத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பேரளவு உயர்த்தவும், தேவையான நுகர் பொருள்களைப் பெருக்கி அவற்றைக் குறைந்த விலையில் விற்கவும், மக்களுடைய வேலை நேரத்தைப் படிப்படியாகக் குறைத்து, ஓய்வு நேரத்தை அதிகப் படுத்தவும், ஓய்வு நேரத்தை இன்பமாகப் போக்குவதற்குரிய சாதனங்களை மிகுதிப் படுத்தவும் பன்னாட்டு அரிய நூல்களை ருஷ்ய மொழியில் பெயர்க்கவும், ருஷ்ய நாட்டு அறிஞர்கள் எழுதியுள்ள சீரிய நூல்களைப் பிற மொழிகளில் பெயர்த்து வெளியிடவும் முற்பட்டுள்ளனர்; பொதுவுடமைக் கொள்கையின் நோக்கங்களை நனவாக்கக் கடுமையாக உழைத்து வருகின்றனர் சோவியத்து நாட்டு மக்கள்.

ஊக்கமும் உயர்வும்

எச். வைத்தியநாதன்



நம் சங்கத்தின் பொருளாளரான திரு. எச். வைத்தியநாதன் நெல்லைமாவட்டம் மேலப்பாவூரில் 7-6-1919ல் பிறந்தார். வடமொழியும், தென் தமிழும் நன்கறிந்து புலமை பெற்ற இவர் ஹிந்தி, ஆங்கில மொழிகளையும் நன்கு பயின்றவர் சென்னை திருவல்லிக்கேணி தேசிய பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராயுள்ளார். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் நூல்கள் இயற்றியிருப்பதுடன், வடமொழி, தமிழ் நாடகங்களில் நடிக்கவும் செய்வார். இவரது நூல்களைப் பலபள்ளிகளில் துணைப்பாடமாக வைக்கப் பெற்றுள்ளன. 'பிரதிக்ஞை' என்ற இவரது நாடகம் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டிதழ் பெற்றது.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம் ஓர் அன்பர் தினந்தோறும் வந்து உரையாடி மகிழ்வது வழக்கம். அவ்வாறு பேசிக் கொண்டிருக்கும் போது 'கடவுளை நேரில் எப்படிக் காண்பது?' என்று கேட்பார். அதற்கு ஏற்றவாறு ஸ்ரீபரமஹம்ஸர் பதில் சொல்வார். இவ்வாறு, கடவுளை எப்படிக் காண்பது என்ற வினாவை மாத்திரம் ஸ்ரீபரமஹம்ஸரிடம் தினந்தோறும் அந்த நண்பர் மறவாமல் வற்புறுத்திக் கேட்பதும், அதற்கு உசிதம் போல் அவ்வப்போது ஸ்ரீபரமஹம்ஸர் விடையளிப்பதும் தவறாமல் நிகழ்ந்து வந்தன. உலகத்திலுள்ள எத்தனையோ பொருள்களை நேரில் பார்ப்பது போலக் கடவுளையும் பார்த்து விடலாம் என்று அந்த நண்பர் கருதி தினந்தோறும் வினவினார்; பொறுமையை இழக்காமல் அவரது வினாவிற்கு ஸ்ரீபரமஹம்ஸரும் ஏதேனும் பதில் கூறி வந்தார்.

வழக்கம் போல ஒருநாள் ஸ்ரீபரமஹம்ஸரிடம் உரையாடும் போது நண்பர் "கடவுளை நேரில் காண்பதுபற்றி எனக்குப் புரியும்படியாகச் சொல்ல மாட்டேன் என்கிறீர்களே" என்றார். அன்று அவர் விருப்பப்படியே அவருக்குப் புரியும் வகையிலேயே விடையளிக்க ஸ்ரீபரமஹம்ஸர் எண்ணினார். 'கடவுளைத் தானே நேரில் காணவேண்டும்? வாருங்கள்; வழி சொல்கிறேன்', என்று கூறி எழுந்து நண்பரை உடனழைத்துக் கொண்டு ஆழம் நிறைந்த ஒரு நீர் நிலைக்குப் போனார். "நீரில் இறங்கிக் கரையோரமாக உள்ளே முழுகுங்கள்; பின்னர் வழி சொல்கிறேன்" என்றார்.

'தமக்கு ஏதோ புதிய மந்திர உபதேசம் செய்து கடவுளைக் காட்டவே குருநாதர் நீராடச் சொல்கிறார்' என்று கருதிக் கொண்டு உற்சாகத்தொடு நண்பர் நீரில் இறங்கி முழுகினார். உடனே ஸ்ரீபரமஹம்ஸர் விரைந்து சென்று முழுகியிருக்கும் அந்த நண்பர் நீருக்குள்ளிருந்து மேலே எழவொட்டாமல் தம் கையால் அவர் தலையை அமுக்கிப் பிடித்தார். நண்பர் இதனை எதிர்பாராததால் பயந்து மேலே எழ முயன்றார். ஸ்ரீபரமஹம்ஸரோ கையை விடாமல் தம் வலிமையனைத்தையும் செலுத்தி மேலும் அவர் தலையை அழுத்தினார். அதனால் நண்பர் மூச்சுத் திணறித் திக்குமுக்காடித் தம் முழு வலிமையையும் செலுத்தி ஸ்ரீபரமஹம்ஸர் கையையும் உந்தித்

தள்ளிக் கொண்டு மேலே எழுந்து கரையேறினர். அவருக்குச் சுவாசம் நிதானமாகிப் பேச்சு வரச் சில நிமிடங்களாயின. ஸ்ரீபரமஹம்ஸர் மௌனமாகப் புன்சிரிப்போடு அவரைப் பார்த்துக் கொண்டு நின்ருர். நண்பர் பேசத் தொடங்கினர்.

"என்ன இப்படி மூச்சுத் திணற வைத்து விட்டீர்களே?"

"இல்லையே."

"என்ன! இல்லையா? இன்னும் அரைக் கணம் தாண்டினல் என் உயிர் போயிருக்குமே!"

"நீர் கடவுளை நேரில் காண வேண்டும் என்றீரல்லவா!"

"ஆமாம்; உயிர் போய்விட்டால் பரலோகத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று உபதேசம் செய்ய இப்படிச் செய்வீர்களா?"

"இல்லை; நான் அமுக்கும்போது உம் உயிரைக் காத்துக் கொள்ள எவ்வளவு வேகத்தோடும், ஆத்திரத்தோடும், ஆதங்கத்தோடும் நீர் செயலாற்றினீரோ அவ்வளவு வேகமும், ஆத்திரமும், ஆதங்கமும் கடவுளைக் காணும் செயலிலும் இருக்குமானல் நிச்சயமாகக் கடவுளைத் தரிசித்து மகிழலாம். உமக்கு அப்படி இருக்கிறதா?"


நண்பருக்கு விஷயம் விளங்கியது. பேசாமல் வாயடைத்து நின்ருர்.

இந்த வரலாற்றிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டிய வேருேர் உண்மையும் உண்டு. கடவுளைக் காண்பதற்கு எத்தனை ஆர்வமும், வேகமும், ஆதங்கமும், முயற்சியும் வேண்டுமோ அவ்வளவு எந்த நல்ல காரியத்தை நிறைவேற்றுவதற்கும் வேண்டுவது அவசியம் என்பதே அது. எந்தப் பணியிலும் மேலெழுந்தவாரியாக மட்டும் ஈடுபடுவதாலே அந்தப் பணியின் முழுப் பயனை அடைந்துவிடுவோம் என எண்ணுவது மடமையாம். உழைக்காமல் எவருமே ஊதியம் பெற இயலாது.

எனவே, ஒருவர் எடுத்துக் கொள்ளும் காரியம் நல்லதாயிருக்க வேண்டும்; அந்த நல்ல பணியைப் பற்றிய சிந்தனையே அனவரதமும் கொள்ளவேண்டும்; பின்னர் அந்தப் பணிக்காக இடைவிடாத உழைப்பும், இடையூறுகள் வந்துற்ற போதும் தளராத ஊக்கமும் நிரம்பக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு ஒரு நல்ல பணியில் ஈடுபடுவோமாயின் வெற்றி தானகவே தேடி வரும். "ஆக்கம் அதர்வினய்ச் செல்லும் அசைவிலா ஊக்கமுடையா னுழை" என்று திருவள்ளுவர் இந்தக் கருத்துப்படவே சொன்ஞர்.

ஒரு தனிப்பட்ட மனிதனின் உண்மையான உழைப்பே இத்தகைய மேம்பாட்டினை அளிக்க வல்லதெனின் பலர் இவ்வாறு ஒரு நல்ல பணியில் ஈடுபடுவாராயின் அதன் சிறப்பினை எடுத்துக் கூறவும் வேண்டுமோ? இழிநிலையிலிருக்கும் நாடு மேன்மையான நிலையை அடைவது இத்தகைய ஊக்கங் குன்ருப்பெருமக்களால்தான். இவ்வாறே ஒரு நாடு தாழ்நிலையடைவதும் சோம்பியிருக்கும் அதன் மக்களால்தான். ஔவையார் இதனையே 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்ருர்:

எனவே ஊக்கமும் உழைப்பும் நிரம்பிய மக்களின் பணியை எதிர்பார்த்து நிற்கிருள் நமது பாரதத் தாய் இன்று. அன்னையின் ஆவலை நிறைவேற்றி வைப்பதில் நாம் அனைவரும் கூட்டுறவோடு பாடுபட்டு உயர்வோமாக!



பூவாளூர் சுந்தரராமன்

நம் சங்க நெறியாளர் குழு உறுப்பினர். சென்னை திருவல்லிக்கேணி ஹிந்து உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து வருகிருர். பல நூல்கள் எழுதியுள்ளார்.

இலக்கியம் எது?

சாண்டில்யன்



திரு. ச. பாஷ்யம் எனும் இயற்பெயரினை யுடைய இந்தப் பிரபல சரித்திர நாவல் ஆசிரியர் திருக்கோவலூரில் 1910 நவம்பர் 6ந் தேதியன்று பிறந்தார். பரிமள ரங்கநாதர் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள மாயூரம் திருவிந்தளூர் இவரது பூர்விகம். சைதாப்பேட்டை மாடல் உயர்நிலைப் பள்ளியிலும் திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரி யிலும் கல்வி பயின்றபின் பத்திரிகைத் தொழிலில் புகுந்தார். சுதேசமித்திரன் பத்திரிகையிலும் ஹிந்துஸ்தான் வார இதழிலும் துணையாசிரியராக இருந்தார். லட்சக்கணக்கான தமிழ் மக்கள் வாசிக்கும் குமுதம் பத்திரிகையில் தொடர்ந்து சரித்திர நாவல்களை எழுதி வருகிறார். இதுவரை 18 பெரிய நவீனங்களையும் பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார். நம் சங்க நெறியாளரில் ஒருவர்.

இலக்கியம் எது? இன்பம் தருவது இலக்கியம். இதை முன்னிட்டுத்தான் காவிய இலக்கணம் வகுத்தவர்கள் இன்ப ரசத்தைக் காவியப் பிரதான ரசமாகக் குறிப்பிட்டார்கள். இராமாயணத்தின் நவ ரசங்களை விவரித்த ஆதிசங்கராச்சாரியார் ''ச்ருங்காரம் க்ஷிதிநந்தினீ விஹரணே'' என்று சுலோகத்தைத் துவங்கி, சிருங்கார ரசத்துக்கு முதலிடம் தந்தார்.

இன்பம் அல்லது ஆனந்தரசமே மனிதனுல் அடையத் தகுந்தது என்று தத்துவ விதிகள் கூறும். ஆண்டவனே ஆனந்த சொருபம் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. 'ரசம்' என்ற சொல் ஆனந்த ரசத்தைக் குறிக்கும் என்று பரத ரிஷியும் கூறுவார். ''ரஸோவை ஸ:''என்று வேதம் ஆண்ட வனைப்பற்றிக் கூறுகிறது. ஆண்டவன் இன்ப மயமாயிருக்கிருன் என்பது அதன் பொருள்.

ஆகவே இன்பரசம் அல்லது சிருங்கார ரசம் பேரிலக்கியங்களின் முக்கிய அம்சம் என்று மேதைகளால் தீர்மானிக்கப் பட்டது. அதில்லாத இலக்கியம் இரண்டாம் பட்சம் என்றும் முடிவு செய்யப்பட்டது. இது ஆதிமுதல் ஒப்புக் கொள்ளப்பட்டிருக் கிறது என்பதைப் பழய தமிழ், வடமொழி இலக்கியங்களைக் கண்டால் தெரிந்து கொள் ளலாம். சிருங்கார ர்சத்தை 'ரஸ ராஜா' என்று வடமொழி இலக்கணம் கூறும்

''ஆனுல் துன்பந் தரும் எழுத்து, இலக்கிய வகையில் சேராதா?'' என்ற கேள்வி எழும். பல பெரும் துன்பக் கதைகள் காவியங்களாகக் கருதப் படுகின்றனவே என்றும் கேட்கலாம். ஆனுல் அதிலும் ஒரு விஷயம் கவனிக்கத்தக்கது. அந்தத் துன்ப சம்பவங்களைப் படிக்கும் போது நமக்கு

இன்ப ரசமே துளிர்க்கிறது. ''என்ன அழகாக எழுதியிருக்கிறான்!'' என்று அந்தத் துன்பக் கதையை எண்ணி ஆனந்தப்படுகிறோம். ஓர் உதாரணத்தை வடமொழிக் கவிஞரொருவர் கூறுகிறார்: ''ஒரு மனிதன் கொலை செய்யப்பட்டுக் கிடப்பதைப் பார்க்கிறோம். அவன் நிலையும் ஓடும் ரத்தமும் விரசத்தை அளிக்கின்றன பார்ப்பவனுக்கு. பீதியையும் கொடுக்கின்றன. ஆனால் அந்தசம்பவம் சித்திரத்தில் எழுதப்பட்டால் ''ஆகா! தத்ருபம் கொலையை எழுதியிருக்கிறான்'' என்று பார்ப்பவன் ஆனந்ப்படுகிறான். வாழ்க்கையின் குருரங்கள் நல்ல சித்திரத்திலும் நல்ல எழுத்திலும் வரும்போது இன்பமே பயக்கும்''

இராமாயணத்தில் ஓர் உதாரணம் இருக்கிறது. இராவணன் அபகரித்துக் கொண்டு போன சீதையைத் தேடிக் கொண்டு வரும் ராமன் கோதாவரியைக் காண்கிறான். அங்கு தானும் சீதையும் நீரில் துளைந்து விளையாடி சிருங்கார லீலைகள் புரிந்ததை எண்ணுகிறான். அதை இலக்குவனுக்கும் எடுத்துச் சொல்கிறான். துன்பமான அந்தக் கட்டத்தில் சிருங்காரத்தைப் புகுத்துகிறான் கவி. ராமனின் துன்பத்தையும் மறந்து நாம் கவி எடுத்து விவரிக்கும் இன்ப ரசத்தை அனுபவிக்கிறோம். இப்படித் துன்பத்தில் சிருங்காரத்தை இணைப்பதை வடமொழி இலக்கியத்தில் ''விப்ரலம்ப சிருங்காரம்' என்று கூறுகிறார்கள்.

ஆகையால் இன்ப ரசம் முக்கிய இடம் பெறாத இலக்கியம் பேரிலக்கியமாகாது. அந்த ரசத்தை சரியாகக் கையாண்டிரா விட்டால் வால்மீகி, வியாசர், காளிதாஸன், கம்பன், ஷேக்ஸ்பியர், கீட்ஸ், இளங்கோவடிகள், முதலிய பல காவியப் புலவர்கள் பெயர்களும் என்றோ மக்கள் மனத்திலிருந்து மறைந்து விட்டிருக்கும். இது இலக்கிய வரலாறு காட்டும் உண்மை.

ஆனால் ஒன்று. ரசத்துக்கும் விரசத்துக்கும் உள்ள வித்தியாசத்தை உணரவேண்டும். வெட்டி விரசக் கதைகளுக்கும் இலக்கிய இன்ப ரச வருணனைகளுக்கும் உள்ள மாறுபாட்டைப் புரிந்து கொள்ள வேண்டும். காவிய இலக்கண எல்லைக் குட்பட்டு, பழய பேரிலக்கிய கர்த்தாக்கள் காட்டியுள்ள பாதைக்குட்பட்டு, வகுக்கப் படும் இன்ப ரசப் பகுதிகள் வரவேற்கத் தக்கவை; காலவெள்ளத்தில் நிலைக்கக் கூடியவை. மற்றவற்றை நாம் விலக்க வேண்டியதில்லை, காலம் விலக்கிவிடும்.

ரசம் விரசமாகாதிருக்க பழுத்த அறிவு வேண்டும், பண்பாடுவேண்டும், பண்பட்ட எழுத்தும் வேண்டும். ரசமாக எழுதுபவனுக்குப் பிறரை மகிழ்விக்கும் எண்ணம் உண்டு, துன்பப்படுத்தும் எண்ணமிருப்பதில்லை. கவி தாகூர் விமர்சனத்தைப்பற்றிப் பின் வரும் கருத்தைச் சொல்கிறார்:

''பழுக்காத காயில் புளிப்பு எப்படி அதிகமிருக்குமோ அப்படியே அறிவு பழுக்காத விமர்சகனிடம் வசவுகள் அதிகமிருக்கும்''

இதையே மற்ற எழுத்துக்கும் சொல்லலாம். நமக்குத் தேவை மனிதனைப் பண்படுத்தும் புண்படுத்தும் எழுத்தல்ல. பண்பட்ட எழுத்து இன்பந்தரும். அதுதான் சிறந்த இலக்கியமுமாகும்.

அன்பு எதையும் கேட்பதில்லை; ஆனால் கொடுக்கிறது. அன்பு எப்போதும் கஷ்டத்துக்கு ஆளாகிறது; ஆனால் அதற்காக அது வருந்துவதில்லை; பழிக்குப்பழி வாங்குவதும் இல்லை.

அன்புள்ள இடத்தில் கடவுள்.

—மகாத்மா காந்தி

வேண்டாத பணம்

திரு. டி. என். சுகி சுப்பிரமணியன்



நெல்லை மாவட்டம் மதவக்குறிச்சியில் 1917ல் பிறந்தார். 1940 முதல் வானொலி நிலையத்தில் எழுத்தாளர், நடிகர், நாடக அமைப்பாளர் ஆகப் பணியாற்றி வருகிறார். இவருடைய 16 நாவல்கள், 3 சிறுகதைத் தொகுதிகள், 3 தொகுப்புகள், ஒரு நாடகம், 2 மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியாகியுள்ளன.

அகில இந்திய ரேடியோ நடத்திய முதல் நாடகப் போட்டியிலும், அரசாங்க ஐந்தாண்டு திட்டநாடகப் போட்டியிலும் பரிசுகள் பெற்றவர். நம் சங்க டைரக்டர்களில் ஒருவர்.

காட்சி 1

[பணக்கார லட்சாதிபதியின் வீடு. ஆடம்பரமான அறைக்குள்அமர்ந்திருக்கிறார் முதலாளி, ஏழைமைத் தோற்றமுள்ள ஐம்பது வயதுக் கணக்கன் நுழைகிறான்]

முதலாளி : என்னய்யா கணக்கப்பிள்ளை. நீபாட்டுக்கு விர்ன்னு உள்ளே வரே, கூப்பிட்டேனா ? மணியடிச்சேனா ? இது என்ன திறந்த மடமா……?

கணக்கன் : முதலாளி……நீங்க எதுக்காக இதைப் பேசுறீங்க என்று எனக்குத் தெரியும்.

முதலாளி : நிறுத்தும்: வரவர உம்முடைய பதிலும் செய்கையும்… அளவுக்கு அதிகமாகப் போனா……

கணக்கன் : நீங்க என்னோட நோக்கத்தை நன்றாகப் புரிஞ்சு கொண்டீர்கள். இப்படி விரட்டி விட்டதாலே நான் பயந்து விட மாட்டேன்.

முதலாளி : ஏது…ஏது…இந்தக் கடைக்கு நீர் முதலாளியா ? நான் முதலாளியா ? அதிக நாள் இருந்த தெம்பிலே பேசுகிறீரா ?

கணக்கன் : இருபது வருஷம்! இதே கடையில் அடியெடுத்து வைச்சவன் உழைச்சேன்; பாடுபட்டேன்.

முதலாளி : சும்மாவா ? தானத்துக்கா ? பணத்துக்குத் தானே ஐயா உழைச்சீர். பாடுபட்டீர்.

கணக்கன் : மாசச் சம்பளத்துக்கு உழைச்சேன்.

முதலாளி: போனஸ்! வருஷத்திலே மூன்று மாசம் போனஸ் சுளைசுளையா வாங்கினது மறந்து போச்சா?

கணக்கன்: இல்லையென்று சொல்லல்லையே. கொடுத்தீர்கள். வாங்கினேன். சாப்பிட்டேன். நீங்கள் நன்ருக வாழ வேண்டுமென...வாழ்த்துகிறேன்.

முதலாளி: அதுதான் மட்டு மரியாதை இல்லாமல் எனதறைக்குள் வருகிறீர்... அதிக நாள் ஒருஸ்தாபனத்திலே இருந்தாலே சொந்தம் கொண்டாட ஆரம்பிக்கிறது.

கணக்கன்: பணம் உங்களுடையது. அதை யார் சொந்தம் கொண்டாட முடியும். இப்போ நான் வந்த விஷயம், எனக்கு 500 ரூபா வேண்டும்.

முதலாளி: 500—ஆ......

கணக்கன்: குறுக்கே பேசாதீங்க.

முதலாளி: நான் முதலாளி.

கணக்கன்: முதலாளி, குறுக்கே பேசாதீங்க. அந்த 500-ரூபாயும் இனுமாகத் தரணும். அது என்னுடை மகள் கல்யாணத்திற்கு உதவும் பணம். நீங்க இதைச் செய்ய வில்லையானு கல்யாணம் நின்று போகும். உங்களுக்கு 500 சிறிய தொகை... எனக்கோ பெருந்தொகை...

முதலாளி: நாலு நாளாக நீர் என்னைப் பார்த்து முழிக்கிற முளியிலே இப்படி ஒரு வினை வரும்னு நினைச்சேன்.

கணக்கன்: நான் கேட்டுவிட்டேன்... கொடுக்க வேணும் உங்க கடமை...

முதலாளி: எந்தக் கணக்கிலே நான் கொடுக்கிறது.

கணக்கன்: கணக்கப்பிள்ளைக்கு, இருபது வருஷம் உழைத்த ஒருவனுக்கு, இனும்...அதுவும் அவனுடைய மகள் கல்யாணத்திற்காக இனும் என்ற கணக்கிலே...

முதலாளி: ரொம்பச் சுலபமா சொல்லியாச்சு—அதுவும் 500-அப்பாடி... ஐந்தா பத்தா..., ஹும்...ஹும்...

கணக்கன்: முதலாளி யோசியுங்க. நான் நல்ல காரியத்துக்கு நயமா அன்பா கேட்கிறேன். உதவுங்க. இந்தத் தொகை உங்கள் மொத்த வருமானத்திலே ஓரணுவுக்குச் சமம்.

முதலாளி: எனக்குப் புத்தி போதனை போதும். 50 ரூபாய்க்கு மேலே ஒரு தம்பிடி தரமுடியாது.

கணக்கன்: அதிலே கல்யாணம் நடத்த முடியாது. 500-ரூபா கொடுங்க.

முதலாளி: கொடுத்து வைச்ச மாதிரி கேட்கிறீர். அத்தனை இறுமாப்பா...

கணக்கன்: இனுமா கேட்டேன். தரலை... பிச்சை கேட்கிறேன்; 500-ரூபா கொடுங்க; கொடுத்துத்தான் ஆகணும்.

முதலாளி: சே...போய்யா வெளியே... பணம் யாரு பணம்?

கணக்கன்: இருபது வருஷ சேவைக்கு இனும் 500 கொடுங்க; இல்லே கடனு கொடுங்க.

முதலாளி: கடன் கொடுத்தா மாதா மாதம் சம்பளம் பிடித்தா அழுவீரய்யா!

கணக்கன்: இவ்வளவு தெரிஞ்சும் கொடுக்க மனசு வர வேண்டாமா? 500 ரூபா நாளைக்கு எனக்கு வேணும்.

முதலாளி: இந்தாய்யா...பணம் தர முடியாது.

கணக்கன்: நல்லா யோசித்துப் பதில் சொல்லுங்க. இந்த வருஷம் உங்களுக்கு ஒரு லட்சத்துக்கு மேலே லாபம்.

முதலாளி: அது உன் பணமா? போய்யா.

கணக்கன்: போகிறேன். வேலையை விட்டுப் போகிறேன். எனக்கு உங்க பணம் ரூ 500ம் கிடைக்கும். வருகிறேன்...முதலாளி...

முதலாளி: நீ போனு இன்னெரு கணக்கன், வராதே போ.

[போகிருர் கணக்கன். முதலாளி வெற்றிச் சிரிப்புச் சிரிக்கிருர்]

காட்சி 2

[ஏழைக் கணக்கன் வீடு. அவரது மகள், கவலையுடன் இருக்கும் தந்தையை விசாரிக்கிருள்.]

மகள்: என்னப்பா...யோசனெ பலமா இருக்குது. ஏன் இன்னிக்குக் கடைக் குப் போகலெ...?

கணக்கன்: எனக்கு வேலெயில்லெ. முதலாளி 500 ரூபா கொடுக்க மறுத்து விட்டார்.

மகள்: அப்படியானல்......

கணக்கன்: அவரிடம் 500ரூபா பெற்றே உன் கல்யாணத்தை நடத்த வேண்டும்.

மகள்: எப்படி?

கணக்கன்: கொஞ்சம் மனச்சாட்சி தொல்லெ செய்யுது. ஆனு எனக்கு 500ரூபா இனும் தராமல் போனுலும் சர்க்காருக்கு ஒரு லட்சம் கிடைக்கட்டும்.

மகள்: அது எப்படி அப்பா ஒரு லட்சம் கிடைக்கும்?

கணக்கன்: கணக்கு எழுதினவங்களுக் குத் தெரியும். இன்னும் மூன்று மாதத் தில் உன் கல்யாணம் நடக்கும்.

மகள்: நீங்கள் ஆபத்தில் அகப்பட்டுக் கொள்ள வேண்டாம்.

கணக்கன்: சம்பளத்தில் பங்கு பெறுவேன். அதுவும் முதலாளி பணம்!

[தந்தை போகிருர்]

காட்சி 3

[முதலாளி லட்சாதிபதியின் பங்களாவின் முன் ஹாலில், அவரது மனைவி கலங்கிய கண்ணுடன் இருக்கும் கணவனைத் தேடிவருகிருள்]

மனைவி: என்ன, மூனு மாசமாக ஒரே கவலெயாக இருக்கிறீங்க? என்ன விஷயம்?

முதலாளி: சும்மா இரு...நீ ஒன்றும் செய்ய முடியாது.

மனைவி: புருஷன் படுகிற கவலெயை பெண்சாதி அறிந்து என்ன பயன் என்று சொல்ல வேண்டாம்.

முதலாளி: ஐயோ...நீ சும்மா இரு.

மனைவி: புதுக் கணக்கன் ஏதாவது மோசடி செய்து விட்டானு?

முதலாளி: அந்தப் பழைய கணக்கன் என்னெ மாட்டி விட்டான். நான் என்ன செய்வேன்?

மனைவி: அவர் மிகவும் நல்லவர்...ஒரு தம்பிடிக்கு ஆசைப்படாதவர்.

முதலாளி: அந்தப் பாவி எழுதி விட்டான் சர்க்காருக்கு, வருமான வரியில் ஒரு பகுதியை நான் மறைத்து விட்டேன், அந்தக் கணக்கில் என்று.

மனைவி: அதனுல் இப்போது என்ன?

முதலாளி: ஒரு லட்சம் வரி கட்ட வேண் டும்.

மனைவி: ஒரு லட்சந்தானே. கட்டி விட்டுப் போங்கள்...நியாயத்தைச் செய்ய வேண்டியது தானே.

முதலாளி: செய்யாவிட்டால் விடுவார் களா? நாளெய தினம் கட்டித் தொலெக் கிறேன்.

மனைவி: செய்யுங்கள். இதற்காக யோசனெ செய்து என்ன பயன்?

முதலாளி: நம்மை நன்ருக வஞ்சம் தீர்த்துக் கொண்டான் கணக்கன்.

மனைவி: ஜெயில் கியில் என்று வராமல் இத்தோடு போயிற்றே! கட்டிவிடுங்கள்.

முதலாளி: கட்டாவிட்டால் யார் விடுகிருர் கள்?

காட்சி 4

[ஆங்கிலேயர் பாணியில் உடை, நாகரிகமுள்ள ஒருவர், ஏழைக் கணக் கனெத் தேடி வருகிருர். அவருக்குப் பதில் மகள் பதில் கூறுகிருள்.]

ஆபீஸர் : ஏம்மா, வீட்டிலே யார் இருக்கிறது?

மகள் : நீங்கள் யார்?

ஆபீஸர் : நான் ஒரு முக்கிய உத்யோகஸ்தர். உங்களுடைய தந்தையா...கணக்கு வேலை!...

மகள் : ஆமாம் அப்பாவுக்கு என்ன... ஐயோ...

ஆபீஸர் : பயப்படாதீர்கள் அம்மா...அவர் எங்கே? நேரிலே எங்கள் இலாக்கா தங்கள் நன்றியைச் சொல்லும்படி அனுப்பிற்று.

மகள் : எதற்காக?

ஆபீஸர் : அவருடைய உதவியால்தான் வருமான வரியில் ஒரு லட்சம் கிடைத்தது.

மகள் : இவர்கள் வேலை பார்த்த முதலாளி மறைத்த கணக்கில் ஒரு லட்சம் கிடைத்ததா! உங்களுக்கா...

ஆபீஸர் : அது மக்கள் பணம். ஆனால் உன் தந்தைக்கு இரண்டாயிரம் ரூபாய் பரிசு கொடுக்கப் போகிறார்கள்.

மகள் : எவ்வளவு?

ஆபீஸர் : இரண்டாயிரம்

மகள் : எவ்வளவு?

ஆபீஸர் : அதுதான் சொன்னேனே...

மகள் : அந்தத் தொகையை நான் கேட்டதில்லை. என் அப்பா கையில் பார்த்ததில்லை. ரெண்டாயிரம் என்று சொல்லுங்கள் ஐயா.....

ஆபீஸர் : உங்களைப் போன்ற குடும்பத்தாருக்கு இருபது லட்சம் போல அந்தப் பணம். இந்த ரெண்டாயிரம் சர்க்காருக்குச் செய்த உதவிக்காகப் பரிசு.

மகள் : அப்படியா? நன்றி ... அப்பா. அதோ வந்து விட்டார்கள். அப்பா... அப்பா..நமக்கு யோகம் அப்பா...

கணக்கன் : வணக்கம்..நீங்கள் யாரோ? என்னம்மா அத்தனை சந்தோஷம்.

மகள் : நமக்கு...சொல்லுங்கள் ஐயா, உங்கள் வாயால் சொல்லுங்கள். அப்பா அத்தொகையைக் காது குளிரக் கேட்கட்டும்.

ஆபீஸர் : உங்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் பரிசாகக் கொடுக்கப் போகிறார்கள், தாங்கள் தெரிவித்த உதவிக்காக! தங்கள் உதவியால் வருமானவரி ஒரு லட்சம் சர்க்காருக்குக் கிடைத்ததல்லவா...

கணக்கன் : அப்படியா.. வரட்டும்.. அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்... சர்க்கார் உதவிக்கு என் நன்றி...

ஆபீஸர் : உங்களுக்கு இத்தொகை விரைவிலேயே வந்து விடும் என்று எதிர்பார்க்கிறேன்.

கணக்கன் : எனக்கு ஒரே மகள். அவள் கல்யாணம் நடத்த அப்பணம் வந்துதான் முடிய வேண்டும்.

ஆபீஸர் : அதுவும் நல்ல காரியத்துக்கு உபயோகப்படுகிறது. நான் வருகிறேன். [போகிறார்]

கணக்கன் : செய்யுங்கள் சார்...குட்-பை...

மகள் : அப்பா...அப்பா இப்பதான் நிறையப் பணம் வருதே எனக்கு நிறைய நகை போடணும்; நல்ல நல்ல பட்டு எடுக்கணும். என்னப்பா ஒன்றும் சொல்லவில்லை...

தகப்பனார் : பணம் கையிலே வரட்டும்... அப்பாலே பேசிக் கொள்கிறது.

மகள் : வந்த பிறகு அவ்வளவு இவ்வளவு என்று சொல்லக் கூடாது. எனக்கே இரண்டாயிரமும் தந்து விடணும்.... அப்பதான் மாப்பிள்ளை வீட்டிலே என்னை மதிப்பா வைப்பாங்க.

தகப்பனர்: இன்னும் என்ன கோட்டை கட்டணுமோ....அத்தனையும் கட்டு.

(தந்தையும் மகளும் சிரித்து மகிழ் கிறர்கள்.)

காட்சி 5

[முதலாளி வீட்டு அதே பெரிய ஹால். அவரது மனைவி அங்கு வரு கிறள்.]

மனைவி: பழைய கணக்கப் பிள்ளை மகள் கல்யாணத்திற்கு அழைப்பு வந்ததே நாலு நாளைக்கு முன்னல்...

முதலாளி: அந்தக் கிராதகன் பேச்சை எடுக்காதே, விட்டுத்தள்ளு.

மனைவி: நீங்க கோபப்படுறதிலே அர்த்தம் இல்லை. யார் யாருக்கு எவ்வளவு கொடுத்து வைச்சுருக்குமோ அதுதான் கிடைக்கும்.

முதலாளி: அந்த வேதாந்தம் போதும்... சும்மா இரு.

[வாசலில் ஐயா. ஐயா என்ற குரல்]

மனைவி: யாரது?

கணக்கன்: நான்தானம்மா ... பழைய கணக்கப்பிள்ளை.

மனைவி: வாங்க ...

[உள்ளே வருகிறர்]

முதலாளி: இங்கே எதற்காக வந்தது? என்ன தைரியத்தோடு வந்தது-வெட்க மில்லை, மானம் இல்லை... அட துரோகி.

மனைவி: சும்மா இருங்க வீட்டுக்கு வந்த வங்களை வான்னு கேட்கணும்.

முதலாளி: இந்தச் சண்டாளனை—துரோ கியை—பாவியை—இருபது வருஷம் உண்ட சோற்றுக்கு இரண்டகம் செய்த வனையா ... போ ... வெளியே ... கூர்க்கா..இவனைப் பிடித்து வெளியே தள்...தள்ளு வெளியே.

கணக்கன்: நான் இங்கே ஆறுமாச கால மாக வராதவன் வந்திருக்கிறேன் காரி யத்தோடு. என் மகளுடைய திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. என் மகளுக்கு என் மீது கொஞ்சம் வருத்தம் முதலாளி.

முதலாளி: போய்யா...போ..என் முகத் தில் விழிக்கக் கூடாது...போய் விடு. 2000 ரூபா பரிசு வாங்கின பெருமை யைச் சொல்ல வந்திட்டயோ ..

மனைவி: இப்போ எங்க வந்திங்க?

கணக்கன்: அம்மா ... இந்தப் பணம் 1500-ம் என் பணம் இல்லை. இதைத் தன் பணமாக என் மகள் ஆக்க முயற்சி செய்தாள்...எனக்கு முதலாளி பணத் தில், 500 ரூபா தான் தேவை...எனக்கு வந்த இனும் 2000-த்திலே பாக்கி உள்ள 1500-ரூபா என் பணம் இல்லே...முதலாளி, இதை நீங்கள் எடுத்தாலும் இல்லாவிட்டாலும் உங்கள் பணம்

மனைவி: நிஜமாகவா....

முதலாளி: சும்மா இரு....

கணக்கன்: கையில் கிடைத்த பணம் ரெண்டாயிரமும் தன் கல்யாணத்திற் குச் செலவிட வேண்டுமென்று என் மகள் சண்டையிட்டாள், அழுதாள், விழுந்தாள்...அது பெரிய கதை...எனக் குத் தேவை உங்கள் வழியே ரூ. 500. அதைப் பெற்றேன். மிச்சம் 1500 ரூபாய் உங்கள் பணம்...வணக்கம்.

மனைவி: கணக்கப்பிள்ளை உங்கள் நீதி, நியாயம்...

முதலாளி: ஏனப்பா...நீ என்ன மனுஷப் பிறவிதானு?...நிஜமாக 1966-ம் வரு ஷம் இப்படியும் ஒரு மனுஷன் உண்டா?

கணக்கன்: முதலாளி போல ஒரு மனுஷன் உண்டானல், இந்த ஏழை போல ஒரு மனுஷன் உண்டு...மீண்டும் வணக்கம்.

[கணக்கன் நிதானத்துடன் போகி றர். முதலாளியும் அவர் தம் மனைவியும் வியப்புடன் பார்க்கிறர்கள்.] ●

கோவையில் நூலக வளர்ச்சி

திரு. பி. ஆர். ராமகிருஷ்ணன், எம் பி.

தமிழ்நாட்டிலேயே நூலக வளர்ச்சியில் முதன்மை பெற்று விளங்கும் கோவை மாவட்ட நூலக ஆணைக் குழுவின் தலைவர் திரு. பி. ஆர். ராமகிருஷ்ணன் அவர்கள் இந்திய மக்கள் சபையின் உறுப்பினர். சிறந்த தொழிலதிபராக இருப்பதோடு "நவ இந்தியா" நாளிதழைத் திறம்பட நடத்தி வருகிறார்.

தமிழக அரசினரால் 1948-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட நூலகச் சட்டத்தின் அடிப்படையில், 1950-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அமைக்கப்பட்ட எங்கள் நூலகக்குழு, இன்று ஒரு தலைமை நூலகம், 177 கிளை நூலகங்கள், 9 இயங்கு நூலகங்கள் ஆகியவை அமைத்து, மக்கள் அறிவுத்துறையில் வளர்ச்சியடைய வாய்ப்பளிக்கும் நூலகப் பணியினைப் பரப்புவதில் தன்னால் இயன்ற அளவு தொண்டாற்றி வருகின்றது. கோவை மாவட்டத்தில் 5,000 மக்கள் தொகைக்குமேலுள்ள எல்லா கிராமங்களிலும் கிளை நூலகங்களும், 1,000 மக்கள் தொகைக்கு மேலுள்ள எல்லா கிராமங்களிலும் நூல் வழங்கு நிலையங்களும் திறக்கப்பட்டு நூலக நிறைவுத் திட்டத்தினையும் எய்தியுள்ளோம்.

எங்கள் மாவட்டத்தில் கீழ்க்கண்ட நூலகத் திட்டங்களும் அமலாக்கப்பட்டுச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

நூல் வழங்கு நிலையங்கள்:

கிளை நூலகங்கள் திறக்க இடலாத 1,000 மக்கள் தொகைக்கு மேலுள்ள எல்லா கிராமங்களிலும் நூல் வழங்கு நிலையங்கள் திறக்கப்பட்டு அருகாமையிலுள்ள, கிளை நூலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. பள்ளி ஆசிரியர்கள் பகுதி நேரப் பணியாளர்களாகப் பொறுப்பேற்றுள்ளார்கள். இவ்வாறு அமைக்கப்பட்ட 843 நூல் வழங்கு நிலையங்கள் இன்று எங்கள் மாவட்டத்தில் பணியாற்றி வருகின்றன.

இயங்கு நூலகப்பணி

கிளை நூலகங்களோ, நூல் வழங்கு நிலையங்களோ இல்லாத கிராமப்புற மக்களுக்கு நூல் வழங்கவேண்டி 'இயங்கு நூலகம்' ஒன்று மாதந்தோறும் 150 கிராமங்களுக்குச் சென்று உள்ளூர் ஆசிரியர் ஒருவர் மூலம் நூல்கள் வழங்கி வருகின்றது. தற்பொழுது இப்பணியினை விரிவாக்கும் பொருட்டு மேலும் ஓர் இயங்கு நூலகம் துவக்கப்பட்டு இன்னும் 150 கிராமங்களுக்குச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

மகளிர்க்கான நூல் வழங்கு திட்டம்

மகளிர்க்கான நூலகத் திட்டத்தின் கீழ் வீடுதேடி நூல் வழங்கும் 'இயங்கு நூலகங்கள்' இம்மாவட்டத்தின் எல்லா முக்கிய நகரங்களிலும் பணியாற்றி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் துவக்கப்பட்ட முதல் இயங்கு நூலகம் நம் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களால் 20—9—62ந் தேதியன்று கோவை நகரில் துவக்கிவைக்கப்பட்டது. இத்தகைய இயங்கு நூலகங்கள் அவர்களாலேயே சிங்காநல்லூர், மேட்டுப்பாளையம், உடுமலைப்பேட்டை ஆகிய நகரங்களிலும், மாநில நூலக நெறியாளர் உயர்திரு., நெ. து. சுந்தரவடிவேலு அவர்களால் ஈரோடு, பொள்ளாச்சி ஆகிய நகரங்களிலும் தொடங்கப்பட்டு மிக வெற்றிகரமாக

நடைபெற்று வருகின்றன. இவ்வியங்கு நூலகத்தில் ஒரு பெண் நூலகரும் ஒரு பெண் உதவியாளரும் வீடுதோறும் மாதமிரு முறை சென்று உறுப்பினர்களாகச் சேரும் பெண்களுக்கு நூல்களை வழங்குவார்கள். உறுப்பினர்களிட மிருந்து மாதச் சந்தாவாக 25 காசுகள் மட்டுமே வசூலிக்கப்படும், எவ்வித டிபாசிட் தொகையும் இவர்களிடமிருந்து பெறுவதில்லை இத்திட்டம் விரைவில் திருப்பூர், கோபி, தாராபுரம் ஆகிய நகரங்களுக்கும் விஸ்தரிக்கப்படவிருக்கிறது.

பள்ளிமாணவர்களுக்கான
நூல் வழங்கு திட்டம்

ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு நூல் வழங்கும் திட்டம் கடந்த 5—3—66ந் தேதியன்று கோவையில் துவக்கப்பட்டது. கோவை நகரிலுள்ள 72 ஆரம்பப்பள்ளிகளுக்கும் மூன்று சக்கர வாகன மூலம் கொண்டு செல்லப்பட்டு. அந்தந்தபள்ளி ஆசிரியர்கள் மூலம் குழந்தைகளுக்கேற்ற நூல்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு முறையும் பள்ளியொன்றுக்கு 100 நூல்கள் வீதம் மாதமொரு முறையாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தினையும் இயங்கு நூலகங்கள் பணியாற்றும் எல்லா நகரங்களுக்கும் விஸ்தரிக்கத் துரித நடவடிக்கை யெடுத்து வருகிறோம்.

வாய்ப்பும் வசதியும் கிடைக்குமிடங்களிலெல்லாம் எங்கள் நூலகப்பணியினை விரிவாக்கி வருகிறோம். மருத்துவமனைகள், சிறைச்சாலை, பஞ்சாலைகள், காவல் துறையினரின் பயிற்சிப்பள்ளி, பரம்பிக்குளம் அணைக்கட்டு ஆகிய இடங்களில் தனியாக நூல்கள் வழங்கும் பணி சிறப்புற நடை நடைபெற்று வருகிறது.

மதுரை மாவட்ட நூலக வளர்ச்சி

திரு. வி. அழகப்பன், பி ஏ., பி.எல்.,

மதுரை மாநகரில் திரு. அழகப்பன் இல்லாமல் எந்த நல்ல காரியமும் நடைபெற்றதில்லை எனக் கூறும் அளவுக்கு பொதுப்பணியில் ஈடுபட்டுள்ள திரு. வி. அழகப்பன் அவர்கள் பி.ஏ., பி.எல்., மதுரை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் தலைவராக அதன் தொடக்க முதலே இருந்து வருவதில் வியப்பொன்று மில்லை. மதுரை மக்கள் இவரை 'நூலகத் தந்தை' எனப் புகழ்ந்துரைக்கும்படியாக அம்மாவட்டத்தில் நூலக இயக்கத்தைப் பரப்பியுள்ளார். மதுரை மாவட்ட மத்ய கூட்டுறவு பாங்கின் தலைவராகவும் மாநில கூட்டுறவு பாங்கின் உறுப்பினராகவும் கூட்டுறவு இயக்கத்துக்கும் அரிய சேவை செய்து வருகிறார்.

இந்தியாவில் நூலக வளர்ச்சிக்கென முதன்முதல் 1948 ல் திட்டமிட்டு தனிச் சட்டம் இயற்றிய பெருமை தமிழகத்தைச் சார்ந்ததாகும். இச்சட்டத்தின்படி மாவட்டந்தோறும் நூலக ஆணைக்குழு நிறுவப்பட்டது. மதுரை மாவட்ட நூலக ஆணைக்குழு 1950-ல் அமைக்கப்பட்டது.

நூலகம் தொடங்கப்பட்ட 1952-ம் ஆண்டிலிருந்து இன்றுவரையும் மதுரை மாவட்ட நூலக ஆணைக் குழுவின் தலைவராக நான், என்னாலியன்ற அளவு அப் பணியினைச் ஆற்றிவருகிறேன். இவ்வாண்டில் புதிதாக அமைக்கப்பட்ட மாவட்ட குழுவுக்கும் என்னையே தலைவராகத் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

மதுரை மாவட்ட நூலக ஆணைக்குழு 1952-ம் ஆண்டில் மைய நூலகத்துடன் தொடங்கி, இப்போது 150 நூலகங்களைக் கொண்டு விளங்குகிறது. சாதாரண மக்கள் மட்டுமின்றி மருத்துவமனையில் இருக்கின்ற நோயாளிகளும் தங்கள் கவலையை மறந்திருக்க வேண்டும் என்ற நோக்குடன் திண்டுக்கல், மதுரை ஆகிய அரசினர் மருத்துவமனையில் கிளை நூலகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

நூலக ஆணைக்குழுவினர்

மதுரை மாவட்ட மையநூலகம் 1952-ல் 500 புத்தகங்களுடன் துவக்கப்பட்டது. இன்று மாவட்டத்திலுள்ள எல்லா கிளை நூலகங்களிலும் சேர்ந்து, 3,48,955 புத்தகங்கள் இருந்துவருகின்றன. தொடக்கத்தில் நாள்தோறும் சுமார் 200 பேர் கொண்டிருந்த இடத்தில் இன்று நாள் தோறும் 675 பேர் படிக்க வருகின்றனர். நூலகத்திற்குப் படிக்க வருகின்றனர். ஆண்டிற்கு ஏறத்தாழ 2 லட்சம் பேர் வந்து படித்துச் செல்கின்றனர். சென்ற ஆண்டு வரை எல்லா கிளை நூலகங்களையும் சேர்த்து 11,000 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர்.

இந்தியாவின் எதிர்காலச் சிற்பிகள் எனப் பேசப்படுகின்ற நம் சிறுவர்கள் இளமையிலேயே சிறந்த அறிஞர்களாகத் திகழ வேண்டுமென்ற நோக்குடன் மதுரையிலும் திண்டுக்கல்லிலும் சிறுவர் நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்நூலகத்தில் சிறுவர்களுக்கேற்ற தமிழ், ஆங்கிலப் புத்தகங்களும், மற்றும் அவர்களுக்கேற்ற பத்திரிகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

பெண்கள் நாட்டின் கண்கள் என்று நல்லோர்கள் கூறுகிறார்கள். பெண்களின் அறிவு வளர்ச்சியையும் உயர்வையும்

கருத்தி, மதுரையிலும், திண்டுக்கல்லிலும், கிளை நூலகங்கள் திறக்கப்பட்டு, அவை நன்முறையில் நடைபெற்று வருகின்றன.

பண்ணைப்புரம் கிராமத்தில் ''ஓம் சக்தி மாதர் சங்கத்தாரின்'' இடத்தில் பெண்களுக்கென நூலகமொன்றை ஒரு தனிப்பகுதி நடத்தி வருகின்றது. இந்நூலகத்திலும் மற்றக் கிளை நூலகங்களுக்கும் ஆணைக் குழுவால் வழங்கி வரும் பத்திரிகைகளும் அனுப்பப்பட்டு வருகின்றன.

நாட்டின் பொருளாதார முன்னேற்றம் அங்கு அமைந்துள்ள தொழிலகங்களை பொறுத்துள்ளது. எனவே தொழில் நுட்பங்களை விளக்கும் நூலகங்கள் தொழிற் பேட்டையில் அமைதல் நலம் எனும் நோக்குடன் மதுரையிலுள்ள தொழிற்பேட்டையில் நூலகம் ஒன்றை நிறுவ அரசினர் சுமார் ஓர் ஏக்கர் நிலத்தை அளித்து உதவியுள்ளனர். இந்த இடத்தில் ரூ. 1 லட்சத்தில் கட்டிடம் கட்டத் தீர்மானித்துள்ளனர் ஆணைக்குழுவினர்.

இத்தகைய வளர்ச்சியுள்ள இம்மதுரை மாவட்ட மையநூலகத்திற்கு, சொந்தக் கட்டிடம் இல்லாத குறையை நீக்குதற்கு, மதுரை நகர சபையார் மதுரையி லுள்ள ஏ. வைத்தியநாதய்யர் பூங்காவைத் தரத் தீர்மானித்துள்ளார். அரசினரிடமிருந்து ஒப்புதல் வந்தவுடன் நூலகத்திற்கென்று புதுக் கட்டிடம் நவீன முறையில் நிர்மாணிக்கப்படும். இவ்வாண்டில் 9 கிராமங்களில் நூலகக் கட்டிடம் கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மதுரை நகரில் பெண்களுக்காக, வீடு தேடிச் சென்று நூல்களை வழங்கிப் பெண்களின் அறிவு விருத்திக்காகவும், சௌகரியத்திற்காகவும், மதுரை மாவட்ட நூலக ஆணைக்குழு இயங்கு நூலகம் எனப் பெயர் வைத்து, உந்து வண்டியின் மூலம் நூல்களை (Mobile Library) வழங்கி வருகிறது.

குறைந்த மக்கள் தொகை கொண்ட சிற்றூர்களிலும் மக்கள் நூலக அறிவைப் பெற வேண்டும் எனும் நோக்குடன், கிளை நூலகங்களை மையமாகக் கொண்டு குறைந்த மக்கள் வாழும் கிராமங்களில் பள்ளி ஆசிரியரைப் பகுதிநேர நூலகராக நியமனம் செய்து பள்ளியிலேயே 3 மணி நேரம் பொதுமக்களுக்காகக்காலையிலும் மாலையிலும் நூலகம் நடத்தப்பட்டுவருகின்றது. வீட்டிற்கும் நூல்களை எடுத்துச் சென்று மக்கள் படித்து வருகின்றனர். இதற்கு நூல் வழங்குமுனை எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்நூலக ஆணைக்குழுவின் கீழ் 515 நூல் வழங்குமுனைகள் சிறந்த முறையில் நடத்தப்பட்டுவருகின்றன. *

எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டிய விஷயங்களை எதிர்க்காமல் மௌனம் சாதிப்பது பாபம். அது மனிதனைக் கோழையாக்கி விடுகிறது.

—லிங்கன்.

நூல்கள் தனிமனிதர்களின் வாழ்க்கையை மாற்றியிருப்பது மட்டுமில்லை; தேசங்களின் சரித்திரப் போக்கையுங்கூட மாற்றியிருக்கின்றன. வால்டேரின் நூல்கள் பிரெஞ்சுப் புரட்சிக்கு அடித்தளம் (அஸ்திவாரம்) இட்டன.

உணர்வால் ஒன்றுவோம்

டாக்டர். மு வரதராசனர்

.. ஒற்றுமை ஒற்றுமை என்று அரசியல் மேடைகளில் முழங்கி விடுவதால் பயன் விளையாது. குடும்பம், சமயம், இலக்கியம், பொழுது போக்கு முதலாய பல்வேறு துறைகளில் வளர்ந்திடும் மனநிலையே அரசியலில் நன்மையும் தீமையும் செய்ய முற்படுகிறது. ஆகவே, குடும்பம், சமயம், இலக்கியம் முதலாய துறைகளில் நல்ல உணர்ச்சி—வேற்றுமை வெறி ஒழிந்து உண்மை நாடும் உணர்ச்சி—வளர்ந்தால்தான், அரசியலிலும் ஒற்றுமை நாட்டம் வளரும்; அன்றுதான் நாட்டில் ஆக்கவேலைகளும் பெருகுதல் கூடும்.


இலக்கியத்துறையில் உலகத்தை ஓரளவு மறந்து திளைக்கும் கற்பனை இன்பம் உள்ளது. ஆதலின் இத்துறையில் விருப்பு வெறுப்புக்களை ஒதுக்கி வைத்து உள்ளத்தைப் பண்படுத்தும் வாய்ப்பு மிகுதியாக உள்ளது. இவ்வகையிலேனும் துருவங்களில் நிற்காமல், இதுவே அதுவே என்றும், குணமே குற்றமே என்றும் முழங்கிப் போரிடாமல் ஒருவர் சொல்வதற்கு மற்றவர் செவி சாய்த்து உண்மையை நாடி மகிழலாம்.

தமிழ் நாட்டில் ஒற்றுமை இல்லை என்றும், ஒற்றுமை இல்லாத ஒரு குறையே தமிழ் நாட்டைச் சீர்குலைத்து வருகிறது என்றும் எல்லோரும் கூறுகின்றனர். வடிவு, நிறம், தொழில், பழக்கவழக்கம் முதலிய பலவற்றால் ஒரு தன்மையராக இருத்தலால் ஒரு நாட்டுமக்கள் ஒன்றுபட முடியாது; உள்ளத்து உணர்வால் ஏறக்குறைய ஒரு தன்மையராக வாழும் மக்களே ஒற்றுமையுறுதல் கூடும். 'உணர்ச்சிதான் நட்பாங்கிழமை தரும்.' என்னும் பொய்யா மொழி இருவர் நட்புக்கு மட்டும் அல்லாமல் நாட்டு மக்களின் ஒருமைப்பாட்டுக்கும் பொருந்துவதாகும்.

—'இலக்கியக்கலை' நூலின் முகவுரையிலிருந்து

செங்கை நூலகப்பணி

திரு. டி புருஷோத்தம்



செங்கல்பட்டு மாவட்ட ஆணைக்குழுவின் தலைவரான திரு. டி. புருஷோத்தம் புலமை மிக்கதோர் பழமையான பரம்பரையில் வந்தவர். அஷ்டாவதானம் சபாபதி முதலியார் இவருடைய கொள்ளுத் தாத்தா ஆவார். திருவல்லிக்கேணி ஹிந்து உயர்நிலைப்பள்ளியிலும் சென்னை மாநிலக்கல்லூரியிலும் சிறப்புடன் கல்வியை முடித்து, அரசாங்கத்தில் பொறுப்பு மிகுந்த பல பதவிகளை வகித்தார். இயல்பாகவே தேசப்பற்று மிக்கவர். ஆங்கில ஆட்சிக் காலத்திலேயே பாரதியார் பாடல்களை பள்ளிகளில் பாடமாக வைத்தவர். நாடு விடுதலை பெற்றதும் உத்தியோகத்தை விடுத்து மாநில மேல் சபையில் உறுப்பினரானார். அறுபது வயதாகியும் இளைஞரையொத்து ஊக்கத்தையும் உணர்ச்சியையும் உழைப்பையும் அணியாகக் கொண்ட திரு. டி. புருஷோத்தம் செங்கை மாவட்டத்தில் நூலக வளர்ச்சிக்குப் பெருந்துணையாய் விளங்குகிறார். கலாசாரப் பணியும், நூல்களைப் பயில்வதுமே பொழுது போக்காக உடையவர்.

''தொட்டனைத்தூறும் மணற்கேணி, மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு'' இது வள்ளுவர் வாய் மொழி.

கல்வி கரையில—இது ஆன்றோர் வாக்கு. இதுபோன்ற வாக்குகளினால் மக்களிடையே விழிப்புணர்ச்சி உண்டாயிற்று. இவ்வுணர்ச்சியினை உணர்ந்த சென்னை மாநில அரசினர் 1948-ல் சென்னை நூலகச் சட்டத்தினை இயற்றினர். இச்சட்டம் 1—4—1950 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இச் சட்டத்தின்கீழ் செங்கை மாவட்ட நூலக ஆணைக்குழு 20-7-1950-ல் துவக்கப்பட்டது இக்குழுவில் நியமனம் பெற்ற உறுப்பினர்கள்-10, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்-12; ஆக 22 அங்கத்தினர்கள் இருந்து வருகின்றனர். ஆணைக்குழு, செவ்வனே பணியாற்ற, மக்களின் தேவைக்கேற்ற நல்ல நூல்களைத் தேர்ந்தெடுக்க நூல் தேர்வுக்குழு ஒன்றும், வரவு செலவுகளைச் சீரான முறையில் கண்காணிக்க நிர்வாகக்குழு ஒன்றும் ஆக இரு குழுக்கள் அமைத்துள்ளது. இதைத் தவிர ஒவ்வொரு கிளை நூலகத்திற்கும் ஒவ்வோர் ''உள்ளூர் ஆலோசனைக் குழு'' ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக் குழுக்கள் நூலகங்களின் முன்னேற்றத்திற்கு, உள்ளூர் தேவைகளை அறிந்து, அதற்கேற்ப நடைமுறைகளை வகுத்துக் கொடுப்பதில் ஈடுபட்டு வருகின்றன.

நூலகப்பணி

நூலகச் சட்டத்தின்படி மாவட்ட மத்திய நூலகம் 26-3-1953-ல் செங்கல்பட்டில் துவக்கப்பட்டது. பின்னர் 5000-க்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள ஊர்களில் கிளை நூலகங்கள் துவக்கப்பட்டன. கிளை நூலகம் துவக்க ஊர்களைத் தேர்ந்தெடுக்கும்

போது அந்த ஊரைச் சார்ந்துள்ள சிறு கிராமங்களுடைய மக்கள் எண்ணிக்கையினையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது. 1955 முடிவில் மத்திய நூலகம் உள்பட 12 கிளை நூலகங்கள் பணியாற்றத் தொடங்கி விட்டன. அடுத்த 5 ஆண்டுகளில் மேலும் 22 கிளை நூலகங்கள் புதிதாகத் துவக்கப் பட்டன. ஆக, 1960-ம் ஆண்டு முடிவில் 34 நூலகங்கள் பணியாற்றி வந்தன. மக்களிடையே நூலக இயக்கம் விழிப்புணர்வையும் புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தின. அதன் காரணமாக 105 நூலகங்கள் இன்று மக்களிடையே தொண்டாற்றி வருகின்றன.

எல்லோர்க்கும் பணிபுரியவேண்டும் என்ற உயர் நோக்குடன் கிளை நூலகங்கள் திறக்க முடியாத சிற்றூர்களில் ''நூல்வழங்கு முனை''களையும் நூலகத்திற்கு வந்து நூல்களைப் பெற்றுச் செல்ல இயலாதோர்க்கு ''வீடுதேடி நூல் வழங்கு திட்ட''த்தையும், குழந்தைகள் நலனிற்காக, ''சிறுர் பகுதி'' களையும், மாதர்கள் முன்னேற்றத்திற்காக ''மாதர் பகுதி'' களையும் ஆணைக்குழு நடாத்தி வருகின்றது. அவ்வகையில் இன்று வரை 65 நூல் வழங்கு முனைகளையும் 9 மகளிர் பகுதிகளையும், 2 சிறுர் பகுதிகளையும் 617 வீடுதேடி நூல்வழங்கு திட்ட அங்கத்தினர்களையும் 4 மருத்துவமனை நூலகங்களையும் நூலக இயக்கம் கொண்டுள்ளது. இதைத் தவிர ஒவ்வொரு நூலகத்திலும் பிரதி வெள்ளி பிற்பகல் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டு நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் நூலகத்தைச் சுற்றி 10 மைல் வட்டாரத்திற்குள் உள்ள குக்கிராமங்களுக்கு நூலக ஊழியர்கள் மூலம் ''கிராமிய நூல் வழங்கும் தொண்டு'' நடைபெற்று வருகின்றது.

நூலக இயக்கம் மக்களிடையே எவ்வகைப் பாகுபாடும் இன்றிப் பயன்பட வேண்டும் என்ற நோக்குடன் கட்டணம் ஏதுமின்றி இலவசமாக நூல்களைப்படிக்க நூலகங்கள் பணியாற்றி வருகின்றன.

இல்லங்களுக்கு நூல்களை எடுத்துச் செல்ல விழைவோர். வைப்புத் தொகை செலுத்தி நூல்களை இல்லங்களுக்கு எடுத்துச் செல்லலாம். இக்கட்டணத்தை உறுப்பினர்கள் வேண்டும்போது, திரும்பவும் பெற்றுக் கொள்ளலாம் இவ்வகையில் சுமார் 25,000 அங்கத்தினர்கள் பயனடைந்து வருகின்றனர். 1965-ம் ஆண்டில் நூலகத்தை நேரில் வந்து பயன் படுத்தினேர் 26,12,946 பேர் ஆவர். 14,765 நூல்கள் புதியதாக இவ் வாண்டில் சேர்க்கப்பட்டுள்ளன. 1965-ம் ஆண்டு இறுதியில் எல்லா நூலகங்களிலுமாக சேர்ந்து 2,47,347 தமிழ் நூல்களும், 14,956 தெலுங்கு நூல்களும் 35, 419 ஆங்கில நூல்களும் 3215 இதர மொழி நூல்களும் உள்ளன.

மேற் குறிப்பிட்டுள்ள திட்டங்களுடன் எல்லா கிளை நூலகங்களிலும் ''வாசகசாலை'' களும், ''பார்வை ஏடகங்களும்'' (Reference Section) இணைக்கப்பட்டுள்ளன. வாசகசாலையில் மக்கள் அவரவர் பேசப்படும் மொழிகளை ஒட்டி, தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் முதலிய மொழிகளில், நாளிதழ்கள், வார மாத ஏடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நூலகத்திலும், அன்றுட முக்கியமான செய்திகளை மக்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டுக் கரும் பலகைகளில் எழுதப்பட்டு பார்வைக்கு வைக்கப் பட்டு வருகின்றன.

கட்டிடவசதி:

கிளை நூலகங்கள் நன்முறையில் இயங்க வசதியான இடங்கள் தேவை. இத்துறையில் செங்கை மாவட்ட நூலக ஆணைக்குழு பல இடங்களில் சொந்தமான கட்டிடங்களைக்கட்ட முயன்று வருகின்றது. அவ்வகையில் செங்கற்பட்டு (பொது, பெண்கள், சிறுர்), மதுராந்தகம், செய்யூர், திருக்கழுக்குன்றம், கடம்பத்தூர், சின்னகாஞ்சிபுரம், திருத்தணிகை, வாலாஜாபாத், கத்திவாக்கம், பெரியகாஞ்சிபுரம், புலிகட், பொடத்தூர் பேட்டை ஆகிய 15 நூலகங்கள் சொந்தக்

கட்டிடங்களில் இயங்கிவருகின்றன. இந்நிதியாண்டில்திருவொற்றியூர், பூவிருந்த வல்லி, கடப்பாக்கம், கருங்குழி, பள்ளிப் பட்டு ஆகிய இடங்களில் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அடுத்த நிதியாண்டில் மீஞ்சூர், உத்திரமேரூர், மகாபலிபுரம், குன்றத்தூர், திருவள்ளூர், பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, ஆதம் பாக்கம் ஆகிய இடங்களில் கட்டிடங்களைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

மக்கள் இயக்கம்:

நூலக இயக்கம் மக்கள் இயக்கமாக மாற வேண்டும் என்ற நோக்குடன் ''நேருஜி புத்தக வங்கி'' திட்டமும், வாடகையின்றி இலவசக் கட்டிட வசதித் திட்டமும் மேற் கொள்ளப்பட்டன. அந்த வகையில் இம் மாவட்டத்தில் 76 நூலகங்கள் வாடகை யில்லாக் கட்டிடங்களில் இயங்கி வருகின் றன. ரூ. 40,000க்கு மேற்பட்ட மதிப்புள்ள 15,814 நூல்களை ''நேருஜி புத்தக வங்கி'' திட்டத்திற்கு நன்கொடையாக மக்கள் வழங்கியுள்ளார்கள்.

பாதுகாப்புப் பணி:

நெருக்கடி காலத்தில் நாட்டின் பாது காப்பிற்காக நூலக ஆணைக்குழு ஒவ்வொரு நூலகத்திலும் பாதுகாப்பு நிதி திரட்ட உண் டிகள் வைத்து, நிதி திரட்டி அவ்வப்பொழுது கிடைத்த நன் கொடைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் கொடுத் துள்ளோம்.

சமுகப்பணி:

குடும்பக்கட்டுப்பாடு, ஆரோக்கியவாழ்வு, விவசாய முன்னேற்றம், ஐந்தாண்டுத் திட்டங்கள், கிராமிய மறுமலர்ச்சி சம்பந்த மான துண்டுப்பிரசுரங்கள் பொதுமக்களுக்கு கிளை நூலகங்கள் மூலம் வழங்கப்படுகின்றன. மாவட்ட விளம்பர அலுவலர் அவர்களின் உதவிபெற்று பல இடங்களில் பிரசார பேசும் படக்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கலைப்பணி:

மக்களுடைய கவனத்தை நூலகங்களின் பால் ஈர்க்க ''நூலக வாரம்'' நூலகங்களின் வருடாந்திரக் கொண்டாட்டங்கள் முதலிய வற்றை உள்ளூர் பிரமுகர்களுடைய ஒத்து ழைப்புடன் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டு வருகின்றன. சுதந்திர நாள், குடியரசு நாள் போன்ற தேசீய விழாக் களும், காந்தி ஜயந்தி, நேரு ஜயந்தி, போன்ற தேசியத்தலைவர்கள் பிறந்த நாள் கொண்டாட்டங்களும், உள்ளூர் நூலக ஆலோசனைக் குழுவின் உதவியுடன் சிறப் பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. இது போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் மக்களி டையே நூலக இயக்கம் விழிப்புணர்ச் சியையும், நாட்டுப் பற்றையும், ஏற்படச் செய்து வருகின்றது.

சுழற்கோப்பை:

நூலகங்கள் எல்லா வகைகளிலும் நன் முறையில் இயங்க அவற்றை இயக்கும் நூலகங்கள் உற்சாகத்துடன் பணிபுரிதல் வேண்டும். நூலகர்களின் பணி பாராட்டப் படவேண்டும் என்ற நோக்கத்துடன் ஒவ் வொரு ஆண்டிலும் நன்றாக இயங்கிவரும் நூலகத்திற்கு ஒரு சுழற்கோப்பையை அளிக்க ஏற்பாடு செய்துள்ளது.

நம் தேவைகள்:


நூலக இயக்கம் நடைபெறுவதற்குப் பல சாதனங்கள் காணல் வேண்டும். அவற்றில் மிக முக்கியமானது மக்களுக்கு ஏற்ற நூல் கள். மக்களின் தேவைக்கேற்ற நூல்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. மேலும் குழந் தைகளுக்கேற்ற நூல்கள் கிடைப்பது இல்லை. தனியார் நிறுவனங்கள் லாப நோக்கத்தைக் கருதுவது இயல்பே. ஆகையால் எழுத் தாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சிறந்த பணியை வரவேற்கிறேன். கூட்டுறவுத் துறையில் தமிழகம் வியக்கத்தக்க முன்னேற் றம் அடைந்துள்ளது போல், எழுத்தாளர் கூட்டுறவு முயற்சியும், தமிழ்மொழி வளர்ச்

சியிலும் எழுத்தாளரை ஊக்குவிக்கும் முயற்சியிலும் துரித முன்னேற்றம் அடைய வேண்டும்.

சுதந்திரத்திற்குப்பின் ஆழ்ந்த பொருள் பற்றிய நூல்கள் வெளியிடுவதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளோம். மக்கள் விரும்பிப் படிக்கும் பயனளிக்கக் கூடிய நடைமுறை விஞ்ஞான நூல்கள், தொழில் நுட்ப, நூல்கள் மக்களின் தேவைக்கேற்றபடிக் கிடைப்பதில்லை. குழந்தைகள் பெருமளவில் நூலகங்களைப் பயன்படுத்தி வந்த போதிலும் அவர்களுக்கு ஏற்ற நூல்கள் கிடைப்பதில்லை. 12 முதல் 15 வயதுள்ள குழந்தைகளுக்கு நூல்கள் பெருமளவில் கிடைப்பது இல்லை. எனவே குழந்தைகளுக்கேற்ற பட விளக்க நூல்கள் வெளியிடுவதற்கு அரசினர் மான்யம் வழங்க உத்தேசித்துள்ளனர் மேற்கூறியுள்ள துறைகளில் தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் பணியாற்றுவார்களாக. இதுவரை இச்சங்கத்தினர் வெளியிட்டுள்ள சிறந்த, நல்ல நூல்களைப் போன்று வெவ்வேறு வகையான பொருள் பற்றி இன்னும் பல நல்ல நூல்கள் வெளியிடப் படவேண்டும். நல்ல நூல்கள் நியாய விலைக்குக் கிடைக்கவேண்டும். புத்தக விற்பனைத் துறையில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும். எழுத்தாளர்களும், படிப்போரும் கூட்டுறவு முயற்சியில் நல்ல மன நிறைவு அடைவார்கள் என நம்புகிறேன்.

" வாழ்க எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்.
வளர்க அவர் நற்பணி "

*



ஆர்வி

திரு. ஆர். வேங்கட ராமன் எனும் இயற்பெயருடைய இவர் பிறந்தது 1—1—1921ல் சத்யாக்ரக இயக்கத்தில் சிறை சென்றவர். 'கண்ணன்' பத்திரிகையின் ஆசிரியர். சங்க நெறியாளராக ஆரம்பம் முதலே இருந்து வருகிறார்.



திரு எஸ். வேங்கடசாமி

மாநில அரசில் மக்கள் தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றும் இவர் பி. ஓ. எல்.ஹானர்ஸ் பட்டம் பெற்றுள்ளார். அரசினர் நடத்தும் 'கிராம நலம்' பத்திரிகையின் பொறுப்பாசிரியர். சங்க நெறியாளராகச் சிலகாலம் இருந்தார்.

'தமிழ் உறவு' நூல்கள்

★

இலக்கியம், ஆராய்ச்சி நூல்கள்

கற்பக மலர் ரூ. 2-50

கி. வா. ஜகந்நாதன்

"திருவள்ளுவரின் அறநெறி இறைச் சார்புடையது என்பதை இந்நூலில் நிறுவுகிறார் ஆசிரியர். அறம், பொருள், இன்பம் மூன்றும் ஒன்றே என்பதை நிலைநாட்டுகிறார்."

—தினமணி

"ஆசிரியரின் இலக்கியப் படைப்புக்கள் பலவாயினும் கற்பகமலர் என்னும் நற்பெயர் சூடிய இந்நூல், அமர உலகத்துக் கற்பகமலர் போன்றும், எக்காலத்துக்கும் ஒப்பத் திகழும் திருக்குறள் போலவும் பொலிவுற்று மின்னும் என்று உறுதியாகக் கூறலாம்."

—தமிழ்நாடு

கம்பன் மலர் ரூ. 3-00

(18 பேரறிஞர்களின் கட்டுரைத் தொகுப்பு)

"கம்ப ராமாயணக் கவிதைச் சுவையையும், கம்பரின் அனைத்தும் அறிந்த தெளிந்த உள்ளத்தையும் புரிந்து கொள்ள வாய்ப்பில்லையே என வருந்தும் தமிழன்பர்களின் கைகளிலும் கருத்திலும் அவசியம் தவழ வேண்டிய நூல் கம்பன் மலர்."

—அகில இந்திய ரேடியோ சென்னை நிலைய 'நூல் மதிப்புரை' உரையில் திரு. கோமேதகவேலு.

மாநுடம் வென்றது ரூ. 3-00

அ. மு. பரமசிவானந்தம்

"This is a collection of 14 literary essays writen by the author...... and they exhibit the originality with which the learned author has approached his subjects......There are new meanings here—different from those generally believed—for certain poems."

—The Hindu

கம்பன் கவியமுதம் ரூ. 3-00

(17 அறிஞரின் கட்டுரைத் தொகுப்பு)

"The writers of the essays are authorities in the subject and they have all done their job with great clarity and pursuasiveness. The Book deserves to be in the hands of all lovers of Tamil Literary work."

—The Hindu

தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும் ரூ. 4-00

கி. வா. ஜகந்நாதன்

சென்னைப் பல்கலைக் கழக "கல்கி நினைவு உரை" தொடரில் ஆற்றிய ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள். தமிழில் "நாவல்" இலக்கிய வகையின் தோற்றம் முதல் அதன் வளர்ச்சியை ஆராய்ந்து அளந்து கூறும் நூல்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் உரைநடை வளர்ச்சி ரூ. 4-00

அ. மு. பரமசிவானந்தம்

சென்னை பல்கலைக் கழகக் கல்கி நினைவுச் சொற்பொழிவுகளின் நூல் வடிவம் இது.

"பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்மொழியில் ஏற்பட்ட உரைநடையின் வளர்ச்சி பற்றிய இலக்கிய வரலாற்றை இந்நூல் விவரிக்கிறது....... இலக்கிய வரலாறுகளை எழுதும் முயற்சியில் இந்நூல் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சாதனை."

நூலின் முன்னுரையில்,
முதலமைச்சர் எம். பக்தவத்சலம்.

திருக்குறள் கனிகள் ரூ. 5-00

திருக்குறள்பீடம் அழகரடிகள், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், கி. வா. ஜகந்நாதன், டாக்டர் மு. வ., கா. அப்பாத்துரையார், கு. ராஜவேலு, அ. ச. ஞானசம்பந்தன், நெ. து. சுந்தரவடிவேலு, ந. சஞ்சீவி, அ. மு. பரமசிவானந்தம், அ. கி. பரந்தாமனார், தி. மாணிக்கவாசகம், டி. வி. கோபாலையர், ஜயலட்சுமி, எம். இ. சரசுவதி, வே. சிவசுப்பிரமணியன், அடைக்கலசாமி முதலான 20 தமிழ்ப் பேரறிஞர்கள் திருக்குறளைப் பல்வேறு கோணங்களிலும் ஆராய்கிறார்கள் இத்தொகுப்பு நூலில்.

நாவல்கள்

கீதம் இனிய குயிலே ரூ. 4-00

டி. என். சுகி சுப்பிரமணியன்

"சுதந்திரப் போராட்டம், நாடகம், சங்கீதம், சினிமா இவற்றிடையே கதை ஊடுருவி அருமையாகச் செல்லுகிறது."

—நவசக்தி

தரங்கிணி ரூ. 3-00

நாரண துரைக்கண்ணன்
"ஜீவா"

"ஜோஸப் கிருஸ்துவருக்கு உரிய கருணையைக் காட்டுவது கதையில் முக்கிய திருப்பமாகும். தரங்கிணியிடம் பாசம் வைத்த ராஜா, பிடிவாதமாகப் பிற பெண்களைப் பாராமலிருப்பது நல்ல சித்திரமாகும். ஜோஸப்புகளும் ராஜாக்களும் சமூகத்தில் காணக்கிடைக்காத அரிய சக்திகள்."

—தினமணி

அருளின் ஒளி ரூ. 2-00

லட்சுமி சுப்பிரமணியன்

"This is a well-planned and executed Tamil novelette with a moral... The characters are well delineated."

—The Mail

அமுதமாகி வருக ரூ. 8-00

ராஜம் கிருஷ்ணன்

"மின் அணை போன்ற தொழில் நுணுக்கத்துறைப் படைப்பை ஆசிரியர் உயிர் நிறைந்த ஓவியமாகவும் காவியமாகவும் மாற்றும் திறன் அற்புதம்."

—தமிழ்நாடு

"...ஆசிரியர் ஒரு பிரம்மாண்டமான அணைக்கட்டும் மின்நிலையமும் உருவாகும் இடத்தில் உள்ள சூழ்நிலை, மக்கள், பிரச்னைகள் ஆகியவற்றை நுண்ணிய முறையில் கவனித்து கதைப்போக்கோடு இயற்கையான முறையில் அமைத்திருப்பது சிறப்பானது.

—தீபம்

"It could stand translation into other Indian Languages as also English."

—The Hindu

அன்பின் சிதறல் ரூ. 3-50

"கோமகள்"

அத்தை மக்கள் மூவரில் நடுவில் இருப்பவனைக் காதலித்துக் கைப்பிடிக்க எண்ணுகிறாள் ரோகிணி—கதாநாயகி. ஆனால் மூத்தவனை மணந்து அங்கேயே வாழவும் நேருகிறது. தன் தூய்மையையும் காத்து, புகுந்த வீட்டில் உள்ள எல்லோரையும், நெறியின்வழி நிலை நிறுத்தி இயங்கவைக்கும் கருணை மனமும் பெண்மையின் லட்சியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு தான் மட்டுமல்லாமல் தன்னைச் சேர்ந்த மற்றவர்களையும் அந்நெறிப்படுத்தும் தாய்மைப் பண்பு அவளுடையது. புதிய விதமான பாத்திரப் படைப்பு; சரளமான ஓட்டமுள்ள நடை.

தேவதாசி ரூ. 3-50

(மராத்தி நாவலின் மொழிபெயர்ப்பு)

சரசுவதி ராம்நாத்

பிறப்பால் தேவதாசி; வாழ்க்கையிலும் ஒரு விதத்தில் கறைப்பட்டவள். ஆனால் உள்ளத்தில் சுடருகின்ற அணையாத அருள் ஒளி ஷேவந்தியைச் சுற்றி நிற்கும் எல்லோரையும் வாழ்விக்கிறது. கோவாவின் சூழ்நிலையை வைத்துப் பின்னப்பட்ட பரிசு பெற்ற மராத்தி நாவலின் மொழிபெயர்ப்பு.

தும்பைப்பூ ரூ. 3-00

நாரண துரைக்கண்ணன்

"ஜீவா"

சுதந்தர பாரதம் அமைந்ததும் ஏற்பட்ட அரசியல், சமூக மாறுதல்களை அடிப்படையாக வைத்து புனையப்பட்ட நவீனம். கதையமைப்பிலும் உரை நடையிலும் உயிரோட்டமும் புதுமையும் கொண்டு விளங்குவது.

பொன் விளையும் நாடு ரூ. 7-00

லட்சுமி சுப்பிரமணியம்

நாடு சுதந்திரம் பெற்றபின் எத்தனையோ மாற்றங்கள் நேர்ந்திருக்கின்றன. என்றாலும் அனைத்தும் அமைதியான முறையிலேயே நடந்து வந்திருக்கின்றன. இந்தப் பத்துப் பதினைந்து ஆண்டுக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது பிரபல ஆசிரியையான திருவாட்டி லட்சுமி சுப்பிரமணியத்தின் இந்த நவீனம். 1950-ம் ஆண்டுகளில் நடந்த நிலச்சீர்திருத்தக் கிளர்ச்சியையும் பூதான இயக்கத்தையும் பின்புலமாகக் கொண்டு வரையப்பட்டது.

நிழற்கோலம் ரூ. 7-00

ராஜம் கிருஷ்ணன்

தமிழகத்தின் தலைசிறந்த பெண் எழுத்தாளரின் இந்த நவீனம் புதுமையான பாத்திரப் படைப்பும், தெள்ளிய கதையோட்டமும், சுவைமிக்க சம்பவங்களும் கொண்டு விளங்குகிறது.

தாழ்வுற்ற நெஞ்சம் ரூ. 4-00

கே. ஜயலட்சுமி

கறுப்பு, ஏழைமை இரண்டும் சேர்ந்துவிட்டால் ஒரு பெண்ணுக்கு வேறு என்ன துன்பம் வேண்டும்? இதன் காரணமாகத் தாழ்மை மனப்பாங்குக்கு உள்ளாகிவிட்ட ஒரு தாய், தன் மகளாவது உயரிய வாழ்க்கை வாழவேண்டும் என்று படும்பாட்டையும், அந்த ஆதுரத்தில் மகளின் அபிலாஷைகளைக்கூட கவனிக்காமல் செயல்படும் விதத்தையும் சுவைபடச் சித்தரிக்கும் நவீனம். அழகான குண சித்திரப் படைப்பு.

அமைதி எங்கே? ரூ. 3-00

பூவாளூர் சுந்தரராமன்

கிராமத்துச் சூழ்நிலையைப் பகைப்புலனாகக் கொண்டு பின்னப்பட்ட சுவையான நாவல். தெள்ளிய நீரோட்டம் போன்ற நடை.

பாவைப்பரிசு ரூ. 2-50

மா. ரா. இளங்கோவன்

மனம் எத்தனையோ வகையான உணர்வுகளை உள்ளடக்கிக் கொண்டு எண்ணற்ற போராட்டங்கட்கு உள்ளாகிய போதும், அடிமனத்தில் ஆழமாகத் தங்கிவிட்ட எண்ணமே எல்லாவற்றையும் முந்திக் கொண்டு வெல்லும் என்பதை மையக் கருத்தாக வைத்து தூய தமிழில் சுவைபடச் சமைத்துள்ளார் ஆசிரியர்.

குறுநாவல்கள்

கமலம் ரூ. 2-50

(இரண்டாம் பதிப்பு)

தி. ஜானகிராமன்

"மூன்று சிறு நாவல்களின் தொகுப்பு இது. உலக சுபாவத்தின் அழுத்தம் தோன்றச் சூழ்நிலைகளையும் பாத்திரங்களையும் உருவாக்கிப் படிப்போர் நெஞ்சில் பதிய வைக்கும் ஆசிரியரின் திறன் மூன்று நாவல்களிலும் சிறந்து விளங்குகிறது.

—தினமணி

மின்னல் ரூ. 3-00

'மாயாவி'

கடைசி வரையில் நெக்குவிடாமல் சுவாரசியமாகச் சொல்லும் பாணியை மாயாவி அழகாகக் கையாள்கிறார். அவரது எழுத்தில் உள்ள மாயம் அதுதான்.

—தினமணி

மனக்கண் ரூ. 3-00

நா. பார்த்தசாரதி

தீந்தமிழ் நடையும் கருத்தாழமும் திரு. பார்த்தசாரதியின் முத்திரைகள். இந்தத் தொகுப்பிலுள்ள கதைகளிலும் இவைகளைக் காணலாம். கண்ணற்ற கணவனும் அவனிடம் மனதிழந்த மனைவியும் மனக்கண்ணாலேயே ஒருவரை யொருவர் உணர்ந்து கொள்ளும் அழகைச் சித்தரிப்பது இதிலுள்ள "மனக்கண்" என்னும் கதை.

சிவப்பு விளக்கு ரூ. 3-00

'ஆர்வி'

உணர்ச்சிப் பெருக்கு, கருத்தாழம், கதை சொல்லும் திறன் ஆகியனவும் நளினமான நடையழகும் ஒருங்கே படைத்த ஆர்வியின் குறுநாவல்கள் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. படிக்கப் படிக்கச் சுவையான கதைகள்.

அன்னை மூவர் ரூ. 2-00

கோமதி சுப்பிரமணியம்

தாயன்பின் முக்கோணத்தைச் சித்தரிக்கும் மூன்று குறுநாவல்கள் அடங்கியது. தாயன்பின் தன்மை ஒரே தன்மையை உடையது எனினும், அது இடத்துக்கிடம் வேறுபட்டுக் காணும் உண்மையை ஆசிரியை சுவைபட இவற்றில் விவரித்துள்ளார்.

சிறுகதைகள்

சகோதரர் அன்றோ? ரூ. 2-50

(இரண்டாம் பதிப்பு)

'அகிலன்'

"மனித உறவுக் கோவை எனத்தகும் சிறுகதைகள் இதில் இடம் பெற்றுள்ளன. பண்பை உயர்த்தும் இலக்கியச் செறிவுள்ள சிறுகதைகள் இவை."

—தினமணி

கதைக்கனிகள்—1963 ரூ. 5-00

25 சிறுகதைகள் தொகுப்பு

"மேலை நாடுகளில் ஒவ்வோராண்டிலும் வெளியாகக்கூடிய சிறுகதைகளில் சிறந்தனவற்றைத் தொகுத்து வெளியிடுகின்றார்கள். அந்த அடிப்படையில் 1963 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் சிறந்த பத்திரிகைகளில் வெளியான இருபத்தைந்து சிறுகதைகளைத் தொகுத்துத் தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் வெளியிடுகிறார்கள். இது ஒரு நல்ல முயற்சி; பாராட்டுதற்குரியது.

"நூலையும் சிறப்பான வகையில் வெளியிட்டிருக்கின்றார்கள். கதைகளை எழுதியவர்களுடைய புகைப்படங்களும் அவர்களைப்பற்றிய சிறு குறிப்புக்களும் இந்த நூலுக்கு அணி செய்கின்றன."

"இந்நூலில் உள்ள கதைகள் அனைத்தும் பல்சுவை பொதிந்துள்ள கனிகளாகவே இலங்குகின்றன. சிறுகதை எழுத முயல்பவர்களுக்கு நல்ல ஊக்கமும் பயனும் நல்கக் கூடிய நூல் இது."

—அ. இ. ரே. சென்னை நிலைய 'நூல் மதிப்புரை'
உரையில் திரு. கோமேதகவேலு.

கதைக்கனிகள்—1964 ரூ. 5-00

தமிழில் 1964-ல் பத்திரிகைகளில் வெளியான சிறந்தனவாயுள்ள 20-க்கு மேற்பட்ட கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன இத்தொகுப்பில்.

நாட்டியம் ரூ. 3-00

க. சோமசுந்தரம்

கலையானாலும், கல்வியானாலும், வாழ்க்கையானாலும் அதில் ஒரு தீவிரமான பிடிப்பும் லட்சியமும் இருக்கவேண்டும். வெறும் பொழுதுபோக்குக்காக என்று எதுவுமே இல்லை. காரணமும் காரியமும் பயனும் பிணைந்தே இருக்கவேண்டும்; இருந்தே தீரும். இந்தக் கருத்தினைப் பின்னணியாகக் கொண்டு பின்னப்பட்ட கதைகளின் தொகுப்பு.

நாடகங்கள்

இருவர் கண்டனர் ரூ. 3-00

ஆர். சூடாமணி

The central theme of the play as the author herself intimates in her preface is the freedom necessary to woman to choose her own career and manner of life.

—The Mail

கௌரவ மாப்பிள்ளை ரூ. 2-50

பூர்ணம் விசுவநாதன்
(நகைச்சுவை நாடகங்கள்)

A compilation of eight short humourous plays quite refreshing to go through. Generally unobserved incidents of daily life cater and the imagination of Mr. Viswanathan and tales shape as a play. The characters breath life into funny situations.

—The Hindu

காட்சி கண்காட்சியே ரூ. 3-00

டி. என். சுகி சுப்பிரமணியன்
(ஓரங்க நாடகங்கள்)

'சுகி'யின் முத்திரை பதிந்த ஓரங்க நாடகங்களின் தொகுப்பு. அன்றாட நிகழ்ச்சிகளைப் பின்னணியாக வைத்து, நடிப்பதற்கும் ஏற்றதாக அமைக்கப்பட்டவை இவை.

சிறுவர் இலக்கியம்

சந்திரனுக்குச் செல்வோம் ரூ. 2-00

கல்வி கோபாலகிருஷ்ணன்

"விளையாட்டாக விஞ்ஞான அறிவைப் புகட்டும் முறையை ஆசிரியர் நன்கு பயன்படுத்தி வருகிறார். பல விஞ்ஞான உண்மைத் தகவல்கள் கதையினூடே கிடைக்கின்றன."

—தினமணி

மகன் புகழ் ரூ. 3-75

'பூவண்ணன்'

"பூவண்ணன் குழந்தைகளுக்கென்று எழுதிய பல நல்ல கதைகள் வரிசையில் 'மகன் புகழ்' சிறந்தது. கதையின் சுவையுடன் குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கையும் ஊட்டக்கூடியது."

"பள்ளிப்பிள்ளைகள் அவசியம் படிக்கவேண்டிய நூல்களில் இது ஒன்று. படிப்பின் மேன்மை, உழைப்பின் உயர்வு, நேர்மை, நாணயத்தின் சிறப்பு பழநியின் மூலம் நிலைநாட்டப் பெறுவது எழுத்தாளரின் திறமைக்குச் சான்றாகும்.

—தினமணி

சின்னஞ்சிறு வயதில் காந்தித் தாத்தா பரிசுப் பதிப்பு ரூ. 1-00
மலிவுப் பதிப்பு ரூ. 0-50

பி. இ. பாலகிருஷ்ணன்

"காந்தியடிகள் தம் பெற்றோரிடம் அதிக அன்பு கொள்ளக் காரணமாயிருந்த சிரவணகுமாரன் கதை, பொய்யே பேசுவதில்லை என்று உறுதி பூணக் காரணமாக அமைந்த அரிச்சந்திரன் நாடகம், சின்னஞ்சிறு வயதில் திருமணம் முதலிய நிகழ்ச்சிகள் சுவை மிக்கவை."

—சுதேசமித்திரன்

சுண்டுவிரல் சீமா ரூ. 5-00

கல்வி கோபாலகிருஷ்ணன்

சிறுவருக்குக் கதைகள் வாயிலாக விஞ்ஞான அறிவைப் புகட்டுவதில் சமர்த்தரான ஆசிரியர், இந்நூலில் பல விஞ்ஞான உண்மைகளைப் பற்றி விளக்கியிருக்கிறார்.

பரமன் அருள் ரூ. 4-00

நெ. சி. தெய்வசிகாமணி

வானொலி சிறுவர் நிகழ்ச்சி மூலம் பல்லாயிரக்கணக்கான சிறுவர்-சிறுமியர் உள்ளங்களைக் கவர்ந்த இந்நவீனம் தற்சமயம் நூல் வடிவில் வருகிறது. முற்றிலும் மாறுபட்ட கதாபாத்திரங்களைக் கொண்ட இந்நவீனம் சிறுவர் இலக்கிய உலகிற்கு ஒரு சிறந்த காணிக்கையாகும்.

அடுத்து வெளிவருபவை

நாவல்கள்

முங்கில் கோட்டை
"சாண்டில்யன்"

படகு வீடு
ரா. கி. ரங்கராஜன்

அலைக்கரங்கள்
"ஆர்வி"

குறுநாவல்

சோதனையின் முடிவு
ஆர். சூடாமணி

சிறுகதைகள்

அகிலனின் சிறுகதைகள்
அகிலன்

கதைக் கனிகள்—1965

நாடகங்கள்

குமரி முதல் காஷ்மீர்வரை
நாரண துரைக்கண்ணன்

பாசத்திரை
மாயாவி

வஞ்சமகள்
கு. அழகிரிசாமி

சமயம்

வழிபாடும் சமயமும்
எச். வைத்தியநாதன்

உதயசூரியன்
(பிரயாணக் கட்டுரைகள்)
தி. ஜானகிராமன்

விபரங்களுக்கு :

தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்
8, சின்ன ரெட்டித் தெரு,
எழும்பூர் :: சென்னை-8.
தொலைபேசி எண்: 82430

தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்

உறுப்பினர் பட்டியல்

(30-6-66)

1. திரு. பி. வி. அகிலாண்டம்
(அகிலன்)
171, லாயிட்ஸ் ரோடு
சென்னை—14.

2. திரு. எஸ். ஏ. பி. அண்ணாமலை
6, ஹண்டர்ஸ் ரோடு
சென்னை—7.

3. திரு. ஆர். கே. அய்யா
46, மூஸா சேட் தெரு
சென்னை—17.

4. திரு. ஜி. எஸ். அனந்த நாராயணன்
19, என். ஜி. ஓ. காலனி
ராஜாராம் மேத்தா நகர்
சென்னை—29.

5. திரு. எம். எஸ். கல்யாண சுந்தரம்
"முன்ஷி" "முரளி"
கோடைக்கானல்—2.

6. திரு. கே. ஆர். கல்யாணராமன்
(மகரம்)
சி. 606, கோடம்பாக்கம் புதூர்
சென்னை—33.

7. திரு. எஸ். டி. காசிராஜன்
15, பிள்ளையார் கோவில் தெரு
திருவட்டீச்வரன் பேட்டை
சென்னை—5.

8 திருவாட்டி ஆர். காந்திமதி
25, 2-வது தெரு,
சேட் காலனி
சென்னை—8

9. திரு. என். கிருஷ்ணபாரதி
12, பாண்ட்ஸ்மன் லேன்ஸ்
அரசினர் மாளிகை
சென்னை—2.

10. திரு. த. நா. குமாரசுவாமி
பாடி கிராமம்
கொரட்டூர் போஸ்ட்
சென்னை—50.

11. திரு. கல்வி கோபாலகிருஷ்ணன்
13, வேங்கடேசன் தெரு
தியாகராய நகர்
சென்னை—17.

12. திரு. ரா. சக்கரபாணி நாயகர்
25, ராஜகோபால நாயகர் தெரு
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை—2.

13. திரு. பி. சண்முக சுந்தரம்
C/o 'குமுதம்'
சென்னை—10.

14. திரு. ஜி. சதாசிவம்
37, கானுபாக் 2-வது சந்து
சென்னை—5.

15. திரு. டி. எஸ். சந்தானம்
(விலாசம் மாற்றப்பட்டுள்ளது)

16. திருவாட்டி சரசுவதி ராம்நாத்
1/11 சாம்பசிவன் தெரு
சென்னை—17.

17. திரு. என். சிதம்பர சுப்ரமணியன்
9, சிவஞான முதலியார் ரோடு
தி. நகர்
சென்னை—17

18. திரு. எஸ். சிவபாதசுந்தரம்
11, 4-வது மெயின் ரோடு
காந்தி நகர்
சென்னை—20.

19. திரு. சி. சீனிவாசன்
4/25, வி. எஸ். வி. கோயில் தெரு
மயிலாப்பூர்
சென்னை—4.

20. திரு. ஆர். சீனிவாசன்
(ரஸவாதி)
8, முத்தியாலுப் செட்டி தெரு
புரசைபாக்கம்
சென்னை—7,

21. திரு. பூவாளூர் எஸ். சுந்தரராமன்
106, எம். கே. அம்மன் கோயில் தெரு
மயிலாப்பூர்
சென்னை—4,

22. திரு. ஐ. ரா. சுந்தரேசன்
வேளாளத் தெரு
புரசைபாக்கம்
சென்னை—7.

23. திரு. எஸ். டி. சுந்தரம் எம். எல். சி.
1, சன்னதித் தெரு
லட்சுமிபுரம்
சென்னை—14.

24. திரு. டி. என். கவி சுப்பிரமணியன்
33 தாச்சி அருணாசல முதலித் தெரு
மயிலாப்பூர்
சென்னை —4.

25. திரு. என். சுப்ரமணியன்
"சாந்தினி"
2, வெங்கடேச சௌதுரி தெரு
தாம்பரம்.

26 திரு. வ. உ. சி. சுப்பிரமணியம்
பிளாட் 26, சீதம்மாள் காலனி
சென்னை—18.

27. குமாரி ஆர். சூடாமணி
6, அழகப்ப செட்டித் தெரு
சென்னை—7.

28. திரு. சி. சு. செல்லப்பா
19-A, பிள்ளையார் கோயில் தெரு
திருவட்டீசுவரன்பேட்டை
சென்னை—5.

29. திரு. க. சோமசுந்தரம்
8, சின்ன ரெட்டித் தெரு
எழும்பூர்
சென்னை—8.

30. திரு. என். சௌமிய நாராயணன்
சி. 164/E, டைப் குவார்டர்ஸ்
மோதிபாக்
புது டில்லி.

31. திரு. அ. ச. ஞானசம்பந்தன்
6-எப், வாரன் ரோட்
சென்னை—18.

32. திரு. தம்பி சீனிவாசன்
45, மூன்றாவது மெயின் ரோடு
ராஜா அண்ணாமலைபுரம்
சென்னை—28.

33. திரு. கி. தாமோதரன்
84-85 சுப்ரித் தெரு
(சல்லிவன் தெரு)
கோவை.

34 திருவாட்டி அ. திலகவதி
12, 3வது மெயின் ரோடு
டெலிபோஸ்ட் காலனி
சென்னை—33.

35 திரு. ஆர். நாகபூஷணம்
மாவட்ட விளம்பர அதிகாரி
வேலூர்.
(வ. ஆ. ஜில்லா)

36. திரு. நாரண துரைக்கண்ணன்
"ஜீவா"
33-A, அமீர் ஜான் தெரு
சூளைமேடு
சென்னை—24.

37. திரு. எஸ். நீலமேகம்
34-பி, டி. பி. கோயில் தெரு
சென்னை—5.

38. திரு. பரதன்
ஆசிரியர், "சத்ய கங்கை"
ஷெனாய் நகர்
சென்னை—30.

39. திரு. ரா. அ. பத்மநாபன்
10, மூஸாசேட் தெரு
தியாகராய நகர்
சென்னை—17.

40. திரு. பி. ஆர். பத்மநாபன்
9, மாசிலாமணி முதலியார் தெரு
தியாகராயநகர்
சென்னை—17,

41. திரு. அ. மு. பரம சிவானந்தம்
"தமிழ்க்கலை இல்லம்"
18, அய்யாவு நாயுடுத் தெரு
சென்னை—30.

42. திரு. ரா பாலகிருஷ்ணன்
16-பி, ராஜாஜி தெரு
நுங்கம்பாக்கம்
சென்னை—34,

43. திரு. எஸ். பாஷ்யம்
"சாண்டில்யன்"
13, மகாலட்சுமி தெரு
தியாகராய நகர்
சென்னை—17,

44. திருவாட்டி ஜி. கே. பொன்னம்மாள்
86, வி. எம். தெரு
மயிலாப்பூர்
சென்னை—4.

45. திரு தி. ஜ ரங்கநாதன்
"தி. ஜ. ர."
24, விச்வலிங்கசெட்டி தோட்டத் தெரு,
மயிலை, சென்னை-4.

46 திரு. ரா. கி. ரங்கராஜன்
11, ஆதியப்ப முதலித் தெரு
புரசைபாக்கம்
சென்னை—7.

47 திரு. கே. ஆர். ரங்காச்சாரியார்
1119, வாசுதேவபுரம்
திருவல்லிக்கேணி
சென்னை—5,

48. திரு. வி. ஆர். ராதாகிருஷ்ணன்
1, திருவள்ளுவர் கோயில் தெரு
மயிலாப்பூர்
சென்னை—4.

49. திரு. சி. க. ராமசுவாமி
சி-556, கோடம்பாக்கம் புதூர்
சென்னை—33.

50. வி. ஆர். ராஜகோபாலன்
32, சோலையப்ப முதலித் தெரு
சென்னை—4.

51. திரு. கு. ராஜவேலு
10, கோஷன் பிளாக்
அரசாங்க மாளிகை
சென்னை—2.

52. திரு. தா. ராஜாராம்
126, ஷெனாய் நகர்
சென்னை—30.

53. திருவாட்டி ருக்மணி பார்த்தசாரதி
6, அழகப்ப செட்டியார் ரோடு
சென்னை—7.

54. திரு. ப. சோ. லிங்கம்
43, டிரஸ்ட்புரம்
சென்னை—24.

55. திரு. வாசவன்
145, ஆழ்வார்பேட்டைத் தெரு
சென்னை—18.

56. திரு. இ. ச. வாசுதேவன்
1, முனீச்வரன் கோயில் சந்து
கம்மாளத் தெரு, உறையூர்
திருச்சி—3.

57. திரு. எஸ். வெங்கடசாமி
பிளாட் 78
கோவிந்து நாயுடுத் தெரு
சென்னை-29

58. திரு. வெங்கடராமன்
"ஆர்வி"
15, ரங்கய்ய தோட்டத் தெரு
மயிலாப்பூர்
சென்னை—4.

59. திரு. ஏ. ஜி. வெங்கடாச்சாரி
18, கேசவப் பெருமாள் சந்நிதி தெரு
மயிலாப்பூர்
சென்னை—4.

60. டாக்டர் (குமாரி)
எஸ். விஜயலட்சுமி
சென்னை—4.

61. திரு. எச். வைத்தியநாதன்
2/32, சுந்தரமூர்த்தி விநாயகர்
கோயில் தெரு
சென்னை—5.

62. திரு. கி. வா. ஜகந்நாதன்
7, நார்ட்டன் 1-வது தெரு
சென்னை—28.

63. திரு. தி. ஜானகிராமன்
24-சி, ராக்கியப்ப முதலி தெரு
சென்னை—4.

64. திரு. த. ஜெயகாந்தன்
31, ஹால்ஸ் ரோடு
சென்னை—8.

65. திரு. நெ. பி. ஸ்ரீரங்கன்
உதவி ஆசிரியர்
தினமணி
சென்னை—2.

66. திரு. ஜெகசிற்பியன்
172, முதல் மெயின் ரோட்
டிரஸ்ட் புரம்
சென்னை—24.

67. திரு. ராஜேச்வரி பத்மநாபன்
"அநுத்தமா"
C/o கே. பத்மநாபன்
எஞ்சினியர், மேட்டூர் அணை.

68. எஸ். கே ராமன்
"மாயாவி"
2/10, பிரசன்ன விநாயகர் கோயில் தெரு
மயிலை, சென்னை—4.

69. கொ. மோ. ஜனார்த்தனம்
17, செல்லம்மாள் தெரு
சென்னை—30.

70 திரு. த. நா. சேனாபதி
"ஸேனா"
23, லோகநாதன் காலனி
சென்னை—4.

71. திரு. அ. ரங்கநாதன்
5/42-A, யாசின்கான் தெரு
இசாபல்லாவரம்
பல்லாவரம் P.O.

72. டாக்டர் மு. வரதராசனார்
20, செல்லம்மாள் தெரு
சென்னை—30.

73. திரு. ந. சஞ்சீவி
நடேச நாராயண நிலயம்
தலையாரித் தெரு
சென்னை-4

74. திரு. க. ராமநாதன்
20, சைடோஜி தெரு,
சென்னை – 5.

75. திரு. நா. சி. ராமசாமி
"வெங்கடேச நிலயம்"
136, வெங்கடராமன் தெரு
தென் தேனாம்பேட்டை
சென்னை—18.

76. திரு. நா. அனந்தகிருஷ்ணன்
8, ராமானுஜம் தெரு
தியாகராய நகர்,
சென்னை—17.

77. திருவாட்டி கோமதி சுப்ரமணியம்
33, தாச்சி அருணாசல முதலி தெரு
மயிலை, சென்னை—4.

78. திரு. என். பெருமான்
33, தாச்சி அருணாசல முதலி தெரு
மயிலை சென்னை—4.

79. திரு. சி. ந. வைத்தீசுவரன்
ஆல்காட் காட்டேஜ்
டி. என். சாம்பௌண்ட்
சென்னை—20.

80. திரு. பி. எல். ராமையா
103-A, புரசைவாக்கம் ஹைரோடு
சென்னை—10.

81. திருவாட்டி சரோஜினி ஸ்ரீராம்
வேடந்தாங்கல் P O.
கருங்குழி வழி,
செங்கற்பட்டு ஜில்லா.

82. திரு. ஸ்ரீராமுலு ரெட்டியார்
வேடந்தாங்கல் P. O.
கருங்குழி, வழி

83, திரு. மு. நமசிவாயம்
21, பெருமாள் முதலித் தெரு
சென்னை —14.

84. திரு. ப. கண்ணன்
(ஜே. பி. கிருஷ்ணன்)
பிரதான கடைத் தெரு,
ஜலகண்டபுரம், சேலம்.

85. திரு. பா. தங்கராஜு
அய்யம்பேட்டை
செட்டிசத்திரம் P.O. தஞ்சை.

86. திரு. சக்திதாசன் சுப்பிரமணியன்
6, ஜஸ்டிஸ் சுந்தரம் அய்யர் ரோடு
நாகேஸ்வரபுரம், சென்னை—4,

87. திரு. வி. எஸ். சுப்பையா
28, ராமகிருஷ்ண நகர்,
சென்னை-28.

88. திரு. அழ. வள்ளியப்பா,
1/1, எல்டாம்ஸ் ரோடு
சென்னை-18.

89. திரு. மா. ரா. இளங்கோவன்
1/44, அருண்டேல் தெரு
மயிலை, சென்னை-4.

90. திரு. என். வி ராஜாமணி
20 தாண்டவராயன் தெரு
ராயப்பேட்டை சென்னை-14

91 திரு. கோமல் சுவாமிநாதன்
7, 2வது தெரு
இத்வாய் நகர், போஸ்டல்காலனி,
சென்னை-33

92. திரு. கே. வி சீனிவாசன்
13 தேரடித் தெரு
சென்னை-5

98 திரு. எஸ். ஹரிஹரசுப்பிரமணியம்
13/2 சம்பங்கி ரெட்டித் தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை-33.

94. திருவாட்டி ஸ்வர்ணாம்பாள்
(குகப்ரியை)

95. திரு என். தட்சிணாமூர்த்தி
ஆண்டார்குப்பம் (அஞ்சல்)
மதுராந்தகம் தாலுகா
செங்கற்பட்டு ஜில்லா

96. திரு கே. அருணாசலம்
"அருண்"
3, போரூர் சோமசுந்தர முதலியார் தெரு
சென்னை-17.

97. திரு. கு. அழகிரிசாமி
20, செங்கல்வராய முதலித் தெரு
சென்னை-5.

98. திரு. மு. க. தங்கவேலன்
21/22, அருண்டேல் தெரு
சென்னை-4.

99. திரு. தெள்ளூர் மு. தருமராஜன்
45, குருவப்பச் செட்டித் தெரு
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை-2.

100. திரு. ப. ராமன்
தமிழ் விரிவுரையாளர்
விவேகானந்தா கல்லூரி
சென்னை-4.

101. திரு. ஆர்' சௌரிராஜன்
"சௌரி"
தட்சிண பாரத் ஹிந்தி பிரசார சபா
சென்னை-17.

102. திரு. எம். ஆர். அடைக்கலசாமி
A/2, லயோலா ஸ்டாப் குவார்ட்டர்ஸ்
சென்னை-24.

103. திரு, வே, தா. கோபால கிருஷ்ணன்
'பூவண்ணன்'
22 ராஜகோபால நாயக்கன் தெரு
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை-2.

104. திரு. மா. வை. துரை பழனி
மகாதேவன்
7, சாராயக்காரத் தெரு
ஆம்பூர் P.O.
வ. ஆ. ஜில்லா,

105. திருவாட்டி லட்சுமி சுப்ரமணியம்
37, நடுத் தெரு,
சென்னை-4.

106. திரு. எம். மாரிமுத்து
2 சின்னையா பிள்ளை தெரு
P. B. No 714,
சேலம்-7.

107. திரு. சி, எஸ். பாலகுருநாதன்
40, அப்பாசாமி கோயில் தெரு
மயிலை, சென்னை-4

108. திரு. ராஜம் கிருஷ்ணன்
போரூர் தெரு, கிழக்குத் தாம்பரம்

109. திரு. எஸ். ஒய். சுப்ரமணியன்
1-1, கடைத் தெரு
மயிலாப்பூர், சென்னை-4

110. திரு. எஸ். வேம்பு
1, 4-வது தெரு,
ராமகிருஷ்ணாபுரம்,
சென்னை-33

111. திரு பூர்ணம் விச்வநாதன்
29, 2-வது மெயின் தெரு
சி. ஐ. டி, காலனி, சென்னை-4

112. திரு. எம். எஸ். கமலா
'ரவிப்பிரியா'
63, நாகப்ப ஐயர் தெரு, சென்னை-5

113. திரு. நா. பார்த்தசாரதி
'மணிவண்ணன்"
25, மேற்கு மெயின் தெரு
மேற்கு சி. ஐ. டி. நகர்
சென்னை-35

114. திரு பி. இ. பாலகிருஷ்ணன்
42-43, பிடாரியார் கோயில் தெரு
சென்னை-1

115. திருவாட்டி ராஜலட்சுமி ராமமூர்த்தி
"கோமகள்"
2, கிரஸெண்ட் அவென்யூ தெரு
காந்தி நகர், சென்னை-20

116. திரு. தி. க. சண்முகம்
அவ்வையகம்
139-பி. லாயிட்ஸ் ரோடு
சென்னை-6

117. திருவாட்டி எம். ஜய லட்சுமி நரசிம்மன்
2-19, கிருஷ்ணப்ப நாயக்கன்
அக்ரஹாரத் தெரு
சென்னை-1

118. திருவாட்டி கே. ஜயலட்சுமி
24, 1-வது குறுக்குத் தெரு
டிரஸ்ட்புரம், சென்னை-24

119. திரு. வி. கிருஷ்ணசாமி சர்மா
4, ஹிந்தி பிரசார சபா தெரு
தி. நகர், சென்னை-17

120. திரு. ஜி. ராமசுப்ரமணிய ஐயர்
ஸ்ரீ கிருஷ்ணன் கோயில் தெரு
அம்மா சமுத்திரம்

121. திரு ஆர். சுப்பிரமணியம்
37, நடுத்தெரு, சென்னை-4

122. திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்
துணைவேந்தர்
மதுரை பல்கலைக்கழகம்
மதுரை-2

123. திரு. தி. ராசகோபாலன்
8, வியாச நகர் காலனி
வியாசர்பாடி, சென்னை-12

124. திரு. மயிலை சீனி. வேங்கடசாமி
74, காரணீச்வரர் கோயில் தெரு
மயிலை, சென்னை-4

125. திரு. ஊ. ஜயராமன்
71, லிங்கி செட்டித் தெரு
சென்னை-1

126 திரு அப்துல் வஹாப்
"பாருக்"
14, லப்பைத் தெரு,
ஆலந்தூர், சென்னை-16

127. திரு. கெ. சி. தெய்வசிகாமணி
"இளிச்சவாயன்"
151, லிங்கிச் செட்டி தெரு
சென்னை-1

128. திரு. க. தி. ஜயராமன்
"கதிஜா"
22, மதுரை நாயகர் தெரு,
ஆலந்தூர், சென்னை-16

129. திரு. க. சண்முகம்
114, கனகசபை நகர்
சிதம்பரம், தெ. ஆ. ஜில்லா

130. திரு. ரா. கோவிந்தராஜன்
35, நரசிம்மபுரம்
அபிராமபுரம், சென்னை-4

131. திரு. ம. பொ. சிவஞானம்
1/29, இருசப்ப கிராமணி தெரு
சென்னை-5.

132. திரு. ம. ரா. போ. குருசாமி
தாமு நகர், புலியகுளம்
கோவை-1.

133. திரு. செ. க. சிவராமகிருஷ்ணன்
6, துவாரகா காலனி
எட்வர்ட் எலியட்ஸ் ரோடு
சென்னை-4.

134. திரு. நா. ரா. நாச்சியப்பன்
202, ஜானிஜான்கான் ரோடு
சென்னை-5.

135. திரு. சே. ர. குமாரசாமி
D-37, அழகாபுரம்
சேலம்-4.

136. திரு. வி. சந்தானம்
20, வடக்கு மாசி வீதி
மதுரை-1.

137. திரு. வி. ஜி. சீனிவாசன்
18, நடராஜபுரம்
மதுரை-1.

138. திரு. க. கோவிந்தராமானுஜம்
4, சி. ஏ. முதலித் தெரு
நுங்கம்பாக்கம், சென்னை-34.

139. திருவாட்டி சிவகாமி சிதம்பரனார்
9, சௌராஷ்டிர நகர், 7-வது தெரு.
சென்னை-24.

140. திரு. வெ. அர்ச்சுனன்
"தமிழ் முடி"
9, சர். சி. பி. ராமசாமி ஐயர் தெரு
சென்னை-18.

141. திரு. ஸ்ரீ வேணுகோபாலன்
14-ஏ, தேவநாதன் காலனி
சென்னை-33.

142. திரு. ஆ. பழநியப்பன்
தமிழாசிரியர்,
ராணி மெய்யம்மை உயர்நிலைப்பள்ளி
காந்தி நகர், சென்னை-20

143. திரு. பி. வி. ராமகிருஷ்ணன்
"பி. வி. ஆர்."
5, பலாத் தோப்புத் தெரு
சென்னை-4.

144. திரு. எஸ். ஆர். சுப்பிரமணியம்
C/o காந்தி மன்றம்
லஸ், சென்னை-4.

145. திரு. கே. விச்வநாதன்
"அன்னம்"
26, சட்டையப்பர் மேல வீதி,
நாகப்பட்டினம்.

146. திரு. ஏ. எஸ். ராகவன்
43, வடக்குச் சித்திரை வீதி
ஸ்ரீரங்கம், திருச்சி-6.

147. திரு. து. ராமமூர்த்தி,
'து. ரா.'
துவாரகா
ஆதம்பாக்கம், சென்னை-16.

148. திருவாட்டி சரோஜா ராமமூர்த்தி
துவாரகா
ஆதம்பாக்கம், சென்னை-16

149. திருவாட்டி என். கிருஷ்ணம்மாள்
"கிருஷ்ணு"
34A, திருமங்கலம் ரோடு,
ராமகிருஷ்ணுபுரம்
வில்லிவாககம், சென்னை-49.

150. திரு. டி. எம். பார்த்தசாரதி
23, மூஸா சேட் தெரு
சென்னை-17.

151. திரு. சி. எஸ். ராஜு
8, கமலாபாய் தெரு
சென்னை-17.

152. திரு. எஸ், ராஜு செட்டியார்
7, அருணுசலபுரம், மெயின் தெரு,
சென்னை-20,

153. திரு. க. பெ. பழனிச்சாமி
அக்கவுண்டென்ட், ஏ. பி. டி. பார்ஸல்ஸ்
த. பெ. எண். 262
கோவை-1.

154. திரு. க. இராசாமணி
"தூயவன்"
8-A-295, அன்பகம்
காந்திபுரம், 7ம் நெ. வீதி
கோவை-12

155. திரு. ப. குணசேகர்
"பண்பு"
62 L.I.C காலனி, குறிச்சி வழி
போத்தனூர் P.O., கோவை ஜில்லா

156. திரு. சோ. சதாசிவம்
இன்ப வாழ்வுப் பதிப்பகம்
இராமலிங்கம் தெரு, கோவை-2

157. திரு. டி. எஸ். கோதண்டராமன்
"அபர்ணு"
2008, மேல வீதி, தஞ்சை-1

158. திரு. மீ. ப. சோமசுந்தரம்
"சோமு"
98-ஏ, காரணீச்வரர் கோவில் தெரு
மயிலாப்பூர், சென்னை-4

159. திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்
24, தேரடித் தெரு,
திருச்சி-2

160. திரு. சே. ரகுநாதன்
"கல்பனு"
C/o சுதேசமித்திரன்
சென்னை-2

161. திரு. ஜே. எம். சோமசுந்தரம்
28, லெக்சரர்ஸ் லேன்ஸ்
அண்ணுமலை பல்கலைக் கழகம்
அண்ணுமலை நகர்.

162. திரு. கு. சம்பந்தம்
கதவெண் 1, பிளாக் 3
நெல்ஸன் மாணிக்க முதலியார் ரோட்
நுங்கம்பாக்கம், சென்னை-29.

163. திரு. ஆர். பத்மநாபன்
41, பி. எம். செட்டித் தெரு
சைதாப்பேட்டை
வேலூர் (வ. ஆ. ஜில்லா)

164. திரு. என். ஏ. வேலாயுதம்
'அன்பு நிலையம்'
அலெக்சாந்திரா ரோடு
நாகர்கோவில்.

165. திரு. எஸ். சுவாமிநாதன்
15, 6-வது தெரு, டிரஸ்ட்புரம்
கோடம்பாக்கம்
சென்னை-24.

166. திரு. கே. திரவியம்
5, நந்தனம் விஸ்தரிப்பு
சென்னை-35.

167. திரு. சி. பாலசுப்ரமணியன்
19, வேளாளர் தெரு
அமைந்தகரை
சென்னை-29.

168. திரு. ஆர். வேங்கடரத்னம்
இ. 168, ஸினிமா ரோடு,
பிளாக் 17
நெய்வேலி-1.

169. திருவாட்டி. நீலா ராமமூர்த்தி
9, ஸ்ரீனிவாசன் தெரு
மந்தைவெளி, சென்னை-28

170. திரு. ஜெ. எதிராஜன்
9/1, சோமசுந்தரத் தேவர் 1-வது தெரு,
சென்னை-23.

171. குமாரி எஸ். ராஜேசுவரி
"குயிலி"
8, ராமச்சந்திர ஐயர் தெரு
சென்னை-17.

172. திரு. க. கிருஷ்ணமூர்த்தி
"புலவர் கலைச்செழியன்"
அரசினர் உயர்நிலைப்பள்ளி
அரியூர் P.O., (S.A. Dist.)

173. குமாரி எஸ். லீலா
3/1, மேற்கு அரசமரம் தெரு
அமைந்தகரை
சென்னை-29.

துணை உறுப்பினர்கள்

1. திரு. கு. அய்யா சுப்பிரமணிய முதலியார்
140, சாமி நாயக்கன் தெரு
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை-2.

2. திரு. ஜே. மாத்யூஸ்
5, சோலையம்மன் கோயில் தெரு
புரசை, சென்னை-7

3. திரு. டி. வி. குப்புசாமி
8, சின்னரெட்டித் தெரு
சென்னை-8.

4. திரு. ஆர். வி. ஆறுமுகம்
8/9, ராம ராவ் ரோடு
மயிலாப்பூர். சென்னை-4.

5. திரு. டி. வி. சம்பத் குமாராச்சாரி
சென்னை—5.